WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# 8 ஆவது தமிழ்

## WINMEEN TEST SHEETS

- சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியிலிருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்.
- முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்.
- அலகுவாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது.
- 9 இயல்கள் 1150+ கேள்விகள்.



# 8 ஆம் வகுப்பு தமிழ்

# Winmeen Test Sheets

சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியில் இருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்

முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்

இயல்வாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது

9 இயல்கள் 1150+ கேள்விகள்

**Winmeen E Learning**

**Email: admin@winmeen.com**

**Mobile: 6385150514**

# அர்ப்பணிப்பு

**அனைத்து போட்டித்தேர்வுகளுக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த புத்தகத்தை போட்டித்தேர்வுக்கு பயிலும் மாணவர்களுக்காக அர்ப்பணிக்கிறோம்.**

**கொடுக்கப்பட்ட வினாக்களைப் பயிற்சி செய்து, நீங்கள் இந்த புத்தகத்தின் மூலம் போட்டித்தேர்வில் மிகப் பெரிய வெற்றியடைய வாழ்த்துக்கள்.**

| வ.எண் | பொருளடக்கம் | வினாக்கள் | பக்க எண் |
|---|---|---|---|
| | **8-ஆம் வகுப்பு - தமிழ்** | | |
| 1 | இயல் 1 | 142 | 1 |
| 2 | இயல் 2 | 142 | 30 |
| 3 | இயல் 3 | 124 | 60 |
| 4 | இயல் 4 | 134 | 88 |
| 5 | இயல் 5 | 162 | 117 |
| 6 | இயல் 6 | 94 | 153 |
| 7 | இயல் 7 | 82 | 173 |
| 8 | இயல் 8 | 128 | 192 |
| 9 | இயல் 9 | 144 | 223 |
| | **Total Questions** | 1152 | |

| | |
|---|---|
| இயல் 1 | தமிழ்மொழி வாழ்த்து |
| | தமிழ்மொழி மரபு |
| | தமிழ் வரிவடிவ வளர்ச்சி |
| | சொற்பூங்கா |
| | எழுத்துகளின் பிறப்பு |
| இயல் 2 | ஓடை |
| | கோணக்காத்துப் பாட்டு |
| | நிலம் பொது |
| | வெட்டுக்கிளியும் சருகுமானும் |
| | வினைமுற்று |
| | திருக்குறள் |
| இயல் 3 | நோயும் மருந்தும் |
| | வருமுன் காப்போம் |
| | தமிழர் மருத்துவம் |
| | தலைக்குள் ஓர் உலகம் |
| | எச்சம் |
| இயல் 4 | கல்வி அழகே அழகு |
| | புத்தியைத் தீட்டு |
| | பல்துறைக் கல்வி |
| | ஆன்ற குடிப்பிறத்தல் |
| | வேற்றுமை |
| இயல் 5 | திருக்கேதாரம் |
| | பாடறிந்து ஒழுகுதல் |
| | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் |
| | தமிழர் இசைக்கருவிகள் |
| | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் |
| | திருக்குறள் |
| இயல் 6 | வளம் பெருகுக |
| | மழைச்சோறு |

| | |
|---|---|
| | கொங்குநாட்டு வணிகம் |
| | காலம் உடன் வரும் |
| | புணர்ச்சி |
| இயல் 7 | படை வேழம் |
| | விடுதலைத் திருநாள் |
| | பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் |
| | அறிவுசால் ஔவையார் |
| | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் |
| இயல் 8 | ஒன்றே குலம் |
| | மெய்ஞ்ஞான ஒளி |
| | அயோத்திதாசர் சிந்தனைகள் |
| | மனித யந்திரம் |
| | யாப்பு இலக்கணம் |
| | திருக்குறள் |
| இயல் 9 | உயிர்க்குணங்கள் |
| | இளைய தோழனுக்கு |
| | சட்டமேதை அம்பேத்கர் |
| | பால் மனம் |
| | அணி இலக்கணம் |

## 8th Tamil Unit 1 Questions

1) இந்தியா, விஜயா போன்ற இதழ்களின் ஆசிரியர் யார்?

A) நாமக்கல் கவிஞர்

B) பாரதிதாசன்

**C) பாரதியார்**

D) கண்ணதாசன்

**விளக்கம்: இந்தியா, விஜயா போன்ற இதழ்களை நடத்தி விடுதலைப் போராட்டத்துக்கு வித்திட்டவர் பாரதியார்.**

2) "செந்தமிழே செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்

நந்தா விளக்கனைய நாயகியே! – முந்தை

மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!

எழில்மகவே! எந்தம் உயிர்!" – என்று தமிழ்மொழியை பாடியவர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

**C) து. அரங்கன்**

D) கவிமணி

**விளக்கம்: "செந்தமிழே செங்கரும்பே!செந்தமிழர் சீர்காக்கும்**

**நந்தா விளக்கனைய நாயகியே! – முந்தை**

**மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!**

**எழில்மகவே! எந்தம் உயிர்!" – என்று தமிழின் இனிமை குறித்து பாடியவர் பாரதியார் அவர்கள்.**

3) சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?

A) பாரதிதாசன்

**B) பாரதியார்**

C) நாமக்கல் கவிஞர்

D) வாணிதாசன்

**விளக்கம்: சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுபவர் பாரதியார். அவ்வாறு பாரதியாரை கூறியவர் புரட்சிக் கவி பாரதிதாசன்.**

4) பாரதியாரின் இயற்பெயர்?

**A) சுப்பிரமணிய பாரதியார்**

B) சுத்தானந்த பாரதியார்

C) செந்தமிழ்ச் செல்வன்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: பாரதியாரின் இயற்பெயர் சி. சுப்பிரமணிய பாரதியார் என்பதாகும். இவர் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.**

5) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்?

**A) வைப்பு**

B) கடல்

C) பரவை

D) ஆழி

**விளக்கம்: மக்கள் வாழும் நிலப்பகுதியை குறிக்கும் சொல் வைப்பு என்பதாகும். வைப்பு என்றால் நிலப்பகுதி என்று பொருள். பரவை, ஆழி என்பது கடலைக் குறிக்கும் சொற்களாகும்.**



winmeen.com

6) 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) என் + றென்றும்

B) என்று + என்றும்

**C) என்றும் + என்றும்**

D) என் + என்றும்

**விளக்கம்: என்றென்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது என்றும் + என்றும் எனப் பிரித்து எழுதலாம்**

7) 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) வான + மளந்தது

B) வான் + அளந்தது

**C) வானம் + அளந்தது**

D) வான் + மளந்தது

**விளக்கம்: வானமளந்தது என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது வானம் + அளந்தது. வானம் + அளந்தது என்னும் சொல்லின் நிலைமொழியில் உள்ள ம் என்னும் எழுத்து உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்து அ என்பதுடன் புணர்ந்து (ம் + அ – ம) வானமளந்தது என கிடைக்கும்.**

8) அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்---------

A) அறிந்ததுஅனைத்தும்

B) அறிந்தனைத்தும்

**C) அறிந்ததனைத்தும்**

**D) அறிந்துனைத்தும்**

**விளக்கம்: அறிந்தது + அனைத்தும் என்ற சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது அறிந்ததனைத்தும். நிலைமொழயின் இறுதி எழுத்து து. இதனை த் + உ எனப் பிரிக்கலாம். வருமொழியின் முதல் எழுத்து அ. எனவே உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி நிலைமொழியிலுள்ள உ என்னும் எழுத்து விலகி த் என்னும் எழுத்து மட்டுமே நிற்கும். அறிந்தத் + அனைத்தும். பின் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி த் + அ – த எனப்புணர்ந்து. அறிந்ததனைத்தும் என எழுதலாம்.**

9) "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்று கூறும் நூல் எது?

A) அகத்தியம்

B) பரிபாடல்

C) திருக்குறள்

**D) தொல்காப்பியம்**

**விளக்கம்: நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்ததே இந்த உலகம் என்று கூறும் நூல் தொல்காப்பியம் ஆகும். இதனை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார்.**

10) வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

A) வானம்அறிந்து

B) வான்அறிந்த

**C) வானமறிந்த**

D) வான்மறிந்த

**விளக்கம்: வானம் + அறிந்த என்பதனைச் சேர்ந்து எழுதக் கிடைக்கும் சொல் வானமறிந்த. நிலைமொழியில் இறுதிஎழுத்து ம் என்பது வருமொழியின் முதல் எழுத்தாகிய அ என்னும் எழுத்துடன் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புணர்ந்து வானமறிந்த என்று கிடைக்கும்**

11) "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" இதில் விசும்பு என்ற சொல்லின் பொருள்?

**A) வானம்**

B) விண்மீன்

C) கோள்கள்

D) பூமி

**விளக்கம்: விசும்பு என்ற சொல்லின் பொருள் வானம் ஆகும். தொல்காப்பியர் இந்த உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்பதை கூறும்போது வானம் என்பதை விசும்பு என்று குறிப்பிட்டுள்ளார்.**

12) பறவைகள்______________பறந்து செல்கின்றன?

A) நிலத்தில்

**B) விசும்பில்**

C) மரத்தில்

D) நீரில்

**விளக்கம்: பறவைகள் விசும்பில் பறந்து செல்கின்றன என்பதே சரியானதாகும். விசும்பு என்றால் வானம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.**

13) இயற்கையைப் போற்றுதல் தமிழர்____________

**A) மரபு**

B) பொழுது

C) வரவு

D) தகவு

**விளக்கம்: இயற்கையைப் போற்றுதல் தமிழர் மரபாகும். ஆகவே தமிழர்கள் இயற்கையையும் வழிபட்டு வருகின்றனர். புலவர்களும் தங்களது பாடல்களில் இயற்கையை போற்றி பாடல்களை எழுதியுள்ளனர். சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று இயற்கையை போற்றியுள்ளார்**

14) இருதிணை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) இரண்டு + திணை

**B) இரு + திணை**

C) இருவர் + திணை

D) இருந்து + திணை

**விளக்கம்: இருதிணை என்னும் சொல்லை பிரித்து எழுதினால் இரு + திணை எனப் பிரியும்.**

15) பொருத்துக

அ. புலி – 1. கன்று

ஆ. சிங்கம் – 2. பறழ்

இ. யானை – 3. குருளை

ஈ. ஆடு – 4. குட்டி

A) 2, 1, 3, 4

B) 4, 2, 3, 1

**C) 2, 3, 1, 4**

D) 3, 2, 1, 4

**விளக்கம்: புலி – பறழ்**

**சிங்கம் – குருளை**

**யானை – கன்று**

**ஆடு – குட்டி**

16) ஆடு–ன் ஒலி மரபு

A) உறுமும்

B) முழங்கும்

C) கதறும்

**D) கத்தும்**

**விளக்கம்: ஆடு – கத்தும்**

**புலி – உறுமும்**

**சிங்கம் – முழங்கும்**

**பசு – கதறும்**

17) பசு – ன் இளமைப் பெயர்?

**A) கன்று**

B) குட்டி

C) பறழ்

D) குருளை

**விளக்கம்: பசு – ன் இளமைப்பெயர் கன்று என்பதாகும். யானையின் இளமைப் பெயரும் கன்று. பறழ் என்பது புலியின் இளமைப்பெயர். குருளை என்பது சிங்கத்தின் இளமைப் பெயர். குட்டி என்பது ஆடு–ன் இளமைப் பெயர்.**

18) தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் எது?

A) அகத்தியம்

B) நன்னூல்

C) அகப்பொருள் விளக்கம்

**D) தொல்காப்பியம்**

**விளக்கம்: தொல்காப்பியமே தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ஆகும். தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர். அகத்தியர் எழுதிய அகத்தியம் என்னும் நூலே மிகப்பழமையான இலக்கண நூல். ஆனால் அந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.**

19) தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களை கொண்டுள்ளது?

A) 2

**B) 3**

C) 5

D) 4

**விளக்கம்: தொல்காப்பியம் 3 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவை எழுத்து, சொல், பொருள் என்பதாகும்.**

20) தொல்காப்பியத்தின ஒவ்வொரு அதிகாரமும் எத்தனை இயல்களைக் கொண்டுள்ளது?

A) 10

B) 5

C) 8

**D) 9**

**விளக்கம்: தொல்காப்பியத்தில் ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டுள்ளது . தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உள்ளன. எனவே 27 இயல்களை கொண்ட நூலாக தொல்காப்பியம் உள்ளது.**

21) செய்யுளில் எழுத்துக்கள் தன் மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதை__________என்பர்



winmeen.com

A) குற்றியலுகரம்

B) குற்றியலிகரம்

**C) அளபெடை**

D) குறுக்கம்

**விளக்கம்: புலவர்கள் சில எழுத்துக்களை அவற்றுக்கு உரிய மாத்திரை அளவைவிட நீண்டு ஒலிக்குமாறு பயன்படுத்துவது உண்டு. இவ்வாறு செய்யுளில் எழுத்துக்கள் தன் மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதை அளபெடை என்பர்**

22) பொருத்துக

அ. பசு – 1. உறுமும்

ஆ. யானை – 2. முழங்கும்

இ சிங்கம் – 3. பிளிரும்

ஈ. புலி – 4. கதறும்

**A) 4, 3, 2, 1**

B) 3, 2, 1, 4

C) 2, 1, 3, 4

D) 1, 2, 3, 4

**விளக்கம்: பசு – கதறும்**

**யானை – பிளிறும்**

**சிங்கம் – முழங்கம்**

**புலி – உறுமும்**

23) வாழ்வுக்கு ஒழுங்குமுறை ஒழுக்கம் எனில் மொழிக்கு ஒழுங்குமுறை__________

A) உச்சரிப்பு

B) மாத்திரைகள்

**C) மரபு**

D) பிழையின்மை

**விளக்கம்: வாழ்க்கைக்கு உரிய ஒழுங்குமுறை ஒழுக்கமே. அதே போல மொழிக்குரிய ஒழுங்குமுறை மரபு எனப்படும்**

24) செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி கூறும் நூல்?

A) அகத்தியம்

**B) தொல்காப்பியம்**

C) திருக்குறள்

D) நன்னூல்

**விளக்கம்: வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை ஒழுக்கம். அதேபோல மொழிக்குரிய ஒழுங்குமுறை மரபு. செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் கூறுகிறது.**

25) இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை – இதில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு.

A) குற்றியலுகரம்

B) குற்றியலிகரம்

**C) உயிரளபெடை**

D) ஒற்றளபெடை

**விளக்கம்: வழாஅமை என்ற சொல்லின் இலக்கண குறிப்பு உயிரளபெடை என்பதாகும். இப்பாடலில் இடம்பெற்றுள்ள வழாஅமை என்ற சொல்லில் உள்ள ழா என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும் என்ற நோக்கில் ழா–வை அடுத்து அ இடம் பெற்றுள்ளது. இவ்வாறு அமைவது உயிரளபெடை எனப்படும்.**

26) மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை – இதில் திரிதல் என்ற சொல்லின் பொருள்?

**A) மாறுபடுதல்**

B) செல்லுதல்

C) கலவை

D) கெட்டுபோதல்

**விளக்கம்: மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை – இதில் திரிதல் என்ற சொல்லின் பொருள் மாறுபடுதல் என்பதாகும். இவ்வரி இடம் பெற்ற நூல் தொல்காப்பியம்**

27) தழாஅல் என்ற சொல்லின் பொருள்?

A) தழுவி

B) தழுவு

**C) தழுவுதல்**

D) தாவுதல்

**விளக்கம்: தழா அல் என்ற சொல்லின் பொருள் தழுவுதல் ஆகும். தழுவுதல் என்றால் பயன்படுத்துதல் என்று பொருள்.**

28) மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்க____________ஐப் பயன்படுத்தினான்?

A) மொழி

B) ஓவியம்

C) எழுத்து

**D) சைகை**

**விளக்கம்: மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துக்களையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்க முதலில் சைகைகளைப் பயன்படுத்தினான்.**

29) தமிழ்மொழியை எழுத எத்தனை வகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன என அறிகிறோம்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். இதனை கூறும் கல்வெட்டு அரச்சலூர் கல்வெட்டு ஆகும்.**

30) செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் யார்?

A) பாரதிதாசன்

B) வாணிதாசன்

C) பெருஞ்சித்தனார்

**D) இரா. இளங்குமரனார்**

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் இரா. இளங்குமரனார் ஆவார். இவர் பள்ளி ஆசிரியராக பணியாற்றினார்.**

31) சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்

துலங்குக வையகமே! – இதில் சூழ்கலி என்ற சொல்லின் பொருள்?

**A) சூழ்ந்துள்ள அறியாமை இருள்**

B) சூழ்ந்துள்ள மொழி அறிவு

C) சூழ்ந்துள்ள அறிவு ஒளி

D) சூழ்ந்துள்ள மக்களின் பண்பு

**விளக்கம்: சூழ்கலி என்ற சொல்லின் பொருள் சூழ்ந்துள்ள அறியாமை இருள் ஆகும். இதனை பாரதியார் தன் தமிழ்மொழி வாழ்த்து எனும் தலைப்பில் விளக்கியுள்ளார்.**

32) வான மளந்தது அனைத்தும் அளந்திடு

வண்மொழி வாழியவே! – இதில் இடம்பெற்றுள்ள வண்மொழி என்னும் சொல்லின் பொருள்?

A) வலிமையான மொழி

**B) வளமிக்க மொழி**

C) வளர்ந்த மொழி

D) வளமை குன்றிய மொழி

**விளக்கம்: வண்மொழி என்ற சொல்லின் பொருள் வளமிக்க மொழி என்பதாகும். இதனை தமிழ் மொழிக்கு ஒப்பிட்டு பாரதியார் கூறியுள்ளார்**

33) முந்தை மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!

எழில்மகவே! எந்தம் உயிர் – என்று தமிழ்மொழியை வாழ்த்தி பாடியவர்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

**C) து. அரங்கன்**

D) கவிமணி

**விளக்கம்: முந்தை மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!**

**எழில்மகவே! எந்தம் உயிர் – என்று தமிழ்மொழியை வாழ்த்தி பாடியவர் – து. அரங்கன்**

34) உலகத்து பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு என்று கூறும் நூல்?

A) திருக்குறள்

B) அகத்தியம்

C) பரிபாடல்

**D) தொல்காப்பியம்**

**விளக்கம்: தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப்பழமையான நூலான தொல்காப்பியம், உலகத்துப் பொருள்களை உயர்திணை, அஃறிணை என்ற இருதிணைகளாகவும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றான் பால், பலவின்பால் என்று ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு என்று கூறுகிறது.**

35) அளபெடை எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: அளபெடை இரண்டு வகைப்படும். அவை உயிரளபெடை, ஒற்றளபெடை. . ஓர் எழுத்து அவற்றுக்கு உரிய மாத்திரை அளவைவிட நீண்டு ஒலித்தால் அது அளபெடை எனப்படும். உயிரெழுத்து நீண்டு ஒலித்தால் உயிரளபெடை என்றும், ஒற்றெழுத்து நீண்டு ஒலித்தால் ஒற்றளபெடை என்றும் கூறுவர்.**

36) உயிரளபெடை எத்தனை வகைப்படும்?

**A) 3**

B) 4

C) 5

D) 6

**விளக்கம்: உயிரளபெடை மூன்று வகைப்படும்.**

**1. செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை**

**2. இன்னிசை அளபெடை**

**3. சொல்லிசை அளபெடை.**

37) மனிதனின் முதல் கண்டுபிடிப்பு?

A) ஓவியம்

B) மொழி

C) எழுத்து

**D) சைகை**

**விளக்கம்: மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துக்களையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான்.**

38) எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை?

A) வரி வடிவம்

B) சைகை

**C) குறியீடு**

D) இலக்கணம்

**விளக்கம்: மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.**

39) ஏகலைவன் என்பது எதில் வல்லவனைக் குறிக்கிறது?

A) கட்டிடம் கட்டுதல்

**B) அம்புவிடுதல்**

C) மொழித்திறன் உடையவர்

D) எழுத்துச் சீர்திருத்தம் செய்பவர்

**விளக்கம்: ஏகலைவன் என்பது அம்பு விடுவதில் வல்வனைக் குறிக்கிறது. ஏகலை என்னும் சொல் அம்பு விடும் கலையைக் குறிக்கிறது.**

40) கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களின் அமைப்பு முறை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. ஸ என்னும் வடமொழி எழுத்து காணப்படவில்லை

2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை

3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை

A) 1, 2 சரி

B) 2, 3 சரி

C) 1, 3 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: ஸ என்னும் வடமொழி எழுத்து காணப்படுகிறது**

**மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை**

**எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை**

41) தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற__________காரணமாக அமைந்தது?

A) ஓவியக்கலை

B) இசைக்கலை

**C) அச்சுக்கலை**

D) நுண்கலை

**விளக்கம்: காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.**

42) கல்வெட்டுகள் எந்த நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன?

**A) கி. மு. 3**

B) கி. பி. 3

C) கி. மு. 7

D) கி. பி. 7

**விளக்கம்: கல்வெட்டுகள் கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. இத்தகைய கல்வெட்டுகளை கோவில் சுவர்களில் காணலாம்.**

43) செப்பேடுகள் எந்த நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன?

A) கி. மு. 3

B) கி. பி. 3

**C) கி. மு. 7**

D) கி. பி. 7

**விளக்கம்: தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களில் உள்ள செப்பேடுகளில் காணமுடிகிறது. இத்தகைய செப்பேடுகள் கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.**

44) பாரதியார் பற்றிய கூற்றகளை ஆராய்க.

1. கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்த்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப்போராட்ட வீரர்.

2. இயற்பெயர் சுத்தானந்த பாரதியார்

3. இந்தியா, விஜயா போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

4. சந்திரிகையின் கதை, தராசு போன்ற காப்பியங்களையும் எழுதியுள்ளார்

A) 1, 4 மட்டும் சரி

B) 1, 2 மட்டும் சரி

C) 1, 2, 4 சரி

**D) 2, 3, 4 தவறு**

**விளக்கம்: 1. கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்த்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப்போராட்ட வீரர்.**

**2. இயற்பெயர் சுப்பிரமணிய பாரதியார்**

**3. இந்தியா, விஜயா போன்ற இதழ்களை நடத்தி விடுதலை போராட்டதிற்கு வித்திட்டார்**

**4. சந்திரிகையின் கதை, தராசு போன்ற உரைநடை நூல்களை எழுதியுள்ளார்**

45) பாரதியாருக்கு பொருத்தமில்லாது எது?

1. உரைநடை ஆசிரியர்

2. வசனகவிதையாளர்

3. சீட்டுக்கவிதையாளர்

4. சமூக சீர்திருத்த சிந்தனையாளர்

5. ஆன்மீக அன்பர்

6. அரசியல் ஈடுபாட்டாளர்

A) 3, 5, 6

**B) 5, 6**

C) 2, 3, 5, 6

D) 2, 3, 4, 5, 6

**விளக்கம்: கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்த்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப்போராட்ட வீரர், உரைநடையாளர், சீட்டுகவியாளர், வசனகவிதையாளர் என பன்முகத் திறன் பெற்றவர் சி. சுப்பிரமணிய பாரதியார்**

46) செந்தமிழ்த் தேனீ என்று பாரதியாரை புகழ்ந்தவர்?

A) சுப்புரத்தின தாசன்

B) வாணிதாசன்

**C) பாரதிதாசன்**

D) கண்ணதாசன்

**விளக்கம்: பாரதிதாசன், பாரதியாரை செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை என்று புகழ்ந்துள்ளார்.**

47) தொல்காப்பியம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இதன் ஆசிரியர் தொல்காப்பியர்

2. இந்நூல் 3 இயல்களை கொண்டுள்ளது.

3. 27 அதிகாரங்களை கொண்டுள்ளது.

4. ஒவ்வொரு இயல்களிலும் 9 அதிகாரங்கள் உள்ளன

**A) 1 மட்டும் சரி**

B) 1, 2 சரி

C) 1, 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். இந்நூல் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களை கொண்டுள்ளன. எனவே தொல்காப்பியம் 27 இயல்களைக் கொண்ட நூலாகும்**

48) தொல்காப்பியரின் ஆசிரியர்?

**A) அகத்தியர்**

B) முதலாம் தொல்காப்பியர்

C) நன்னூலார்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர். இவர் எழுதிய நூல் அகத்தியம். தொல்காப்பித்திற்கு முன்னர் எழுதப்பட்ட நூல் அகத்தியம் ஆகும். இருப்பினும் இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.**

49) இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று கூறும் தொல்காப்பியத்தின் மரபியல் எந்த அதிகாரத்தில் உள்ளது?

A) எழுத்து அதிகாரம்

B) சொல்அதிகாரம்

**C) பொருள் அதிகாரம்**

D) யாப்பு அதிகாரம்



winmeen.com

**விளக்கம்: இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆன கலவை என்று கூறும் மரபியல் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. யாப்பு அதிகாரம் என்பது தொல்காப்பியத்தில் இல்லை. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரம் மட்டுமே தொல்காப்பியத்தில் உள்ளன.**

50) காகத்தின் ஒலி மரபு

A) கத்தும்

B) கதறும்

C) பேசும்

**D) கரையும்**

**விளக்கம்: காகம் கரையும் என்பதே சரி.**

**ஆடு – கத்தும்**

**பசு – கதறும்**

**கிளி – பேசும்**

51) கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.**

52) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழமையான தமிழ் எழுத்து___________என அழைக்கப்படுகிறது?

A) கோட்டெழுத்து

**B) வட்டெழுத்து**

C) சித்திர எழுத்து

D) ஓவிய எழுத்து

**விளக்கம்: கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்களில் வட்டெழுத்து, வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து என அழைக்கப்படுகிறது.**

53) எந்தப் பகுதிகளில் காணப்படும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன?

A) சேர, சோழ மண்டலம்

B) சோழ, பாண்டிய மண்டலம்

**C) சேர, பாண்டிய மண்டலம்**

D) பாண்டிய, பல்லவ மண்டலம்

**விளக்கம்: சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம் பெற்றுள்ளன.**

54) கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப் பல்பொதி என்னும் தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) கம்பராமாயணம்

D) பரிபாடல்

**விளக்கம்: கண்ணெழுத்துகள் பற்றிய செய்தியை கூறும் இத்தொடர் இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.**

55) ____________சங்க காலத்தில தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துக்கள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன?

A) முதல்

B) இடை

**C) கடை**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி என்னும் தொடரில் அறியலாம்**

56) தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என கூறும் கல்வெட்டு எது?

A) உத்திரமேரூர் கல்வெட்டு

**B) அரச்சலூர் கல்வெட்டு**

C) கொடுமணல் கல்வெட்டு

D) சிவகங்கை கல்வெட்டு

**விளக்கம்: தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்கு சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.**

57) கூற்று: பாறைகளில் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.

காரணம்: வளைகோடுகளை பயன்படுத்த முடியாது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்கவில்லை.

**விளக்கம்: பாறைகளில் செதுக்கும் போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன.**

58) கூற்று: தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்

காரணம்: தமிழ் மீது ஏற்பட்ட ஆர்வம்

**A) கூற்று சரி காரணம் தவறு**

B) கூற்று தவறு காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்கவில்லை.

**விளக்கம்: தந்தை பெரியார் எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டார். ஆனால் காரணம் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்பதே ஆகும்.**

59) தமிழ் எழுத்துக்களில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர்?

A) தந்தை பெரியார்

**B) வீரமாமுனிவர்**

C) கால்டுவெல்

D) ஈராஸ்பாதிரியார்

**விளக்கம்: தமிழ் எழுத்துக்களில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.**

60) "ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி

இசைகொண்டு வாழியவே!" – இதில் இசை என்ற சொல்லின் பொருள்?

A) ஓசை

B) இன்னிசை

**C) புகழ்**

D) இன்பம்

**விளக்கம்:"ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**

**இசைகொண்டு வாழியவே!" – இப்பாடலில் இசை என்ற சொல்லின் பொருள் புகழ் என்பதாகும்**

61) புதிய அறம் பாட அறிஞன் என்று பாராட்டப்படுபவர் யார்?

**A) பாரதியார்**

B) பாரதிதாசன்

C) வாணிதாசன்

D) கண்ணதாசன்

**விளக்கம்: சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட அறிஞன் என்ற சிறப்பு பெயர் பெற்றவர் – பாரதியார். இவ்வாறு பாரதியாரை புகழ்ந்தவர் பாரதிதாசன்**

62) மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை – என்று செய்யுளுக்கு இலக்கணம் வகுத்தவர்?

A) அகத்தியர்

**B) தொல்காப்பியர்**

C) பவணந்தி முனிவர்

D) வீரமாமுனிவர்

**விளக்கம்: மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை என்று செய்யுளுக்கு இலக்கணம் வகுத்த நூல் தொல்காப்பியம். இதன் ஆசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர்.**

63) கூற்றுகளை ஆராய்க.

1. வட்டெழுத்து என்பது நேர்க்கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.

2. தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவம் ஆகும்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவம் ஆகும்**

64) பழங்காலத்தில் கீழ்க்கண்ட எதை எழுத பயன்டுத்தவில்லை?

A) கற்பாறை

B) செப்பேடு

C) ஓலை

**D) பானை**

**விளக்கம்: பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினார். ஆனால் பானை மீது வண்ணங்களால் ஓவியம் தீட்டினர்**

65) கூற்று: ஓலைகளில் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்

காரணம்: ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது எளிது.

**A) கூற்று சரி காரணம் தவறு**

B) கூற்று தவறு காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் கூற்று காரணத்தை விளக்க வில்லை.

**விளக்கம்: ஓலைகளில் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் பயன்படுத்துவது கடினம்**

66) தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்?

A) பாரதிதாசன்

**B) தந்தை பெரியார்**

C) வ. உ. சிதம்பரனார்

D) பெருஞ்சித்திரனார்

**விளக்கம்: தமிழ் மொழியில் எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டவர் தந்தை பெரியார். இவர் இருபதாம் நூற்றாண்டு வரை வேறு வடிவில் இருந்த சில எழுத்துக்களை சீர்திருத்தம் செய்தார். இவற்றில் சில அரசால் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது**

67) எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் யார்?

A) தந்தை பெரியார்

B) கால்டுவெல்

C) ஈராஸ்பாதிரியார்

**D) வீரமாமுனிவர்**

**விளக்கம்: வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ஆவார். இவரே தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தம் செய்தவர் ஆவார்**

68) பாரதியாருக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க?

A) சிந்துக்குத் தந்தை

B) செந்தமிழ்த் தேனீ

C) புதிய அறம் பாட வந்த அறிஞன்

**D) தமிழ்த் தாத்தா**

**விளக்கம்: சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன் என்று பாரதியாரை புகழ்ந்தவர் பாரதிதாசன். இதில் தாமிழ்த் தாத்தா என்பது உ. வே. சா–வைக் குறிக்கும்**

69) இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை – இதில் குறிப்பிடப்படும் இருதிணை எது?

A) அகத்திணை, புறத்திணை

B) குறிஞ்சித் திணை, முல்லைத் திணை

C) வெட்சித்திணை, வஞ்சித்திணை

**D) உயர்திணை, அஃறிணை**

**விளக்கம்: இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை என்ற தொல்காப்பியப் பாடலில் தொல்காப்பியர் குறிப்படுவது உயர்திணை, அஃறிணை என்பதாகும்.**

70) சில எழுத்துக்களின் மேற்பகுதியில் குறுக்குகோடு இடக் காரணம்?

A) நெடில் எனக் குறிப்பிடுவதற்கு

B) குறில் எனக் குறிப்பிடுவதற்கு

C) மெய்யெழுத்து எனக் குறிப்பிடுவதற்கு

**D) அழகுபடுத்துவதற்காக**

**விளக்கம்: சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.**

71) எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் யாருடைய காலம் முதல் இருந்து வந்துள்ளது?

A) அகத்தியர்

**B) தொல்காப்பியர்**

C) தந்தை பெரியார்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.**

72) தமிழில் சொல் என்பதற்கு_________என்று பொருள்?

A) பதர்

B) பொருள்

C) எழுத்து

**D) நெல்**

**விளக்கம்: தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். சொன்றி, சோறு என்பவை அவ்வழியில் வந்தவை.**

73) எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது யாருடைய கூற்று?

A) அகத்தியர்

B) பவணந்தி முனிவர்

C) வீரமாமுனிவர்

**D) தொல்காப்பியர்**

**விளக்கம்: தொல்காப்பியத்தின் ஆசிரியரான தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று கூறியுள்ளார்.**

74) மறம் பாட வந்த மறவன் – இதில் மறவன் என்று குறிப்பிடப்படுபவர்?

A) பாரதிதாசன்

B) வீரமாமுனிவர்

**C) பாரதியார்**

D) கண்ணதாசன்

**விளக்கம்: மறம் பாட வந்த மறவன் என்று குறிப்பிடப்படுபவர் பாரதியார். இவ்வாறு பாரதியாரை புகழ்ந்தவர் பாரதிதாசன்.**

75) வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!

வாழ்க தமிழ்மொழியெ! – என்று பாடியவர் யார்?

A) பாரதிதாசன்

B) வாணிதாசன்

**C) பாரதியார்**

D) கண்ணதாசன்

**விளக்கம்: வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!**

**வாழ்க தமிழ்மொழியெ! – என்று தமிழ்மொழியை பாடியவர் – பாரதியார்**

76) உயிரளபெடையை எத்தனை மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும்?

A) 2

B) 2½

**C) 3**

D) 1½

**விளக்கம்: உயிரளபெடையை மூன்று மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும். உயிரளபெடை மூன்று வகைப்படும்.**

77) தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

A) புலி – பறழ்

**B) யானை – குட்டி**

C) பசு – கன்று

D) சிங்கம் – குருளை

**விளக்கம்: யானையின் இளமைப் பெயர் கன்று ஆகும். குட்டி என்பது ஆட்டின் இளமைப் பெயராகும்.**

78) மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க_________ஐ கண்டுபிடித்தான்?

A) எழுத்து

B) வரி

**C) மொழி**

D) இலக்கியம்

**விளக்கம்: மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான். மொழியை நிலைபெறச் செய்ய எழுத்துக்களை உருவாக்கினான். எழுத்துக்களின் வரிவடிவங்கள் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன.**

79) நெடிலைக் குறிக்க இக்காலத்தில் துணைக்கால் பயன்படுத்தப்படுகிறது. அக்காலத்தில் என்ன பயன்படுத்தப்பட்டது?

A) இரட்டைப் புள்ளி

B) கோடு

**C) ஒற்றைப்புள்ளி**

D) கொம்பு

**விளக்கம்: நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் பயன்படுத்தப்படுகிறது.**

80) ஏய் என்ற சொல்லின் பொருளில் பொருந்தாதது எது?

A) கூடு

B) பொருந்து

C) சேர்

**D) வா**

**விளக்கம்: எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது.**

81) திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவியர் யார்?

A) துரை. மாணிக்கம்

B) பெருஞ்சித்தனார்

C) டி. கே. சிதம்பரனார்

**D) இரா. இளங்குமரனார்**

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும். இரா. இளங்குமரனார் திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்துள்ளார்.**

82) கூற்றுகளை ஆராய்க.

1. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது.

2. அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான்.

3. அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்

4. அம்புவிடுவதில் வல்லவனை ஏகலைவன் என்று கூறுகிறோம்

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது.**

**அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான்.**

**அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்**

**அம்புவிடுவதில் வல்லவனை ஏகலைவன் என்று கூறுகிறோம்**

83) முள்ளம்பன்றியின் பழம்பெயர்?

A) ஏய்ப்பன்றி

**B) எய்ப்பன்றி**

C) எயிற்றுபன்றி

D) எயிறுப்பன்றி

**விளக்கம்: ஏவு என்னும் சொல் ஏ என்று ஆனது மட்டுமின்றி எய் எனவும் ஆயிற்று. ஏவுகின்ற அம்பைப் போல் கூர்முள்ளை உடைய முள்ளம்பன்றியின் பழம்பெயர் எய்ப்பன்றி.**

84) அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர்_____________?

A) எயிற்றி

B) எயினி

**C) எயினியர்**

D) எயினியி

**விளக்கம்: அம்பை எய்பவர் எயினர். அவர்தம் மகளிர் எயினியர். சங்கப்புலவர்களுள் எயினனாரும் உளர். எயினியாரும் உளர்.**

85) தவறான ஒன்றைத் தேர்வு செய்க

A) ஆன் – ஆ

B) மான் – மா

**C) கோன் – கோ**

D) தேன் – தோ

**விளக்கம்: ஆன் என்பது ஆ ஆகியது. மான் என்பது மா ஆகியது. கோன் என்பது கோ ஆகியது. தேன் என்பது தே ஆகியது. பேய் என்பது பே ஆகியது. இவையெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.**

86) மொழியை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.**

87) ஓரெழுத்து மொழி என்பது நெட்டெழுத்துகள் ஏழே என்று கூறியவர்?

**A) தொல்காப்பியர்**

B) அகத்தியர்

C) நன்னூலார்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: ஓர் எழுத்து மொழி எவை எனின், நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.**

88) நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி – இதில் குறிப்பிடப்படும் நெட்டெழுத்துகள் எவை?

A) உயிர் நெடில் எழுத்து

B) உயிர்மெய் நெடில் எழுத்து

C) மெய் எழுத்து

**D) A மற்றும் B**

**விளக்கம்: நெட்டெழுத்துகள் ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர். இதில் குறிப்பிடப்படும் ஏழு நெட்டெழுத்துகள் என்பது உயிர் நெடில் எழுத்து என்றோ உயிர்மெய் நெட்டெழுத்து என்றோ கூறாமல் நெட்டெழுத்து என்று மட்டும் கூறினார்.**

89) உயிர் மெய் நெட்டெழுத்துக்கள் எத்தனை?

A) 216

**B) 126**

C) 247

D) 18

**விளக்கம்: தமிழுள்ள முதல் எழுத்துகள் 30. இதில் மெய்யெழுத்துக்கள் 18. உயிர் எழுத்துகள் 12. உயிர்எழுத்துகள் 12–ல் 7 மட்டுமே நெடில் எழுத்துகள். இந்த 7 எழுத்துகளை உயிர்நெடில் என்கிறோம். உயிர் நெடில் 7–ம் மெய்யெழுத்து 18 உடன் சேரும் போது உயிர்மெய் நெட்டெழுத்து கிடைக்கிறது. ஆகவே 18 x 7 =126.**

90) கூற்றுகளை ஆராய்க.

1. தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் எல்லா நிலைகளிலும் வாரா.

2. சில எழுத்துக்கள் அரிச்சுவடியில் இருப்பினும் அவை மொழிநிலையில் இடம்பெறா.

3. ஆனால் நெட்டெழுத்துகளில் சொல் என்னும் நிலையைப் பெறாதவை இல்லை.

A) 1, 3 சரி

**B) 1, 2 சரி**

C) 1 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் எல்லா நிலைகளிலும் வாரா.**

**2. சில எழுத்துக்கள் அரிச்சுவடியில் இருப்பினும் அவை மொழிநிலையில் இடம்பெறா.**

**3. ஆனால் நெட்டெழுத்துகளில் சொல் என்னும் நிலையைப் பெறாதவையும் உண்டு.**

91) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க (ஓரெழுத்து ஒருமொழி பற்றியதில்)

**A) உயிர் வரிசையில் ஏழு எழுத்துக்கள்**

B) ம வரிசையில் ஆறு எழுத்துக்கள்

C) த, ப, ந என்னும் வரிசையில் ஐந்து ஐந்து எழுத்துக்கள்

D) க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகள்

**விளக்கம்: ஓரெழுத்து ஒருமொழியில் உள்ள மொத்த எழுத்துகள் – 42 ஆகும். இதில்**

**1. உயிர் வரிசையில் ஆறு எழுத்துக்கள்**

**2. ம வரிசையில் ஆறு எழுத்துக்கள்**

**3. த, ப, ந என்னும் வரிசையில் ஐந்து ஐந்து எழுத்துக்கள்**

**4. க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகள்**

**5. ய வரிசையில் ஒரு எழுத்து**

**6. நெ, து என்னும் இரு எழுத்துகள்**

92) மாநிலம் என்ற சொல்லின் பொருள்?

A) மாங்காய் விளையும் நிலம்

B) மாமரம் இருக்கும் நிலம்

**C) பெருநிலம்**

D) விளைநிலம்

**விளக்கம்: மா என்னும் ஓரெழுத்து ஒருமொழியில் பிறந்தது மாநிலம் என்ற சொல். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம்.**

93) மாஞாலம் – இச்சொல்சொலிலுள்ள ஞாலம் என்பதன் பொருள்?

A) நாடு

B) கண்டம்

**C) உலகம்**

D) கடல்

**விளக்கம்: மா என்பது ஓரெழுத்து ஒருமொழியில் ஒன்று. மா என்றால் பெரிய என்று பொருள். ஞாலம் என்றால் உலகம் என்று பொருள். மாஞலம் என்றால் உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்டப் பயன்படுத்தப்படுகிறது.**

94) மா என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு பொருத்தமானது?

A) பறவை

**B) விலங்கு**

C) மனிதன்

D) உலகம்

**விளக்கம்: மா என்ற ஓரெழுத்து ஒரு மொழி விலங்கை குறிக்கிறது. அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நின்கின்றது.**

95) ஓயாது ஒலி செய்யும் ஒலிக் குறிப்பைக் காட்டி நிற்கும் ஓரெழுத்து ஒரு மொழி?

A) மா

B) வீ

C) ஏ

**D) ஈ**

**விளக்கம்: ஈ என்னும் பொதுப்பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை. ஈ என்று பல்லைக் காட்டதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.**

96) குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே – என்று கூறியவர்?

**A) தொல்காப்பியர்**

B) அகத்தியர்

C) நன்னூலார்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே என்று ஓரெழுத்து ஒருமொழி பற்றி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.**

97) கூற்றுகளை ஆராய்க.

1. நன்னூலார் கூறிய சில ஓரெழுத்து ஒரு மொழிகள் இன்று வழக்கில் இல்லை

2. வழக்கிலுள்ள எல்லா ஓரெழுத்து ஒரு மொழிகளும் நன்னூலார் கூறியது.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் தவறு

D) இரண்டும் சரி

**விளக்கம்: 1. நன்னூலார் கூறிய சில ஓரெழுத்து ஒரு மொழிகள் இன்று வழக்கில் இல்லை**

**2. வழக்கிலுள்ள சில ஓரெழுத்து ஒரு மொழிகள் நன்னூலார் கூறிய பட்டியலில் இல்லாதவை.**

98) தனித்தமிழ் இயக்கம் என்ற நூலை எழுதியவர்?

A) தேவநேய பாவாணர்

**B) இரா. இளங்குமரனார்**

C) மறைமலையடிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் தனித்தமிழ் இயக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.**

99) ஓரெழுத்து ஒரு மொழியில் குறில் எழுத்துக்களை இடம்பெற செய்தவர்?

A) தொல்காப்பியர்

B) அகத்தியர்

**C) நன்னூலார்**

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: தொல்காப்பியருக்கு நெடிதுநாள் பின்னே தோன்றிய நன்னூலார் ஓரெழுத்து ஒரு மொழியில் குறில் எழுத்துகளையும் இணைத்தார்.**

100) ஓரெழுத்து ஒரு மொழியில் இடம்பெற்றுள்ள குறில் எழுத்துகளின் எண்ணிக்கை?

A) 1

**B) 2**

C) 3

D) 4

**விளக்கம்: ஓரெழுத்து ஒரு மொழி மொத்தம் 42. இதில் நொ, து என்னும் இரண்டு குறில் எழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.**

101) தேவநேயம் என்ற நூலை தொகுத்தவர் யார்?

A) தேவநேய பாவாணர்

**B) இரா. இளங்குமரனார்**

C) மறைமலையடிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் தேவநேயம் என்ற நூலைத் தொகுத்துள்ளார். இவர் நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர்.**

102) ஆய்த எழுத்தின் பிறப்பிடம்?

A) கழுத்து

B) மார்பு

winmeen.com

C) மூக்கு

**D) தலை**

**விளக்கம்: ஆய்த எழுத்து – தலை**

**வல்லின மெய் எழுத்துக்கள்(6) – மூக்கு**

**மெல்லின மெய் எழுத்துக்கள்(6) – மார்பு**

**இடையின மெய் எழுத்துக்கள்(6) – கழுத்து**

103) இடப்பிறப்பில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்.

A) மார்பு

B) தலை

C) கழுத்து

**D) நாக்கு**

**விளக்கம்: எழுத்துக்களின் பிறப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.**

**1. இடப்பிறப்பு 2. முயற்சிபிறப்பு**

**இதில் இடப்பிறப்பு என்பது மார்பு, தலை, மூக்கு, கழுத்து ஆகும்.**

**இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகியவை முயற்சிப் பிறப்பு ஆகும்.**

104) வாய்த்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப்பல்லைப் பொருந்தும் முயற்சியால் சில உயிர் எழுத்துக்கள் பிறக்கின்றன. இந்த கூற்றுக்கு பொருந்தாத எழுத்து எது?

A) இ, ஈ

B) எ, ஏ

C) ஐ

**D) ஔ**

**விளக்கம்: இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன. ஆனால் ஔ என்னும் எழுத்து வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.**

105) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துக்கள்_______________?

A) இ, ஈ

**B) உ, ஊ**

C) எ, ஏ

D) அ, ஆ

**விளக்கம்: உ, ஊ என்னும் எழுத்துகள் உதடுகள் குவிப்பதால் பிறக்கின்றன.**

106) ஓரெழுத்து ஒரு மொழியில் இடம்பெற்றுள்ள நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை?

A) 2

B) 42

C) 30

**D) 40**

**விளக்கம்: ஓரெழுத்து ஒருமொழி மொத்தம் 42. இதில் நொ, து என்னும் இரு எழுத்துக்களை தவிர மீதி உள்ள 40 எழுத்துக்களும் நெடில் எழுத்துகள் ஆகும்.**

107) பழங்கால கல்வெட்டுகளில் க என்னும் எழுத்தில் நெடில் வடிவத்தை எவ்வாறு எழுதலாம்?

A) க:

B) கா

**C) க.**

D) க. .

**விளக்கம்: அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்துப் பக்கத்தில் புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. எனவே க என்னும் எழுத்தின் நெடில் வடிவம் க.**

108) எகர வரிசை உயிர்மெயக் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை_____________எழுத்துகளாக கருதப்பட்டன.

A) ஐகார

**B) ஔகார**

C) மகர

D) ஆய்த

**விளக்கம்: எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துக்களாகக் கருதப்பட்டன.**

109) மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்து?

A) ப்

B) வ்

**C) ற், ன்**

D) ள்

**விளக்கம்: ற், ன் – மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.**

**மேல்வாய்ப் பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் தோன்றும் எழுத்து – வ்**

**ள் – மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.**

**ப் – மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.**

110) ஆய்த எழுத்தின் முயற்சிப் பிறப்பு?

A) தலை

**B) வாயை திறந்து ஒலித்தல்**

C) உதடுகளை குவித்தல்

D) நாவினது ஓரங்கள் மேல் அண்ணத்தை தடித்து தடவுதல்

**விளக்கம்: ஆய்த எழுத்தின் இடப்பிறப்பு – தலை. ஆய்த எழுத்தின் முயற்சிப் பிறப்பு – வாயைத்திறந்து ஒலித்தல் ஆகும்.**

111) ஆந்தையின் ஒலி மரபை தேர்வு செய்க.

A) கரையும்

B) கூவும்

**C) அலறும்**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: ஆந்தை அலறும்**

**காகம் கரையும்**

**சேவல் கூவும்**

112) பாவாணர் நூலகத்தை அமைத்தவர்?

A) தேவநேய பாவாணர்

**B) இரா. இளங்குமரனார்**

C) மறைமலையடிகள்

D) பரிதிமாற்கலைஞர்

winmeen.com

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.**

113) பொருத்துக

அ. க், ங் – 1. நாவின் இடை, அண்ணத்தின் இடை

ஆ. ச், ஞ் – 2. நாவின் நுனி, மேல்வாயப்பல்லின் அடி

இ. ட், ண் – 3. நாவின் முதல், அண்ணத்தின் அடி

ஈ. த், ந் – 4. நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**A) 3, 1, 4, 2**

B) 3, 2, 1, 4

C) 3, 1, 2, 4

D) 1, 2, 3, 4

**விளக்கம்: க், ங் – நாவின் முதல், அண்ணத்தின் அடி**

**ச், ஞ் – நாவின் இடை, அண்ணத்தின் இடை**

**ட், ண் – நாவின் நுனி, அண்ணத்தின் நுனி**

**த், ந் – நாவின் நுனி, மேல்வாயப்பல்லின் அடி**

114) தமிழிசை இயக்கம் என்ற நூலை எழுதியவர்?

A) தேவநேய பாவாணர்

**B) இரா. இளங்குமரனார்**

C) மறைமலையடிகள்

D) பரிதிமாற்கலைஞர்

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் தமிழிசை இயக்கம் என்ற நூலை எழுதியுள்ளார். இவர் நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர்.**

115) வாயைத் திறந்தாலே பிறக்கும் எழுத்துக்கள்?

A) உ, ஊ

B) எ, ஏ

C) ஐ, ஔ

**D) அ, ஆ**

**விளக்கம்: அ, ஆ என்னும் இரண்டு உயிரெழுத்துக்களும் வாயைத் திறந்து ஒலித்தாலே பிறக்கின்றன. ஆனால் பிற எழுத்துகள் நா, அண்ணம், உதடு போன்ற உறுப்புகளில் செயல்பாட்டால் மட்டுமே பிறக்கும்.**

116) எழுத்துகளின் பிறப்பின் வகைகள் எத்தனை?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: எழுத்துகளின் பிறப்பை இரண்டு வகைப்படுத்தலாம். அவை இடப்பிறப்பு, முயற்சி பிறப்பு ஆகும்.**

117) பொருத்துக.

அ. வல்லின மெய் எழுத்துக்கள்(6) – 1. மூக்கு

ஆ. மெல்லின மெய் எழுத்துக்கள்(6) – 2. மார்பு

இ. இடையின மெய் எழுத்துக்கள்(6) – 3. கழுத்து

A) 1, 2, 3

B) 2, 3, 1

**C) 2, 1, 3**

D) 3, 1, 2

**விளக்கம்: வல்லின மெய் எழுத்துக்கள்(6) – மார்பு**

**மெல்லின மெய் எழுத்துக்கள்(6) – மூக்கு**

**இடையின மெய் எழுத்துக்கள்(6) – கழுத்து**

118) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துக்கள்___________?

A) இ, ஈ

**B) உ, ஊ**

C) எ, ஏ

D) அ, ஆ

**விளக்கம்: இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன. ஆனால் உ, ஊ என்னும் எழுத்து வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.**

119) நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள்?

A) க், ங்

B) ச், ஞ்

**C) ட், ண்**

D) ப், ம்

**விளக்கம்: க், ங் ஆகிய இரு மெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.**

**ச், ஞ் – ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.**

**ட், ண் – ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன**

**ப், ம் – ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.**

120) கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து?

A) ம்

B) ப்

C) ய்

**D) வ்**

**விளக்கம்: வ் என்னும் எழுத்து மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது**

121) பழங்காலத்தில் ஐகார எழுத்தைக் குறிப்பிடும் முறை?

A) அதன் முன் ஒரு புள்ளி வைப்பர்

B) அதன் பின் இரு புள்ளி வைப்பர்

**C) அதன் முன் இரு புள்ளி வைப்பர்**

D) அதன் பின் ஒரு புள்ளி வைப்பர்

**விளக்கம்: ஐகார எழுத்துக்களைக் குறிப்பிட எழுத்துக்களின்முன் இரட்டைப் புள்ளி இட்டனர்.**

**உதாரணமாக கை – க**

122) கூற்றுகளை ஆராய்க

1. செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் – இரா. இளங்குமரனார்

2. இவர் திருச்சிக்கு அருகில் அல்லூரில் விவேகானந்தர் தவச்சாலையும், திருவள்ளுவர் நூலகமும் அமைத்துள்ளார்.



winmeen.com

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் தவறு

D) இரண்டும் சரி

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர் – இரா. இளங்குமரனார். இவர் திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவணர் நூலகமும் அமைத்துள்ளார்.**

123) இரா. இளங்குமரனார் எழுதிய நூல்களில் பொருந்தாது எது?

A) இலக்கண வரலாறு

B) தமிழிசை இயக்கம்

C) தனித்தமிழ் இயக்கம்

**D) தேவநேயம்**

**விளக்கம்: செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் உள்ளி;ட்ட பல நூல்களை எழுதியுள்ளார். தேவநேயம் என்னும் நூல் அவர் தொகுத்த நூலாகும்.**

124) உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் _________ஐ இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**A) கழுத்து**

B) மார்பு

C) மூக்கு

D) தலை

**விளக்கம்: உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து ஆய்தம். மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து வல்லின எழுத்து. மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து மெல்லினம்.**

125) முயற்சிப் பிறப்புக்கு பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க.

**A) மார்பு**

B) இதழ்

C) நாக்கு

D) பல்

**விளக்கம்: எழுத்துக்களின் பிறப்பினை இடப்பிறப்பு, முயற்சி பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.**

**இடப்பிறப்பு – மார்பு, தலை, கழுத்து, மூக்கு**

**முயற்சி பிறப்பு – இதழ், நாக்கு, பல், மேல்வாய்**

126) மேல்வாயைப்பல்லைப் பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கும் எழுத்து?

A) ப்

**B) வ்**

C) ற், ன்

D) ள்

**விளக்கம்: மேல்வாய்ப் பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் தோன்றும் எழுத்து – வ்**

**ள் – மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.**

**ற், ன் – மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.**

**ப் – மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.**

127) கூவும் என்ற ஒலி மரபுடன் தொடர்புடைய பறவை எது?

**A) சேவல்**

B) குயில்

C) காகம்

D) A மற்றும் B

**விளக்கம்: சேவல் – கூவும்**

**குயில் – கூவும்**

**காகம் – கரையும்**

128) பொருத்துக.

அ. ஒலிப்பிறப்பியல் – 1. Consonant

ஆ. மெய்யொலி – 2. Articulatory Phonetics

இ. மூக்கொலி – 3. Epigraph

ஈ. கல்வெட்டு – 4. Nasal consonant sound

A) 2, 3, 4, 1

**B) 2, 1, 4, 3**

C) 1, 4, 2, 3

D) 2, 4, 1, 3

**விளக்கம்: ஒலிப்பிறப்பியல் – 1. Articulartory Phonetics**

**மெய்யொலி – 2. Consonant**

**மூக்கொலி – 3. Nasal consonant sound**

**கல்வெட்டு – 4. Epigraph**

129) எந்த நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துக்கள் காணப்படுகின்றன?

A) 10

B) 12

**C ) 11**

D) 14

**விளக்கம்: முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான 11–ம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துக்கள் காணப்படுகின்றன.**

130) மகர எழுத்தைக் குறிப்பிட___________எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்?

A) தகர(த)

**B) பகர(ப)**

C) நகர(ந)

D) டகர(ட)

**விளக்கம்: பழங்காலத்தில் மகர எழுத்தைக் குறிப்பிட பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்.**

131) ____________ குனுகும்

A) காகம்

B) ஆந்தை

C) குயில்

**D) புறா**

**விளக்கம்: புறா – குனுகும்**

**காகம் – கரையும்**

**ஆந்தை – அலறும்**

**குயில் – கூவும்**

132) பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க

A) மக்கள் கூட்டம்

B) ஆநிரை

C) ஆட்டு மந்தை

**D) மக்கள் நிரை**

**விளக்கம்: மக்கள் கூட்டம் என்பதே சரியானதாகும்.**

**ஆ(பசு) – நிரை**

**ஆட்டு – மந்தை**

133) பொருத்துக

| | |
|---|---|
| அ. கோழி | – 1. பேசும் |
| ஆ. மயில் | – 2. குழறும் |
| இ. கிளி | – 3. அகவும் |
| ஈ. கூகை | – 4. கொக்கரிக்கும் |

**A) 4, 3, 1, 2**

B) 4, 1, 2, 3

C) 1, 4, 2, 3

D) 3, 2, 4, 1

**விளக்கம்: கோழி – கொக்கரிக்கும்**

**மயில் – அகவும்**

**கிளி – பேசும்**

**கூகை – குழறும்**

134) சோறு___________, முறுக்கு___________

A) தின், உண்

**B) உண், தின்**

C) பருகு, தின்

D) பருகு, உண்

**விளக்கம்: சோறு – உண்**

**முறுக்கு – தின்**

**பால் – பருகு**

135) பூ___________

A) பறி

B) எடு

**C) கொய்**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: பூ கொய் என்பது சரியானது.**

136) கூற்றுகளை ஆராய்க.

1. அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடில்.

2. ஐகார எழுத்துக்களைக் குறிப்பிட எழுத்துக்களின் முன் ஒற்றைப் புள்ளி இட்டனர்.

3. எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்து ஒரு புள்ளி இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துக்களாகக் கருதப்பட்டன.

4. மகர எழுத்துக்களைக் குறிப்பிட பகர எழுத்தை அடுத்து புள்ளி இட்டனர்

5. குற்றிலுகர, குற்றியலிகர எழுத்துக்களைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்

A) 1, 2, 3, 5 சரி

B) 1, 2, 4, 5 சரி

C) 1, 4, 5 சரி

**D) 1 மற்றும் 5 சரி**

**விளக்கம்: 1. அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துக்களை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடில்.**

**2. ஐகார எழுத்துக்களைக் குறிப்பிட எழுத்துக்களின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர்.**

**3. எகர வரிசை உயிர்மெயக் குறில் எழுத்துக்களை அடுத்து இரு புள்ளி இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துக்களாகக் கருதப்பட்டன.**

**4. மகர எழுத்துக்களைக் குறிப்பிட பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்**

**5. குற்றிலுகர, குற்றியலிகர எழுத்துக்களைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்**

137) பொருத்துக

அ. கூடை – 1. பறி

ஆ. பூ – 2. வனை

இ. இலை – 3. கொய்

ஈ. பானை – 4. முடை

A) 3, 4, 2, 1

B) 3, 4, 1, 2

C) 4, 3, 2, 1

**D) 4, 3, 1, 2**

**விளக்கம்: கூடை – முடை**

**பூ – கொய்**

**இலை – பறி**

**பானை – வனை**

138) சுவர்____________?

A) கட்டு

**B) எழுப்பு**

C) வரை

D) வனை

**விளக்கம்: சுவர் எழுப்பு என்பதே சரியானதாகும்.**

**பானை வனை**

139 Lexicography– என்பதன் தமிழ்ச்சொல்?

**A) அகராதியியல்**

B) சொல் அகராதி

C) சித்திர எழுத்து

D) உயிரொலி

**விளக்கம்:அகராதியியல் –** Lexicography

winmeen.com

**சித்திர எழுத்து** – Pictograph

**உயிரொலி** – Vowel

140) கூற்றுகளை ஆராய்க.

1. ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துக்களை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

2. ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் தவறு

**D) இரண்டும் சரி**

**விளக்கம்: 1. ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துக்களை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.**

**2. ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.**

141) தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் என்னும் நூலை எழுதியவர்?

A) மறைமலை அடிகள்

B) தேவநேயப் பாவாணர்

**C) இரா. இளங்குமரனார்**

D) பாரதியார்

**விளக்கம்: தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள் என்னும் நூலை எழுதியவர் இரா. இளங்குமரனார் ஆவார். இவரின் பிற நூல்கள் – இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம். இவர் தேவநேயம் என்னும் நூலைத் தொகுத்துள்ளார்.**

142) தொடக்க கால எழுத்தின் வடிவம்?

A) ஒலி

B) சைகை

**C) ஓவியம்**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.**

winmeen.com

## 8th Tamil Unit 2 Questions

1) வாணிதாசனின் இயற்பெயர்?

**A) அரங்கசாமி**

B) ராசகோபாலன்

C) சாத்தப்பன்

D) மருதகாசி

**விளக்கம்: வாணிதாசனின் இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு. ராசகோபலன் என்பது சுரதா (சுப்பு ரத்தின தாசன்) –ன் இயற்பெயர். சாத்தப்பன் என்பது கண்ணதாசனின் தந்தை பெயர். மருதகாசி என்பது மற்றொரு தமிழ் கவிஞர்.**

2) நெஞ்சில் ஈரம் இல்லார் நாண

நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச் – இதில் ஈரம் என்ற சொல்லின் பொருள்?

A) தண்ணீர்

B) ஆறு

**C) இரக்கம்**

D) அன்பு

**விளக்கம்: இங்கு ஈரம் என்ற சொல்லின் பொருள் இரக்கம் என்பதாகும். நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது என்று ஓடையின் புகழைப் பாடியுள்ளார் வாணிதாசன்.**

3) "செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்

சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்" – இச்சொல்லில் உள்ள செஞ்சொல் என்பதன் பொருள்?

A) திருத்தப்படாத சொல்

**B) திருந்திய சொல்**

C) செந்தமிழ்ச் சொல்

D) செல்லுதல் என்னும் பொருள் தரும் சொல்

**விளக்கம்: பாடலில் உள்ள செஞ்சொல் என்பதன் பொருள் திருந்திய சொல் என்பதாகும். சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது ஓடை என்று வாணிதாசன் கூறுகிறார்.**

4) பள்ளிக்குச் சென்று கல்வி_______________சிறப்பு?

**A) பயிலுதல்**

B) பார்த்தல்

C) கேட்டல்

D) பாடுதல்

**விளக்கம்: பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு என வாணிதாசன் தனது தொடுவானம் என்னும் நூலில் ஓடை என்னும் தலைப்பில் கூறியுள்ளார்.**

5) செஞ்சொல் என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது?

A) செம்மை + சொல்

B) செம் + சொல்

C) செ + சொல்

**D) செழுமை + சொல்**

**விளக்கம்: செஞ்சொல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது – செம்மை + சொல்.**

6) சீருக்கு + ஏற்ப என்னும் சொல்லை சேர்தது எழுதக் கிடைப்பது?

A) சீருக்குஏற்ப

**B) சீருக்கேற்ப**

C) சீர்க்கேற்ப

D) சீருகேற்ப

**விளக்கம்: சீருக்கு + ஏற்ப என்னும் சொல்லை சேர்த்து எழுதும் போது சீருக்கேற்ப என்று எழுதலாம். இதில் நிலைமொழியிலுள்ள இறுதி எழுத்து கு. இதன் பிரித்தால் க் + உ எனப் பிரியும். வருமொழியின் முதல் எழுத்து ஏ. உயிர் வரின் உக்குரல் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி நிலை மொழியின் இறுதியிலுள்ள உ என்னும் எழுத்து கெடும். சீருக்க்ஞ்ஏற்ப எனக் கிடைக்கும். உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி நிலைமொழின் இறுதி எழுத்து க்–உடன் வருமொழியின் முதல் எழுத்து ஏ சேர்ந்து (க் + ஏ–கே) என மாறும்.**

7) ஓடை + ஆட என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) ஓடைஆட

**B) ஓடையாட**

C) ஓடையோட

D) ஓடைவாட

**விளக்கம்: ஓடை + ஆட என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ஓடையாட. ஓடை + ஆட இதில் நிலைமொழியின் இறுதி எழுத்து டை. இதனை ட் + ஐ எனப்பிரிக்கலாம். வருமொழியின் முதல் எழுத்து ஆ. நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் உயிர் எழுத்து எனில், உடம்படு மெய் என்னும் புணர்ச்சி படி இவ்விரு சொற்களும் சேரும். நிலைமொழியின் இறுதி எழுத்து ஐ. இதற்கேற்ற உடம்படு உடம்படு மெய் ய். ஓடை + ய் + ஆட. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ய் + ஆ – யா. ஓடையாட என்று எழுதலாம்.**

8) தமிழச்சி என்ற நூலை எழுதியவர் யார்?

A) கண்ணதாசன்

B) மருதகாசி

C) பாரதிதாசன்

**D) வாணிதாசன்**

**விளக்கம்: தமிழச்சி என்னும் நூலை எழுதியவர் வாணிதாசன். இவரின் இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு ஆகும்.**

9) உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து
உழன்று உழன்றுமெத்த அடித்ததினால்" – இதில் முகில் என்பதன் பொருள் என்ன?

A) மழை

B) காற்று

C) புயல்

**D) மேகம்**

**விளக்கம்: இப்பாடலில் முகில் என்பது மேகத்தைக் குறிக்கிறது. மேகத்தை குறிக்கும் மற்றொரு சொல் கொண்டல்.**

10) கோணகாத்து என்னும் பாடலை எழுதியவர்?

**A) வெங்கம்பூர் சாமிநாதன்**

B) புலவர் செ. இராசு

C) பக்தவத்சல பாரதி

D) வாணிதாசன்

**விளக்கம்: கோணக்காத்துப் பாட்டு என்னும் பாடலை எழுதியவர் வெங்கம்பூர் சாமிநாதன் ஆவார். இதில் புயல் காற்று வீசும் போது ஏற்படும் சூழ்நிலைகள் பற்றி இப்பாடலில் விளக்கியுள்ளார் இதன் ஆசிரியர்.**

11) தமிழகப் பெருங்குடிகள் என்னும் நூலை எழுதியவர்?

A) வெங்கம்பூர் சாமிநாதன்

B) புலவர் செ. இராசு

**C) பக்தவத்சல பாரதி**

D) வாணிதாசன்

**விளக்கம்: தமிழகப் பெருங்குடிகள் என்னும் நூலை எழுதியவர் பக்தவத்சல பாரதி ஆவார். நிலம் அனைவருக்கும் பொது என்னும் கருத்தை மையமாக வைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.**

12) நெஞ்சில் ஈரம் இல்லார் நாண

நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச் – இதில் நாணம் என்ற சொல்லின் பொருள்?

A) பயம்

**B) வெட்கம்**

C) துன்பம்

D) நாணயம்

**விளக்கம்: நாணம் என்ற சொல்லின் பொருள் வெட்கம் என்பதாகும். இப்பாடலை எழுதியவர் வாணிதாசன் ஆவார்.**

13) "செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்

சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்" – இச்சொல்லில் உள்ள முழவு என்பதன் பொருள்?

**A) இசைக்கருவி**

B) மேகம்

C) மழை

D) ஓடை

**விளக்கம்: வாணிதாசனின் தொடுவானம் என்னும் நூலில் ஓடை என்னும் தலைப்பில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளன. இதில் முழவு என்னும் சொல்லின் பொருள் இசைக்கருவிகள் என்பதாகும்**

14) நீளுழைப்பு என்னும் சொல்லைப் பிர்த்து எழுதக் கிடைப்பது?

A) நீளு + உழைப்பு

B) நீண் + உழைப்பு

C) நீள் + அழைப்பு

**D) நீள் + உழைப்பு**

**விளக்கம்: நீளுழைப்பு என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் நீள் + உழைப்பு**

15) நன்செய் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) நன் + செய்

B) நன்று + செய்

**C) நன்மை + செய்**

D) நல் + செய்

**விளக்கம்: நன்செய் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது – நன்மை + செய் என்பதாகும்.**

16) செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது_________

A) கடல்

**B) ஓடை**

C) குளம்

D) கிணறு

**விளக்கம்: செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்பது ஓடை ஆகும். செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின் சீருக்கு ஏற்ப முழவை மீட்டும் என்ற பாடல் வாணிதாசனின் ஓடை பற்றிய பாடல் ஆகும்.**

17) காங்கேய நாடு எது எந்த மண்டலத்தின் நாடுகளுள் ஒன்று?

A) சேர மண்டலம்

B) பாண்டிய மண்டலம்

C) சோழ மண்டலம்

**D) கொங்கு மண்டலம்**

**விளக்கம்: காங்கேய நாடு என்பது கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்றாகும்.**

18) பொருத்துக.

அ. தூண்டுதல் – 1. வெட்கம்

ஆ. ஈரம் – 2. ஆர்வம் கொள்ளுதல்

இ. முழவு – 3. இரக்கம்

ஈ. நாணம் – 4. இசைக்கருவி

A) 1, 2, 3, 4

B) 4, 3, 2, 1

C) 3, 4, 1, 2

**D) 2, 3, 4, 1**

**விளக்கம்: தூண்டுதல் – ஆர்வம் கொள்ளுதல்**

**ஈரம் – இரக்கம்**

**முழவு – இசைக்கருவி**

**நாணம் – வெட்கம்**

19) நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி

நாட்டு மக்கள் வறுமை ஒட்டி – இதில் குறிப்பிடப்படுவது?

A) நதி

B) கடல்

**C) ஓடை**

D) அருவி

**விளக்கம்: நன்செய் மற்றும் புன்செய் நிலங்களுக்கு நீர் வழங்குவதன் மூலம் விவசாயம் செழித்து இந்நாட்டு மக்களின் வறுமையை ஓட்ட வல்லது ஓடை என்று பொருள் தரும் இவ்வரியை இயற்றியவர் வாணிதாசன் .**

20) பேச்சுத் தமிழில் அமைத்து பஞ்ச காலங்களில் பாடப்படும் கும்மிப் பாடல்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

A) தமிழ்கும்மி

**B) பஞ்சகும்மி**

C) செந்தமிழ் கும்மி

D) வாய்மொழிக்கும்மி

**விளக்கம்: நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர். பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக் கும்மிகள் என்று அழைக்கப்பட்டன.**

21) ஆர்க்காடு மைசூர் வரைக்கும் – கோணக்காத்து

அலறி அலறிமெத்த அடித்ததனால் – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் மெத்த என்ற சொல்லின் பொருள்?

A) குறைவான

B) வேகமான

**C) மிகவும்**

D) மேடான

**விளக்கம்: கோணகாத்து என்னும் தலைப்பில் எழுதப்பட்ட இப்பாடலில் குறிப்பிடப்படும் மெத்த என்ற சொல்லின் பொருள் மிகவும் என்பதாகும்.**

22) "செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்

சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்" – இச்சொல்லில் உள்ள வள்ளைப்பாட்டு என்பதன் பொருள்?

A) வலிமையான பாட்டு

B) எளிமையான பாட்டு

**C) நெல் குத்தும்போது பாடப்படும் பாட்டு**

D) செந்தமிழ் பாட்டு

**விளக்கம்: வள்ளைப் பாட்டு என்பது பெண்கள் நெல் குத்தும் போது பாடப்படும் ஒரு வகை உலக்கைப்பாட்டு ஆகும். இப்பாடல் வரியை எழுதியவர் வாணிதாசன் ஆவார்.**

23) தாரங்களும் பிள்ளைகளுடன் – கூட்டிக்கொண்டு

தானடந்து வேகமுடன் கூ கூ வென்றார் – இதில் தாரம் என்று குறிப்பிடப்படுபவர்?

A) தாய்

**B) மனைவி**

C) தந்தை

D) பெண் குழந்தை

**விளக்கம்: தாரம் என்பது மனைவியை குறிக்கும் மற்றொரு சொல்லாகும்.**

24) கோணகாத்து என்னும் பாடல் இடம்பெற்ற பஞ்சக் கும்மியைத் தொகுத்தவர்?

**A) வெங்கம்பூர் சாமிநாதன்**

B) செ. இராசு

C) பக்தவச்ல பாரதி

D) வாணிதாசன்

**விளக்கம்: கோணகாத்து என்னும் பாடலை இயற்றியவர் வெங்கம்பூர் சாமிநாதன் ஆவார். இவரின் பாடல்கள் செ. இராசு தொகுத்த பஞ்சக்கும்மிகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.**

25) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்படுபவர் யார்?

**A) அரங்கசாமி**

B) இராசகோபாலன்

C) மருதகாசி

D) வரதன்

**விளக்கம்: தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்படுபவர் வாணிதாசன் ஆவார். இவரின் இயற்பெயர் அரங்கசாமி என்கிற எத்திராசலு ஆகும்.**

26) சேகரமாய் வைத்த மரங்கள் – அத்தனையும்

சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே – இதில் சேகரம் என்ற சொல்லின் பொருள்?

A) மழை

B) மேகம்

**C) கூட்டம்**

D) காற்று

**விளக்கம்: சேகரமாய் வைத்த மரங்கள் – அத்தனையும்**

**சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே – இவ்வரிகளில் சேகரம் என்பது கூட்டம் என்று பொருள் தருகிறது. சேகரமாய் வைத்த மரங்கள் என்பது கூட்டமாய் வைத்த மரங்கள் என்று பொருள் தரும் வகையில் ஆசிரியர் இதனை எழுதியுள்ளார்.**

27) கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்

குளிர்ந்த புல்லுக்கும் இன்பம் கூட்டி – இவ்வரிகளில் குறிப்பிடப்படுவது?

**A) ஓடை**

B) நதி

C) அருவி

D) கிணற்று நீர்

**விளக்கம்: இப்பாடல் வரிகள் ஓடையை உணர்த்துகிறது. கரைகளோடு கொஞ்சி, பாய்ந்து அதன் மூலம் புல்லுக்கு நீர் வழங்குவது ஓடை என்று பெர்ருள் தரும் இப்பாடலை பாடியவர் வாணிதாசன்.**

28) கொம்புச் சுத்திக் கோணகாத்து – காலனைப்போல்

கோணமழை வந்துகப்பல் தான் கவிந்ததே – இதில் குறிபிடப்படும் காலன் என்ற சொல்லின் பொருள்?

A) இறைவன்

B) கொடிய மக்கள்

**C) எமன்**

D) அரசன்

**விளக்கம்: காலன் என்பது எமனைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகும். கூற்றுவன் என்பதும் எமனைக் குறிக்கும் ஒரு சொல் ஆகும்.**

29) பொருத்துக.

அ. தூண்டுதல் – 1. இரக்கம்

ஆ. ஈரம் – 2. இசைக்கருவி

இ. முழவு – 3. திருந்திய சொல்

ஈ. செஞ்சொல் – 4. ஆர்வம் கொள்ளுதல்

**A) 4, 1, 2, 3**

B) 1, 4, 2, 3

C) 2, 3, 4, 1

D) 2, 3, 1, 4

**விளக்கம்: தூண்டுதல் – ஆர்வம் கொள்ளுதல்**

**ஈரம் – இரக்கம்**

**முழவு – இசைக்கருவி**

**செஞ்சொல் – திருந்திய சொல்**

30) காங்கேய நாடு_______________மண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று?

A) சேர

B) சோழ

C) பாண்டிய

**D) கொங்கு**

**விளக்கம்: காங்கேய நாடு என்பது கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்றாகும். தற்போது இவ்வூர் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது.**

31) ஏடு போதா இதன்கவிக் கார்

ஈடு செய்யப் போரா ரோடி – இதில் குறிப்பிடப்படுவது?

A) ஆறு

B) அருவி

**C) ஓடை**

D) பள்ளி

**விளக்கம்: இப்பாடல் வரிகளை இயற்றியவர் வாணிதாசன்.. இப்பாடல் வரிகளில் ஓடையை பற்றிப் பாடப்பட்டுள்ளன.**

32) கோணகாத்து பாடல்___________எனவும் அழைக்கப்படுகிறது?

A) பஞ்சக் கும்மிகள்

**B) காத்து நொண்டிச் சிந்து**

C) புயல்காத்து பாட்டு

D) கடல் காற்ற பாட்டு

**விளக்கம்: கோணகாத்துப் பாட்டு என்று அழைக்கப்படும் காத்து நொண்டிச் சிந்து பாடலைப் பாடியவர் வெங்கம்பூர் சுவாமிநாதன் ஆவார்.**

33) சேகரமாய் வைத்தமரங்கள் – அத்தனையும்

சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாய்ச்சுதே – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் வின்னம் என்ற சொல்லின் பொருள்?

A) மேகம்

B) மிகவருந்தி

**C) சேதம்**

D) சரியாக

**விளக்கம்: வின்னம் என்ற சொல்லின் பொருள் சேதம் என்பதாகும். இவ்வரிகள் வெங்கம்பூர் சுவாமிநாதன் எழுதிய கோணகாத்து என்னும் பாடலில் இடம்பெற்றுள்ளது.**

34) வானில் கரு__________தோன்றினால் மழை பொழியும் என்பர்

**A) முகில்**

B) துகில்

C) வெயில்

D) கயல்

**விளக்கம்: வானில் கரு முகில் தோன்றினால் மழை பொழியும் என்பர். முகில் என்பது மேகம் என்று பொருள் தரும் சொல்லாகும். துகில் என்பது ஆடையைக் குறிக்கும் சொல். கயல் என்பது மீன் என்று பொருள் தரும் ஒரு சொல்**

35) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும்_________யும் ஓட்டிவிடும்.

A) பாலனை

**B) காலனை**

C) ஆற்றலை

D) நலத்தை

**விளக்கம்: முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் காலனை ஓட்டிவிடும். காலன் என்றால் எமன் என்று பொருள். இவ்வாறு கவிமணி தனது பாடல் மூலம் கூறியுள்ளார்.**

36) விழுந்ததங்கே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) விழுந்தூ + அங்கே

B) விழுந்த + ஆங்கே

**C) விழுந்தது + அங்கே**

D) விழுந்தது + ஆங்கே

**விளக்கம்: விழுந்ததங்கே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது விழுந்தது + அங்கே. நிலைமொழியின் இறுதி எழுத்து து என்பதாகும். வருமொழியின் முதல் எழுத்து அ என்பதாகும். உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி நிலைமொழியிலுள்ள உ என்னும் எழுத்து(து–த்=உ) கெட்டு த் மட்டுமே நிற்கும். விழுந்தத் + அங்கே. பின் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி விழுந்ததங்கே என்று எழுதலாம்.**

37) பொருத்துக.

| | |
|---|---|
| அ. முகில் | – 1. மிகவருந்தி |
| ஆ. கொடிகலங்கி | – 2. மேகம் |
| இ. சம்பிரமுடன் | – 3. கூட்டம் |
| ஈ. சேகரம் | – 4. முறையாக |

A) 2, 1, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 1, 4, 3, 2

D) 2, 3, 2, 4

| | |
|---|---|
| **விளக்கம்: முகில்** | **– மேகம்** |
| **கொடிகலங்கி** | **– மிகவருந்தி** |
| **சம்பிரமுடன்** | **– முறையாக** |
| **சேகரம்** | **– கூட்டம்** |

38) சுகுவாமிஷ் பழங்குடியினர் எந்த நாட்டில் வாழ்ந்த பழங்குடியினர்?

A) ரஷ்யா

B) ஜப்பான்

**C) அமெரிக்கா**

D) இந்தியா

**விளக்கம்: சுகுவாமிஷ் பழங்குடியினர் அமெரிக்க நாட்டில் வாழ்ந்த பழங்குடியினர். அமெரிக்க நாட்டில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள்.**

39) தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லையில் வாழும் பழங்குடிகள்?

**A) காடர்கள்**

B) தோமர்கள்

C) மதுக்கர்கள்

D) இவர்களில் யாருமில்லை

**விளக்கம்: தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர்.**

40) செத்திறந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) செ + திறந்த

B) செத்து + திறந்த

C) செ + இறந்த

**D) செத்து + இறந்த**

**விளக்கம்: செத்திறந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது செத்து + இறந்த என்பதாகும்.**

41) வாணிதாசன் யாருடைய மாணவர்?

**A) பாரதிதாசன்**

B) பாரதியார்

C) கவிமணி

D) மருதகாசி

**விளக்கம்: வாணிதாசன் பாரதிதாசனின் மாணவர்களில் ஒருவராவார். இவர் தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்படுகிறார்.**

42) பொருத்துக

அ. வின்னம் – 1. எமன்

ஆ. வாகு – 2. சேதம்

இ. காலன் – 3. சரியாக

ஈ. மெத்த – 4. மிகவும்

A) 4, 3, 1, 2

B) 1, 2, 3, 4

C) 2, 1, 4, 3

**D) 2, 3, 1, 4**

**விளக்கம்: வின்னம் – சேதம்**

**வாகு – சரியாக**

**காலன் – எமன்**

**மெத்த – மிகவும்**

43) சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவர் யார்?

A) சுகுவாமிஷ்

**B) சியாட்டல்**

C) பூஜேசவுண்ட்

D) தாரா

**விளக்கம்: சியாட்டல் என்பரே சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவர் ஆவார். இவர் நிலத்தின் முக்கியத்துவத்தை பற்றி அவர் வசிக்கும் நாட்டின் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

44) காடர்கள் தாங்கள் பேசும் மொழியை____________என்று அழைக்கின்றனர்?

A) சிந்தி

**B) ஆல்அலப்பு**

C) கொங்கிணி

D) காடனி

**விளக்கம்: பரம்பிக்குளம், ஆனைமலைப் பகுதிகளில் காடர்கள் வசிக்கும் சிற்றூர்கள் பல உள்ளன. காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினர். தாங்கள் பேசும் மொழியை 'ஆல் அலப்பு' என்று அழக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைமுறை பற்றிய எழுத்துக் குறிப்புகள் ஏதும் அவர்களிடம் இல்லை.**

45) செவாலியர் விருது பெற்ற தமிழறிஞர் யார்?

A) சிவாஜி கணேசன்

**B) வாணிதாசன்**

C) மருதகாசி

D) பாரதியார்

**விளக்கம்: வாணிதாசன் செவாலியர் விருது பெற்றுள்ளார். செவாலியர் விருது பிரெஞ்சு அரசால் வழங்கப்படும் ஒரு விருது ஆகும். இவ்விருதை பெற்ற திரைத்துறை கலைஞர் – சிவாஜி கணேசன், கமலஹாசன் ஆவார்கள்.**

46) காடர்களின் கதைகளில் ஒன்றாக யானையோடு பேசுதல் என்னும் கதையை தமிழாக்கம் செய்தவர்?

A) பக்தவச்சல பாரதி

**B) வா.கீதா**

C) கல்யாண்ஜி

D) பெ. தூரன்

**விளக்கம்: யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ.கீதா காடர்களின் கதையை தமிழாக்கம் செய்துள்ளார்**

47) பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_____________

A) பருத்திஎல்லாம்

**B) பருத்தியெல்லாம்**

C) பருத்தெல்லாம்

D) பருத்திதெல்லாம்

**விளக்கம்: பருத்தி + எல்லாம் என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது பருத்தியெல்லாம் என்பதாகும். இங்கு நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்து தி. வருமொழியின் முதலில் உள்ள எழுத்து எ. உடம்படுமெய் புணர்ச்சி விதிப்படி வருமொழியின் முதல் எழுத்து என்னும் எழுத்திற்கேற்ப உடம்படுமெய் தோன்றி பருத்தியெல்லாம் என்று புணர்ந்தது.**

48) காடர்களின் கதையை தொகுத்தவர்களில் பொருந்தாதவர்?

A) மனிஷ்

B) சாண்டி

C) மாதுரி ரமேஷ்

**D) வா.கீதா**

**விளக்கம்: மனிஷ், சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர். வா. கீதா என்பவர் தமிழாக்கம் செய்தவர்**

49) ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல்?

**A) பெயர்ச்சொல்**

B) வினைச்சொல்

C) இடைச்சொல்

D) உரிச்சொல்

**விளக்கம்: ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் – பெயர்ச்சொல்**

**ஒன்றன் வினையைக் குறிக்கும் சொல் – வினைச்சொல்**

**இடைச்சொல், உரிச்சொல் என்பது பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல்லுடன் சேர்ந்து இயங்கும்.**

50) பொருள் முற்று பெற்ற வினைச்சொல்?

A) வினையெச்சம்

B) பெயரெச்சம்

C) விணையாலணையும் பெயர்

**D) வினைமுற்று**

**விளக்கம்: பொருள் முற்று பெற்ற வினைச்சொல் வினைமுற்று அல்லது முற்று வினை எனப்படும்.**

**பெயரெச்சம் – முற்றுபெயராத பெயர்ச்சொல்**

**வினையெச்சம் – முற்றுபெறாத வினைச்சொல்**

**விணையாலணையும் பெயர் – செயலைக் குறிக்காமல் செயல் செய்பவரைக் குறிக்கும்.**

51) கவிஞரேறு என்று அழைக்கப்படுபவர் யார்?

**A) வாணிதாசன்**

B) பாரதிதாசன்

C) சுரதா

D) கண்ணதாசன்

**விளக்கம்: கவிஞரேறு என்று அழைக்கப்படுபவர் வாணிதாசன். இவர் தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் செவாலியர் விருதும் பெற்றுள்ளார்.**

52) பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள் என்று கூறிக்கொள்ளும் பழங்குடிகள் யார்?

**A) சுகுவாமிஷ்**

B) சியாட்டல்

C) பூஜேசவுண்ட்

D) தாரா

**விளக்கம்: பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள் என்று கூறிக்கொள்ளும் பழங்குடிகள் சுகுவாமிஷ் பழங்குடிகள் இவர்கள் அமெரிக்காவின் பூஜேசவுண்ட் என்ற இடத்தில் வசிக்கும் குழுவினர் ஆவார்கள்.**

53) வினைமுற்றுக்கு கீழ்க்கண்ட எது பொருத்தமற்றது?

A) ஐந்துபால்களிலும் வரும்

B) மூவிடங்களிலும் வரும்

C) மூன்று காலங்களிலும் வரும்

**D) இரு திணைகளிலும் வரும்**

**விளக்கம்: பொருள் முற்றுப் பெற்ற வினைச் சொற்கள் முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்துபால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.**

54) ஒரு செயல் நடைபெறுவதற்கு கீழ்க்கண்ட எது முதன்மையாவை அல்ல?

A) செய்பவர்

B) கருவி

C) செயல்

**D) பால்**

**விளக்கம்: ஒரு செயல் நடைபெறுவதற்கு செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும்.**

55) தமிழச்சி என்ற நூலை எழுதியவர்?

**A) வாணிதாசன்**

B) கண்ணதாசன்

C) பாரதிதாசன்

D) சுப்புரத்தினதாசன்

**விளக்கம்: தமிழச்சி என்ற நூலை எழுதியவர் வாணிதாசன். இவரின் பிற நூல்கள் கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் ஆகும்.**

56) நிலமே எங்கள் தாயாகும் என்று உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள் என்று கூறியவர்?

A) சுகுவாமிஷ்

**B) சியாட்டல்**

C) பூஜேசவுண்ட்

D) சுந்தரலால் பகுகுணா

**விளக்கம்: இந்நிலமே எங்கள் தாயாகும் என்று கூறியவர் சியாட்டல் ஆவார். எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள் என்று சியாட்டல் அமெரிக்க நாட்டு குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

57) பாவலர் மணி என்று அழைக்கப்படுபவர் யார்?

A) கவிமணி

B) பாரதிதாசன்

C) பாரதியார்

**D) வாணிதாசன்**

**விளக்கம்: பாவலர் மணி என்று அழைக்கப்படுபவர் வாணிதாசன். இவர் கவிஞரேறு என்றும் அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்ற புகழையும் பெற்றவர் வாணிதாசன்.**

58) செய்பவர், கருவி முதலான ஆறும் வெளிப்படுமாறு அமைவது________வினைமுற்று எனப்படும்?

**A) தெரிநிலை வினைமுற்று**

B) குறிப்பு வினைமுற்று

C) பெயரெச்ச வினைமுற்று

D) முற்றெச்ச வினைமுற்று

**விளக்கம்: ஒரு செயல் நடைபெறுவதற்கு செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்**

59) பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுக் கிடைக்கும் சொல்___________

A) பால்ஊறும்

**B) பாலூறும்**

C) பால்லூறும்

D) பாஊறும்

**விளக்கம்: பால் + ஊறும் என்ற சொல்லைச் சேர்த்தெழுத கிடைக்கும் சொல் பாலூறும் என்பதாகும். நிலைமொழியின் இறுதி எழுத்து ல். வருமொழியின் முதல் எழுத்து ஊ. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ல் + ஊ – லூ என சேர்ந்து பாலூறும் என்று எழுதலாம்.**

60) பொருள், இடம் முதலிய ஆறனுள் காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று?

**A) தெரிநிலை வினைமுற்று**

B) குறிப்பு வினைமுற்று

C) பெயரெச்ச வினைமுற்று

D) முற்றெச்ச வினைமுற்று

**விளக்கம்: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் முதலிய ஆறனுள் காலத்தை வெளிப்படையாகக் காடாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று எனப்படும்**

61) வாணிதாசன் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

1. இயற்பெயர் – அரங்கசாமி என்கிற எத்திராசலு

2. சிறப்பு பெயர் – கவியரசு, பாவலர் மணி

3. பிரிட்டிஷ் அரசால் செவாலியர் விருது பெற்றவர்

4. தொடுவானம் என்ற நூலை எழுதியுள்ளார்

**A) 1, 4 சரி**

B) 2, 4 சரி

C) 1, 3 சரி

D) 1, 2, 4 சரி

**விளக்கம்: இயற்பெயர் – அரங்கசாமி என்கிற எத்திராசலு**

**சிறப்பு பெயர் – கவிஞரேறு, பாவலர் மணி**

**பிரெஞ்சு அரசால் செவாலியர் விருது பெற்றவர்**

**தொடுவானம் என்ற நூலை எழுதியுள்ளார்**

62) எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள் என்று கூறியவர்?

A) சுகுவாமிஷ்

B) சியாட்டல்

**C) பூஜேசவுண்ட்**

D) தாரா

**விளக்கம்: எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள் என்று கூறியவர் பூஜேசவுண்ட் பழங்குடிகளின் தலைவர் சியாட்டல் ஆவார்.**

63) செவ்விந்தியர்கள் நிலத்தை_____________ஆக மதிக்கின்றனர்?

**A) தாயாக**

B) தந்தையாக

C) தெய்வமாக

D) தூய்மையாக

**விளக்கம்: செவ்விந்தியர்கள் நிலத்தைத் தந்தையாக மதிக்கின்றனர் என்று பூஜேசவுண்ட் பழங்குடிகளின் தலைவர் சியாட்டல் தன் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்**

64) இன்னோசை என்ற சொல்லின் பொருள்?

A) இன் + ஓசை

B) இனி + ஓசை

**C) இனிமை + ஓசை**

D) இன் + னோசை

**விளக்கம்: இன்னோசை என்ற சொல்லை பிரித்து எழுத கிடைக்கும் சொல் இனிமை + ஓசை ஆகும்.**

65) கொடிமுல்லை என்ற நூலின் ஆசிரியர்?

**A) எத்திராசலு**

B) மருதகாசி

C) சி. சுப்பிரமணியம்

D) இரசகோபாலன்

**விளக்கம்: கொடிமுல்லை என்ற நூலை எழுதியவர் வாணிதாசன். இவரின் இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு ஆகும். இவரின் பிற நூல்கள் தமிழச்சிஇ தொடுவானம் ஆகும்.**

66) வினைமுற்று எத்தனை வகைப்படும்?

**A) 4**

B) 2

C) 3

D) 5

**விளக்கம்: முற்று பெற்ற வினைச்சொல்லைக் குறிப்பது வினைமுற்று எனப்படும். இது 4 வகைப்படும்.**

**1. தெரிநிலை வினைமுற்று**

**2. குறிப்பு வினைமுற்று**

**3. ஏவல் வினைமுற்று**

**4. வியங்கோள் வினைமுற்று**

67) பொருத்துக.

அ. பொருள் – 1. கண்ணன்

ஆ. இடம் – 2. பொன்னன்

இ. காலம் – 3. தென்னாட்டார்

ஈ. சினை – 4. ஆதிரையான்

A) 2, 3, 1, 4

**B) 2, 3, 4, 1**

C) 2, 4, 1, 3

D) 2, 1, 3, 4

**விளக்கம்: பொருள் – பொன்னன்**

**இடம் – தென்னாட்டார்**

**காலம் – ஆதிரையான்**

**சினை – கண்ணன்**

68) பாடம் படி, கடைக்குப் போ போன்றவை எவ்வகையான வினைமுற்று?

A) தெரிநிலை வினைமுற்று

B) குறிப்பு வினைமுற்று

**C) ஏவல் வினைமுற்று**

D) வியங்கோள் வினைமுற்று

**விளக்கம்: வினைமுற்று நான்கு வகைப்படும். பாடம் படி, கடைக்கு போ என்பது ஏவல் பொருளில் வந்துள்ளதால் இது ஏவல் வினைமுற்று எனப்படும்.**

69) எழுத்தன் என்பது என்ன வகை வினைமுற்று?

A) சினை

B) பொருள்

**C) தொழில்**

D) பண்பு

**விளக்கம்: எழுத்தன் என்பது தொழிலைக் குறிக்கும் ஒரு வினைமுற்றுச் சொல்லாகும்**

70) மாடு வயலில் புல்லை மேய்ந்தது இத்தொடரிலுள் வினைமுற்று?

A) மாடு

B) வயல்

C) புல்

**D) மேய்ந்தது**

**விளக்கம்: மாடு வயிலில் புல்லை மேயந்தது இத்தொடரிலுள்ள வினைமுற்று – மேய்ந்தது ஆகும். வினைமுற்று என்பது முடிவு பெற்ற ஒரு செயலைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.**

71) எழுதுமின் என்பதன் இலக்கண குறிப்பு தருக?

A) தெரிநிலை வினைமுற்று

B) ஏவல் ஒருமை வினைமுற்று

**C) ஏவல் பன்மை வினைமுற்று**

D) வியங்கோள் வினைமுற்று

**விளக்கம்: எழுதுமின் என்பது ஏவல் பொருளில் வந்துள்ளது. இது பன்மை பொருளை உணர்த்துகிறது. எனவே இது ஏவல் பன்மை வினைமுற்று ஆகும்.**

72) வாணிதாசனின் நூல்களில் பொருந்தாத நூல் எது?

**A) தமிழச்சி காவியம்**

B) கொடிமுல்லை

C) தொடுவானம்

D) எழிலோவியம்

**விளக்கம்: தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் என்று போற்றப்படும் வாணிதாசனின் நூல்கள் தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம். தமிழச்சி என்பதே வாணிதாசனின் நூல் ஆகும். தமிழச்சி காவியம் என்பது வாணிதாசனின் நூல் அல்ல.**

73) ஏவல் வினைமுற்றுக்கு பொருந்தாதது எது?

A) முன்னிலையில் வரும்

B) ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.

C) கட்டளைப் பொருளை மட்டுமே உணர்த்தும்

**D) விகுதி பெற்றே வரும்**

**விளக்கம்: ஏவல் வினைமுற்று என்பது கட்டளையிடும் பொருளில் முடிவுபெற்ற ஒரு செயலை குறிக்கும் ஒரு சொல்லாகும். இதுஇ**

**1. முன்னிலையில் வரும்.**

**2. ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.**

**3. கட்டளைப் பொருளை மட்டுமே உணர்த்தும்**

**4. விகுதி பெற்றும் பெறாமலும் வரும்**

74) பின்வருவனவற்றில் இறந்தகால வினைமுற்று எது?

**A) படித்தான்**

B) நடக்கிறான்

C) உண்பான்

D) ஓடாது

**விளக்கம்: மேற்கண்ட சொற்களில் இறந்த கால வினைமுற்று படித்தான் என்பதாகும்.**

**நடக்கிறான் – நிகழ்கால் வினைமுற்று**

**உண்பான் – எதிர்கால வினைமுற்று**

**ஓடாது – எதிர்மறை வினைமுற்று**

75) பின்வருவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்___________

A) செல்க

**B) ஓடு**

C) வாழ்க

D) வாழிய

**விளக்கம்: ஓடு என்பது ஏவல் வினைமுற்றுச் சொல்லாகும்.**

76) உலக இயற்கை வளப் பாதுகாப்பு நாள் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

**A) ஜூலை 28**

B) ஜுன் 18

C) ஆகஸ்ட் 18

D) செப்டம்பர் 18

**விளக்கம்: இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து விழிப்புணர்வு உண்டாக்க ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28 ஆம் நாள் உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.**

77) கூற்றுகளை ஆராய்க.

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று தன்மை இடத்தில் வரும்

2. இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் உண்டு. செய்யுள் வழக்கில் இல்லை.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று தன்மை இடத்தில் வராது. 2. இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் உண்டு.**

78) வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று எது?

A) தெரிநிலை வினைமுற்று

B) குறிப்பு வினைமுற்று

C) ஏவல் வினைமுற்று

**D) வியங்கோள் வினைமுற்று**

**விளக்கம்: வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று.**

79) உலக ஈர நில நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

**A) பிப்ரவரி 2**

B) செப்டம்பர் 10

C) அக்டோபர் 3

D) அக்டோபர் 2

**விளக்கம்: உலக ஈர நில நாள் பிப்ரவரி 2 அன்று கொண்டாடப்படுகிறது. அக்டோபர் 3 என்பது உலக இயற்கை நாள்**

80) தொடர் எத்தனை வகைப்படும்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: தொடர் நான்கு வகைப்படும். அவை,**

**1. செய்தித் தொடர்**

**2. வினாத்தொடர்**

**3. விழைவுத் தொடர்**

**4. உணர்ச்சித் தொடர்**

81) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் – என்ன வகையானத் தொடர்?

A) செய்தித் தொடர்

**B) வினாத்தொடர்**

C) விழைவுத்தொடர்

D) உணர்ச்சித் தொடர்

**விளக்கம்: சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் – என்பது தெரியாத ஒன்றை தெரிந்து கொள்ள கேட்கப்படுவது ஆகும். எனவே இது வினாத் தொடர் ஆகும்.**

82) எழுது என்பதன் இலக்கண குறிப்பு

A) தெரிநிலை வினைமுற்று

**B) ஏவல் ஒருமை வினைமுற்று**

C) ஏவல் பன்மை வினைமுற்று

D) வியங்கோள் வினைமுற்று

**விளக்கம்: எழுது என்பது ஏவல் பொருளில் வந்துள்ளது. எனவே ஏவல் வினைமுற்று ஆகும்.**

83) உலக ஓசோன் தினம் எப்போது கொண்டாடப்பட்டது?

**A) செப்டம்பர் 16**

B) அக்டோபர் 2

C) பிப்ரவரி 2

D) நவம்பர் 16

**விளக்கம்: உலக ஓசோன் தினம் செப்டம்பர் 16 அன்று கொண்டாடப்படுகிறது. பிப்ரவரி 2– உலக ஈர நில நாள் ஆகும்.**

84) கரிகாலன் கல்லணையைக் கட்டினான் என்ன வகைத்தொடர்?

**A) செய்தித் தொடர்**

B) வினாத்தொடர்

C) விழைவுத்தொடர்

D) உணர்ச்சித் தொடர்

**விளக்கம்: கரிகாலன் கல்லணையைக் கட்டினான் என்பது செய்தித் தொடராகும். இது ஒரு நிகழ்வை மக்கள் அறிந்துகொள்ளும்படி கூறியுள்ளது.**

85) விழைவுத் தொடர் எந்த பொருளில் வராது?

A) ஏவல்

B) வேண்டுதல்

C) வாழ்த்துதல்

D) **வினாவுதல்**

**விளக்கம்: விழைவுத்தொடர் ஏவல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்.**

86) பொருத்துக.

| | |
|---|---|
| அ. ஆ! புலி வருகிறது! | – 1. வியப்பு |
| ஆ. அடடா! என் தங்கை பரிவு பெற்றாள்! | – 2. உவகை |
| இ. பழந்தமிழ் இலக்கியங்கள் | – 3. அச்சம் |
| ஈ. ஆ! மலையின் உயரம்தான் என்னே! | – 4. அவலம் |

**A) 3, 2, 4, 1**

B) 2, 3, 4, 1

C) 2, 3, 1, 4

D) 1, 2, 3, 4

**விளக்கம்:**



winmeen.com

**ஆ! புலி வருகிறது! – அச்சம்**

**அடடா! என் தங்கை பரிவு பெற்றாள்! – உவகை**

**பழந்தமிழ் இலக்கியங்கள் – அவலம்**

**ஆ! மலையின் உயரம்தான் என்னே! – வியப்பு**

87) வியங்கோள் வினைமுற்று தொடர்பான வாக்கியங்களில் தவறானது எது?

A) இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்

B) ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை

C) வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்

**D) விகுதி பெறாமலே வரும்.**

**விளக்கம்: 1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்**

**2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை**

**3. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்**

**4. விகுதி பெற்றே வரும்.**

88) உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள்?

A) செப்டம்பர் 16

B) பிப்ரவரி 2

C) அக்டோபர் 2

**D) அக்டோபர் 5**

**விளக்கம்: அக்டோபர் 5 – உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள்**

**செப்டம்பர் 16 – உலக ஓசோன் நாள்**

**பிப்ரவரி 2 – உலக ஈர நில நாள்**

**அக்டோபர் 2 – காந்தி ஜெயந்தி**

89) பொருத்துக.

அ. இளமையில் கல் – 1. வாழ்த்துதல்

ஆ. உன் திருக்குறள் நூலைத் தருக – 2. வைதல்

இ. உழவுத் தொழில் வாழ்க – 3. வேண்டுதல்

ஈ. கல்லாமை ஒழிக – 4. ஏவல்

A) 4, 1, 2, 3

B) 4, 1, 3, 2

**C) 4, 3, 1, 2**

D) 4, 3, 2, 1

**விளக்கம்: இளமையில் கல் – ஏவல்**

**உன் திருக்குறள் நூலைத் தருக – வேண்டுதல்**

**உழவுத் தொழில் வாழ்க – வாழ்த்துதல்**

**கல்லாமை ஒழிக – வைதல்**

90) கடமையைச் செய் என்ன வகையானத் தொடர்?

A) செய்தித் தொடர்

B) வினாத்தொடர்

**C) விழைவுத்தொடர்**

D) உணர்ச்சித் தொடர்

**விளக்கம்: கடமையைச் செய் என்பது விழைவுத் தொடர் ஆகும். இது ஏவல் பொருளில் வந்துள்ளது.**

91) உண்கிறேன் என்ற சொல்லுக்கு பொருத்தமானது?

A) ஆண்பால்

B) பெண்பால்

**C) தன்மை**

D) முன்னிலை

**விளக்கம்: உண் என்ற வேர்ச்சொல்லின் தன்மை உண்கிறேன் என்று எழுதலாம்.**

92) சென்றனர் என்ற வினைமுற்றின் வேர்ச்சொல்?

A) சென்

**B) செல்**

C) செல்லு

D) சென்று

**விளக்கம்: சென்றனர் என்பது வினைமுற்றுச் சொல் இதன் வேர்ச்சொல் செல் என்பதாகும். வேர்ச்சொல் எப்பொழுதும் கட்டளைச் சொல்லாக அமையும்.**

93) உலக வன விலங்கு தினம்?

A) செப்டம்பர் 16

B) அக்டோபர் 3

**C) அக்டோபர் 6**

D) அக்டோபர் 5

**விளக்கம்: அக்டோபர் 6 – உலக வன விலங்கு தினம்**

**அக்டோபர் 5 – உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள்**

**செப்டம்பர் 16 – உலக ஓசோன் நாள்**

**அக்டோபர் 3 – உலக இயற்கை நாள்**

94) திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல்?

A) நாலடியார்

B) திருவள்ளுவம்

**C) திருவள்ளுவமாலை**

D) பரிமேலழகரின் திருக்குறள் உரை

**விளக்கம்: திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் திருவள்ளுவமலை என்னும் நூல். இது பல்வேறு புலவர்கள் எழுதிய செய்யுள்களை கொண்ட நூலாகும்.**

95) தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப் படும் – இதில் தக்கார் என்ற சொல்லின் பொருள்?

A) நடுவு நிலைமை இல்லாதவர்

**B) நடுவு நிலைமை உடையவர்**

C) நடுவு நிலைமையை எதிர்நோக்கி வாழ்பவர்

D) புகழும் பழியும் அற்றவர்

**விளக்கம்: தக்கார் – நடுவு நிலைமை உடையவர்**

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**

**எச்சத்தால் காணப் படும் – என்ற குறட்பாவில் நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும் என்று கூறப்பட்டுள்ளது.**

96) வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி?

A) உவமை அணி

B) எடுக்காட்டு உவமை அணி

C) பிரிது மொழிதல் அணி

**D) இல்பொருள் உவமை அணி**

**விளக்கம்: வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**

**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று – என்ற குறட்பாவில் இல்பொருள் உவமை வந்துள்ளது. உவமை அணி என்றால் ஒரு பொருளை ஒப்புமைப்படுத்தி கூறுவது. இல்பொருள் என்றால் உலகில் இல்லாத பொருள் என்றாகும். இல்பொருள் உவமை அணி என்பது உலகிலேயே இல்லாத ஒரு பொருளுடன் ஒப்புமைப்படுத்தி செய்யுள் இயற்றுதல் ஆகும். இச்செய்யுளில் மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம்இ புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசுவிற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. புலியின் தோலை போர்த்திய பசு என்பது இவ்வுலகில் இல்லாத ஒன்றாகும்.**

97) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி – இக்குறட்பாவில் அணி என்ற சொல் எதனைக் குறிக்கிறது

A) வரிசை

**B) அழகு**

C) அணிகலன்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: இக்குறட்பாவில் அணி என்ற சொல் அழகு என்னும் பொருள் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.**

98) தருகின்றனர் என்ற சொல்லின் வேர்ச்சொல்?

A) தரு

**B) தா**

C) தந்து

D) தருகின்ற

**விளக்கம்: தருகின்றனர் என்பது வினைமுற்றுச் சொல். இதன் வேர்ச்சொல் தா என்பதாகும். வேர்ச்சொல்லை பகுதி என்றும் அழைக்கலாம்.**

99) வியங்கோள் வினைமுற்று பற்றிய கூற்றில் தவறானது எது?

A) வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

B) இது இரு திணைகளையும் உணர்த்தும்

C) ஐம்பால்களையும் உணர்த்தும்

**D) மூவிடங்களை உணர்த்தாது**

**விளக்கம்: 1. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.**

2. இது இரு திணைகளையும் உணர்த்தும்

3. ஐம்பால்களையும் உணர்த்தும்

4. மூவிடங்களை உணர்த்தும்

100) வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று – இக்குறட்பாவில் வல்லுருவம் என்ற சொல்லின் பொருள்?

A) கொடிய உருவம்

B) வலிமையான உருவம்

**C) வலிய தவக்கோலம்**

D) தெய்வ உருவம்

**விளக்கம்: இக்குறட்பாவில் வல்லுரும் என்பது வலிய தவக்கோலம் என்று பொருள் தரும் வகையில் எழுதப்பட்டுள்ளது.**

101) கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன

வினைபடு பாலால் கொளல் – இக்குறட்பாவில் கணை என்னும் சொல்லின் பொருள்?

A) வில்

**B) அம்பு**

C) கணைக்கும் குதிரை

D) ஏவுகணை

**விளக்கம்: இக்குறட்பாவில் கணை என்னும் சொல்லின் பொருள் அம்பு என்பதாகும். நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமைத் தருகிறது. எனவே மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செய்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்**

102) வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று – இக்குறட்பாவில் உள்ள பெற்றம் என்ற சொல்லின் பொருள்?

A) பெறுதல்

**B) பசு**

C) ஆடு

D) புலிக்குட்டி

**விளக்கம்: பெற்றம் என்றால் பசு என்று பொருள். மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம்இ புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசுவிற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.**

103) உளர் என்னும் மாத்திரையார் அல்லால் பயவாக்

களர் அனையர் கல்லா தவர் – இக்குறட்பாவில் உளர் என்னும் சொல்லின் பொருள்?

A) பேச்சு

B) நிலம்

**C) உயிருடன் இருத்தல்**

D) இசை

**விளக்கம்: உளர் என்னும் சொல்லின் பொருள் உயிரோடு இருக்கிறார் என்பதாகும்.**

104) பொருத்தமற்றதை தேர்வு செய்க

**A) இரு திணை – கைக்கிளை, பெருந்திணை**

B) முப்பால் – அறம், பொருள், இன்பம்

C) மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை

D) ஐந்து பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்

**விளக்கம்: இரு திணை – உயர்திணை, அஃறிணை அல்லது அகத்திணை, புறத்திணை**

**முப்பால் – அறம், பொருள், இன்பம்**

**மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை**

**ஐந்து பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்**

105) கேட்டார் என்ற சொல்லின் வேர்ச்சொல்?

**A) கேள்**

B) கேட்டு

C) கேண்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: கேட்டார் என்பது வினைமுற்றுச் சொல்லாகும். இதன் வேர்ச்சொல் கேள் என்பதாகும்.**

106) மக்களின் பண்பை எதனுடன் ஒப்புமைபடுத்தியுள்ளார் திருவள்ளுவர்?

A) புலித்தோல் போர்த்திய பசு

**B) யாழின் கொம்பின் இனிமை**

C) களர் நிலம்

D) விலங்கு

**விளக்கம்: மக்களின் பண்பை யாழின் இசையுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமைத் தருகிறது. எனவே மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செய்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்**

107) வருமுன்னர்க் காவாதன் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி?

**A) உவமை அணி**

B) எடுக்காட்டு உவமை அணி

C) பிரிது மொழிதல் அணி

D) இல்பொருள் உவமை அணி

**விளக்கம்: இக்குறட்பாவில் போல என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. எனவே இது உவமை அணி ஆகும். பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்து விடும் என்பது இச்சொல்லின் பொருளாகும். இதில் போல என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. எனவே இது உவமை அணி ஆகும்.**

108) பொருத்துக.

அ. மலைமுகடு – 1. Ridge

ஆ. வெட்டுக்கிளி – 2. Locust

இ. சிறுத்தை – 3. Bud

ஈ. மொட்டு – 4. Leopard

**A) 1, 2, 4, 3**

B) 1, 2, 3, 4

C) 2, 3, 4, 1

D) 2, 4, 1, 3

**விளக்கம்: மலைமுகடு – Ridge**

**வெட்டுக்கிளி – Locust**

**சிறுத்தை – Leopard**

**மொட்டு – Bud**

109) வியங்கோள் வினைமுற்றுகளில் பொருந்தாதது?

**A) கா**

B) இய



winmeen.com

C) இயல்

D) அல்

**விளக்கம்: வியங்கோள் வினைமுற்று வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் ஆகும்.**

110) கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன

வினைபடு பாலால் கொளல் – இக்குறட்பாவில் யாழ்கோடு என்னும் சொல்லின் பொருள்?

**A) யாழின் கொம்பு**

B) யாழின் இசை

C) யாழின் கைப்பிடி

D) யாழின் ஒலி

**விளக்கம்: யாழின் கோடு என்ற சொல்லில் உள்ள கோடு என்ற சொல்லின் பொருள் கொம்பு என்பதாகும்.**

111) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்.

A) போனான் – போ

B) வருக – வா

C) உறங்கினாள் – உறங்க

**D) பயின்றாள் – பயின்**

**விளக்கம்: பயின்றாள் என்ற வினைமுற்று சொல்லின் வேர்ச்சொல் பயில் என்பதாகும் . வேர்ச்சொல் கட்டளையிடும் வகையில் எப்போதும் அமையும்.**

112) பாரதியாரின் பாடல்களின் இனிமைத்தான் என்னே! – என்பது என்ன வகையானத் தொடர்?

A) வினாத்தொடர்

B) விழைவுத்தொடர்

**C) உணர்ச்சித் தொடர்**

D) செய்தித் தொடர்

**விளக்கம்: இத்தொடர் உணர்ச்சி வயப்படும்(வியப்பு) வகையில் அமைந்துள்ளதால், இது உணர்ச்சித் தொடர் ஆகும்**

113) Tribes என்ற சொல்லின் தமிழ்பொருள்?

A) சமவெளி

B) பள்ளத்தாக்கு

**C) பழங்குடியினர்**

D) மலைப்பகுதி

**விளக்கம்: பழங்குடியினர் – Tribes**

**சமவெளி – Plain**

**பள்ளத்தாக்கு – Valley**

114) தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப் படும் – இதில் தகவிலார் என்ற சொல்லின் பொருள்?

**A) நடுவு நிலைமை இல்லாதவர்**

B) நடுவு நிலைமை உடையவர்

C) நடுவு நிலைமையை எதிர்நோக்கி வாழ்பவர்

D) புகழும் பழியும் அற்றவர்

**விளக்கம்: இத்திருக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் நடுவுநிலைமை. இதில் தகவிலார் என்ற சொல்லின் பொருள் நடுவுநிலைமை இல்லாதவர் ஆகும்.**

115) அதிகாலையில் துயில் எழுவது நல்லது – இத்தொடரை வினாத்தொடராக மாற்றுக?

**A) எப்போது துயில் எழுவது நல்லது?**

B) எங்கு துயில் எழுவது நல்லது?

C) காலையில் துயில் எழுவது நல்லதா?

D) காலையில் தான் துயில் எழ வேண்டுமா?

**விளக்கம்: அதிகாலையில் துயில் எழுவது நல்லது என்ற தொடர் காலத்தை பற்றிய செய்தி தொடர் ஆகும். எனவே இதற்கு பொருத்தமான வினாச் சொல் எப்போது ஆகும். எனவே எப்போது துயில் எழ வேண்டும்.**

116) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி – இக்குறட்பாவில் கோல் என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

A) மூங்கில் மரம்

B) குச்சி

C) மரத்தின் கிளை

**D) துலாக்கோல்**

**விளக்கம்: இக்குறட்பாவில் கோல் என்ற சொல்லின் பொருள் துலாக்கோல்(தராசு) என்பதாகும்.**

117) புகழாலும் பழியாலும் அறியப்படுவது______________

A) அடக்கமுடைமை

B) நாணுடைமை

**C) நடுவுநிலைமை**

D) பொருளுடைமை

**விளக்கம்: புகழாலும் பழியாலும் அறியப்படுவது நடுவுநிலைமை.**

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**

**எச்சத்தால் காணப் படும் – என்ற குறட்பாவில் நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும் என்று கூறப்பட்டுள்ளது. பொருள்**

118) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது – என்ற தொடரின் வினாத் தொடர்?

A) காட்டில் எதன் நடமாட்டம் இல்லை?

**B) எங்கு புலி நடமாட்டம் உள்ளது?**

C) காட்டில் புலி நடமாடுகிறதா?

D) காட்டில் தான் புலி நடமாடுகிறதா?

**விளக்கம்: காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. என்ற தொடர் இடத்தை அடிப்படையாக கொண்ட ஒரு தொடர் . இடம் பற்றிய செய்திக்கு பொருத்தமான வினாச் சொல் எங்கு. எனவே எங்கு புலி நடமாட்டம் உள்ளது என்பதே சரியா வினாத் தொடர் ஆகும்.**

119) பள்ளத்தாக்கு என்ற சொல்லுக்கு இணையான ஆங்கில சொல்?

**A) Valley**

B) Plain

C) Tribes

D) Thicket

**விளக்கம்: சமவெளி – Plain**

**பள்ளத்தாக்கு – Valley**

**பழங்குடியினர் – Tribes**

**புதர் – Thicket**

120) பொருத்துக.

அ. நடக்கிறான் – 1. ஒன்றன் பால்

ஆ. நடக்கிறாள் – 2. பலவின் பால்

இ. நடக்கிறார்கள் – 3. ஆண்பால்

ஈ. நடந்தன – 4. பெண்பால்

உ. நடந்தது – 5. பலர்பால்

A) 3, 4, 1, 2, 5

B) 4, 3, 2, 1, 5

C) 3, 5.4, 1, 2

**D) 3, 4, 5, 1, 2**

**விளக்கம்: நடக்கிறான் – ஆண் பால்**

**நடக்கிறாள் – பெண் பால்**

**நடக்கிறார்கள் – பலர் பால்**

**நடந்தன – ஒன்றன் பால்**

**நடந்தது – பலவின் பால்**

121) தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தால் காணப் படும் – இதில் எச்சம் என்ற சொல்லின் பொருள்?

A) நடுவு நிலைமை இல்லாதவர்

B) நடுவு நிலைமை உடையவர்

C) நடுவு நிலைமையை எதிர்நோக்கி வாழ்பவர்

**D) எஞ்சியிருக்கும் புகழும் பழியும்**

**விளக்கம்: இத்திருக்குறளில் குறிப்பிடப்படும் எச்சம் என்ற சொல்லின் பொருள் எஞ்சியிருக்கும் புகழும் பழியும் ஆகும்.**

**தக்கார் – நடுவு நிலைமை உடையவர்**

**தகவிலர் – நடுவு நிலைமை அற்றவர்**

**நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும என்பதே இக்குறட்பாவின் பொருள்.**

122) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி?

**A) உவமை அணி**

B) எடுக்காட்டு உவமை அணி

C) பிரிது மொழிதல் அணி

D) இல்பொருள் உவமை அணி

**விளக்கம்: இக்குறட்பா சான்றோரின் தன்மையை துலாக்கோலுடன் ஒப்பிட்டு கூறியிருப்பதால் இதனை உவமை அணி என்கிறோம். இங்கு போல(போல்) என்றும் உவம உறுப்பும் இடம் பெற்றுள்ளது**

123) உறங்கியது என்பது?

A) ஆண்பால்

B) பெண்பால்

C) ஒன்றன் பால்

**D) பலவின் பால்**

**விளக்கம்: உறங்கியது என்பது பலவின் பால் சொல்லாகும்**

**ஆண்பால் – உறங்கினான்**

**பெண்பால் – உறங்கினாள்**

**பலர்பால் – உறங்கினார்**

**ஒன்றன் பால் – உறங்கின**

124) பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்___________

A) வலிமையற்றவர்

**B) கல்லாதவர்**

C) ஒழுக்கமற்றவர்

D) அன்பில்லாதவர்

**விளக்கம்: பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் கல்லாதவர்கள். இதனை விளக்கும் குறள்,**

**உளர்என்னும் மாத்திரையார் அல்லால் பயவாக**

**களர்அனையர் கல்லா தவர் – இக்குறட்பாவின் பொருள் கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.**

125) வல்லுருவம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) வல் + உருவம்**

B) வன்மை + உருவம்

C) வல்ல + உருவம்

D) வல்லு + உருவம்

**விளக்கம்:வல்லுருவம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது வல் + உருவம் என்பதாகும். இங்கு நிலைமொழியில் ஒரு குறில் ஒரு ஒற்று உள்ளது. தனிக்குறில் முன் ஒற்று இரட்டிக்கும் என்னும் விதிப்படி ல் என்னும் எழுத்து தோன்றும் வல் + ல் + உருவம். பின் உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ல் + உ=லு எனப்புணரும்.**

126) நெடுமை + தேர் என்ற சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____________

A) நெடுதேர்

B) நெடுத்தேர்

**C) நெடுந்தேர்**

D) நெடுமைதேர்

**விளக்கம்: நெடுமை + தேர் என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் நெடுந்தேர் என்பதாகும். நெடு + தேர் (ஈறுபோதல் என்னும் விதிப்படி)**

**நெடு + ந் + தேர் (தன்னொற்றிரட்டல் என்னும் விதிப்படி)**

**நெடுந்தேர் என்று பண்புப்பெயர் புணர்ச்சி விதிப்படி கிடைக்கும்**

127) வள்ளுவருக்கு பொருந்தாத பெயர்?

A) பெருநாவலர்

B) முதற்பாவலர்

**C) நாயன்மார்**

D) செந்நாபோதார்

**விளக்கம்: பெருநாவலர், முதற்பாவலர், நாயனார், செந்நாபோதார் என்பது திருவள்ளுவரின் சிறப்புப் பெயராகும். நாயன்மார்கள் மொத்தம் 63 பேர்கள்.**

128) அறத்துப்பாலிலுள்ள இயல்களில் பொருத்தமற்றது?

A) பாயிரவியல்

B) இல்லறவியல்

C) துறவறவியல்

**D) அமைச்சியல்**

**விளக்கம்: அறத்துப்பாலில் 4 இயல்கள் உள்ளன. அவை**

**1. பாயிரவியல்**

**2. இல்லறவியல்**

**3. துறவறவியல்**

**4. ஊழியல்**

**அமைச்சியல் என்பது பொருட்பாலில் உள்ள இயல் ஆகும்.**

129) களர் நிலம் என்ற சொல்லின் பொருள்?

A) செந்நிறமான நிலம்

B) அதிக விளைச்சல் தரும் நிலம்

C) பயனுள்ள நிலம்

**D) பயனற்ற நிலம்**

**விளக்கம்: களர் நிலம் என்பது பயனற்ற நிலமாகும். இந்நிலத்திற்கு கல்லாதவரை ஒப்புமைப்படுத்தி திருவள்ளுவர், உளர்என்னும் மாத்திரையார் அல்லால் பயவாக**

**களர்அனையர் கல்லா தவர் என்ற குறட்பாவில் விளக்கியுள்ளார்.**

130) திருவள்ளுவரின் காலம்?

**A) கி.மு 31**

B) கி.பி. 31

C) கி.மு. 131

D) கி.பி. 131

**விளக்கம்: திரவள்ளுவரின் காலம் கி.மு 31 ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டே திருவள்ளுவராண்டு கணக்கிடப்படுகிறது. ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டம் திருவள்ளுவராண்டு கிடைக்கும் . 2021ஆம் ஆண்டின் திருவள்ளுவராண்டு 2051 ஆகும்.**

131) பொருத்துக

அ. பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் – 1. பொருட்பால்

ஆ. அரசியல், அமைச்சியல், ஒழிபியல் – 2. காமத்துப்பால்

இ. களவியல், கற்பியல் – 3. அறத்துப்பால்

A) 1, 2, 3

B) 2, 3, 1

**C) 3, 1, 2**

D) 1, 3, 2

**விளக்கம்: பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் – அறத்துப்பால்**

**அரசியல், அமைச்சியல், ஒழிபியல் – பொருட்பால்**

**களவியல், கற்பியல் – காமத்துப்பால்**

132) கற்றவருக்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது எதற்கு இடையே உள்ள வேறுபாட்டோடு ஒப்பிடப்பட்டுள்ளது?

**A) மக்கள்–விலங்கு**

B) மக்கள்–மரம்

C) மக்கள்–ஞானிகள்

D) மக்கள்–மாடு

**விளக்கம்: விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர்**

**பொருள்: கற்றவருக்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.**

133) கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா நிலத்து – இதில் நாவாய் என்னும் சொல்லின் பொருள்?

A) நாக்கு

B) நாக்கு மற்றும் வாய்

**C) படகு**

D) கப்பல்

**விளக்கம்: நாவாய் என்னும் சொல்லின் பொருள் கப்பல் என்பதாகும்.**

134) கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா நிலத்து – இதில் பயின்று வரும் அணி?

A) உவமை அணி

B) எடுத்துகாட்டு உவமை அணி

**C) பிறிது மொழிதல் அணி**

D) இல்பொருள் உவமை அணி

**விளக்கம்: கடல் ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**

**நாவாயும் ஓடா நிலத்து – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி பிறிது மொழிதல் அணி.**

**வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலே சிறப்பாகச் செயல்பட முடியும் என்பது இக்குறளின் பொருள் ஆகும்.**

135) தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்

இடங்கண்ட பின்அல் லது – இக்குறட்பாவில் எள்ளற்க என்ற சொல்லின் பொருள்?

A) புகழ்தல்

**B) இகழ கூடாது**

C) பேசுதல்

D) செயலைத் தொடங்குதல்

**விளக்கம்: எள்ளற்க என்ற சொல்லின் பொருள் இகழக் கூடாது என்பதாகும்.**

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**

**இடங்கண்ட பின்அல் லது – பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும் தொடங்கவும் கூடாது. இகழவும் கூடாது என்பது இதன் பொருள் ஆகும்.**

136) வருமுன் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும் – இக்குறட்பாவில் எரிமுன்னர் என்ற சொல்லின் பொருள்?

**A) நெருப்பின் முன்**

B) வலியின் முன்

C) தூக்கி எறியும் முன்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: இக்குறட்பாவில் உள்ள எரிமுன் என்ற சொல்லின் பொருள் நெருப்பின் அருகில் என்பதாகும்.**

137) பொருட்பாலில் உள்ள துறைகளில் பொருந்தாதது எது?

A) அரசியல்

B) அங்கவியல்

C) ஒழிபியல்

**D) ஊழியல்**

**விளக்கம்: அரசியல், அமைச்சியல், ஒழிபியல் ஆகியவை பொருட்பாலிலுள்ள துறைகள் ஆகும். ஊழியல் என்பது அறத்துப்பாலிலுள்ள துறைகளுள் ஒன்றாகும்.**

138) தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்

என்குற்றம் ஆகும் இறைக்கு – இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள்?

A) கடவுள்

B) குற்றம்

**C) தலைவன்**

D) தூய்மை

**விளக்கம்: இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள் தலைவன் ஆகும்.**

**தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்**

**என்குற்றம் ஆகும் இறைக்கு.**

**தலைவன் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்தப்பழியும் ஏற்படாது என்பது இக்குறட்பாவில் பொருள்.**

139) மொட்டு என்ற சொல்லுக்கு இணையான ஆங்கில மொழிபெயர்ப்பு?

A) Ridge

B) Locust

C) Leopard

**D) Bud**

**விளக்கம்: மொட்டு – Bud**

**மலைமுகடு – Ridge**

**வெட்டுக்கிளி – Locust**

**சிறுத்தை – Leopard**

140) வருமுன் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி?

**A) உவமை அணி**

B) எடுத்துகாட்டு உவமை அணி

C) பிறிது மொழிதல் அணி

D) இல்பொருள் உவமை அணி

**விளக்கம்: வருமுன் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**

**வைத்தூறு போலக் கெடும் இக்குறட்பாவில் உவமை அணி வந்துள்ளது.**

**உவமை அணி என்பது ஒரு நிகழ்வை மற்றொரு நிகழ்வுடன் ஒப்பிட்டு கூறுவது ஆகும். பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கைஇ நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும். இதில் உவம உறுப்புகளில் ஒன்றான போல என்ற சொல் வந்துள்ளது.**

141) திருக்குறள் எத்தனை இயல்களைக் கொண்டுள்ளது?

A) 27

B) 3

**C) 9**

D) 4

**விளக்கம்: திருக்குறள் 9 இயல்களைக் கொண்டுள்ளது.**

**அறத்துப்பால் – பாயிரவியல், இல்லறவியல், துறவறவயில், ஊழியல்**

**பொருட்பால் – அரசியல், அங்கவியல் (அல்லது) அமைச்சியல், ஒழிபியல்**

**காமத்துப்பால் – களவியல், கற்பியல்**

142) வாணிதாசனின் நூல்களுள் பொருந்தாத நூல் எது?

A) தமிழச்சி

B) எழிலோவியம்

C) தொடுவானம்

**D) சிறுவர் இலக்கியம்**

**விளக்கம்: தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று போற்றப்படும் வாணிதாசன் தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.**

winmeen.com

## 8th Tamil Unit 3 Questions

1) ஐஞ்பெருங்காப்பியங்களில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க?

A) வளையாபதி

**B) நீலகேசி**

C) சீவக சிந்தாமணி

D) சிலப்பதிகாரம்

**விளக்கம்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். இதில் நீலகேசி என்பது ஐஞ்சிறுங்காப்பியம் ஆகும்.**

2) உடல்நலம் என்பது___________இல்லாமல் வாழ்தல் ஆகும்?

A) அணி

B) பணி

**C) பிணி**

D) மணி

**விளக்கம்: உடல்நலம் என்பது பிணி இல்லாமல் வாழ்வதாகும். பிணி என்றால் துன்பம் என்று பொருள்.**

3) நீலகேசி கூறும் நோயின் வகைகள்_______________

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: நீலகேசி கூறும் நோயின் வகைகள் மூன்று அவை,**

**1. மருந்தினால் நீங்கும் நோய்**

**2. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்**

**3. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன**

4) திரியோக மருந்து என்னும் சொல்லின் பொருள்?

A) திரியை கொண்ட மூன்று மருந்துகள்

B) திரியால் தயாரிக்கப்படும் மூன்று மருந்துகள்

C) திரவடிவில் உள்ள மருந்துகள்

**D) மூன்று யோக மருந்துகள்**

**விளக்கம்: திரி என்றால் மூன்று என்றுபொருள். திரியோக மருந்து என்றால் மூன்று யோக மருந்துகள் என்று பொருள்.**

5) மூன்று யோக மருந்துகளில் பொருந்தாதது எது?

A) நல்லறிவு

**B) நல்தியானம்**

C) நற்காட்சி

D) நல்லொழுக்கம்

**விளக்கம்: அகற்றுவதற்கு அரியவை பிறவித் துன்பங்கள். இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. அவை,**

**1. நல்லறிவு**

**2. நற்காட்சி**

**3. நல்லொழுக்கம்**

winmeen.com

6) நீலகேசியின் மொத்த சருக்கங்கள் எத்தனை?

A) 5

**B) 10**

C) 15

D) 20

**விளக்கம்: ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான நீலகேசி கடவுள் வாழ்த்து நீங்கலாக பத்து சருக்கங்களைக் கொண்டுள்ளது.**

7) நீலகேசி ஒரு_____________சமய நூல்?

A) பௌத்தம்

**B) சமணம்**

C) ஜெராஸ்டிரியம்

D) இந்து

**விளக்கம்: நீலகேசி ஒரு சமண சமயம் சார்ந்த நூலாகும். இது சமண சமயக் கருத்துக்களை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது.**

8) இவையுண்டார் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது?

A) இ + யுண்டார்

B) இவ் + உண்டார்

**C) இவை + உண்டார்**

D) இவை + யுண்டார்

**விளக்கம்: இவையுண்டார் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது இவை + உண்டார்.**

9) தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_____________

A) தாம்இனி

B) தாம்மினி

**C) தாமினி**

D) தாமனி

**விளக்கம்: தாம் + இனி என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் தாமினி. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்து இ, உ.**

10) நீலகேசியின் ஆசிரியர்?

A) திருத்தக்கதேவர்

B) தோலாமொழித்தேவர்

C) இமயவரம்பரன் நெடுஞ்சேரலாதன்

**D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**விளக்கம்: ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்று நீலகேசி. இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**திருத்தக்க தேவர் – சீவக சிந்தாமணி**

**தோலாமொழித்தேவர் – சூளாமணி**

**இளங்கோவடிகள் – சிலப்பதிகாரம்**

11) கவிமணி என்று போற்றப்படுபவர்?

**A) தேசிய விநாயகனார்**

B) பெ. சுந்தரனார்

C) கண்ணதாசன்

D) வாணிதாசன்

**விளக்கம்: கவிமணி என்று போற்றப்படுபவர் தேசிய விநாயகனார் ஆவார்**

**பெ. சுந்தரனார் – மனோன்மணியம்**

**கண்ணதாசன் – கவியரசு**

**வாணிதாசன் – பாவலர் மணி, தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த், கவிஞாயிறு**

12) பொருத்துக

அ. நித்தம் நித்தம் – 1. பாதுகாத்தல்

ஆ. திட்டு முட்டு – 2. நாள்தோறும்

இ. சுண்ட – 3. நன்கு

ஈ. பேணுவையேல் – 4. தடுமாற்றம்

A) 1, 2, 3, 4

B) 3, 2, 1, 4

C) 2, 3, 4, 1

**D) 2, 4, 3, 1**

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| **நித்தம் நித்தம்** | **–** | **நாள்தோறும்** |
| **திட்டு முட்டு** | **–** | **தடுமாற்றம்** |
| **சுண்ட** | **–** | **நன்கு** |
| **பேணுவையேல்** | **–** | **பாதுகாத்தல்** |

13) உடலின் உறுதி உடையவரே

உலகில் இன்பம் உடையவராம்

இடமும் பொருளும் நோயாளிக்கு

இனிய வாழ்வு தந்திடுமோ? – என்ற பாடல் வரிகள் யாருடையது?

**A) தேசிய விநாயகனார்**

B) பெ. சுந்தரனார்

C) கண்ணதாசன்

D) வாணிதாசன்

**விளக்கம்: உடற்பயிற்சியின் அவசியத்தையும் நோய் பற்றிய வருமுன் காப்போம் என்னும் விழிப்புணர்வு தரும் வகையில் கவிமணி இவ்வாறு எழுதியுள்ளார்.**

14) அருமை உடலின் நலமெல்லாம்

அடையும் வழிகள் அறிவாயே!

வருமுன் நோயைக் காப்பாயே!

வையம் புகழ வாழ்வாயே! – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் வையம் என்ற சொல்லின் பொருள்?

A) ஊர்

B) நாடு

**C) உலகம்**

D) மாநிலம்

**விளக்கம்: வையம் என்ற சொல்லின் பொருள் உலகம் என்பதாகும். வருமுன் நோயை காத்தால் உலகம் புகழும்படி வாழலாம் என்று கவிமணி தனது பாடல்கள் மூலம் கூறுகிறார்.**

15) நீலகேசி பற்றி கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

1. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று

2. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

3. பத்து சருக்கங்களைக் கொண்ட நூல்

4. பௌத்த சமய கருத்துக்களை வாதங்களில் அடிப்படையில் விளக்குகிறது

A) 1, 2, 3 சரி

B) 1, 3, 4 சரி

C) 2, 4 சரி

**D) 1, 4 தவறு**

**விளக்கம்: 1. ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்று**

**2. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை**

**3. பத்து சருக்கங்களைக் கொண்ட நூல்**

**4. சமண சமய கருத்துக்களை வாதங்களில் அடிப்படையில் விளக்குகிறது**

16) நோயை ஓட்டி நுறு வயது தரும் என்று கவிமணி கூறும் கருத்துகளில் பொருந்தாதது?

A) தூய காற்று

B) பசித்தபின் உணவு

**C) மூலிகைகள்**

D) நன்னீர்

**விளக்கம்: தூய காற்றும் நன்னீரும்,**

**சுண்டப் பசித்த பின் உணவும்**

**நோயை ஓட்டி விடும்அப்பா!**

**நூறு வயதும் தரும்அப்பா! என்பது கவிமணியின் வரிகள். இதில் நோயை ஓட்டும் வழிகளாக கவிமணி கூறுவன,**

**1. தூய கற்று**

**2. நன்னீர்**

**3. சுண்டப்பசித்த பின் உணவு**

17) காலை மாலை உலாவிநிதம்

காற்று வாங்கி வருவோரின்

காலைத் தொட்டுக் கும்பிட்டுக்

காலன் ஓடிப்போவனே! – இவ்வரிகளில் காலன் என்ற சொல்லின் பொருள்?

A) தேவர்கள்

B) அரசர்

C) மருத்துவர்

**D) எமன்**

**விளக்கம்: காலன் என்ற சொல்லின் பொருள் எமன் என்பதாகும். தினமும் காலை மாலை என்ற இருவேலை உடற்பயிற்சி செய்வோரைக் கண்டு எமன் காலைத் தொட்டு கும்பிட்டு ஓடிப்போவார் என்று உடற்பயிற்சியின் அவசியம் குறித்து விளக்கப்பட்டுள்ளது.**

18) கூழை யேநீ குடித்தாலும்

குளித்த பிறகு குடியப்பா – இவ்வரிகளில் உணர்த்தப்படும் செய்தி?

A) கூழைக் குடித்தால் உடல்நலம் நன்றாக இருக்கும்

B) குளித்த பிறகு கூழைத்தான் குடிக்க வேண்டும்

C) எளிமையாக இருத்தல்

**D) தூய்மையாக இருத்தல்**

**விளக்கம்: கூழை குடித்தாலும் குளித்த பிறகே குடிக்க வேண்டும். அதாவது எது உண்டாலும் நாம் அன்றாடம் குளிக்க வேண்டும் என்று தூய்மை பற்றி கவிமணி இப்பாடல் வரிகள் மூலம் குறிப்பிட்டுள்ளார் .**

19) ஆசியஜோதி என்னும் நூலை எழுதியவர்?

**A) கவிமணி**

B) ஜவஹர்லால் நேரு

C) வாணிதாசன்

D) மனோன்மணியம் பெ. சுந்தரனார்

**விளக்கம்: ஆசியஜோதி என்னும் நூலை எழுதியவர் – கவிமணி.**

**Discovery Of India – ஜவஹர்லால் நேரு**

20) ஊர்வனவும் போலாதும் உவசமத்தின் உய்ப்பனவும் – இத்தொடரில் உள்ள உவசமம் என்ற சொல்லின் பொருள்?

A) சமமான

**B) அடங்கிஇருத்தல்**

C) அடங்காது எதிர்த்தல்

D) தன்மையுடையன

**விளக்கம்: நோயின் தன்மை பற்றி விளக்கும் இவ்வரிகள் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாக நீலகேசியில் இடம் பெற்றுள்ளது. உவசமம் என்ற சொல்லின் பொருள் அடங்கி இருத்தல் என்பதாகும்.**

21) கவிமணி பிறந்த ஊர்?

A) மருதூர்

B) எட்டயபுரம்

C) தோரமங்கலம்

**D) தேரூர்**

**விளக்கம்: கவிமணி தேசிய விநாயகனார் பிறந்த ஊர் தேரூர்.**

**மருதூர் – இராமலிங்க அடிகள்**

**எட்டயபுரம் – பாரதியார்**

**தோரமங்கலம் – பாவலரேறு பெருஞ்சித்தனார்**

22) ______________உள்ள இடமெங்கும் சுகமும் உண்டு?

A) உடற்பயிற்சி

**B) சுத்தம்**

C) நன்னீர்

D) நற்காற்று

**விளக்கம்: சுத்தம் உள்ள இடமெங்கும்**

**சுகமும் உண்டு நீயதனை**

**நித்தம் நித்தம் பேணுவையேல்**

**நீண்ட ஆயுள் பெறுவாயே! – கவிமணி**

**சுத்தம் உள்ள இடமே சுகம் உள்ள இடம் என்று கவிமணி கூறுகிறார்.**

23) யார்வினவும் காலும் அவை மூன்று கூற்றவா – இதில் அவை என்று குறிப்பிடப்படுவது?

A) மருந்து

B) இன்பம்

C) துன்பம்

**D) நோய்**

**விளக்கம்: இவ்வரிகளில் அவை என்று குறிப்பிடப்படுபவை நோய் ஆகும். சமண சமய நூலான நீலகேசி நோய் மூன்று தன்மையுடையன என்று விளக்குகிறது. அவை**

**1. மருந்தினால் நீங்கும் நோய்**

**2. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்**

**3. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன**

24) மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலின் ஆசிரியர்?

**A) கவிமணி**

B) கவியரசு

C) பாவலர் மணி

D) புரட்சிக் கவி

**விளக்கம்: மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலின் ஆசிரியர் கவிமணி தேசிய விநாயகனார் ஆவார்.**

**கவியரசு – கண்ணதாசன்**

**பாவலர் மணி – வாணிதாசன்**

**புரட்சிக் கவி – பாரதிதாசன்**

25) யார்வினவும் காலும் அவை மூன்று கூற்றவா – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் கூற்றவா என்ற சொல்லின் பொருள்?

A) கடவுள்

B) மகாவீரர்

C) எமன்

**D) பிரிவுகளாக**

**விளக்கம்: யார்வினவும் காலும் அவைமூன்று கூற்றவா – இதில் குறிப்பிடப்படும் கூற்றவா என்ற சொல்லின் பொருள் பிரிவுகள். அதாவது மூன்று கூற்றவா எனில் மூன்று பிரிகள் என்பது இதன் பொருள்**

26) __________,__________நோயாளிக்கு

இனிய வாழ்வு தந்திடுமோ?

A) சோறும், கூழும்

**B) இடமும் பொருளும்**

C) பணமும் பொருளும்

D) சோறும் நீரும்

**விளக்கம்: இடமும் பொருளும் ஒரு போதும் நோயாளிக்கு இனிய வாழ்வு தராது என்பது இப்பாடலின் பொருள் ஆகும். மனிதனுக்கு நல்வாழ்வு அளிப்பது உடற்பயிற்சி, சுகாதார வாழ்வு, நடைபயிற்சி, சரியான உணவு முறைகள் என்று கவிமணி கூறுகிறார் .**

27) காந்தியடிகள்___________போற்ற வாழ்ந்தார்?

A) நிலம்

**B) வையம்**

C) களம்

D) வானம்

**விளக்கம்: காந்தியடிகள் வையம் போற்ற வாழ்ந்தார். இதில் வையம் என்ற சொல்லின் பொருள் உலகம் என்பதாகும்.**

28) கவிமணி இயற்றிய மொழிபெயர்ப்பு நூல்?

A) மருமக்கள் வழி மான்மியம்

B) கதர் பிறந்த கதை

C) மலரும் மாலையும்

**D) உமர்கய்யாம் பாடல்கள்**

**விளக்கம்: கவிமணி என்று போற்றப்படும் தேசிய விநாயகனார் உமர்கய்யாம் பாடல்கள் என்னும் நூலை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.**

**அவரின் நூல்கள்:**

**1. ஆசியஜோதி**

**2. மருமக்கள் வழி மான்மியம்**

**3. கதர் பிறந்த கதை**

**4. மலரும் மாலையும்**

29) ஓர்தல் தெளிவோரில் ஒழுக்கம் இவையுண்டார் – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் ஓர்தல் என்ற சொல்லின் பொருள்?

**A) நல்லறிவு**

B) நற்காட்சி

C) நல்லொழுக்கம்

D) ஒளிந்துகொள்ளுதல்

**விளக்கம்: ஓர்தல் என்ற சொல்லின் பொருள் நல்லறிவு.**

**ஓர்தல் – நல்லறிவு**

**தெளிவு – நற்காட்சி**

**ஒழுக்கம் – நல்லொழுக்கம்**

30) மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்! – இவ்வரிகளில் உணர்த்தப் படும் செய்தி?

A) அதிகமாக உண்ண வேண்டும்

B) சத்தானதாக உண்ண வேண்டும்

C) சுகாதாரமான உணவை உண்ண வேண்டும்

**D) அளவாக உண்ண வேண்டும்**

**விளக்கம்: மட்டு என்ற சொல்லின் பொருள் அளவு. எனவே அளவாக உண்டால் ஆரோக்கியமான உடலை பெறமுடியும். அதிகமாக உண்டுவந்தால் நோய் வந்து பாயில் விழ வேண்டும் என்று உணவு உண்ணும் முறை பற்றி கவிமணி கூறியுள்ளார்.**

31) நலமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) நலம் + எல்லாம்**

B) நலன் + எல்லாம்

C) கலம் + எலாம்

D) நலன் + எலாம்

**விளக்கம்: நலமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது நலம் + எல்லாம்**

32) இடம + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்___________

A) இடமெங்கும

B) இடம்ளங்கும்

**C) இடமெங்கும்**

D) இடம்மெங்கும்

**விளக்கம்: இடம் + எங்கும் என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் இடமெங்கும். இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து ம். வருமொழியின் முதல் எழுத்து எ. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ம் + எ=மெ. இடமெங்கும் என எழுதலாம்**

33) உடலின் உறுதி உடையவரே – இதில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்கள்?

A) உடலின் உறுதி என்ற இரு சொற்கள் மட்டுமே

B) உடலின் உடையவரே என்ற இரு சொற்கள் மட்டுமே

**C) உடலின் உறுதி உடையவரே**

D) எதுவுமில்லை

**விளக்கம்: யாப்பிலக்கணத்தில் தொடை என வழங்கப்படும் செய்யுள் உறுப்பு வகைகளில் எதுகை, மோனை முக்கியமானதாகும். வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்கள்(சொற்கள்) –ன் முதல் எழுத்து ஒன்றிவரின் அதனை மோனை என்று கூறுவர்.**

34) மட்டுக் குணவை உண்ணாமல்

வாரி வாரித் தின்பாயேல் – இதில் வாரி வாரி என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு?

A) இரட்டைக் கிளவி

**B) அடுக்குத்தொடர்**

C) முற்றும்மை

D) எண்ணும்மை

**விளக்கம்: வாரி வாரி என்பது இரண்டு சொல் அடுக்கி வந்துள்ளது. இதனை பிரித்துப் பார்த்தாலும் பொருள் தரும். இதன் இலக்கண குறிப்பு – அடுக்குத் தொடர்**

**இரட்டைக்கிளவி – சொற்களைப் பிரித்தால் பொருள் தராது(எ.கா) . சல சலஇ மட மட**

**எண்ணும்மை – உம் என்னும் சொல் வெளிப்படையாக வருவது (எ.கா) நீயும் நானும்**

**முற்றும்மை – உம் என்னும் சொல் ஒற்றைச் சொல்லின் வெளிப்படையாக வருவது (எ.கா) நானும்**

35) கவிமணி பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இயற்பெயர் தேசிய விநாயகனார்
2. குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்
3. 36 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர்
4. மொழிபெயர்ப்பு நூல் – ஆசியஜோதி
5. எழுதிய நூல் – மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை, மலரும் மாலையும், ஆசியஜோதி

A) 3 மட்டும் தவறு

**B) 4 மட்டும் தவறு**

C) 1 மட்டும் தவறு

D) 5 மட்டும் தவறு

**விளக்கம்: 1. இயற்பெயர் தேசிய விநாயகனார்**

**2. குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்**

**3. 36 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர்**

**4. மொழிபெயர்ப்பு நூல் – உமர்கய்யாம்**

**5. எழுதிய நூல் – மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை, மலரும் மாலையும், ஆசியஜோதி**

winmeen.com

36) சராசரி மனிதன் தன் வாழ்நாளில் எத்தனை கனவுகள் காண்கிறான்?

A) 2 லட்சம்

**B) 3 லட்சம்**

C) 4 லட்சம்

D) 5 லட்சம்

**விளக்கம்: சராசரி மனிதன் தனது வாழ்நாளில் மூன்று லட்சம் கனவுகள் காண்கிறான்.**

37) சுஜாதாவின் இயற்பெயர்?

**A) ரங்கராஜன்**

B) ராம்குமார்

C) ராஜாராம்

D) ராஜேந்திரன்

**விளக்கம்: சுஜாதா என்பவரின் இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும். இவர் மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் முக்கியப் பங்காற்றியுள்ளார்**

38) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின் – இக்குறட்பா உணர்த்தும் செய்தி?

A) மருந்தை முறையாக உண்ணுதல் வேண்டும்

B) மருந்தை உண்ணக் கூடாது

**C) பசித்தபின் உணவு அருந்தினால் மருந்து வேண்டாம்**

D) உணவருந்தியப்பின் மருந்து உண்ண வேண்டும்

**விளக்கம்: அருந்திய உணவு செரித்தபின் உணவு அருந்தினால் மருந்து என்ற ஒன்று தேவைப்படாது என்பது இக்குறட்பாவின் பொருள்.**

39) நேர்வனவே ஆகும் நிழல்இகழும் பூணாய் – இதில் நிழல்இகழும் என்ற சொல்லின் பொருள்?

A) ஒளியை மறைக்கும்

B) நிழலைத் தரும்

**C) ஒளிபொருந்திய**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: நிழல் இகழும் என்ற சொல்லின் பொருள் – ஒளி பொருந்திய என்பதாகும்.**

**நிழல்இகழும் பூணாய் – ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்.**

40) தூய காற்றும் நன்னீரும் – இதில் இடம்பெற்றுள்ள தொடையின் உறுப்பு?

A) எதுகை

B) மோனை

C) இயைபு

**D) எதுவுமில்லை**

**விளக்கம்: எதுகை, மோனை, இயைபு ஆகியவை தொடையின் உறுப்பு ஆகும்.**

**1. மோனை – வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்கள்(சொற்கள்) –ன் முதல் எழுத்து ஒன்றி வருவது**

**2. எதுகை – வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்கள்(சொற்கள்) –ன் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது**

**3. இயைபு – வெவ்வேறு அடிகளின் இறுதி சீர் ஒன்றி வருவது**

41) கூற்று: சித்த மருத்துவம் என்பது மரபுவழி மருத்துவமாகவும் நாட்டு மருத்துவமாகவும் சுருங்கியது. இறுதியில் கிராமம் சார்ந்த மருத்துவமாக மாறிப்போனது.

காரணம்: நவீன மருத்துவத்தில், துரிதமாகச் சிலநோய்களுக்குக் கிடைத்த தீர்வுகள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: சித்த மருத்துவம் என்பது மரபுவழி மருத்துவமாகவும் நாட்டு மருத்துவமாகவும் சுருங்கியது. இறுதியில் கிராமம் சார்ந்த மருத்துவமாக மாறிப்போனது. இதற்கான காரணம் நவீன மருத்துவத்தில்இ துரிதமாகச் சிலநோய்களுக்குக் கிடைத்த தீர்வுகள் பெரும் வரவேற்பைப் பெற்றது ஆகும்.**

42) வேர்பாரு, தழைபாரு, மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே என்றனர் சித்தர்கள். இதில் பற்பசெந்தூரம் என்பது கீழக்கண்ட எதைக் குறிக்கும்.

A) அணியும் ஒரு வகை திலகம்

B) உலோகம்

C) பாஷாணங்கள்

**D) B மற்றும் C**

**விளக்கம்: வேர், தழை ஆகிவற்றால் குணம் அடையாதபோது சில நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டும் அல்லாமல் உலோகங்களையும் பாஷாணங்களையும் சித்த மருந்துகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.**

**அந்த காலத்தில் எப்படி மூலிகைகளை பார்த்தார்களோ அப்படியே தாதுப்பொருட்களையும்இ உலோகத்தையும் பார்த்தார்கள். அவற்றை மருந்துகளாக மாற்றும் வல்லமை சித்தமருத்துவத்தில் இருந்திருக்கிறது.**

43) கூற்று: தமிழர் மருத்துவத்தில் பக்கவிளைவுகள் இல்லை

காரணம்: மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும் பக்கவிளைவும் இருக்கும். ஆனால் தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது.**

44) கூற்றுகளை ஆராய்க. (சித்த மருத்துவம் பற்றி) :

1. சமண, பௌத்த காலத்தில் அந்தந்த மதங்களின் கூறுகள் நம் மருத்துவத்தில் இருந்தன.

2. சைவம் ஓங்கிய போது சைவ சித்தாந்தத்தின் கூறுகள் இம்முறையில் கலந்தன

3. இறுதியாக ஆங்கிலேயர்களின் வருகையால் அறிவியல் பார்வை மூலம் சித்த மருத்துவம் சுருங்கியது

A) அனைத்தும் தவறு

**B) அனைத்தும் சரி**

C) 1, 2 சரி

D) 1, 3 சரி

**விளக்கம்: 1. சமண, பௌத்த காலத்தில் அந்தந்த மதங்களின் கூறுகள் நம் மருத்துவத்தில் இருந்தன.**

**2. சைவம் ஓங்கிய போது சைவ சித்தாந்தத்தின் கூறுகள் இம்முறையில் கலந்தன**

**3. இறுதியாக ஆங்கிலேயர்களின் வருகையால் அறிவியல் பார்வை மூலம் சித்த மருத்துவம் சுருங்கியது**

45) பேர்த்த பிணியுள் பிறாவர் பெரிதின்பமுற்றே – இதில் குறிப்பிடப்படும் பிணி என்ற சொல்லின் பொருள்?

A) கட்டுதல்

B) பனி

C) தீராத நோய்

**D) துன்பம்**

**விளக்கம்: இச்செய்யுளில் பிணி என்பதன் பொருள் துன்பம் என்னும் பொருள் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரிகள் நீலகேசி என்றும் நூலில் இருந்து தரப்பட்டுள்ளது.**

46) காலை மாலை உலாவிநிதம்

காற்று வாங்கி வருவோரின்

காலைத் தொட்டுக் கும்பிட்டுக்

காலன் ஓடிப்போவனே! – இவ்வரிகள் யார் எழுதியது?

**A) தேசிய விநாயகனார்**

B) பெ. சுந்தரனார்

C) கண்ணதாசன்

D) வாணிதாசன்

**விளக்கம்: இவ்வரிகளின் ஆசிரியர் கவிமணி ஆவார். காலை மாலை என்று இருவேலையும் நடைபயிற்சி செய்வோர்க்கு நோய் என்பதிலிருந்து விடுதலை என்று கவிமணி எழுதியுள்ளார்.**

47) நோய்நாடி நோய் முதல்நாடி என்று கூறியவர்?

A) ஔவையார்

B) கபிலர்

C) அகத்தியர்

**D) திருவள்ளுவர்**

**விளக்கம்: நோய் நாடி நோய் முதல் நாடி என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல் திருக்குறள். இதனை எழுதியவர் திருவள்ளுவர். நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது**

48) பொருத்துக

அ. தீர்வன – 1. ஒளிபொருந்திய

ஆ. உவசமம் – 2. நீங்குபவை

இ. நிகழ் இகழும் – 3. அடங்கி இருத்தல்

ஈ. பேர்தற்கு – 4. அகற்றுவதற்கு

**A) 2, 3, 1, 4**

B) 2, 3, 4, 1

C) 1, 3, 2, 4

D) 4, 2, 1, 3

**விளக்கம்:**

**தீர்வன – நீங்குபவை**

**உவசமம் – அடங்கி இருத்தல்**

**நிகழ் இகழும் – ஒளிபொருந்திய**

**பேர்தற்கு – அகற்றுவதற்கு**

49) தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு__________பயன்படுத்தினர்

**A) தாவரங்களை**

B) விலங்குகளை

C) உலோகங்களை

D) மருந்துகளை

**விளக்கம்: தொடக்க காலத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கையாக வளர்ந்த தாவரங்களை கொண்டும் அவனுக்கு அருகில் கிடைத்த பொருள்களைக் கொண்டும் நோயைத் தீர்க்க முயன்றிருப்பான். தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாகப் பயன்படுத்தியிருப்பான். இவ்வாறு தான் மனிதர்களுக்கும் மருத்துவத்திற்குமான தொடர்பு தொடங்கியது.**

50) தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது_____________நீட்சியாகவே உள்ளது

A) மருந்தின்

B) உடற்பயிற்சியின்

**C) உணவின்**

D) வாழ்வின்

**விளக்கம்: ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும் பக்கவிளைவும் இருக்கும். ஆனால் தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சி யாக இருக்கிறது**

51) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று___________

A) தலைவலி

B) காய்ச்சல்

C) புற்றுநோய்

**D) இரத்தக்கொதிப்பு**

**விளக்கம்: உடல் எடை அதிகரிப்பால் சர்க்கரைநோய், இரத்தக்கொதிப்பு வர வாய்ப்புள்ளது. அழகுக்காக மட்டும் உடல் எடையைக் குறைப்பதும் மிகவும் மெலிவதும் நல்லவையல்ல.**

52) சமையலறையில் செலவிடும் நேரம்_____________செலவிடும் நேரமாகும்

A) சுவைக்காக

B) சிக்கனத்திற்காக

**C) நல்வாழ்வுக்காக**

D) உணவுக்காக

**விளக்கம்: அவசர யுகம் என்றாலும் உணவு உண்பதில், சில ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தாக வேண்டும். உணவுக்காகச் சமையலறையில் செலவிடும் நேரத்தை, நலவாழ்விற்காகச் செலவிடும் நேரம் என நினைக்க வேண்டும்.**

53) தொற்றுநோய் வராமல் காப்பதிலும், அவசரகாலச் சிகிச்சையிலும் மருத்துவ ஆராய்ச்சியிலும் _______மருத்துவம் முன்னணியில் உள்ளது?

A) சித்த

B) ஆயுர்வேத

**C) நவீன**

D) அலோபதி

**விளக்கம்: உலகத்தின் அத்தனை மரபுசார்ந்த மருத்துவமுறைகளுக்கும் பலமும் இருக்கிறது. பலவீனமும் இருக்கிறது. தொற்றுநோய் வராமல் காப்பதிலும், அவசரகாலச் சிகிச்சையிலும் மருத்துவ ஆராய்ச்சியிலும் நவீன மருத்துவம் முன்னணியில் உள்ளது. மரபுசார்ந்த மருந்து வேலை செய்யும் விதத்தைப் புரிந்துகொள்வதற்கு நவீன அறிவியல் பயன்படுகிறது. எனவே, எல்லா மருத்துவ முறைகளும் கைகோக்க வேண்டும்.**

54) கூற்று: தமிழர் மருத்துவம் இப்பொழுது மீண்டும் மறுமலர்ச்சி அடைந்து வருவதாகத் தோன்றுகிறது.

காரணம்: சக்ககரை, இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், மாரடைப்பு முதலிய வாழ்வியல் நோய்களை தீர்க்க இராசயன மருந்து மட்டும் போதாது.

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறுஇ காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: பல ஆண்டுகளுக்குப் பின்னால்தான் மரபுசார்ந்த மருத்துவம் மிகப்பெரிய அனுபவத்தின் நீட்சி என்பதும் மிகப்பெரிய பட்டறிவில் ஒரு பெரிய அறிவியல் கண்டுபிடிப்பாக ஒளிந்திருக்கும் என்பதும் புரியத் தொடங்கியது. குறிப்பாகச் சக்கரை, இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், மாரடைப்பு முதலிய வாழ்வியல் நோய்கள் பெருகிய நிலையைச் சொல்லலாம். இவற்றைத் தீர்க்க வெறும் இரசாயன மருந்துகள் போதா. கூடவே உணவு, வாழ்வியல், உடற்பயிற்சி, யோகம் இவையும் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும்.**

55) மனித மூளையில் இருக்கும் செல்களின் எண்ணிக்கை?

A) மில்லியன்

B) பில்லியன்

**C) ட்ரில்லியன்**

D) கண்டறிய இயலாது

**விளக்கம்: இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித மூளைதான் என்று சொல்கிறார்கள். அதனுள் இருக்கும் செல்களின் எண்ணிக்கை ட்ரில்லியன்.**

56) மூளையை எத்தனை பாகங்களாகப் பிரிக்கலாம்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: மூளையை மூன்று பாகங்களாக மேம்போக்காகப் பிரிக்கலாம். அவை**

**1. உள்மூளை**

**2. நடுமூளை**

**3. பின்மூளை**

57) மூளை குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் _________ பாகத்தை அபகரித்துக் கொள்கிறது

**A) 1/5**

B) 1/4

C) 1/50

D) 1/10

**விளக்கம்: மூளை குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது. காரணம் தனக்கான ஆற்றலைச் சேமித்து வைக்க அதற்கு இடம் இல்லை.**

58) சூடான பாத்திரத்தை தொட்டல் கையை விலக்கிக் கொள்வது உள்ளிட்ட அவசர கால செயல்படுகளுக்கு எங்கிருந்து சைகை வரும்?

A) முன் மூளை

B) சிறு மூளை

C) நடு மூளை

**D) முதுகுத்தண்டின் குறுக்கு இணைப்புகள்**

**விளக்கம்: தும்மல், இருமல், சூடான பாத்திரத்தை தொட்டல் கையை விலக்கிக் கொள்வது உள்ளிட்ட அவசர கால செயல்படுகளுக்கு மூளைக்கு சென்று சைகை வரும் வரை காத்திருக்க முடியாது. எனவே இந்த மாதிரி தன்னிச்சையான செயல்களுக்காகத்தான் முதுகுத்தண்டின் குறுக்கு இணைப்புகள் இருக்கின்றன.**

59) பொருத்துக

அ. திறத்தன – 1. அணிகலன்களை அணிந்தவவே

ஆ. கூற்றவா – 2. தன்மையுடையன

இ. பூணாய் – 3. துன்பம்

ஈ. பிணி – 4. பிரிவுகளாக

A) 1, 2, 4, 3

B) 3, 2, 1, 4

C) 2, 4, 3, 1

**D) 2, 4, 1, 3**

**விளக்கம்: திறத்தன – தன்மையுடையன**

**கூற்றவா – பிரிவுகளாக**

**பூணாய் – அணிகலன்களை அணிந்தவவே**

**பிணி – துன்பம்**

60) மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு எத்தனை மி.லி குருதி தேவைப்படுகிறது?

A) 600

B) 700

C) 900

**D) 800**

**விளக்கம்: மனித உடலின் எடையில் 50இல் ஒரு பங்கே கொண்டிருக்கும் மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மி.லி இரத்தம் தேவைப்படுகிறது.**

61) கூற்று: நம்மில் பெரும்பாலானவர்கள் இடதுகைக்காரர்கள்

காரணம்: நம் மூளையின் இடது பகுதி அதிகப்பகுதியான பாதிப்பு அடைந்துள்ளது

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட–வல மாற்றம் ஒன்று நிகழ்கிறது.. அதாவது வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடப்பக்கப் பகுதிக்கும், இடப்பக்கச் செய்திகள் வலப்பக்கப்பகுதிக்கும் செல்கின்றன. நம்மில் பெரும்பாலானவர்கள் வலதுகைகக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் நம் மூளையின் இடது பகுதி அதிகப்படியன பாதிப்பினால்தான் என்று சொல்கிறார்கள்.**

62) கூற்றுகளை ஆராய்க

1. நமது மூளை வடபகுதி–இடபகுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

2. இந்த உலகத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித இதயம் தான்

3. மூளை முதுகுத் தண்டிலிருந்து முளைக்கிறது.

4. முளையின் அமைப்பு முட்டைகோஸ் அல்லது வெங்காய தோல் தோல் மடிப்பு மடிப்பாக இருக்கும்

A) 1, 3 சரி

B) 1, 4 சரி

**C) 1, 3, 4 சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. நமது மூளை வடபகுதி–இடபகுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

**2. இந்த உலகத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித மூளை தான்**

**3. மூளை முதுகுத் தண்டிலிருந்து முளைக்கிறது.**

**4. முளையின் அமைப்பு முட்டைகோஸ் அல்லது வெங்காய தோல் தோல் மடிப்பு மடிப்பாக இருக்கும்**

63) எவ்வளவு நேர உறக்கம் தேவை?

A) 5

B) 6

**C) 7**

D) 8

**விளக்கம்: தினமும் 7 மணி நேர உறக்கம் அவசியம். அதனையும் சரியான நேரத்தில் உறங்கச் செல்ல வேண்டும். அதிகாலையில் எழ வேண்டும்.**

64) மிகவும் குருதி பசி கொண்ட மனித உடலின் பாகம்?

A) நுரையீரல்

B) இதயம்

**C) மூளை**

D) கல்லீரல்

**விளக்கம்: மனித உடலில் ரொம்ப பசி உள்ள பாகம் மூளை. அதாவது உயிர்வளிப் பசி. உயிர்வளி எனில் ஆக்ஸிஜன் மற்றும் குருதி. மனித உடலின் எடையில் 50ல் ஒரு பங்கே இருந்தாலும் அத குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது.**

65) பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவும் மூளையின் பாகம்?

A) முன்மூளை

B) வடபகுதி மூளை

**C) இடப்பகுதி மூளை**

D) பின் மூளை

**விளக்கம்: நமது மூளை வடபகுதி–இடபகுதி என்ற இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவும் மூளையின் பாகம் இடது பாதி தான்**

66) மூளைக்கு செல்லும் நரம்புகளில்_____________மாற்றம் ஒன்று நிகழ்கிறது?

A) தலைகீழ்

**B) இடவல**

C) மேல் கீழ்

D) எவ்வித மாற்றமும் இல்லை

**விளக்கம்: மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட–வல மாற்றம் ஒன்று நிகழ்கிறது**

67) நோயற்ற வாழ்வை வாழ தினமும் எத்தனை லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தினமும் 3 லிட்டர் தண்ணீர் என்பது அவசியம். ஏனெனில் நீர் நமது உடலை தூய்மைப் படுத்தும். அதிகப்படியாக நமது உடம்பில் உப்பு தேங்காமல் தடுக்கும்.**

68) மூளை___________லிருந்து முளைக்கிறது?

A) தோள்பட்டை

**B) முதுகுத் தண்டு**

C) மண்டையோடு

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: மூளை, முதுகுத் தண்டிலிருந்து முளைக்கிறது. தண்டிலிருந்து மடிப்பு மடிப்பாக முட்டைகோஸ் இலைகள் வருவது போல அல்லது வெங்காயம் போல உள்ளது.**

69) உடம்பிலுள்ள _____________தான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளையும் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது?

A) முன் மூளை

B) நடு மூளை

C) பின் மூளை

**D) சிறு மூளை**

**விளக்கம்: உடம்பிலுள்ள சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளையும் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.**

70) காலை மாலை உலாவிநிதம்

காற்று வாங்கி வருவோரின்

காலைத் தொட்டுக் கும்பிட்டுக்

காலன் ஓடிப்போவனே! – என்ற வரிகள் இடம்பெற்ற கவிமணியின் நூல்?

**A) மலரும் மாலையும்**

B) மருமக்கள் வழி மான்மியம்

C) ஆசிய ஜோதி

D) கதர் பிறந்த கதை

**விளக்கம்: இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் மலரும் மாலையும்.**

**கவிமணியின் பிற நூலகள்:**

**1. மருமக்கள் வழி மான்மியம்**

**2. ஆசியஜோதி**

**3. கதர் பிறந்த கதை**

**மொழிபெயர்ப்பு நூல் – உமர்கய்யாம் பாடல்கள்**

71) பிறவித் துன்பத்திலிருந்து நீக்கும் மருந்துகளில் பொருந்தாது?

A) நற்காட்சி

B) நல்லறிவு

C) நல்லொழுக்கம்

**D) நற்செயல்**

**விளக்கம்: அகற்றுவதற்கு அரியவை பிறவித் துன்பங்கள். இவற்றைத் தீரக்க திரியோக மருநதுகள் உதவுகின்றன. நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவை திரியோக மருந்து ஆகும். நற்செயல் என்பது திரியோக மருந்துகளில் குறிப்பிடப்படவில்லை.**

72) மூளையின் வலது பாதிக்கு பொருத்தமில்லாத செயல் எது?

A) பேசுதல்

B) தர்க்கரீதியில் சிந்தித்தல்

**C) சதுரங்கம்**

D) கவிதை எழுதுதல்

**விளக்கம்: மூளையின் வலது பாதி பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. சதுரங்கம் போன்ற விளையாட்டுகள் விளையாடுவது இடதுபாதி மூளையே. ஆனால் கவிதை எழுதுதல் வலது பாதி மூளையின் செயல்பாடாகும்.**

73) மனிதனின் புத்திசாலித்தனத்திற்கு காரணம்?

**A) நியூரான்களின் பிணைப்பு**

B) செல்களின் எண்ணிக்கை

C) செல்களின் அமைப்பு

D) மூளையின் எடை

**விளக்கம்: மனித மூளையில் நூறு பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் உள்ளன. இந்த நியூரான்களின் வலைப்பின்னல்தான் புத்திசாலித்தனம், படைப்பு, உணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு ஆகியன எல்லாம்.**

74) மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் முக்கிய பங்கு ஆற்றியவர்?

A) அப்துல்கலாம்

B) சிவன்

C) சுகுமார் சென்

**D) ரங்கராஜன்**

**விளக்கம்: சுஜாதா என்று அறியப்படும் ரங்கராஜன் என்பவர் மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.**

**சிவன் என்பவர் இஸ்ரோவின் தலைவர்.**

75) கூற்றுகளை ஆராய்க.

1. தலையின் பகுதியில் நடைபெறும் சில தன்னிச்சையான செயல்களான வெளிச்சத்திற்கு ஏற்றபடி கண்களைத் திறப்பது, தலையைத் திருப்பும்போது கண்களை நிலைநிறுத்துவது ஆகியவற்றை எல்லாம் பார்த்துக்கொள்வது – மூளை

2. ஏப்பம் விடுவது, இருமல், தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகியவற்றுக்கெல்லாம் மூளையே முக்கிய காரணம்.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தலையின் பகுதியில் நடைபெறும் சில தன்னிச்சையான செயல்களான வெளிச்சத்திற்கு ஏற்றபடி கண்களைத் திறப்பது, தலையைத் திருப்பும்போது கண்களை நிலைநிறுத்துவது ஆகியவற்றை எல்லாம் பார்த்துக்கொள்வது – மூளை**

**2. ஏப்பம் விடுவது, இருமல், தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகியவற்றுக்கெல்லாம் மூளைக்குப் பதிலாக முதுகெலும்பு இருந்தாலே போதும்.**

76) நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகளுள் பொருந்தாதது எது?

A) சித்த மருத்துவம்

B) ஆயர்வேத மருத்தும்

C) அலோபதி மருத்துவம்

**D) ஹோமியோபதி**

**விளக்கம்: நடைமுறையில் உள்ள மருத்துமுறைகள்:**

**1.. சித்த மருத்துவம்**

**2. ஆயுர்வேத மருத்துவம்**

**3. யுனானி மருத்துவம்**

**4. அலோபதி மருத்துவம்**

77) நோய்நாடி நோய் முதல்நாடி என்ற திருக்குறளில் முதல் என்ற சொல்லின் பொருள்?

A) ஆரம்பம்

**B) காரணம்**

C) தொடக்கம்

D) முதல் நோய்

**விளக்கம்: நோய்நாடி நோய் முதல்நாடி என்ற திருக்குறளில் முதல் என்ற சொல்லின் பொருள் காரணம் என்பதாகும். அதாவது நோயை மட்டுமின்றி, அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.**

78) கூற்று: இன்று நோய்கள் பெருகிவிட்டன.

காரணம்: உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் ஆகியவை

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: இன்று நோய்கள் பெருகி இருப்பதற்கு மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம். மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணங்கள். சுற்றுச்சூழல் மாசு மற்றொரு காரணம்.**

79) மனித உடலின் எடையில் மூளையின் எடை?

A) 1/10

B) 1/20

C) 1/40

**D) 1/50**

**விளக்கம்: மனித உடலின் எடையில் மூளையின் எடை 50-ல் ஒரு பங்கு ஆகும்.**

80) கூற்று: உயர்வாக இருந்த தமிழர் மருத்துவமுறை பின்தங்கி போயிற்று

காரணம்:நம் நாட்டின் மீது நடந்த படையெடுப்புகள்

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: உயர்வாக இருந்த தமிழர் மருத்துவமுறை பிறகு பின்தங்கிப் போனதற்குக் காரணம் நிறைய காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று நம் நாட்டின் மீது நடத்தப்பட்ட அன்னிய படையெடுப்பு.**

81) மூளையில் இடது பாதிக்கு பொருத்தமில்லாத செயல் எது?

A) பிரச்சினைகளை அலசுதல்

B) சதுரங்கம்

C) கணக்கிடுதல்

**D) படம் போடுவது (படம் வரைதல்)**

**விளக்கம்: நமது மூளையின் இடது பாதி பேசுதல், எழுதுதல், கணக்கிடுதல், தர்க்கரீதியில் சிந்தித்து செயல்படுதல் போன்ற செயல்களுக்கும், பிரச்சினைகளை அலசுதல் போன்றவற்றிற்கும் உதவுகிறது ஆனால் படம்போடுவது(படம் வரைதல்) மூளையின் வலது பாதியின் வேலையாகும்.**

82) எந்த மூளைப் பகுதி சரியில்லை என்றால் வீட்டுக்குப் போக திண்டாடுவோம்?

**A) வலது**

B) இடது

C) மேல்

D) கீழ்

**விளக்கம்: மூளையின் வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப்போக வழி தெரியாமல் திண்டாடுவோம்.**

83) சுஜாதாவின் நூல்களில் பொருந்தாதது?

A) என் இனிய எந்திரா

B) மீண்டும் ஜீனோ

**C) மின்னணு வாக்கு எந்திரம்**

D) ஸ்ரீரங்கத்துத் தேவதைகள்

**விளக்கம்: ரங்கராஜன் என்னும் இயற்பெயர் சுஜாதாவின் நூல்கள்:**

**1. என் இனிய எந்திரா**

**2. மீண்டும் ஜீனோ**

**3. ஸ்ரீரங்கத்துத் தேவதைகள்**

**4. தூண்டில் கதைகள்**

84) நோயில்லா வாழ்வைப் பெற தினமும் 45 நிமிடத்தில் எவ்வளவு தூரம் நடைப்பயணம் மேற்கொள்ள வேண்டும்?

**A) 3 கி.மீ**

B) 5 கி.மீ

C) 2 கி.மீ

D) 4 கி.மீ

**விளக்கம்: தினமும் 45 நிமிடத்தில் மூன்று கி.மீ நடைப்பயணம். 15 நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி செய்தல் அவசியம்.**

85) முழுவதும் விழித்துக்கொண்டிருக்கும் போது நாம் எத்தனை வகையான மனதுடன் இயங்குகிறோம்?

A) 1

**B) 2**

C) 3

D) 4

**விளக்கம்: முழுவதும் விழித்துக்கொண்டிருக்கும்போதே இரண்டு விதமான மனம் இயங்குவதை நீங்கள் கவனிக்கலாம். மகிழுந்து அல்லது இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது ஒரு மனம் வேறு சிந்தனையில் இருக்க, மற்றது கியர் மாற்றுவது, சாலை விதிகளுக்குப் பணிவது என்று மற்றொரு தளத்தில் இயங்கும்.**

86) எத்தனை நிமிடங்களுக்கு ஒரு நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம்?

A) 90

B) 60

**C) 96**

D) 108

**விளக்கம்: சுமார் 96 நிமிடங்களுக்கு ஒருமுறை நாம் எல்லோரும் மனநிலை மாறுகிறோம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். கொஞ்ச நேரம் சுறுசுறுப்பு, கொஞ்ச நேரம் பகல்கனா, இப்படித்தான் நாம் மாறி மாறி வாழ்கிறோம். பகலிலும் சரி, இரவிலும் சரி இந்நிலை தொடரும்.**

87) கூற்று: கடந்த காலத்தை விட இன்று நோய்கள் அதிகமாகிவிட்டன.

காரணம்: மருத்துவமுறைகள் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன.

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

**விளக்கம்: இன்றைக்கு நோய்கள் பெருகி விட்டன. இதற்கு காரணம் மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம்.**

88) பொருள் முற்று பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்___________எனப்படும்

**A) முற்றெச்சம்**

B) முற்று வினை

C) எச்சம்

D) வினைமுற்று

**விளக்கம்: பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். (எ.கா) . படித்த, எழுதிய**

89) கூற்றுகளை ஆராய்க.

1. சராசரி மனிதன் தன் வாழ்நாளில் 30 வருடம் தூங்குகிறான்

2. மூன்று லட்சம் கனவுகள் காண்கிறான்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சராசரி மனிதன் தன் வாழ்நாளில் 20 வருடம் தூங்குகிறான். மூன்று லட்சம் கனவுகள் காண்கிறான். கனவு என்பது மனதில் உள்ள நினைவலைகளில் அன்றைய அல்லது சமீபத்திய நினைவுகளை வகைப்படுத்தி வரிசைப்படுத்தும் செயல் என்கின்றனர். கனவுகள் அலமாரியில் உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துத் திருப்பி வைப்பது போன்றது என்கிறார்கள்.**

90) எச்சம் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: எச்சம் 2 வகைப்படும்.**

**1. பெயரெச்சம்**

**2. வினையெச்சம்**

91) மனித மூளையில் இருக்கும் நியூரான்களின் எண்ணிக்கை?

A) ட்ரில்லியன்

B) 100 மில்லியன்

**C) 100 பில்லியன்**

D) 10 ஆயிரம் பில்லியன்

விளக்கம்: இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள் எதுவென்றால் அது மனித மூளைதான் என்று சொல்கிறார்கள். அதனுள் இருக்கும் நியூரான்களின் எண்ணிக்கை நூறு பில்லியன் அதாவது பத்தாயிரம் கோடி நியூரான்கள் உள்ளன.

92) __________விலங்குக்கு மன்றாடிச் சொல்லிக் கொடுத்தும் இலக்கண விதிப்படி பேசும் திறமை வரவில்லை?

**A) சிம்பன்சி குரங்கு**

B) மனித குரங்கு

C) கிளி

D) புறா

**விளக்கம்: மொழியை இலக்கண விதிகளின்படி பேசுவது மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை. சிம்பன்சி போன்ற குரங்குகளுக்கு மன்றாடிச் சொல்லிக் கொடுத்தும் இந்தத் திறமை வரவில்லை.**

93) பெயரெச்சம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பெயரைக் கொண்டு முடியும் எச்சம்

2. மூன்று காலத்தையும் காட்டாது

A) இரண்டும் சரி

B) இரண்டும் தவறு

**C) 1 மட்டும் சரி**

D) 2 மட்டும் சரி

**விளக்கம்: பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும். இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலத்தையும் காட்டும்.**

94) கூற்று: குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது.

காரணம்: தனக்கான ஆற்றலைச் சேமித்து வைக்க அதற்கு இடம் இல்லை.

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: மனித உடலின் மொத்த எடையில் 50ல் 1 பங்கு மட்டுமே எடைகொண்ட மூளை குருதி, உயிர்வளி ஆகியவற்றின் மொத்தத் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை அபகரித்துக் கொள்கிறது. காரணம் தனக்கான ஆற்றலைச் சேமித்து வைக்க அதற்கு இடம் இல்லை.**

95) தலைமைச் செயலகம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) கல்யாண்ஜி

B) பாரதிதாசன்

C) பாவலரேறு பெருஞ்சித்தனார்

**D) சுஜாதா**

**விளக்கம்: தலைமைச் செயலகம் என்ற நூலை எழுதியவர் ரங்கராஜன் என்னும் இயற்பெயர் கொண்ட சுஜாதா ஆவார். இவர் இந்நூலில் மனித மூளையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை பற்றி விளக்கியுள்ளார்.**

96) கூற்று: தமிழர் மருத்துவம் இப்பொழுது மீண்டும் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது.

காரணம்: ஆங்கில மருத்துவ முறையில் பக்கவிளைவுகள் அதிகம்.

A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: தொடர் சிகிச்சைக்குப் பிறகு பக்கவிளைவுகள் இல்லா மருந்துகளின் தேவை அவசியமாயிற்று. அதன் பிறகுதான் எல்லா நாடுகளிலும் இருக்கும் மரபுசார்ந்த மருத்துவ முறைகளின் மீது, நவீன அறிவியல் பார்வை விழத் தொடங்கியது. அதனால், சித்த மருத்துவத்தின் தொன்மையும் தமிழர் மருத்துவத்தின் தொன்மையும் புரிய தொடங்கியது.**

97) நான் ஒரு நடிகன் எனில் மூளையின் எந்த பாகம் எனக்கு உதவி புரியும்?

**A) வலது**

B) இடது

C) நடு மூளை

D) முன் மூளை

**விளக்கம்: நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் மூளையின் வலது பாதியின் தான்.**

98) கூற்றுகளை ஆராய்க (மூளையின் பகுதி)

1. வலது பகுதி – பட்டயக் கணக்கர், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள்

2. இடது பகுதி – நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளுபவர்கள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: இடது பகுதி – பட்டயக் கணக்கர், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள்**

**வலது பகுதி – நடிகர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கருவிகளைக் கையாளுபவர்கள்**

99) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம்_____________

A) படித்து

B) எழுதி

C) வந்து

**D) பார்த்த**

**விளக்கம்: மேற்க்கண்டவற்றில் பார்த்த என்பது மட்டுமே பெயரெச்சம்.**

**படித்து, எழுதி, வந்து – வினையெச்சங்கள்**

100) குறிப்பு வினையெச்சம்__________வெளிப்படையாகக் காட்டாது.

**A) காலத்தை**

B) வினையை

C) பண்பினை

D) பெயரை

**விளக்கம்: செயலையோ, காலத்தையோ தெளிவாக காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.**

101) ___________மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன.

A) பின் மூளை

B) உள் மூளை

C) நடு மூளை

**D) சிறு மூளை**

**விளக்கம்: முன் மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. சிறு மூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.**

102) பெயரெச்சம் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: பெயரெச்சம் 2 வகைப்படும்.**

**1. தெரிநிலை பெயரெச்சம்**

**2. குறிப்புப் பெயரெச்சம்**

103) மொழி அறிவுடன் தொடர்புடைய மூளையின் பகுதி எது?

A) முன் மூளை

B) வலது பாதி

**C) இடது பாதி**

D) முன் மூளை

**விளக்கம்: மொழி அறிவு மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய மூளையின் பாகம் இடது பகுதியாகும்.**

104) செயலையும் காலத்தையும் வெளிப்படையாக காட்டும் பெயரெச்சம்?

A) குறிப்பு பெயரெச்சம்

**B) தெரிநிலை பெயரெச்சம்**

C) பண்புப்பெயரெச்சம்

D) காலப்பெயரெச்சம்

**விளக்கம்: செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம். (எ.கா) எழுதிய கடிதம்**

**எழுதிய – எழுதுதல் என்னும் செயல் மற்றும் இறந்த காலம்**

105) அமுக்குவான் என்றால் என்ன?

A) உடல் உறுப்புகள் தூக்கத்திற்கு பின் இயக்கம் பெறுதல்

**B) தூக்கத்திற்கு பின் நினைவு திரும்புதல்**

C) இரண்டு விதமான நினைவுகளுடன் வாழுதல்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: தூக்கதிலிருந்து எழுந்திருக்கும்போது நாம் இதன்(தன்னுணர்வு) பல நிலைகளை சந்திக்கிறோம். சிலருக்கு மதியநேரத் தூக்கம் இருந்து எழுந்திருக்கும்பொழுது 'அமுக்குவான்' வரும். அதாவது நினைவு திரும்புதல். ஆனால், கைகால் அசைக்கும் திறமை சிறிது நேரத்திற்குப் பிறகே வரும்.**

106) ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது__________

A) எண்ணும்மை

**B) முற்றெச்சம்**

C) பெயரெச்சம்

D) வினையெச்சம்

**விளக்கம்: ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும். (எ.கா) வள்ளி படித்தனள். இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.**

107) பாடும் பாடல் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பைக் காண்க

A) குறிப்பு பெயரெச்சம்

**B) தெரிநிலைப் பெயரெச்சம்**

C) குறிப்பு வினையெச்சம்

D) தெரிநிலை வினையெச்சம்

**விளக்கம்: பாடும் பாடல் என்ற சொல்லின் பொருள் தெரிநிலை பெயரெச்சம்.**

**1. முற்று பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும். இங்கு முற்று பெறாத சொல் பாடும்.**

**2. பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம். இங்கு பாடல் என்பது பெயர் சொல்.**

**3. காலம் மற்றும் செயலை உணர்த்துவது தெரிநிலை பெயரெச்சம். இங்கு பாடுதல் என்ற செயலும்இ எதிர்காலமும் வந்துள்ளது.**

108) கூற்றுகளை ஆராய்க:

1. உணர்ச்சிகளின் பிறப்பிடம் – மூளை

2. மூளை–உடல் இரண்டும் இணைந்து செயல்படுவதால் வெளிப்படுபவைதான் உணர்ச்சிகள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உணர்ச்சிகளின் பிறப்பிடம் – மூளை**

**2. மூளை–உடல் இரண்டும் இணைந்து செயல்படுவதால் வெளிப்படுபவைதான் உணர்ச்சிகள்**

109) வலது பாதி மூளைக்கு பொருத்தமில்லாத செயல் ஒன்றை தெரிவு செய்க.

A) கவிதை எழுதுவது

B) படம் வரைதல்

C) நடனம் ஆடுவது

**D) சதுரங்கம் விளையாடுதல்**

**விளக்கம்: நமது மூளை வலது பாதி, இடது பாதி என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கவிதை எழுதுவது, படம் வரைதல், நடனம் ஆடுவது போன்றவை வலதுபாதி மூளையின் செயல்களாகும். ஆனால் சதுரங்கம் விளையாடுவதற்கு உதவுவது இடது பாதி ஆகும்.**

110) செயலையோ காலத்தையோ வெளிப்படையாக அறியமுடியாத பெயரெச்சம்?

A) தெரிநிலை பெயரெச்சம்

**B) குறிப்பு பெயரெச்சம்**

C) காலம்காட்டா பெயரெச்சம்

D) செயல் உணர்த்தா பெயரெச்சம்

**விளக்கம்: செயலையோ, காலத்தையோ அறிய முடியாத பெயரெச்சம் குறிப்பு பெயரெச்சம். (எ.கா) சிறிய கடிதம். இதில் செயல் மற்றும் காலத்தை வெளிப்படையாக அறியமுடியவில்லை. இதில் பண்பை வெளிப்படையாக உணரலாம். பண்பு என்பது வடிவம், அளவு, நிறம், சுவை ஆகிய நான்கனுள் ஒன்றைக் குறிப்பதாகும். இங்கு சிறிய என்பது அளவைக் குறிக்கிறது. எனவே இது குறிப்பு பெயரெச்சம் என அறியலாம்.**

111) கூற்றுகளை ஆராய்க.

1. முற்றுபெறாத வினைச்சொல் எச்சம்

2. தெரிநிலை பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம் – காலத்தையும், செயலையும் உணர்த்தும்

3. குறிப்பு பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் – காலத்தையும், செயலையும் வெளிப்படையாக உணர்த்துவதோடு பண்பையும் உணர்த்தும்

4. முற்றெச்சம் – ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது

**A) அனைத்தும் சரி**

B) 1, 2, 4 சரி

C) 1, 2 சரி

D) 1, 3, 4 சரி

**விளக்கம்: 1. முற்றுபெறாத வினைச்சொல் எச்சம்**

**2. தெரிநிலை பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம் – காலத்தையும், செயலையும் உணர்த்தும்**

**3. குறிப்பு பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் – காலத்தையும், செயலையும் வெளிப்படையாக உணர்த்தாது. பண்பை மட்டுமே உணர்த்தும்**

**4. முற்றெச்சம் – ஒரு வினைமுற்று எச்சப் பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது**

112) கூற்றுகளை ஆராய்க.

1. நாம் பதின்ம வரை மட்டுமே கற்கிறோம்

2. கற்க கற்க நம் நியூரான்களின் இணைப்புச் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன.

3. கற்க கற்க நம் மூளையின் எடை கூடுகிறது.

4. அதிகமாக கற்க கற்க புரோட்டீன் அளவு அதிகரிக்கிறது

A) 1, 2 சரி

**B) 2, 3, 4 சரி**

C) 3, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. நாம் தினமும் கற்கிறோம்.**

**2. கற்க கற்க நம் நியூரான்களின் இணைப்புச் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன.**

**3. கற்க கற்க நம் மூளையின் எடை கூடுகிறது.**

**4. அதிகமாக கற்க கற்க புரோட்டீன் அளவு அதிகரிக்கிறது.**

113) சிறிய கடிதம் என்ற சொல்லின் இலக்கண குறிப்பு?

A) தெரிநிலை பெயரெச்சம்

**B) குறிப்பு பெயரெச்சம்**

C) முற்றெச்சம்

D) வினையெச்சம்

**விளக்கம்: சிறிய கடிதம் – குறிப்பு பெயரெச்சம். சிறிய என்னும் முற்று பெறாத வினைச்சொல் கடிதம் என்னும் பெயர் சொல்லை கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு செயலையோ காலத்தையோ வெளிப்படையாக காட்டாமல் குறிப்பால் உணர்த்தி பண்பை மட்டும் குறிப்பால் உணர்த்துவது குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.**

114) சுஜாதா பற்றிய கூற்றுகளை ஆராய்க

1. இயற்பெயர் – ராகுராம் ராஜன்

2. அறிவியல் புனைவுக் கதைகள், திரைப்படக் கதை வசனம் எழுதியுள்ளார்

3. மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.

4. என் இனிய எந்திரா என்னும் நூலில் மூளையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கியுள்ளார்.

A) 1, 2 சரி

B) 1, 4 சரி

**C) 2, 3 சரி**

D) 2, 4 சரி

**விளக்கம்: 1. இயற்பெயர் – ரங்கராஜன்**

**2. அறிவியல் புனைவுக் கதைகள், திரைப்படக் கதை வசனம் எழுதியுள்ளார்.**

**3. மின்னணு வாக்கு எந்திரம் உருவாக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.**

**4. தலைமைச் செயலகம் என்னும் நூலில் மூளையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கியுள்ளார்.**

115) பொருத்துக

| | |
|---|---|
| அ. நடந்து | – 1. முற்றெச்சம் |
| ஆ. பேசிய | – 2. குறிப்புப் பெயரெச்சம் |
| இ. எடுத்தனன் உண்டான் | – 3. பெயரெச்சம் |
| ஈ. பெரிய | – 4. வினையெச்சம் |

A) 1, 2, 4, 3

B) 3, 4, 1, 2

**C) 4, 3, 1, 2**

D) 1, 2, 3, 4

| | |
|---|---|
| **விளக்கம்: நடந்து** | **– வினையெச்சம்** |
| **பேசிய** | **– பெயரெச்சம்** |
| **எடுத்தனன் உண்டான்** | **– முற்றெச்சம்** |
| **பெரிய** | **– குறிப்புப் பெயரெச்சம்** |

116) பசுமரத்தாணி போல என்னும் சொல்லின் உவமைப் பொருள்?

A) எதிர்பாரா நிகழ்வு

**B) எளிதில் மனதில் பதிதல்**

C) தற்செயல் நிகழ்வு

D) வெளிப்படைத் தன்மை

**விளக்கம்: பசுமரத்தாணி போல என்னும் சொல்லின் உவமை எளிதில் பதிதல் ஆகும். அதாவது பச்சை மரத்தில் ஆணி அடிப்பது எளிது என்பது இங்கு உவமையாக காட்டப்பட்டுள்ளது.**

117) கலைகள் தொடர்பான மூளையின் பகுதி எது?

**A) வலதுபாதி**

B) இடதுபாதி

C) முன் மூளை

D) பின் மூளை

**விளக்கம்: வலது பகுதி ஆக்கரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் கலைகளில் சிறந்து விளங்குவார்கள்.**

**1. நடிகர்கள்**

**2. பாடகர்கள்**

**3. கலைஞர்கள்**

**4. இசைக்கருவிகளை கையாளுபவர்கள் போன்றோர் வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளவர்கள்**

118) உள்ளங்கை நெல்லிக்கனி போல – என்னும் சொற்றொடரில் உள்ள உவமை?

A) மகிழச்சியான நிகழ்வு

B) எளிதில் மனதில் பதிதல்

C) தற்செயல் நிகழ்வு

**D) வெளிப்படைத் தன்மை**

**விளக்கம்: உள்ளங்கை நெல்லிக்கனி போல என்ற சொல்லின் உவமை – வெளிப்படைத்தன்மை ஆகும்.**

119) பொருத்துக.

அ. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல – 1. ஒற்றுமையின்மை

ஆ. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல – 2. பயனற்ற செயல்

இ. பசு மரத்து ஆணி போல – 3. தற்செயல் நிகழ்வு

ஈ. விழலுக்கு இறைத்த நீர் போல – 4. எதிர்பாரா நிகழ்வு

உ. நெல்லிக்காய மூட்டையைக் கொட்டினாற் போல – 5. எளிதில் மனத்தில் பதிதல்

A) 1, 2, 3, 4, 5

B) 3, 4, 5, 1, 2

**C) 3, 4, 5, 2, 1**

D) 2, , 3, 4, 5, 1

**விளக்கம்: காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல – தற்செயல் நிகழ்வு**

**கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல – எதிர்பாரா நிகழ்வு**

**பசு மரத்து ஆணி போல – எளிதில் மனத்தில் பதிதல்**

**விழலுக்கு இறைத்த நீர் போல – பயனற்ற செயல்**

**நெல்லிக்காய மூட்டையைக் கொட்டினாற் போல – ஒற்றுமையின்மை**

120) மூளை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. நமது மூளைக்கு செய்திகளை வழங்குவது கண், காது, தொண்டை போன்ற புலன்கள்

2. சில செய்திகளை தேர்ந்தெடுத்து தற்காலிகமாக மூளை குறுகிய கால நினைவாக வைத்துக்கொள்கிறது

3. பழைய செய்திகள் தற்காலிக செய்திகளால் இடம் மாற்றப்படுகின்றன.

4. நிலையான நினைவுகள் – திரும்ப திரும்ப நினைத்துப் பார்ப்பதன் மூலம் நினைவுக்கு கொண்டு வரப்படுகின்றன.

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 3 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. நமது மூளைக்கு செய்திகளை வழங்குவது கண், காது, தொண்டை போன்ற புலன்கள்**

**2. சில செய்திகளை தேர்ந்தெடுத்து தற்காலிகமாக மூளை குறுகிய கால நினைவாக வைத்துக்கொள்கிறது**

**3. பழைய செய்திகள் தற்காலிக செய்திகளால் இடம் மாற்றப்படுகின்றன.**

**4. நிலையான நினைவுகள் – திரும்ப திரும்ப நினைத்துப் பார்ப்பதன் மூலம் நினைவுக்கு கொண்டு வரப்படுகின்றன.**

121) பெருத்துக.

அ. நோய் – 1. Herbs

ஆ. மூலிகை – 2. Millets

இ. சிறுதானியங்கள் – 3. Auditor

ஈ. பட்டக்கணக்கர் – 4. Disease

A) 2, 1, 4, 3

B) 2, 3, 4, 1

C) 1, 4, 3, 2

**D) 4, 1, 2, 3**

**விளக்கம்: நோய் – Disease**

**மூலிகை – Herbs**

**சிறுதானியங்கள் – Millets**

**பட்டக்கணக்கர் – Auditor**

122) பொருத்துக

அ. பக்கவிளைவு – 1. Gene

ஆ. நுண்ணுயிர் முறி – 2. Allergy

இ. மரபணு – 3. Side Effect

ஈ. ஒவ்வாமை – 4. Antibiotic

A) 1, 2, 3, 4

B) 2, 3, 4, 1

**C) 3, 4, 1, 2**

D) 4, 1, 23

**விளக்கம்: பக்கவிளைவு – Side Effect**

**நுண்ணுயிர் முறி – Antibiotic**

**மரபணு – Gene**

**ஒவ்வாமை – Allergy**

123) மடை திறந்த வெள்ளம் போல – என்ற உவமையின் பொருள்

**A) தடையின்றி மிகுதியாக**

B) ஒற்றுமையின்மை

C) பயனற்ற செயல்

D) வெளிப்படைத்தன்மை

**விளக்கம்: மடை திறந்த வெள்ளம் போல் என்ற சொல்லின் உவமை தடையின்றி மிகுதியாக என்பதாகும்.**

124) கல்வி அறிவு தொடர்பான மூளையின் பகுதி எது?

A) வலது

B) முன் மூளை

**C) இடது**

D) நடு மூளை

**விளக்கம்: மூளையின் இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள்,**

**1. பட்டயக் கணக்கர்கள், 2. கணக்கு ஆசிரியர்கள், 3. இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்கள்**

## 8th Tamil Unit 4 Questions

1) கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்

மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – என்ற பாடலடிகள் இடம் பெற்ற செய்யுள்?

**A) நீதிநெறிவிளக்கம்**

B) பழமொழி நானூறு

C) அகநானூறு

D) கலித்தொகை

**விளக்கம்: கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**

**மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – என்ற பாடலடிகள் இடம் பெற்ற நூல் நீதிநெறிவிளக்கம்.**

2) நீதிநெறி விளக்கம் என்ற நூலின் ஆசிரியர்?

A) ஔவையார்

**B) குமரகுருபரர்**

C) கபிலர்

D) ஒட்டக்கூத்தர்

**விளக்கம்: நீதி நெறி விளக்கம் என்னும் நூலை எழுதியவர் – குமரகுருபரர். மக்களுக்கு தேவையான நீதிகளைக் சுட்டிக் காட்டுவதால் இந்நூல் நீதிநெறிவிளக்கம் என்று அழைக்கப்பட்டது.**

3) ஏட்டுக் கல்வி மட்டுமின்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. என்று தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தை கூறியவர்?

A) மு. வரதராசனார்

B) அண்ணா

C) கண்ணதாசன்

**D) திரு.வி.க**

**விளக்கம்: ஏட்டுக் கல்வி மட்டுமின்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும் என்று தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தை திரு.வி.க கூறியுள்ளார்.**

4) 'கலனெல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________

A) கலன் + அல்லால்

B) கலம் + அல்லால்

**C) கலன் + அல்லால்**

D) கலன் + னல்லால்

**விளக்கம்: கலனல்லால் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது கலன் + அல்லால்**

5) கோயிலப்பா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) கோ + அப்பா

B) கோயில் + லப்பா

**C) கோயில் + அப்பா**

D) கோ + இல்லப்பா

**விளக்கம்: கோயிலப்பா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது கோயில் + அப்பா**

6) பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_______

A) பகைவென்றாலும்

**B) பகைவனென்றாலும்**

C) பகைவன்வென்றாலும்

D) பகைவனின்றாலும்

**விளக்கம்: பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் பகைவனென்றாலும். நிலைமொழியின் இறுதி எழுத்து ன். வருமொழியின் முதல் எழுத்து எ. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ன் + எ = னெ என சேரும்.**

7) கற்றவருக்கு அழகு தருவது______________

A) தங்கம்

B) வெள்ளி

C) வைரம்

**D) கல்வி**

**விளக்கம்: கற்றவருக்கு அழகு தருவது கல்வி. இதனைக் குறிப்படும் நீதிநெறி விளக்கப் பாடல்,**

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**

**மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற**

**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**

**அழகுக்கு அழகுசெய் வார்**

8) இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ! தமிழ்க் காவியங்களைப் படியுங்கள் இன்பம் நுகருங்கள் என்று கூறியவர்?

A) கலாப்பிரியா

B) தமிழ்ஒளி

**C) திரு.வி.க**

D) பாரதியார்

**விளக்கம்: இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ! தமிழ்க் காவியங்களைப் படியுங்கள் இன்பம் நுகருங்கள் என்று தமிழ்மொழியின் இலக்கியங்கள் பற்றி திரு.வி.க கூறியுள்ளார்.**

9) ஆலங்குடி சோமு எங்கு பிறந்தார்?

A) இராமநாதபுரம்

**B) சிவகங்கை**

C) விருதுநகர்

D) புதுக்கோட்டை

**விளக்கம்: ஆலங்குடி சோமு திரைப்படப் பாடல் ஆசிரியராகப் புகழ்பெற்றவர். இவர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்.**

10) மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது?

**A) கல்வி**

B) உணர்ச்சிகள்

C) கைகள்

B) எதுவுமில்லை

**விளக்கம்: கேடில் விழுச்செல்வம் கல்வி. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது.**

winmeen.com

11) ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் கொள்கை எங்கும் நிலவி வருகிறது என்று கல்வி பற்றி கூறியவர்?

**A) திரு.வி.க**

B) மு.வரதராசனார்

C) காந்தியடிகள்

D) பாரதிதாசன்

**விளக்கம்: இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடைக்கிறது.**

12) இயற்கை இன்பக்கலம் என்று அழைக்கப்படுவது?

A) பத்துப்பாட்டு

**B) கலித்தொகை**

C) திருக்குறள்

D) கலித்தொகை

**விளக்கம்: இயற்கை இன்பக் கலம் என்று அழைக்கப்படுவது கலித்தொகை. இது எட்டுத் தொகை நூல்களில் ஒன்று ஆகும். இதனை கற்றறிந்தோர் ஏத்தும் கலி என்று போற்றுவர்.**

13) யாருக்கு அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் தேவையில்லை?

A) பொருள் வைத்திருப்பவர்க்கு

**B) கல்வி கற்றவருக்கு**

C) பொலிவுடன் இருப்பவருக்கு

D) பெண்களுக்கு

**விளக்கம்: கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.**

14) தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம் என்னும் புதுப்பாட்டை பாடுமாறு யாரை திரு.வி.க. கேட்டுக்கொள்கிறார்?

A) சகோதரர்களை

B) மொழிபெயர்ப்பாளர்களை

C) நூலாசிரியர்களை

D) **இளைஞர்களை**

**விளக்கம்: தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்திஇ அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம் என்னும் புதுப்பாட்டை பாடுமாறு இளைஞர்களை திரு.வி.க. கேட்டுக்கொள்கிறார்.**

15) இயற்கை இறையுறையுள் என்று குறிப்பிடப்படும் நூல்?

A) பத்துப்பாட்டு

B) எட்டுத்தொகை

C) திருக்குறள்

**D) தேவார திருவாச திருவாய் மொழிகள்**

**விளக்கம்: இயற்கை இறையுறையுள் என்று அழைக்கப்படுவது தேவார திருவாசக மொழிகள் என்னும் பக்தி காவியங்கள் ஆகும்.**

16) ஆலங்குடி சோமு கீழ்க்கண்ட எவ்விருதை பெற்றார்?

A) பத்மஸ்ரீ

B) சிறந்த நடிகர்

C) கலைமாமணி

D) கண்ணதாசன் விருது

**விளக்கம்: இவர் திரைப்படப் பாடல் ஆசிரியராகப் புகழ் பெற்றவர். இவர் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.**

17) என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும்__________இன்றி வாழ்ந்தார்?

A) சோம்பல்

**B) அகம்பாவம்**

C) வருத்தம்

D) வெகுளி

**விளக்கம்: என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் அகம்பாவம் இன்றி வாழ்ந்தார். நாம் வாழ்வது சில காலம் அதற்குள் நமக்கு அகம்பாவம் வேண்டாம் என்பது ஆலங்குடி சோமுவின் பாடல் வரிகள் உணர்த்தும் செய்திகள்.**

18) தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிப்பதாக யார் உரைக்கிறார்?

A) கண்ணதாசன்

B) பாரதிதாசன்

C) ஆலங்குடி சோமு

**D) திரு.வி.க**

**விளக்கம்: தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிப்பதாக தொழிற்கல்வியின் முக்கியத்துவம் பற்றி உரைக்கிறார். அவ்வெச்சரிக்கைக்கு மாணக்கர் செவி சாய்த்து நடப்பாராக, அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்றுஇ அவ்வறிவை நாட்டுத் தொழிற்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.**

19) மன்னிக்கத் தெரிந்த

மனிதனின் உள்ளம்

மாணிக்கக் கோயிலப்பா – இதை

மறந்தவன் வாழ்வு

தடம் தெரியாமல்

மறைந்தே போகுமப்பா! – இப்பாடலில் குறிப்பிடப்படும் தடம் என்ற சொல்லின் பொருள்?

**A) வழி**

B) தடை

C) அழிவு

D) அடையாளம்

**விளக்கம்: இங்கே தடம் என்ற சொல்லின் பொருள் வழி. மன்னிக்க மறந்தவன் வாழ்வு தடம்(அடையாளம்) தெரியாமல் போகும் என்பது இதன் பொருள்.**

20) இயற்கை ஓவியம் என்று அழைக்கப்படுவது?

**A) பத்துப்பாட்டு**

B) எட்டுத்தொகை

C) பதினெண்கீழ்க்கணக்கு நூல்

D) ஐம்பெருங்காப்பியங்கள்

**விளக்கம்: இயற்கை ஓவியம் என்று அழைக்கப்படுவது பத்துப்பாட்டு. இதில் 10 நூல்கள் உள்ளன. முதல் நூல் திருமுருகாற்றுப்படை ஆகும்.**

21) பொருத்துக.

அ. அருவி – 1. குரல்

ஆ. குயில் – 2. முழவு

இ. வண்டு – 3. அகவல்

ஈ. மயில் – 4. இசை

A) 2, 3, 1, 4

**B) 2, 1, 4, 3**

C) 1, 3, 2, 4

D) 1, 4, 3, 2

**விளக்கம்: அருவி – முழவு**

**குயில் – குரல்**

**வண்டு – இசை**

**மயில் – அகவல்**

22) ஏடன்று கல்வி, சிலர் பேசும்

இயலன்று கல்வி, பலர்க் கெட்டா தென்னும்

வீடன்று கல்வி, ஒரு தேர்வு தந்த

விளைவன்று கல்வி, அது வளர்ச்சி வாயில் – என்ற வரிகளை எழுதியவர்?

**A) குலோத்துங்கன்**

B) ராஜராஜன்

C) ராஜேந்திரன்

D) மகேந்திரவர்மன்

**விளக்கம்: கல்வி பற்றிய இவ்வரிகளை எழுதியவர் குலோத்துங்கன் ஆவார்**

23) குமரகுருபரரால் எழுதப்பட்ட நூல் நீதிநெறி விளக்கம். இந்நூலின் பெயர்க் காரணம்?

**A) மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளை கூறுவதால்**

B) நீதியுள்ள அரசர் பற்றி கூறுவதால்

C) மன்னன் நீதி வழங்கும் முறை பற்றி கூறுவதால்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: நீதி நெறி விளக்கம் என்னும் நூலை எழுதியவர் – குமரகுருபரர். மக்களுக்கு தேவையான நீதிகளைச் சுட்டிக் காட்டுவதால் இந்நூல் நீதிநெறிவிளக்கம் என்று அழைக்கப்பட்டது.**

24) இயற்கை வாழ்வில்லம் என்று அழைக்கப்படுவது?

**A) திருக்குறள்**

B) பத்துப்பாட்டு

C) எட்டுத்தொகை

D) கலித்தொகை

**விளக்கம்: இயற்கை வாழ்வில்லம் என்று அழைக்கப்படுவது திருக்குறள். இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இதனை முப்பால் என்று பதினெண் கீழக்கணக்கு நூலில் வகைப்படுத்தி உள்ளனர். இந்நூல் நாம் வாழ்வதற்கு தேவையான கருத்துக்களை அறத்துப்பால்இ பொருட்பால்இ காமத்துப்பால் என்று முப்பால்களில் உரைப்பால் இந்நூல் முப்பால் என்று அழைக்கப்பட்டது.**

25) தமிழ்தென்றல் என்று அழைக்கப்படுபவர்?

A) கபிலர்



winmeen.com

B) கம்பர்

C) ஔவையார்

**D) திரு.வி.க**

**விளக்கம்: தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுபவர் திரு.வி.க ஆவார். இவர் திருவாரூர் விருதாச்சலனார் மகனார். இயற்பெயர் கலியாணசுந்தரனார். இதன் சுருக்கமே திரு.வி.க என்பது.**

26) கல்வி என்பது வருவாய் தோடும் வழிமுறை அன்று என்று கல்வியின் முக்கியத்துவத்தை கூறியவர்?

A) திரு.வி.க

B) காந்தியடிகள்

C) அண்ணா

**D) விஜயலட்சுமி பண்டிட்**

**விளக்கம்: கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும் என்று விஜயலட்சுமி பண்டிட் தெரிவித்துள்ளார்**

27) இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் என்று அழைக்கப்படுவது?

**A) சிலப்பதிகாரம், மணிமேகலை**

B) சீவக சிந்தாமணி, வளையாபதி

C) குண்டலகேசி, வளையாபதி

D) சீவக சிந்தாமணி, வளையாபதி

**விளக்கம்: இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் என்று அழைக்கப்படுவது சிலப்பதிகாரமும், மணிமேகலையும். இவற்றை இரட்டை காப்பியங்கள் என்று அழைப்பர்.**

**1. சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்**

**2. மணிமேகலை – சீத்தலைச் சாத்தனார்**

28) ஆல் என்ற வேற்றுமை உருபின் சொல்லுருபு?

A) அதனால்

**B) கொண்டு**

C) ஆதலால்

D) அது

**விளக்கம்: ஆல் என்பது மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபு. இது சில இடங்களில் சொல்லுருபாக வரும். ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உருபு–ன் சொல்லுருபு – கொண்டு.**

29) இங்கே இருப்பது சில காலம்

இதற்குள் ஏனோ அகம்பாவம்

இதனால் உண்டோ ஒரு லாபம் – இதை

எண்ணிப்பாரு தெளிவாகும்! – என்ற பாடலில் உள்ள அகம்பாவம் என்ற சொல்லின் பொருள்?

**A) செருக்கு**

B) நற்செயல்

C) தீய செயல்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: அகம்பாவம் என்ற சொல்லின் பொருள் செருக்கு என்பதாகும். இங்கே நாம் வாழ்வது சில காலம் தான் இக்காலத்தில் செருக்கு வேண்டாம் என்பது இதன் பொருள்.**

30) கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்

மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – இதில் குறிப்பிடப்படும் செய்தி?

A) கல்வி கற்க அழகு வேண்டும்

B) கல்வி கற்க அணிகலன் வேண்டும்

**C) கல்வி கற்றவருக்கு அக்கல்வியே அழகு**

D) கல்வி கற்றவரை பின்பற்றுதல் வேண்டும்

**விளக்கம்: கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.**

31) இயற்கைத் தவம் என்று அழைக்கப்படும் நூல்?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) கலித்தொகை

**D) சிந்தாமணி**

**விளக்கம்: இயற்கைத் தவம் என்று அழைக்கப்படுவது – சிந்தாமணி. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியே சிந்தாமணி என்று அழைக்கப்படுகிறது. இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர்.**

32) கூற்றுகளை ஆராய்க.

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறை – வேற்றுமை

2. பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசை – வேற்றுமை உருபுகள் என்படும்

**A) இரண்டும் சரி**

B) இரண்டும் தவறு

C) 1 மட்டும் சரி

D) 2 மட்டும் சரி

**விளக்கம்: 1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறை – வேற்றுமை**

**2. பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசை – வேற்றுமை உருபுகள் என்படும்**

33) முழுச்சொற்கள் வேற்றுமை உருபாக வந்தால்__________என்று அழைக்கப்படும்?

**A) சொல்லுருபு**

B) விளிச்சொல்

C) எழுவாய்ச்சொல்

D) எதுவுமில்லை

**விளக்கம்: சில இடங்ளில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.**

34) கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்

மற்றோர் அணிகலன் வேண்டாவாம் – இச்சொல்லில் குறிப்பிடப்படும் கலன் என்ற சொல்லின் பொருள்?

A) கடமை

B) கலந்து கொள்ளுதல்

C) பாத்திரம்

**D) அணிகலன்**

**விளக்கம்: இதில் கலன் என்ற சொல்லின் பொருள் அணிகலன் என்பதாகும். கல்வி கற்றவருக்கு அக்கல்வியே அணிகலன். வேறு அழகு வேண்டாம் என்பது இதன் பொருள்.**

35) வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை______________என்பது?

A) வேற்றுமைத் தொடர்கள்

B) அன்மொழித்தொகை

**C) வேற்றுத்தொகை**

D) வேற்றுமை விளி

**விளக்கம்: வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை வேற்றுமைத் தொடர்கள் என்பர். வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத் தொகை என்பர்.**

36) கூற்று: முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்று அழைக்கப்படும்

காரணம்: எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தரும்.

A) கூற்று சரி காரணம் தவறு

B) கூற்று தவறு காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவதால் இதனை எழுவாய் வேற்றுமை என்று அழைக்கலாம்.**

37) இயற்கை அன்பு என்று அழைக்கப்படும் நூல்?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) கலித்தொகை

**D) பெரியபுராணம்**

**விளக்கம்: இயற்கை அன்பு என்று அழைக்கப்படும் நூல் பெரியபுராணம். இதன் ஆசிரியர் சேக்கிழார்.**

38) வேற்றுமை எத்தனை வகைப்படும்?

A) 5

B) 6

C) 7

**D) 8**

**விளக்கம்: வேற்றுமை 8 வகைப்படும். அவை**

**1. முதல் வேற்றுமை**

**2. இரண்டாம் வேற்றுமை**

**3. மூன்றாம் வேற்றுமை**

**4. நான்காம் வேற்றுமை**

**5. ஐந்தாம் வேற்றுமை**

**6. ஆறாம் வேற்றுமை**

**7. ஏழாம் வேற்றுமை**

**8. எட்டாம் வேற்றுமை**

39) கீழ்க்கண்டவற்றில் எந்த வேற்றுமைக்கு உருபு இல்லை?

**A) முதல் வேற்றுமை**

B) இரண்டாம் வேற்றுமை

C) மூன்றாம் வேற்றுமை

D) நான்காம் வேற்றுமை

**விளக்கம்: வேற்றுமை எட்டு வகைப்படும். இதில் முதல் மற்றும் கடைசி வேற்றுமை தவிர 6 வேற்றுமைக்கும் உருபு உள்ளது.**

40) ஐ. நா. வின் முதல் பெண் தலைவர்?

A) அருந்ததி ராய்

B) ஐஸ்வர்யா ராஜேஷ்

C) முத்துலட்சுமி ரெட்டி

**D) விஜயலட்சுமி பண்டிட்**

**விளக்கம்: ஐ. நா. அவையின் முதல் பெண் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த விஜயலட்சுமி பண்டிட் பதவி வகித்தார்.**

41) செய்படுபொருள் வேற்றுமை என்று அழைக்கப்படுவது?

**A) இரண்டாம் வேற்றுமை**

B) நான்காம் வேற்றுமை

C) எட்டாம் வேற்றுமை

D) ஐந்தாம் வேற்றுமை

**விளக்கம்: ஒரு பெயரைச் செய்ப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் செய்படுபொருள் வேற்றுமை என்றும் கூறுவர்.**

42) விளி வேற்றுமை என்று அழைக்கப்படும் வேற்றுமை?

A) இரண்டாம் வேற்றுமை

B) நான்காம் வேற்றுமை

**C) எட்டாம் வேற்றுமை**

D) ஐந்தாம் வேற்றுமை

**விளக்கம்: படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைப்பதை விளி வேற்றுமை என்கிறோம். எட்டாம் வேற்றுமையின் மற்றொரு பெயர் விளி வேற்றுமை.**

43) இயற்கை பரிணாமம் என்று அழைக்கப்படும் நூல்?

A) பெரியபுராணம்

B) மணிமேகலை

C) கலித்தொகை

**D) கம்பராமாயணம்**

**விளக்கம்: இயற்கை பரிணாமம் என்று அழைக்கப்படும் நூல் கம்பராமாயணம் ஆகும். வடமொழியில் வால்மீகி இராமாயனத்தை இயற்றினார். அதனைத் தழுவி தமிழில் கம்பர் இயற்றி அதற்கு அவர் இராமவதாரம் என்று பெயர் வைத்தார். இதனை கம்பர் இயற்றியதால் கம்பராமாயணம் என்று பெயர்வந்தது.**

44) புற உலக ஆராய்ச்சிக்கு__________கொழுகொம்பு போன்றது?

A) தாய்மொழி

B) தமிழ்மொழி

C) கலைகள்

**D) அறிவியல்**

**விளக்கம்: புற உலக ஆராய்ச்சிக் அறிவியல் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.**

45) மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் என்ற நூலின் ஆசிரியர்?

A) பாரதிதாசன்



winmeen.com

B) பாரதியார்

**C) திரு.வி.க**

D) இராஜாஜி

**விளக்கம்: மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் என்னும் நூலை எழுதியவர் திரு.வி.க. இந்நூலில் காந்தியடிகளின் சிந்தனைகள் மற்றும் அவரின் கொள்கைகள் பற்றி கூறப்பட்டுள்ளது.**

46) தமிழ்மக்களாகிய நாம் தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறல் சிறப்பு என்று தாய்மொழி பற்றி கூறியவர்?

A) பாரதிதாசன்

B) கண்ணதாசன்

**C) திரு.வி.க**

D) அண்ணா

**விளக்கம்: நாம் தமிழ் மக்கள். தாம் தமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை.**

47) முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே – இச்சொல்லில் முற்ற என்ற சொல்லின் பொருள்?

**A) ஒளிர**

B) முற்றுதல்

C) முந்துதல்

D) முழுவதும்

**விளக்கம்: முற்ற என்ற சொல்லின் பொருள் ஒளிர என்பதாகும்.**

48) இரண்டாம் வேற்றுமை உருபு எத்தனைப் பொருள்களில் வரும்?

A) 5

B) 4

**C) 6**

D) 7

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை ஆறு பொருள்களில் வரும். அவை**

**1. ஆக்கல் 2. அழித்தல் 3. அடைதல் 4. நீத்தல் 5. ஒத்தல் 6. உடைமை**

49) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

1. ஆக்கல் – கரிகாலன் கல்லணையைக் கட்டினான்

2. அழித்தல் – பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்

3. அடைதல் – கோவலன் மதுரையை அடைந்தான்

4. உடைமை – வள்ளுவர் பெரும் புகழை உடையவர்

A) 1 மட்டும்

B) 2 மட்டும்

C) 2, 3

**D) எதுவுமில்லை**

**விளக்கம்: 1. ஆக்கல் – கரிகாலன் கல்லணையைக் கட்டினான்**

**2. அழித்தல் – பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்**

**3. அடைதல் – கோவலன் மதுரையை அடைந்தான்**

**4. உடைமை – வள்ளுவர் பெரும் புகழை உடையவர்**

50) திரு.வி.க என்பதன் பொருள்?

A) திருவாவடுதுறை விருதாசலம் கல்யாணசுந்தரனார்

**B) திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார்**

C) திருத்தணி விருதுபட்டி கல்யாணசுந்தரனார்

D) திருவாங்கூர் விருதுபெற்ற கல்யாணசுந்தரனார்

**விளக்கம்: திரு.வி.க என்பதன் பொருள் திருவாரூர் மாவட்டம் விருத்தாசலம் மகனார் கலியாணசுந்தரம் என்பதாகும்.**

51) கல்வி கரையில கற்பவர் நாள் சில என்று கல்வியின் பெருமை பற்றி கூறும் நூல்?

A) திருக்குறள்

B) நான்மணிக்கடிகை

**C) நாலடியார்**

D) இனியவை நாற்பது

**விளக்கம்: கல்வி கரையில கற்பவர் நாள் சில என்னும் பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் நாலடியார். கற்பதற்கு எல்லை என்பது இதன் பொருள் ஆகும்.**

52) கல்விப் பயிற்சிக்குரிய பருவம்___________

**A) இளமை**

B) முதுமை

C) நேர்மை

D) வாய்மை

**விளக்கம்: கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமைப் பருவமாகும். அதனால் தான் இளமையில் கல் என்னும் முதுமொழி உண்டாயிற்று**

53) இங்கே இருப்பது சில காலம்

இதற்குள் ஏனோ அகம்பாவம்

இதனால் உண்டோ ஒரு லாபம் – இதை

எண்ணிப்பாரு தெளிவாகும்! – என்ற வரிகளை எழுதியவர்?

**A) ஆலங்குடி சோமு**

B) க. சச்தானந்தன்

C) கலாப்பிரியா

D) பெ. தூரன்

**விளக்கம்: இங்கே (இவ்வுலகில்) நாம் வாழ்வது சில காலம் தான். நமக்கு அகம்பாவம் எதுவும் வேண்டாம் அதனால் ஒரு லாபமும் இல்லை. இதை நாம் எண்ணிப் பார்த்து தெளிவாக வேண்டும் என்று ஆலங்குடி சோமு தனது பாடலில் கூறியுள்ளார்.**

54) எப்போது வேறு பல மொழிகளையும் பயிலலாம் என்று திரு.வி.க உரைக்கிறார்?

**A) ஓய்வு நேரம் மற்றும் வாய்ப்பு கிடைக்கும் போது**

B) அம்மொழிச் சொற்கள் எளிமையாக இருக்கும் போது

C) கற்றுத் தரும் முறையான ஆசிரியர் இருக்கும் போது

D) வேலைவாய்ப்பு கிடைக்கும் போது

**விளக்கம்: போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் மொழி தாய் மொழி, அதன் வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்.**

55) கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தும் பெறுங்காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று கூறியவர்?

A) வாணிதாசன்

B) புதுமைப்பித்தன்

**C) திரு.வி.க**

D) ஆலந்தூர் சோமு

**விளக்கம்: கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தும் பெறுங்காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

56) வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள்_________இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம் என்று திரு.வி.க கூறுவது?

**A) காவிய இன்பம்**

B) ஓவிய இன்பம்

C) இயற்கை இன்பம்

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம். நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் எங்குச் செல்ல வேண்டும்? தமிழ் இலக்கியங்களுக்கிடையே அன்றோ? தமிழில் இலக்கியங்கள் பல உண்டு.**

57) முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே

அழகுக்கு அழகுசெய் வார் – இச்சொல்லில் பூண் என்ற சொல்லின் பொருள்?

A) மணிகள்

B) ஒளிபெற்ற

**C) அணிகலன்**

D) அழகு

**விளக்கம்: இவ்வரியில் குறிப்பிடப்படும் பூண் என்ற சொல்லின் பொருள் அணிகலன் என்பதாகும்.**

58) உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது என்று திரு.வி.க கூறுவது?

A) தாய்மொழி

**B) அறிவியல்**

C) மொழிபெயர்ப்பு

D) இலக்கண நூல்கள்

**விளக்கம்: உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது அறிவியல் என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியனவற்றில், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும் என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

59) தமிழ் நமக்கு உயிரைப் போன்றது – என்ற தொடரில் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு இடம்பெற்றுள்ளது. இது என்ன பொருளில் வந்துள்ளது.

A) ஆக்கல்

**B) ஒத்தல்**

C) உடைமை

D) அடைதல்

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் ஆறு பொருள்களில் வரும். இதில் தமிழ் நமக்கு உயிரைப் போன்றது என்ற சொல் ஒத்தல் (ஒற்றுமை) என்னும் பொருளில் வந்துள்ளது.**

60) இன்றைய கல்வி________நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது?

A) வீட்டில்

B) நாட்டில்

C) பள்ளியில்

**D) தொழிலில்**

**விளக்கம்: இன்றைய கல்வி தொழிலில் நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

61) குமரகுருபரர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

A) 15

B) 16

**C) 17**

D) 18

**விளக்கம்: குமரகுருபரர் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார்.**

62) தாய்நாடு என்னும் பெயர் எதனை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது?

A) தாய்

**B) தாய்மொழி**

C) தாய்பூமி

D) தமிழ்மொழி

**விளக்கம்: தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறந்தது என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

63) பெண்ணின் பெருமை என்ற நூலை எழுதியவர்?

**A) திரு.வி.க**

B) கவிமணி

C) கல்யாண்ஜி

D) பாரதிதாசன்

**விளக்கம்: பெண்ணின் பெருமை என்னும் நூலை எழுதியவர் திரு.வி.க. இவர் இந்நூலில் பெண்மைப் பற்றி எழுதியுள்ளார்.**

64) மூன்றாம் வேற்றுமை உருபுகளில் பொருந்தாதது?

**A) ஆ**

B) ஆன்

C) ஒடு

D) ஓடு

**விளக்கம்: மூன்றாம் வேற்றுமை உருபு 1. ஆல் 2. ஆன் 3. ஒடு 4. ஓடு**

65) ஒரு பெயரைச் செய்படுபொருளாக மாற்றும் வேற்றுமை உருபு எது?

A) ஆல்

B) கு

**C) ஐ**

D) இன்

**விளக்கம்: ஐ என்னும் உருபு ஒரு பெயருடன் இணையும் போது அதனை செய்படுபொருளாக மாற்றுகிறது. எனவே இதனை செய்படுபொருள் வேற்றுமை என்கிறோம்.**

66) பொருத்தாத ஒன்றை தெரிவு செய்க.

**A) இயற்கை ஓவியம் – எட்டுத்தொகை**

B) இயற்கை இன்பக்கலம்– கலித்தொகை

C) இயற்வை வாழ்வில்லம் – திருக்குறள்

D) இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை

**விளக்கம்: இயற்கை ஓவியம் – பத்துப்பாட்டு**

**இயற்கை இன்பக்கலம் – கலித்தொகை**

**இயற்வை வாழ்வில்லம் – திருக்குறள்**

**இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை**

67) கந்தர் கலி வெண்பா என்னும் நூலை எழுதியவர்?

A) கம்பர்

B) ஔவையார்

C) ஒட்டக்கூத்தர்

**D) குமரகுருபரர்**

**விளக்கம்: கந்தர் கலிவெண்பா என்னும் நூலை எழுதியவர் குமரகுருபரர். இந்நூல் முருகப்பெருமான் பற்றிய நூல் ஆகும்.**

68) கூற்று: எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை எனப்படும்

காரணம்: படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பது

A) கூற்று சரி காரணம் தவறு

B) கூற்று தவறு காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதால் எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை எனப்படும்.**

69) நீதி நெறி விளக்கம் என்னும் நூலிலுள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை?

A) 100

B) 101

C) 99

**D) 102**

**விளக்கம்: கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்களைக் கொண்டது நீதிநெறி விளக்கம். மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளை கூறுவதால் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர்.**

70) மூன்றாம் வேற்றுமை உருபுகள் என்ன பொருளில் வரும்?

A) கருவி

B) கருத்தா

C) உடனிகழ்ச்சி

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: மூன்றாம் வேற்றுமை உருபுகள் – ஆல், ஆன், ஒடு, ஓடு**

**இதில் ஆல், ஆன் – கருவிப் பொருள், கருத்தாப் பொருள்**

**ஒடு, ஓடு – உடனிகழ்ச்சி பொருள்**

71) இயற்கைக் கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி கூறியவர்?

**A) திரு.வி.க**

B) கண்ணதாசன்

C) அறிஞர் அண்ணா

D) பாரதியார்

**விளக்கம்: நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள் என்று இயற்கை கல்வி குறித்து திரு.வி.க கூறியுள்ளார்.**

72) மூன்றாம் வேற்றுமையில்_______, _________ஆகியவை உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்

A) ஆல், ஆன்

**B) ஒடு, ஓடு**

C) ஆன், ஒடு

D) ஆல், ஒடு

**விளக்கம்: மூன்றாம் வேற்றுமை உருபுகள் – ஆல், ஆன், ஒடு, ஓடு**

**1. ஆல், ஆன் – கருவிப் பொருள், கருத்தாப் பொருள்**

**2. ஒடு, ஓடு – உடனிகழ்ச்சி**

73) கருவிப்பொருள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: கருவிப்பொருள் 2 வகைப்படும்.**

**1. முதற்கருவி**

**2. துணைக்கருவி**

74) நான்காம் வேற்றுமை உருபு எத்தனைப் பொருளில் வரும்?

A) 5

B) 6

C) 7

**D) 8**

**விளக்கம்: நான்காம் வேற்றுமை உருபு 8 பொருட்களில் வரும். அவை,**

**1. கொடை 2. பகை 3. நட்பு 4. தகுதி 5. அதுவாதல் 6. பொருட்டு 7. முறை 8. எல்லை**

75) ஐந்தாம் வேற்றுமை கீழ்க்கண்ட எந்த பொருளில் வராது?

A) நீங்கல்

B) ஒப்பு

C) எல்லை

**D) நட்பு**

**விளக்கம்: ஐந்தாம் வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது ஆகிய நான்கு பொருள்களில் வரும்.**

76) மன்னிக்கத் தெரிந்த

மனிதனின் உள்ளம்

மாணிக்கக் கோயிலப்பா – இதை

மறந்தவன் வாழ்வு

தடம் தெரியாமல்

மறைந்தே போகுமப்பா! – என்று மனம் பற்றி கூறியவர்?

**A) ஆலங்குடி சோமு**

B) பொ. தூரன்

C) கலாப்பிரியா

D) மருதகாசி

**விளக்கம்: மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயிலுக்கு ஒப்பானது. இதை மறந்தவன் வாழ்வு தடம் தெரியாமல் போகும் என்று ஆலங்குடி சோமு கூறியுள்ளார்.**

77) பொருத்துக.

அ. நீங்கல் – 1. சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்

ஆ. ஒப்பு – 2. தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்

இ. எல்லை – 3. பாம்பின் நிறம் ஒரு குட்டி

ஈ. ஏது – 4. தலையின் இழிந்த மயிர்

**A) 4, 3, 2, 1**

B) 4, 2, 3, 1

C) 4, 1, 2, 3

D) 1, 2, 3, 4

**விளக்கம்: நீங்கல் – தலையின் இழிந்த மயிர்**

**ஒப்பு – பாம்பின் நிறம் ஒரு குட்டி**

**எல்லை – தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல்**

**ஏது – சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்**

78) குமரகுருபரர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவர் காலம் 18ம் நூற்றாண்டு

2. சிற்றிலக்கியங்களை எழுதியுள்ளார்

3. மக்கள் வாழ்வுக்கு தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

4. கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பம் ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

A) 1, 2, 3 சரி

B) 1, 2, 4 சரி

**C) 2, 3, 4 சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இவர் காலம் 17ம் நூற்றாண்டு**

**2. சிற்றிலக்கியங்களை எழுதியுள்ளார்**

**3. மக்கள் வாழ்வுக்கு தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.**

**4. கந்தர் கலிவெண்பா கயிலைக் கலம்பம் ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.**

79) ஆறாம் வேற்றுமை உருபுகளில் பொருந்தாதது?

A) அது

B) ஆது

C) அ

**D) ஆ**

**விளக்கம்: ஆறாம் வேற்றுமை உருபுகளில் பொருந்தாதது ஆ.**

**ஆறாம் வேற்றுமை உருபு. 1. அது 2. ஆது 3. அ**

80) ஆறாம் வேற்றுமை எப்பொருளில் வரும்?

**A) உரிமைப்பொருள்**

B) நீங்கல்

C) நட்பு

D) எல்லை

**விளக்கம்: ஆறாம் வேற்றுமை தொகை உரிமைப் பொருளில் வரும். இவ்வுரிமைப் பொருளை கிழமை பொருள் என்றும் கூறுவர்.**

81) காலையில் இளஞாயிறு கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள் – இதில் செக்கர் என்ற சொல்லின் பொருள்?

A) மஞ்சள்

**B) சிவப்பு**

C) சூரிய ஒளி

D) சூரிய வெப்பம்

**விளக்கம்: செக்கர் என்ற சொல்லின் பொருள் சிவப்பு என்பதாகும். உதாரனமாக செக்கச்சிவந்த வானம் என்று கூறுதல்.**

82) கற்றோர்க்கு கல்வி நலனே கலனல்லால்

மற்றோர் அணிகலம் வேண்டாவாம்– முற்ற

முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டாவா யாரே

அழகுக்கு அழகுசெய் வார் – என்ற பாடலடிகள் நீதிநெறி விளக்கத்தின் எத்தனையாவது பாடல்?

A) 10

B) 12

**C) 13**

D) 15

**விளக்கம்: மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளை கூறுவதால் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர். இந்நூலில் கடவுள் வாழத்து உட்பட மொத்தம் 102 வெண்பாக்கள் உள்ளன. இதில் மேற்கண்ட பாடல் 13–ம் பாடல் ஆகும்.**

83) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) இயற்கைத் தவம் – சீவக சிந்தாமணி

B) இயற்கைப் பரிணாமம் – கம்பராமாயணம்

**C) இயற்கை அன்பு – மணிமேகலை**

D) இயற்கை இறையுறையுள் – தேவாரம் மற்றும் திருவாசகம்

**விளக்கம்: இயற்கைத் தவம் – சீவக சிந்தாமணி**

**இயற்கைப் பரிணாமம் – கம்பராமாயணம்**

**இயற்கை அன்பு – பெரியபுராணம்**

**இயற்கை இறையுறையுள் – தேவாரம் மற்றும் திருவாசகம்**

84) தமிழ்ச்சோலை என்னும் நூலின் ஆசிரியர்?

A) கவிமணி

B) தமிழ்ஒளி

C) க. சச்சிதானந்தன்

**D) திரு.வி.க**

**விளக்கம்: தமிழ்ச்சோலை என்ற நூலின் ஆசிரியர் திரு.வி.க ஆவார். இவர் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.**

85) நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக___________என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு.

**A) ஆக**

B) அது

C) ஆ

D) கு

**விளக்கம்: நான்காம் வேற்றுமை உருபு கு ஆகும். நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக ஆக என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு. (எ. கா) 1. கூலிக்கு வேலை – கூலிக்காக வேலை**

86) பொருத்துக.

அ. கொடை – 1. கபிலருக்கு நண்பர் பரணர்

ஆ. பகை – 2. கவிதைக்கு அழகு கற்பனை

இ. நட்பு – 3. முல்லைக்குத் தேர் கொடுத்தான்

ஈ. தகுதி – 4. புகை மனிதனுக்குப் பகை

**A) 3, 4, 1, 2**

B) 4, 3, 1, 2

C) 4, 3, 2, 1

D) 3, 1, 2, 4

**விளக்கம்: கொடை – முல்லைக்குத் தேர் கொடுத்தான்**

**பகை – புகை மனிதனுக்குப் பகை**

**நட்பு – கபிலருக்கு நண்பர் பரணர்**

**தகுதி – கவிதைக்கு அழகு கற்பனை**

87) முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டாவா யாரே

அழகுக்கு அழகுசெய் வார் – என்ற வரிகளில் முற்ற முழுமணிப் பூண் என்ற சொல்லின் பொருள்?

**A) ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்**

B) ஒளிரும் தங்க நகைகள்

C) ஒளியை தரும் கல்வி

D) ஒளிரும் உலோகத்தால் செய்யப்பட்ட பூணூள்

**விளக்கம்: முற்ற முழுமணிப் பூண் என்ற சொல்லின் பொருள் ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்கள் ஆகும்.**

88) காலையில் இளஞாயிறு கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள் – என்று கூறியவர்?

**A) திரு.வி.க**

B) மருதகாசி

C) வாணிதாசன்

D) ஆலந்தூர் சோமு

**விளக்கம்: மண் வழங்கும் பரந்த பசுமையிலும் வெண்மையிலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள். காலையில் இளஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள் என்று இயற்கை அழகை திரு.வி.க கூறியுள்ளார்.**

89) அது, ஆது, அ ஆகியவை ஆறாம் வேற்றுமை உருபுகள் ஆகும். இதில் எது இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

**A) ஆது, அ**

B) ஆது, அது

C) அது, அ

D) அ

**விளக்கம்: மூன்றாம் வேற்றுமை உருபுகளில் நாம் இன்று ஆது, அ அகிய உருபுகளை பயன்படுத்துவது இல்லை.**

90) சகலகலா வல்லி மாலை என்ற நூலின் ஆசிரியர்?

A) கம்பர்

B) கபிலர்

C) ஔவையார்

**D) குமரகுருபரர்**

**விளக்கம்: சகலகலா வல்லி மாலை என்னும் நூலை எழுதியவர் குமரகுருபரர். இவர் 17ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர். இவரின் பிற நூல்கள்:**

**1. கந்தர் கலி வெண்பா**

**2. கயிலைக் கலம்பகம்**

**3. சகலகலாவல்லி மாலை**

**4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**

**5. முத்துகுமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

**6. நீதிநெறி விளக்கம்**

91) கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது என்ற சொல் 3–ம் வேற்றுமையில் எந்த பொருளில் வரும்?

A) முதற்கருவி

B) துணைக்கருவி

C) இயற்றுதல் கருத்தா

**D) ஏவுதல் கருத்தா**

**விளக்கம்: கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது என்ற வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபு. ஆல். ஆல் ஆன் என்பது கருவிப்பொருளில் வரும். இவ்வாக்கியம் பிறரை ஏவி செயல் செய்யும் பொருளில் அமைந்துள்ளது. எனவே இது ஏவுதல் கருத்தா எனப்படும்.**

92) பொதுமை வேட்டல் என்னும் நூலின் ஆசிரியர்?

A) அறிஞர் அண்ணா

B) கலாப்பிரியா

C) ஆலந்தூர் சோமு

**D) திரு.வி.க**

**விளக்கம்: பொதுமை வேட்டல் என்னும் நூலின் ஆசிரியர் திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார்(திரு.வி.க) ஆவார். இவர் சிறந்த மேடைப்பேச்சாளர் ஆவார்.**

93) ஏழாம் வேற்றுமை உருபு_________, ________பொருளில் வரும்.

**A) இடம், காலம்**

B) கொடை, பகை

C) நீங்கல், ஒப்பு

D) ஆக்கல், அழித்தல்

**விளக்கம்: ஏழாம் வேற்றுமை உருபு இடம் மற்றும் காலம் ஆகிய இரு பொருள்களில் வரும்.**

**கொடை, பகை – நான்காம் வேற்றுமை**

**நீங்கல், ஒப்பு – ஐந்தாம் வேற்றுமை**

**ஆக்கல், அழித்தல் – இரண்டாம் வேற்றுமை**

94) உலகின் அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதலில் எம்மொழிகளில் எழுதுகின்றனர்?

A) தமிழ்மொழி

**B) தாய்மொழி**

C) ஆங்கிலமொழி

D) வேற்றுமொழி

**விளக்கம்: தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே, சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதன் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார் என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

95) ஏழாம் வேற்றுமைக்கு பொருத்தமில்லாத உருபு?

A) கண்

B) மேல்

C) கீழ்

**D) ஆல்**

**விளக்கம்: ஏழாம் வேற்றுமை உருபுகள் – கண், மேல், கீழ், கால், இல், இடம் போன்றவை**

96) இரண்டு வேற்றுமைகளில் இடம் பெறும் உருபு?

**A) இல்**

B) ஆல்

C) ஆ

D) அது

**விளக்கம்: இல் என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் உண்டு.**

**ஐந்தாம் வேற்றுமை – நீங்கல் பொருளில் வரும்**

**ஏழாம் வேற்றுமை – இடப்பொருளில் வரும்**

97) எந்த உருபு பெரும்பாலும் செய்யுளின் வழக்கில் இடம்பெறும்.

A) ஆல்

**B) ஆன்**

C) ஒடு

D) ஓடு

**விளக்கம்: ஆன் என்ற உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும். (எ. கா) புறந்தூய்மை நீரான் அமையும் என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள உருபு ஆன்.**

98) பொருத்துக.

அ. இரண்டாம் வேற்றுமை – 1. ஆல், ஆன், ஒடு, ஓடு

ஆ. மூன்றாம் வேற்றுமை – 2. ஐ

இ. நான்காம் வேற்றுமை – 3. இன், இல்

ஈ. ஐந்தாம் வேற்றுமை – 4. கு

**A) 2, 1, 4, 3**

B) 1, 2, 4, 3

C) 1, 2, 3, 4

D) 2, 4, 1, 3

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை – ஐ**

**மூன்றாம் வேற்றுமை – ஆல், ஆன், ஒடு, ஓடு**

**நான்காம் வேற்றுமை – கு**

**ஐந்தாம் வேற்றுமை – இன், இல்**

99) மொழிபெயர்ப்பைக்கொண்டு ஏன் நாம் தமிழ்மொழியை வளர்க்கக் கூடாது என்று கூறியவர்?

A) பாரதிதாசன்

B) கல்யாண்ஜி

C) அறிஞர் அண்ணா

**D) திரு.வி.க**

**விளக்கம்: அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதன் முதல் தம் தாய்மொழியில் வரைந்து விடுகின்றனர். அவை பின்னே பல மொழியில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது என்று திரு.வி.க கூறியுள்ளார்.**

100) கூற்றுகளை ஆராய்க.

1. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்

2. கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும்.

3. பெயரெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்

4. மேற்கொள் குறிகளுக்கு முன் காற்புள்ளி வரும்

A) அனைத்தும் சரி

B) 2 மட்டும் தவறு

C) 4 மட்டும் தவறு

**D) 3 மட்டும் தவறு**

**விளக்கம்: 1. பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும்**

**2. கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும்.**

**3. வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும்**

**4. மேற்கொள் குறிகளுக்கு முன் காற்புள்ளி வரும்**

101) மன்னிக்கத் தெரிந்த மனம்_____________க்கு ஒப்பானது?

A) இறைவன்

**B) மாணிக்கக் கோயில்**

C) வானம்

D) கடல்

**விளக்கம்: மன்னிக்கத் தெரிந்த**

**மனிதனின் உள்ளம்**

**மாணிக்கக் கோயிலப்பா – ஆலங்குடி சோமு**

**மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயிலுக்கு ஒப்பானது என்று ஆலங்குடி சோமு தன் பாடலில் கூறியுள்ளார்.**

102) முருகன் அல்லது அழகு என்ற நூலின் ஆசிரியர்?

A) குமரகுருபரர்

B) சேக்கிழார்

**C) திரு.வி.க**

D) பாரதிதாசன்

**விளக்கம்: முருகன் அல்லது அழகு என்ற நூலை எழுதியவர் திரு.வி.க ஆவார்**

103) கத்தியைத் தீட்டாதே – உந்தன் புத்தியைத் தீட்டு

கண்ணியம் தவறாதே – அதிலே திறமையைக் காட்டு! – இவ்வரிகளை எழுதியவர்?

A) பி.ச.குப்புசாமி

B) பெ.தூரன்

**C) ஆலங்குடி சோமு**

D) இவர்களில் யாருமில்லை

**விளக்கம்: விளக்கம்: கத்தியை தீட்டாமல் புத்தியை தீட்டு, கண்ணியம் தவறாமல் திறமையை காட்டி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று ஆலங்குடி சோமு கூறுகிறார்.**

104) பொருத்துக

அ. அதுவாதல் – 1. தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபாட்டார்

ஆ. பொருட்டு – 2. தயிருக்குப் பால் வாங்கினான்

இ. முறை – 3. தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கடல்

ஈ. எல்லை – 4. செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ

**A) 2, 1, 4, 3**

B) 2, 1, 3, 4

C) 1, 2, 4, 3

D) 1, 2, 3, 4

**விளக்கம்: அதுவாதல் – தயிருக்குப் பால் வாங்கினான்**

**பொருட்டு – தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபாட்டார்**

**முறை – செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ**

**எல்லை – தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்ககடல்**

105) பி. ச. குப்புசாமி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்று?

A) தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

**B) சிறுகவிதை ஆசிரியர்களில் ஒருவர்**

C) ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார்.

D) ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் என்னும் நூலின் ஆசிரியர்

**விளக்கம்: தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர் ஜெயகாந்தனோடு நெருங்கிப்பழகி ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார். ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் என்னும் நூலின் ஆசிரியர்**

106) சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது என்பதற்கு பொருத்தமான ஒன்றை தெரிவு செய்க

A) முதற்கருவி

B) துணைக்கருவி

**C) இயற்றுதல் கருத்தா**

D) ஏவுதல் கருத்தா

**விளக்கம்: ஒரு செயலை தானே செய்வது இயற்றுதல் கருத்தா எனப்படும். இங்கு பெரிய புராணம் என்னும் நூல் சேக்கிரால் இயற்றப்பட்டது. அவரே அந்நூலை இயற்றினார். எனவே இது இயற்றுதல் கருத்தா எனப்படும்.**

107) ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியவர்?

**A) பி. ச. குப்புசாமி**

B) பெ. தூரன்

C) ஆலங்குடி சோமு

D) இவர்களில் யாருமில்லை



winmeen.com

**விளக்கம்: ஜெயகாந்தனோடு பல்லாண்டு என்னும் நூலை எழுதியவர் – பி. ச. குப்புசாமி. இவர் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.**

108) மரத்தால் சிலை செய்தான் என்னும் சொல்_____________பொருளில் வந்துள்ளது?

**A) முதற்கருவி**

B) துணைக்கருவி

C) இயற்றுதல் கருத்தா

D) ஏவுதல் கருத்தா

**விளக்கம்: மரத்தால் சிலை செய்தான் என்னும் வாக்கியம் முதற்கருவி பொருளில் வந்துள்ளது. கருவியே செயப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி. இங்கு மரம் என்பது சிலை செய்ய முதன்மைப் பொருள். ஆகவே இது முதற்கருவி எனப்படும்.**

109) எட்டாம் வேற்றுமைக்கு பொருந்தாத கூற்றை தெரிவு செய்க.

1. இது விளிப்பொருளில் வரும்

2. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம்

3. இவ்வேற்றுமையின் உருபு ஆ

4. இவ்வேற்றுமையில் பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு.

A) 1 தவறு

B) 2 தவறு

**C) 3 தவறு**

D) 4 தவறு

**விளக்கம்: 1. இது விளிப்பொருளில் வரும்**

**2. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம்**

**3. இவ்வேற்றுமைக்கு உருபு கிடையாது**

**4. இவ்வேற்றுமையில் பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு.**

110) பொருத்துக.

அ. மூன்றாம் வேற்றுமை – 1. இராமனுக்குத் தம்பி இலக்குவன்

ஆ. நான்காம் வேற்றுமை – 2. பாரியினது தேர்

இ. ஐந்தாம் வேற்றுமை – 3. மண்ணால் குதிரை செய்தான்

ஈ. ஆறாம் வேற்றுமை – 4. ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்

A) 1, 3, 4, 2

**B) 3, 1, 4, 2**

C) 2, 3, 4, 1

D) 3, 2, 1, 4

**விளக்கம்: மூன்றாம் வேற்றுமை – மண்ணால் குதிரை செய்தான்**

**நான்காம் வேற்றுமை – இராமனுக்குத் தம்பி இலக்குவன்**

**ஐந்தாம் வேற்றுமை – ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்**

**ஆறாம் வேற்றுமை – பாரியினது தேர்**

111) தாயொடு குழந்தை சென்றது – என்னும் வாக்கியம் என்ன பொருளில் வந்துள்ளது?

A) கருவி

B) கருத்தா

**C) உடனிழ்ச்சி**

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: தாயொடு குழந்தை சென்றது. இதில் தாய் செல்ல குழந்தையும் உடனே சென்றது. ஒரு செயல் நடைபெறும் போது மற்றொரு செயலும் அதனுடனே நடைபெறுவது உடனிகழ்ச்சி எனப்படும். மற்றொரு (எ. கா) அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்**

112) நான்காம் வேற்றுமைக்குரிய உருபு?

A) ஐ

B) ஆல்

**C) கு**

D) ஆன்

**விளக்கம்: நான்காம் வேற்றுமைக்குரிய உருபு – கு. இது கொடை, பகை– நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.**

113) ___________ ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்

___________என்னும் வழக்கு.

**A) அன்புடைமை, பண்புடைமை**

B) பண்புடைமை, அன்புடைமை

C) அடக்கமுடைமை, பண்புடைமை

D) பண்புடைமை, அடக்கமுடைமை

**விளக்கம்: அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**

**பண்புடைமை என்னும் வழக்கு.**

**இதன் பொருள்: அன்புடையவராய் இருத்தல் மற்றும் உயர்ந்த குடியில் பிறத்தல் என இருப்பவர்கள் பண்புடையவராக கருதப்படுவார்கள்.**

114) ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் என்னும் நூலை எழுதியவர்?

**A) பி. ச. குப்புசாமி**

B) பெ. தூரன்

C) ஆலங்குடி சோமு

D) இவர்களில் யாருமில்லை

**விளக்கம்: ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் என்னும் நூலை எழுதியவர் – பி. ச. குப்புசாமி– இவர் தொடக்கப்பள்ளித் தலைமைஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஜெயகாந்தனோடு நெருங்கிப் பழகி பல்லாண்டு என்னும் நூலை எழுதியுள்ளார்.**

115) இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக் கலை இளைஞருலகில் பரவல் வேண்டும் என்று கூறியவர்?

**A) திரு.வி.க**

B) அப்துல் கலாம்

C) சிவன்

D) பாரதிதாசன்

**விளக்கம்: இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக் கலை இளைஞருலகில் பரவல் வேண்டும் என்று கூறியவர் திரு.வி.க.**

116) வியப்புக்குறி கீழ்க்கண்ட எந்த இடத்தில் தேவையில்லை?

A) மகிழ்ச்சி

B) வியப்பு

C) அச்சம்

**D) சொற்குறுக்கம்**

**விளக்கம்: மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் முதலான உணர்ச்சியை வெளியிடும் இடங்களில் வியப்புக்குறி இட வேண்டும்.**

117) பெண்ணின் பெருமை என்னும் நூலை எழுதியவர்?

**A) திரு.வி.க**

B) வாணிதாசன்

C) பாரதிதாசன்

D) பாரதியார்

**விளக்கம்: பெண்ணின் பெருமை என்னும் நூலை எழுதியவர் – திரு.வி.க. இவரின்–முழு பெயர் கலியாண சுந்தரம். திரு.வி.க என்பதன் விரிவாக்கம் – திருவாரூர் விருதா–லனார் மகன் கலியாணசுந்தரம் என்பதாகும்.**

118) மலர் பானையை வனைந்தாள் – இத்தொடர்_______பொருளைக் குறிக்கிறது?

**A) ஆக்கல்**

B) அழித்தல்

C) கொடை

D) அடைதல்

**விளக்கம்: இத்தொடரில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு வந்துள்ளது. இரண்டாம் வேற்றுமை 1. ஆக்கல் 2. அழித்தல் 3. அடைதல் 4. நீத்தல் 5. ஒத்தல் 6. உடைமை ஆகிய ஆறு பொருளில் வரும். மேற்கண்ட தொடர் ஆக்கல் பொருளில் வந்துள்ளது.**

119) அறத்தான் பயின்று வருவதே இன்பம் – இத்தொடரில் பயின்ற– வரும் வேற்றுமை?

A) இரண்டாம்

**B) மூன்றாம்**

C) ஆறாம்

D) ஏழாம்

**விளக்கம்: அறத்தான் வருவதே இன்பம் – இத்தொடரில் ஆன் என–னும் வேற்றுமை உருபு வந்துள்ளது. இது மூன்றாம் வேற்றுமையின் உருபு ஆகும். மூன்றாம் வேற்றுமையின் பிற உருபுகள் – ஆன், ஆல், ஒடு, ஓடு**

120) முதல் வேற்றுமையின் சொல்லுருபு?

A) ஆனவன்

B) ஆவான்

C) ஆகின்றவன்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: முதல் வேற்றுமையின் மற்றொரு பெயர் எழுவாய் வேற்றுமை. இதற்கு உருபு இல்லை. இதன் சொல்லுருபு – ஆனவன், ஆவான், ஆகின்றவன்.**

121) ஆத்திரம் கண்ணை

மறைத்திடும் போது

அறிவுக்கு வேலை கொடு – உன்னை

அழித்திட வந்த

பகைவன் என்றாலும்

அன்புக்குப் பாதை விடு! – என்ற வரிகளை எழுதியவர்?

A) பி. ச. குப்புசாமி

B) பெ. தூரன்

**C) ஆலங்குடி சோமு**

D) திரு.வி.க

**விளக்கம்: ஆத்திரம் கண்ணை மறைத்திடும் போது நாம் அறிவுக்கு வேலை கொடுத்து அதனை தவிர்க்க வேண்டும். பகைவன் தன்னை அழிக்க வந்தாலும் அன்பால் அவனை வெல்ல முடியும் என்று கூறியவர் ஆலங்குடி சோமு.**

122) கிழமை என்ற சொல்லின் பொருள்?

A) மாதம்

B) நட்பு

C) பகை

**D) உரிமை**

**விளக்கம்: கிழமை என்றால் உரிமை என்று பொருள். ஆறாம் வேற்றுமை உரிமைப் பொருளில் வரும்**

123) அண்ணன் என்பதை அண்ணா என்றும், புலவர் என்பதை புலவரே என்றும் மாற்றி வழங்குவது___________

A) ஆகுபெயர்

B) திரிதல் புணர்ச்சி

C) இடுகுறிப்பெயர்

**D) எட்டாம் வேற்றுமைத் தொகை**

**விளக்கம்: 1. பெயர்களை திரித்து வழங்குவதை எட்டாம் வேற்றுமைத் தொகை என்கிறோம்.**

**2. ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு சொல்லுக்கு ஆகி வருவது ஆகுபெயர்.**

**3. இரண்டு சொற்கள் சேரும் போது அதில் உள்ள எழுத்துக்கள் மாற்றமடைந்து சேர்த்து எழுதுவது திரிதல் புணர்ச்சி எனப்படும் (எ. கா) பொன் + குடம்=பொற்குடம். இதில் ன் என்னும் எழுத்து ற் என மாற்றமடைந்துள்ளது. எனவே இதனை திரிதல் புணர்ச்சி என்போம்.**

**4. காரணம் இல்லாமல் நம் முன்னோர்கள் வழங்கிய சொல்லையே நாமும் பயன்படுத்தி வருவது இடுகுறிப்பெயர் (எ. கா) மரம்**

124) திரு.வி.க–வின் நூல்களுள் பொருந்தாதது எது?

A) மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

B) பெண்ணின் பெருமை

**C) தமிழ்ச்சாலை**

D) பொதுமை வேட்டல்

**விளக்கம்: திரு.வி.க–வின் நூல்கள்**

**1. மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்**

**2. பெண்ணின் பெருமை**

**3. தமிழ்ச்சாலை**

**4. பொதுமை வேட்டல்**

**5. முருகன் அல்லது அழகு**

**6. இளமை விருந்து**

125) திறமை என்னும் சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல்

**A) Talent**

B) Transformation

C) Language Change

D) Ornament

**விளக்கம்: திறமை என்ற சொல்லின் ஆங்கில மொழிபெயர்ப்பு Talent**

126) எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்று கூறியவர்?

A) மகாத்மா காந்தியடிகள்

B) காமராசர்

C) அறிஞர் அண்ணா

**D) ஜவஹர்லால் நேரு**

**விளக்கம்: எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்று கூறியவர் இந்தியாவின் முதல் பிரதமராக பதவியேற்ற ஜவஹர்லால் நேரு.**

127) இரட்டை மேற்கோள் எங்கு பயன்படுத்த கூடாது?

A) நேர்கூற்று

B) செய்யுள் அடிகள்

C) பொன்மொழிகள்

**D) அயர்கூற்று**

**விளக்கம்: நேர்கூற்றுகளிலும், செய்யுள் அடிகளையோ மொழிகளையோ குறிப்பிடும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியைப் பயன்படுத்த வேண்டும். அயற்கூற்றில் இரட்டை மேற்கோள் பயன்படுத்த தேவையில்லை.**

128) கூற்றுகளை ஆராய்க.

1. தனிச்சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும் போது இரட்டை மேற்கோள் இடவேண்டும்

2. இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தனிச்சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும் போது ஒற்றை மேற்கோள் இடவேண்டும்**

**2. இரட்டை மேற்கோள் குறியில் இன்னொரு கூற்று உட்பட்டு வரும்போதும் ஒற்றை மேற்கோள் பயன்படும்**

129) கூற்றுகளை ஆராய்க

1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்

2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்

4. சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முற்றுப்புள்ளி வரும்

A) 1, 2 சரி

B) 1, 3 சரி

**C) 1, 2, 3 சரி**

D) 1, 3, 4 சரி

**விளக்கம்: 1. சொற்றொடரின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்**

**2. சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.**

**3. பெயரின் தலைப்பெழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்**

**4. சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும்**

130) பொருத்துக.

அ. நிறுத்தற்குறி – 1. Translation

ஆ. அணிகலன் – 2. Ornament

இ. மொழிபெயர்ப்பு – 3. Punctuation

ஈ. விழிப்புணர்வு – 4. Awarness

**A) 3, 2, 1, 4**

B) 3, 2, 4, 1

C) 1, 3, 2, 4

D) 4, 1, 2, 3

**விளக்கம்: நிறுத்தற்குறி – 1. Punctuation**

**அணிகலன் – 2. Ornament**

**மொழிபெயர்ப்பு – 3. Translation**

**விழிப்புணர்வு – 4. Awarness**

131) சீர்திருத்தம் என்ற சொல்லுக்கு இணையான ஆங்கில மொழிபெயர்ப்பு?

A) Renew

**B) Reform**

C) Revenue

D) Recorrection

**விளக்கம்: சீர்திருத்தம் என்ற சொல்லுக்கு இணையான ஆங்கில மொழிபெயர்ப்புச் சொல் – Reform**

132) கூற்ற–களை ஆராய்க.

1. ஒரேஎழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் காற்புள்ளி வரும்

2. உடன்பாடு எதிர்மறைக் கருத்துக்களை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும்

**A) இரண்டும் சரி**

B) இரண்டும் தவறு

C) 1 மட்டும் சரி

D) 2 மட்டும் சரி

**விளக்கம்: 1. ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் காற்புள்ளி வரும்**

**2. உடன்பாடு எதிர்மறைக் கருத்துக்களை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும்**

133) பொருத்துக.

அ. இரண்டாம் வேற்றுமை – 1. நின்று, விட, காட்டிலும், இருந்து

ஆ. மூன்றாம் வேற்றுமை – 2. ஆக, பொருட்டு, நிமித்தம்

இ. நான்காம் வேற்றுமை – 3. கொண்டு, வைத்து, உடன், கூட

ஈ. ஐந்தாம் வேற்றுமை – 4. இல்லை

A) 1, 2, 3, 4

**B) 4, 3, 2, 1**

C) 4, 3, 1, 2

D) 4, 2, 3, 1

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை – இல்லை**

**மூன்றாம் வேற்றுமை – கொண்டு, வைத்து, உடன், கூட**

**நான்காம் வேற்றுமை – ஆக, பொருட்டு, நிமித்தம்**

winmeen.com

**ஐந்தாம் வேற்றுமை – நின்று, விட, காட்டிலும், இருந்து**

134) கூற்றுகளை ஆராய்க.

1. பொருளை வேறுபடுத்தி காட்டுவது – வேற்றுமை

2. சில இ–ங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றை சொல்லுருபுகள் என்பர்

3. வேற்றுமை உருபுகள் இடம்பெற்றுள்ள தொடர்கள் – வேற்றுமைத்தொகை

4.–வேற்றுமை உருபுகள் இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத் தொடர் என்பர்.

A) 1, 2 தவறு

**B) 3, 4 தவறு**

C) அனைத்தும் தவறு

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. பொருளை வேறுபடுத்தி காட்டுவது – வேற்றுமை**

**2. சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக முழுச்சொற்களே வேற்றுமை உருபாக வருவதும் உண்டு. அவற்றை சொல்லுருபுகள் என்பர்**

**3. வேற்றுமை உருபுகள் இடம்பெற்றுள்ள தொடர்கள் – வேற்றுமைத்தொடர்**

**4– வேற்றுமை உருபுகள் இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத் தொகை என்பர்.**

winmeen.com

## 8th Tamil Unit 5 Questions

1) கலித்தொகையை தொகுத்தவர்?

A) பாரதம் பாடிய பெருந்தேவனார்

**B) நல்லந்துவனார்**

C) பெருங்கடுங்கோ

D) கபிலர்

**விளக்கம்: கலித்தொகை என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இதனை தொகுத்தவர் நல்லந்துவனார். இவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர்.**

2) ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் – இதில் அலந்தவர் என்ற சொல்லின் எதிர்ச்சொல்?

**A) செல்வந்தர்**

B) வறியவர்

C) உறவினர்

D) அறிவற்றவர்

**விளக்கம்: அலந்தவர் என்ற சொல்லின் பொருள் வறியவர் என்பதாகும். இதன் எதிர்ச்சொல் செல்வந்தர். இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல் என்பதே மேற்கண்ட பாடல் வரி உணர்த்தும் பொருள்.**

3) முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) முறையப்படுவது

**B) முறையெனப்படுவது**

C) முறைஎனப்படுவது

D) முறைப்படுவது

**விளக்கம்: முறை + எனப்படுவது என்ற சொல்லை சேர்த்தெழுத கிடைப்பது முறையெனப்படுவது. நிலைமொழியின் இறுதி எழுத்து றை. இதனை ற் + ஐ எனப் பிரிக்கலாம். வருமொழியின் முதல் எழுத்து எ. உடம்படுமெய் புணர்ச்சி விதிப்படி வருமொழியின் முதல் எழுத்துக்கு ஏற்ற மெய் எழுத்து தோன்றி, முறையெனப்படுவது என்று புணர்ந்தது.**

4) காட்டிலிருந்து வந்த__________கரும்பைத் தின்றன.

A) முகில்கள்

B) முழவுகள்

**C) வேழங்கள்**

D) வேய்கள்

**விளக்கம்: காட்டிலிருந்து வந்த வேழங்கள் கரும்பைத் தின்றன.**

**வேழங்கள் – யானைகள்**

**முழவுகள் – இசைக்கருவி**

**முகில்கள் – மேகங்கள்**

**வேய்கள் – மூங்கில்கள்**

5) பொருத்துக

அ. கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – புறநானூறு

ஆ. மாக்கண் முரசம் – மதுரைக்காஞ்சி

இ. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்;ந்த பந்தர்கீழ் – நாச்சியார் திருமொழி

ஈ. சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – பெரியபுராணம்

**A) 1, 2, 3, 4**

B) 3, 4, 2, 1

C) 4, 2, 3, 1

D) 4, 3, 2, 1

**விளக்கம்: அ. கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – புறநானூறு**

**ஆ. மாக்கண் முரசம் – மதுரைக்காஞ்சி**

**இ. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**

**முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்கீழ் – நாச்சியார் திருமொழி**

**ஈ. சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி**

**வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – பெரியபுராணம்**

6) நம்மை__________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்?

**A) இகழ்வாரை**

B) அகழ்வாரை

C) புகழ்வாரை

D) மகிழ்வாரை

**விளக்கம்: நம்மை இகழ்வாரையும் பொறுத்துக்கொள்ளுதல் பொறுமை என்று கலித்தொகை கூறுகிறது. "பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" – கலித்தொகை**

7) மறைபொருளைக் காத்தல்___________எனப்படும்

A) சிறை

B) அறை

C) கறை

**D) நிறை**

**விளக்கம்: நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல் ஆகும்.**

**நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை – கலித்தொகை**

8) பாடறிந்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது?

A) பாட் + அறிந்து

B) பா + அறிந்து

**C) பாடு + அறிந்து**

D) பாட்டு + அறிந்து

**விளக்கம்: பாடறிந்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது பாடு + அறிந்து என்பதாகும்.**

9) 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது?

A) கனகச் + சுனை

B) கனக + சுனை

**C) கனகம் + சுனை**

D) கனம் + சுனை

**விளக்கம்: கனகச்சுனை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது கனகம் + சுனை.**

10) போற்றுதல் என்பது புணர்ந்தாரை பிரியாமை – இவ்வரியில் உள்ள போற்றுதல் என்ற சொல்லின் பொருள்?

**A) பாதுகாத்தல்**

B) உதவிசெய்தல்

C) வணங்குதல்

D) பிரியாது இருத்தல்

**விளக்கம்: போற்றுதல் என்றால் பாதுகாத்தல் என்று பொருள். போற்றுதல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல் என்பது இவ்வரி உணத்தும் பொருள்.**

11) முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) முழவுதிர

B) முழவுதிரை

**C) முழவதிர**

D) முழவுஅதிர

**விளக்கம்: முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுக்கிடைக்கும் சொல் – முழவதிர. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து வு. இதனைப் பிரித்தால் வ் + உ. வருமொழியின் முதல் எழுத்து அ. அதாவது வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்து. எனவே உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் எனும் விதிப்படி நிலைமொழியிலுள்ள இறுதி எழுத்து கெடும். முழ + வ் + அதிர. பின் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி, வ் + அ=வ எனப்புணரும்.**

12) மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பு தேவாரம் ஆகும். இதில் குறிப்பிடப்படும் மூவருள் பொருந்தாதவர்?

A) திருஞானசம்பந்தர்

B) திருநாவுக்கரகர்

C) சுந்தரர்

**D) மாணிக்கவாசகர்**

**விளக்கம்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும். இதனைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.**

13) நெய்தற்கலியை இயற்றியவர் யார்?

A) கபிலர்

**B) நல்லந்துவனார்**

C) பாரதம் பாடிய பெருந்தேவனார்

D) நன்முள்ளையார்

**விளக்கம்: கலித்தொகை என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இதில் நெய்தற்கலியை பாடியவர் நல்லந்துவனார். இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே.**

14) பதிகம் என்பது எத்தனை பாடல்கள் கொண்டது?

A) 5

**B) 10**

C) 4

D) 100

**விளக்கம்: பதிகம் என்பது 10 பாடல்கள் கொண்டது. கேதாரப்பதிகம் என்பது சுந்தரர் பாடிய பதிகம் ஆகும்.**

15) கூற்றுகளை ஆராய்க.

1. தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை

2. தே + வாரம் – இனிய ஓசை பொருந்திய பாடல்கள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை**

**2. தே + வாரம் – இனிய ஓசை பொருந்திய பாடல்கள்**

16) பொருத்துக.

அ. அலந்தவர் – 1. உறவினர்

ஆ. செறாஅமை – 2. மறவாமை

இ. கிளை – 3. வெறுக்காமை

ஈ. மறாஅமை – 4. வறியவர்

A) 4, 2, 1, 3

B) 4, 1, 3, 2

C) 1, 3, 2, 4

**D) 4, 3, 1, 2**

**விளக்கம்: அலந்தவர் – வறியவர்**

**செறாஅமை – வெறுக்காமை**

**கிளை – உறவினர்**

**மறாஅமை – மறவாமை**

17) பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய் – இத்தொடரில் பண் என்ற சொல்லின் பொருள்?

**A) இசை**

B) பாடல்

C) மேகம்

D) இசைக்கருவி

**விளக்கம்: பண் என்ற சொல்லின் பொருள் இசை ஆகும். இவ்வரிகள் சுந்தரரின் திருக்கேதாரப் பாடலில் இடம்பெற்றுள்ளது.**

18) கலித்தொகையில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?

A) 100

B) 101

C) 80

**D) 150**

**விளக்கம்: கலித்தொகையில் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இதனை தொகுத்தவர் நல்லந்துவனார்.**

19) போற்றுதல் என்பது புணர்ந்தாரை பிரியாமை – இவ்வரியில் உள்ள புணர்ந்தாரை என்ற சொல்லின் பொருள்?

**A) அன்புடையோரை**

B) உதவிசெய்தோரை

C) சான்றோரை

D) வறியோரை

**விளக்கம்: இவ்வரியில் புணர்ந்தாரை என்பது அன்புடையோரை குறிக்கிறது. பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல் என்பதே இவ்வரியின் பொருள் ஆகும்.**

20) கண்ணின் ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய இதில் கனகச்சுனை என்ற சொல்லின் பொருள்?

**A) பொன் வண்ண நீர்நிலை**

B) குதிரை நீர் அருந்தும் நீர்நிலை

C) வளமையான நீர்நிலை

D இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: கனகச்சுனை என்றால் பொன் வண்ண நீர்நிலை என்று பொருள். கனகம் என்றால் பொன் என்று பொருள். சுனை என்றால் நீர்நிலை என்று பொருள்.**

21) சரியாக பொருந்தாததைத் தேர்க.

A) பண் – இசை

B) கனகச்சுனை – பொன் வண்ண நீர்நிலை

**C) மத வேழங்கள் – மதகுதிரைகள்**

D) முரலும் – முழங்கும்

**விளக்கம்: மதவேழங்கள் என்றால் மத யானைகள் என்று பொருள். வேழம் என்றால் யானை என்று பொருள்.**

**களிறு – ஆண்யானை**

**பிடி – பெண் யானை**

22) தமிழ்நாட்டில் எங்கு நடைபெற்ற அகழாய்வில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன?

A) கரிக்கையூர்

B) செம்பியன் கண்டியூர்

**C) ஆதிச்சநல்லூர்**

D) கீழடி

**விளக்கம்: மிகவும் பழமையான கைவினைக்கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலை. சிந்துசமவெளி அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள்தாழிகள் கிடைத்துள்ளன.**

23) ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல் – இவ்வரியில் ஆற்றுதல் என்ற சொல்லின் பொருள்?

A) வறியோர்

**B) இல்வாழ்வு**

C) பாதுகாத்தல்

D) அன்புடையோர்

**விளக்கம்: ஆற்றுதல் என்றால் இல்வாழ்வு என்று பொருள். இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல் ஆகும்.**

24) கலித்தொகை எத்தனை பிரிவுகளைக் கொண்டது?

A) 4

B) 3

C) 2

**D) 5**

**விளக்கம்: கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது 5 பிரிவுகளை கொண்டது. அவை,**

**1. குறிஞ்சிக்கலி**

**2. முல்லைக்கலி**

**3. மருதக்கலி**

**4. நெய்தல்கலி**

**5. பாலைக்கலி**

25) மூங்கில்களில் எத்தனை பிரிவுகள் உண்டு?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: மூங்கில்களில் மூன்று பிரிவுகள் உண்டு. அவை,**

**1. கல்மூங்கில்**

**2. மலைமூங்கில்**

**3. கூட்டு மூங்கில்**

26) மண்ணமை முழவு என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

A) சிலப்பதிகாரம்

B) மதுரைக்காஞ்சி

**C) பொருநராற்றுப்படை**

D) பெரும்பாணாற்றுப்படை

**விளக்கம்: மண்ணமை முழவு என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல் பொருநராற்றுப்படை. ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக்கப்பட்ட கருவியாகும். இத்தோலில் ஒருவகை பசை மண்ணைத் தடவி முழக்குவர்.**

27) பண்பு எனப்படுவது______________?

A) அலந்தவர்க்கு உதவுதல்

B) புணர்ந்தாரைப் பிரியாமை

**C) பாடறிந்து ஒழுகுதல்**

D) தன்கிளை செறாஅமை

**விளக்கம்: பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் ஆகும். பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல் ஆகும்.**

28) அரசரை அவரது_________காப்பாற்றும்.

A) செங்கோல்

B) வெண்கொற்றக்குடை

**C) குற்றமற்ற ஆட்சி**

D) படை வலிமை

**விளக்கம்: உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அரசரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பாற்றும்.**

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**

**முறைகாக்கும் முட்டாச் செயின் – திருக்குறள்**

29) சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும்_________தகுதி அறிந்து பேச வேண்டும்.

A) சொல்லின்

**B) அவையின்**

C) பொருளின்

D) பாடலின்

**விளக்கம்: அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**

**தொகைஅறிந்த தூய்மை யவர் – திருக்குறள்**

**சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் அவையின் தகுதி அறிந்து பேசுதல் வேண்டும்.**

30) பொருத்துக.

அ. நோன்றல் – 1. பகைவர்

ஆ. போற்றார் – 2. பொறுத்தல்

இ. பேதையார் – 3. பொறுமை

ஈ. பொறை – 4. அறிவற்றவர்

A) 2, 1, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 1, 2, 3, 4

D) 4, 3, 1, 2

**விளக்கம்: நோன்றல் – பொறுத்தல்**

**போற்றார் – பகைவர்**

**பேதையார் – அறிவற்றவர்**

**பொறை – பொறுமை**

31) கலித்தொகை பற்றிய கூற்றுகளில் பொருந்தாதது எது?

1. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

2. கலிப்பா என்னும் பாவகையால் பாடப்பட்டது.

3. 100 பாடல்களைக் கொண்டது

4. குறிஞ்சிகலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தல்கலி, பாலைக்கலி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

A) 1, 4 சரி

B) 2, 4 சரி

C) 1, 3, 4 சரி

**D) 1, 2, 4 சரி**

**விளக்கம்: 1. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று**

**2. கலிப்பா என்னும் பாவகையால் பாடப்பட்டது.**

**3. 150 பாடல்களைக் கொண்டது**

**4. குறிஞ்சிகலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தல்கலி, பாலைக்கலி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது.**

32) பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக் – இத்தொடரில் பழவெய் என்ற சொல்லின் பொருள்?

**A) முதிர்ந்த மூங்கில்**

B) பழைய மூங்கில்

C) இசை தரும் மூங்கில்

D) இளமையான மூங்கில்

**விளக்கம்: பழவெய் என்ற சொல்லின் பொருள் முதிர்ந்த மூங்கில் என்பதாகும். பழ என்றால் முதிர்ந்த என்று பொருள்.**

33) 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) கண் + ஓடாது**

B) கண் + ணோடாது

C) க + ஓடாது

D) கண்ணோ + ஆடாது

**விளக்கம்: கண்ணோடாது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது கண் + ஓடாது.**

34) கசடற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______________

A) கச + டற

B) கசட + அற

C) கசடு + உற

**D) கசடு + அற**

**விளக்கம்: கசடற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது கசடு + அற. நிலைமொழியின் இறுதி எழுத்து டு. டு + ட்=உ. வருமொழியின் முதல் எழுத்து அ. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி உ என்னும் எழுத்து கெடும். கசட் + அற. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ட் + அ புணர்ந்து கசடற என்னும் சொல் கிடைக்கும்.**

35) என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

**A) என்றாய்ந்து**

B) என்றுஆய்ந்து

C) என்றய்ந்து

D) என்ஆய்ந்து

**விளக்கம்: என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் என்றாய்ந்து. நிலைமொழியின் இறுதி எழுத்தை பிரித்தால் ற் + உ. வருமொழியின் முதல் எழுத்து ஆ. உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி உ என்னும் எழுத்து கெடும். என் + ற் + ஆய்ந்து எனக்கிடைக்கும். பின் உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ற் + ஆ=றா எனக் கிடைக்கும். என்று + ஆய்ந்து=என்றாய்ந்து**

36) செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு

எய்த உணர்ந்து செயல் – இக்குறளில் குறிப்பிடப்படும் வினை என்னும் சொல்லின் பொருள்?

A) விளைவு

**B) செயல்**

C) திறன்

D) விளைச்சல்

**விளக்கம்: இக்குறட்பாவில் வினை என்ற சொல்லின் பொருள் செயல் ஆகும். செயலாற்றும் திறன் உடையவரையும் செய்யவேண்டிய செயலையும் செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து அச்செயலை நிறைவேற்ற வேண்டும் என்பதே இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

37) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை_______

A) கல்வெட்டுகள்

B) செப்பேடுகள்

**C) பனையோலைகள்**

D) மண்பாண்டங்கள்

**விளக்கம்: பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை பனையோலைகள். இப்பனையோலைகளில் பலவகையான பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.**

38) பானை__________ஒரு சிறந்த கலையாகும்

A) செய்தல்

**B) வனைதல்**

C) முடைதல்

D) சுடுதல்

**விளக்கம்: பானை வனைதல் ஒரு சிறந்த கலையாகும். பானை வனைதல் என்று கூறதலே மரபு.**

39) மட்டுமல்ல என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது__________

A) மட்டு + மல்ல

B) மட்டம் + அல்ல

C) மட்டு + அல்ல

**D) மட்டும் + அல்ல**

**விளக்கம்: மட்டுமல்ல என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது மட்டும் + அல்ல.**

40) அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை – இவ்வரியில் கிளை என்ற சொல்லின் பொருள்?

A) மரக்கிளை

**B) உறவினர்**

C) பிள்ளைகள்

D) பிரிவுகள்

**விளக்கம்: இவ்வரியில் கிளை என்பது உறவினரைக் குறிக்கும். அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல் ஆகும்.**

41) கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_________

**A) கயிற்றுக்கட்டில்**

B) கயிர்க்கட்டில்

C) கயிறுக்கட்டில்

D) கயிற்றுக்கட்டில்

**விளக்கம்: கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் கயிற்றுக்கட்டில்.**

42) எங்கு கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன?

A) கரிக்கையூர்

**B) செம்பியன் கண்டியூர்**

C) ஆதிச்சநல்லூர்

D) கீழடி

**விளக்கம்: நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக்கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள் ஆகும்.**

43) நம்பியாரூரர் என்று அழைக்கப்படுபவர் யார்?

A) திருஞானசம்பந்தர்

B) திருநாவுக்கரசர்

**C) சுந்தரர்**

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: நம்பியாரூரர் என்று அழைக்கப்படுபவர் சுந்தரர். இவர் தேவாரம் பாடிய மூவருள் ஒருவர். இவர் அருளிய பாடல்கள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன**

44) கூற்றுகளை ஆராய்க.

1. ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது – கலைக்களஞ்சியம்

2. ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது – அகராதி

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது – அகராதி**

**2. ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது – கலைக்களஞ்சியம்**

45) காலத்தை அறிவிக்க பயன்படுத்தப்படும் முரசு வகை?

A) நாழிகை முழவு

B) காலை முழவு

C) மாக்கண் முரசம்

**D) A மற்றும் B**

**விளக்கம்: காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன. ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக் கட்டப்பட்ட கருவியாகும். இத்தோலில் ஒருவகை பசை மண்ணைத் தடவி முழக்குவர். மண்ணமை முழவு எனப் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.**

46) மண்பாண்டங்கள் செய்யப்பயன்படும் சக்கரம் எவ்வாறு அழைக்கப்படும்?

A) திருகை

**B) திருவை**

C) குருவை

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: பானை செய்யும் சக்கரத்தை நாம் திருவை என்கிறோம். திருவையை வேகமாகச் சுழலச்செய்து அதன் நடுவில் மண்ணை வைத்துக் கையால் அணைத்துப் பிடித்து மண்பாண்டங்களை உருவாக்குவோம். உரிய வடிவம் வந்ததும் அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்துக் காயவைப்போம்.**

47) ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை – இக்குறட்பாவில் கண்ணோடாது என்னும் சொல்லின் பொருள்?

A) கண்ணால் ஆராய்தல்

**B) ஒருபக்கசார்பின்மை**

C) கண் கொண்டு பார்த்தல்

D) சிறந்த ஆட்சிபுரிதல்

**விளக்கம்: கண்ணோடாது என்ற சொல்லின் பொருள் ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நிற்றல் என்பதே இதன் பொருளாகும்.**

48) புல்லங்குழலில் எத்தனை ஸ்வரங்கள் உண்டாக்க முடியும்?

A) 5

B) 4

C) 6

**D) 7**

**விளக்கம்: புல்லாங்குழலில் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகள் இருக்கும்**

49) இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்

உறைகடுகி ஒல்லைக்கெடும் – இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள்?

**A) வேந்தன்**

B) இறைவன்

C) மக்கள்

D) அமைச்சர்

**விளக்கம்: இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள் வேந்தன் என்பதாகும். நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்.**

50) பொருத்துக

அ. பின்னுதல் – 1. Rite

ஆ. கொம்பு – 2. Artisan

இ. கைவினைஞர் – 3. Horn

ஈ. சடங்கு – 4. Knitting

A) 4, 3, 2, 1

B) 4, 3, 2, 1

C) 4, 1, 3, 2

**D) 4, 3, 2, 1**

**விளக்கம்: பின்னுதல் – Knitting**

**கொம்பு – Horn**

**கைவினைஞர் – Artisan**

**சடங்கு – Rite**

51) அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் – இதில் பேதையார் என்ற சொல்லின் எதிர்ச்சொல்?

**A) அறிவற்றவர்**

B) அறிவுடையவர்

C) உறவினர்

D) பகைவர்

**விளக்கம்: இவ்வரியில் பேதையார் என்றால் அறிவற்றவர் என்று பொருள். இதன் எதிர்ச்சொல் அறிவுடையோர் என்பதாகும். அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல் ஆகும்.**

52) மூவர் தேவாரத்தை தொகுத்தவர்?

**A) நம்பியாண்டார் நம்பி**

B) சேக்கிழார்

C) பதுமனார்

D) நாதமுனி

**விளக்கம்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும். இதனைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.**

53) கீழ்க்கண்டவற்றில் சரியானது எது?

A) பானை செய்தல்

B) பானை முடைதல்

**C) பானை வனைதல்**

D) பானை சுற்றுதல்

**விளக்கம்: பானை செய்தலை பானை வனைதல் என்று சொல்லுதல் மரபு. கூடை முடைதல் என்று சொல்வோம்.**

54) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) பாண்டில்

B) சேமங்கலம்

C) சால்ரா

**D) திமிலை**

**விளக்கம்: பாண்டில், சால்ரா, ஜால்ரா ஆகிய அனைத்தும் ஒரே கருவியை குறிக்கும்.**

**சேமங்கலம் என்பது சேகண்டியை குறிக்கும். இவை அனைத்தும் கஞ்சக்கருவி. ஆனால் திமிலை என்பது தோல்கருவி.**

55) உடுக்கை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பெரிய உடுக்கையை தவண்டை என்பர்.

2. சிறிய உடுக்கையை குடுகுடுப்பை என்பர்.

3. தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளுள் ஒன்றில் இதனைக் காணலாம்.

4. இறைவழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.

A) 1, 2, 3 சரி

B) 1, 2, 4 சரி

C) 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. பெரிய உடுக்கையை தவண்டை என்பர்.**

**2. சிறிய உடுக்கையை குடுகுடுப்பை என்பர்.**

**3. தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளுள் ஒன்றில் இதனைக் காணலாம்.**

**4. இறைவழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.**

56) கூற்றுகளை ஆராய்க.

1. ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்

2. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்**

**2. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்.**

57) இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்

உறைகடுகி ஒல்லைக்கெடும் – இக்குறட்பாவில் உறை கடுகி என்ற சொல்லின் பொருள்?

A) கடுமையான சொல்

**B) வாழ்நாள் குறைந்து**

C) விரைந்து அழிதல்

D) குடிமக்களால் தூற்றப்படும்

**விளக்கம்: உறை கடுகி என்ற சொல்லின் பொருள் வாழ்நாள் குறைந்து என்பதாகும். நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்.**

58) அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை – இதில் செறாஅமை என்ற சொல்லின் பொருள்?

A) மறவாமை

**B) வெறுக்காமை**

C) மறவாமை

D) பொறுமை

**விளக்கம்: செறாஅமை என்றால் வெறுக்காமை என்று பொருள். அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல் என்று கலித்தொகை வாயிலாக அறிகிறோம்.**

59) ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை – இக்குறட்பாவில் ஓர்ந்து என்னும் சொல்லின் பொருள்?

A) ஒருபக்கம் சாராது

B) நடுவுநிலையில் இருத்தல்

**C) நன்கு ஆராய்ந்து**

D) சிறந்த ஆட்சி

**விளக்கம்: ஓர்ந்து என்ற சொல்லின் பொருள் எதையும் நன்கு ஆராய்ந்து செய்தல் என்பதாகும். எதையும் நன்க ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும் என்பது இக்குறட்பாவின் விளக்கம் ஆகும்.**

60) இசையை எத்தனை வகையாகப்பிரிப்பர்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: இசையை இரண்டு வகையாகப்பிரிப்பர். அவை,**

**1. குரல்வழி இசை**

**2. கருவிவழி இசை**

61) தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் – என்ற பாடல் வரியை எழுதியவர்?

**A) திருஞானசம்பந்தர்**

B) திருநாவுக்கரசர்

C) மாணிக்கவாசகர்

D) சுந்தரர்

**விளக்கம்: தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் – என்ற பாடல் வரியை எழுதியவர் திருஞானசம்பந்தர் ஆவார். இவரின் தேவாரப்பாடலில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளன. இவரின் பாடல்கள் முதல், இரண்டு, மூன்றாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.**

62) செறாஅமை என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

**A) செய்யுளிசை அளபெடை**

B) சொல்லிசை அளபெடை

C) இன்னிசை அளபெடை

D) உயிரளபெடை

**விளக்கம்: செறாஅமை என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு செய்யுளிசை அளபெடை ஆகும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர். செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்ய உயிர் எழுத்துக்கள் அளப்பெடுத்தால் அது உயிரளபெடை எனப்படும். இது மூன்று வகைப்படும். அவை,**

**1. செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை**

**2. சொல்லிசை அளபெடை**

**3. இன்னிசை அளபெடை**

63) செறிவு எனப்படுவது___________?

A) தன்கிளை செறாஅமை

B) பேதையார் சொல்நோன்றல்

**C) கூறியது மறாஅமை**

D) மறை பிறர் அறியாமை

**விளக்கம்: செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை. செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.**

64) கலை உணக் கிழந்த முழவுமருள் பெரும்பழம் – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) சிலப்பதிகாரம்

B) பொருநராற்றுப்படை

**C) புறநானூறு**

D) மதுரைக்காஞ்சி

**விளக்கம்: கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம் என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் – புறநானூறு. இவ்வரிகள் முழவு பற்றி கூறுகிறது. ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்த முரசு முழவு எனப்படும். காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன.**

65) பெரிய புராணத்தை எழுதியவர்?

A) நம்பியாண்டார் நம்பி

B) சுந்தரர்

C) அப்பர்

**D) சேக்கிழார்**

**விளக்கம்: பெரியபுராணத்தை எழுதியவர் சேக்கிழார். இது 12–ஆம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. இதன் மற்றொரு பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும்.**

66) திருக்குறள் படித்தாள் என்பது எவ்வகைத் தொகைநிலைத் தொடர்?

**A) வேற்றுமைத்தொகை**

B) வினைத்தொகை

C) பண்புத்தொகை

D) அன்மொழித்தொகை

**விளக்கம்: இத்தொடர் திருக்குறளைப் படித்தாள் என விரிந்து நின்று பொருள் தருகிறது. இரு சொற்களுக்கும் இடையே ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத் தொகை என்பர்.**

67) யாழ் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப்போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக்கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினர்.

2. யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப்போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக்கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினர்.**

**2. யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது**

68) திமிலை எம்மரத்தினால் செய்யப்படும்?

A) கருங்காலி

B) சந்தனம்

**C) பலாமரம்**

D) செங்காலி

**விளக்கம்: திமிலை என்ற தோல்கருவி பலாமரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் ஒரு இசைக்கருவி.**

69) இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின் – இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள்?

A) இறைவன்

**B) அரசன்**

C) அமைச்சர்

D) மக்கள்

**விளக்கம்: இக்குறட்பாவில் இறை என்ற சொல்லின் பொருள் அரசன் என்பதாகும். உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பாற்றும் என்பதே இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

70) எந்த வகை மூங்கில் கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றது?

A) கல்மூங்கில்

B) மலைமூங்கில்

**C) கூட்டுமூங்கில்**

D) காட்டுமூங்கில்

**விளக்கம்: மூங்கில்கள் மூன்று வகைப்படும். அவை**

**1. கல்மூங்கில்**

**2. மலைமூங்கில்**

**3. கூட்டு மூங்கில்**

**இதில் கூட்டு மூங்கில்கள் கைவினைப்பொருள்கள் செய்ய ஏற்றது.**

71) பொருத்துக (பாய் பற்றியது)

அ. குழந்தைகள் படுக்க – 1. பட்டுப்பாய்

ஆ. உட்கார்ந்து உண்ண – 2. திண்ணைப்பாய்

இ. உட்கார, படுக்க – 3. பந்திப்பாய்

ஈ. திருமணம் – 4. தடுக்குப்பாய்

A) 1, 3, 2, 4

B) 1, 4, 2, 3

C) 3, 2, 4, 1

**D) 4, 3, 2, 1**

**விளக்கம்: குழந்தைகள் படுக்க – தடுக்குப்பாய்**

**உட்கார்ந்து உண்ண – பந்திப்பாய்**

**உட்கார, படுக்க – திண்ணைப்பாய்**

**திருமணம் – பட்டுப்பாய்**

72) அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் – இதில் நோன்றல் என்ற சொல்லின் பொருள்?

A) வெறுத்தல்

B) பகைத்தல்

**C) பொறுத்தல்**

D) மறுத்தல்

**விளக்கம்: நோன்றல் என்றால் பொறுத்தல் என்று பொருள். அறிவு என்பது அறிவற்றவர் சொல்லும் சொல்லை பொறுத்துக்கொள்ளுதல் ஆகும்.**

73) கூற்றுகளை ஆராய்க(பிரம்பு) .

1. பிரம்பு என்பது செடி வகையைச் சார்ந்தது

2. இதன் தாவரவியல் பெயர் – கலாமஸ் ரொடாங்

3. இது நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும்.

4. தமிழகத்தில் இப்போது இது அதிக இடங்களில் வளரக்கப்படுகிறது.

5. நமது தேவைக்காக அந்தமான், அசாம், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

A) அனைத்தும் சரி

B) 1, 2, 4 தவறு

**C) 1, 4 தவறு**

D) 1, 5 தவறு

**விளக்கம்: 1. பிரம்பு என்பது கொடி வகையைச் சார்ந்தது**

**2. இதன் தாவரவியல் பெயர் – கலாமஸ் ரொடாங்**

**3. இது நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும்.**

**4. தமிழகத்தில் இப்போது இது அருகிவிட்டது.**

**5. நமது தேவைக்காக அந்தமான், அசாம், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.**

74) திருத்தொண்டர் தொகை என்னும் நூலை எழுதியவர்?

A) மாணிக்க வாசகர்

B) திருநாவுக்கரசர்

**C) சுந்தரர்**

D) சேக்கிழார்

**விளக்கம்: திருத்தொண்டர் தொகை என்னும் நூலை எழுதியவர் சுந்தரர். இவரின் பாடல்கள் 7ம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.**

75) இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக்கெடும் – இக்குறட்பாவில் உறை கடுகி என்ற சொல்லின் பொருள்?

A) கடுமையான சொல்

B) வாழ்நாள் குறைந்து

**C) விரைந்து அழிதல்**

D) குடிமக்களால் தூற்றப்படும்

**விளக்கம்: உறை கடுகி என்ற சொல்லின் பொருள் விரைந்து அழிவான் என்பதாகும். நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்**

76) தமிழ்நாட்டின் மாநில மரம்?

A) தென்னை

B) மாமரம்

**C) பனை**

D) பலாமரம்

**விளக்கம்: தமிழகத்தின் மாநில மரம் – பனை**

**மாநில விலங்கு – வரையாடு**

**மாநில பறவை – மரகதப்புறா**

**மாநில பூ – செங்காந்தாள் பூ**

77) சேக்கிழார் பெரியபுராணத்தை எந்த நூலை அடிப்படையாக கொண்டு எழுதினார்?

A) திருத்தொண்டர் புராணம்

**B) திருத்தொண்டர் தொகை**

C) திருவிளையாடற் புராணம்

D) கந்தபுராணம்

**விளக்கம்: சேக்கிழார் சுந்தரரின் திருத்தொண்டர்த் தொகையை முதல் நூலாகக் கொண்டே பெரியபுராணம் என்னும் நூலை எழுதினார். இது 12–ம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது. இதன் மற்றொரு பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும்.**

78) பொருத்துக

அ. கைவினைப்பொருள்கள் – 1. Crafts

ஆ. புல்லாங்குழல் – 2. Flute

இ. முரசு – 3. Drum

ஈ. கூடைமுடைதல் – 4. Basketry

**A) 1, 2, 3, 4**

B) 1, 3, 2, 4

C) 4, 3, 1, 2

D) 1, 4, 2, 3

**விளக்கம்: கைவினைப்பொருள்கள் – 1. Crafts**

**புல்லாங்குழல் – 2. Flute**

**முரசு – 3. Drum**

**கூடைமுடைதல் – 4. Basketry**

79) நிறை எனப்படுவது__________?

A) தன்கிளை செறாஅமை

B) பேதையார் சொல்நோன்றல்

C) கூறியது மறாஅமை

**D) மறை பிறர் அறியாமை**

**விளக்கம்: நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை. நிறை எனப்படுவது மறை பொருளைப் பிறர் அறியாமல் காத்தல் ஆகும்.**

80) பாணி என்று அழைக்கப்படும் இசைக்கருவி எது?

A) சேகண்டி

B) கொம்பு

C) சாலரா

**D) திமிலை**

**விளக்கம்: பாணி என்று அழைக்கப்படும் இசைக்கருவி திமிலை ஆகும். இது பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி ஆகும் .**

81) மிகவும் பழமையான யாழ் வகை?

A) பேரியாழ்

B) செங்கோட்டியாழ்

C) மகரயாழ்

**D) A மற்றும் B**

**விளக்கம்: வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப்போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக் கூடியதுமான கருவி ஒன்றை**

**உருவாக்கினர். இதன் அடிப்படையில் உருவான கருவியே யாழ் ஆகும். பேரியாழ், செங்கோட்டியாழ் போன்றவை மிகப் பழமையானவை ஆகும்.**

82) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சாலரா

B) பாண்டில்

C) ஜால்ரா

**D) பணிலம்**

**விளக்கம்: சாலரா என்பது ஒரு வகை கஞ்சக்கருவி. கஞ்சக்கருவி என்றால் ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுவது என்று பொருள். இதன் வேறுபெயர்கள் ஜால்ரா, பாண்டில். பணிலம் என்பது சங்கைக் குறிக்கும்.**

83) தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

A) 7

**B) 6**

C) 5

D) 9

**விளக்கம்: தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை**

**1. வேற்றுமைத் தொகை**

**2. வினைத்தொகை**

**3. பண்புத்தொகை**

**4. உவமைத்தொகை**

**5. உம்மைத்தொகை**

**6. அன்மொழித்தொகை**

84) இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின் – இக்குறட்பாவில் முறைகாக்கும் என்ற சொல்லின் பொருள்?

A) மன்னன்

B) மக்களின் வாழ்வு முறை

**C) குற்றமற்ற ஆட்சி**

D) ஒருபக்கசார்ப்பின்மை.

**விளக்கம்: இங்கு முறை என்பது குற்றமற்ற ஆட்சியை குறிக்கிறது. உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பாற்றும் என்பதே இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

85) பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் – இதில் பொறை என்ற சொல்லின் பொருள்?

A) பகை

**B) பொறுமை**

C) சிறுமை

D) எளிமை

**விளக்கம்: பொறை என்றால் பொறுமை என்று பொருள். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் கலித்தொகை. இந்நூலில் 150 பாடல்கள் உள்ளன.**

86) சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி

வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) இராமாயணம்

**B) பெரியபுராணம்**

C) கலித்தொகை

D) பரிபாடல்

**விளக்கம்: இசைக்கருவிகள் பற்றி கூறும் மேற்கண்ட பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் பெரியபுராணம். இந்நூலை எழுதியவர் சேக்கிழார். இந்நூலின் மற்றொரு பெயர் திருத்தொண்டர் புராணம். இந்நூல் சுந்தரரின் திருத்தொண்டர்தொகை என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.**

87) பொருத்துக.

அ. பேரியாழ் – 1. 19 நரம்புகள்

ஆ. மகரயாழ் – 2. 14 நம்புகள்

இ. சகோடயாழ் – 3. 21 நரம்புகள்

A) 1, 2, 3

B) 3, 2, 1

**C) 3, 1, 2**

D) 2, 3, 1

**விளக்கம்: பேரியாழ் – 21 நரம்புகள்**

**மகரயாழ் – 19 நரம்புகள்**

**சகோடயாழ் – 14 நரம்புகள்**

88) இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி(மறைந்து) வருமானால் அதனை_____________என்பர்.

A) தொகாநிலைத் தொடர்

**B) தொகைநிலைத் தொடர்**

C) ஆகுபெயர்

D) பொருள்கோள்

**விளக்கம்: இரு சொற்களுக்கிடையே உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி(மறைந்து) வருமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்பர். தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை, வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழித் தொகைகள் ஆகும்.**

89) குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர் – என்று கூறும் நூல் எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) பரிபாடல்

**D) திருக்குறள்**

**விளக்கம்: குழந்தையின் மழலைச் சொல்லை கேளாதவரே குழலின் ஓசையும், யாழின் ஓசையும் இனிது என்று கூறுவர் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.**

90) இசைக்கருவிகளை இசைத்து பாடல் பாடுவோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

**A) பாணர்**

B) விறலியர்

C) கூத்தர்

D) இவர்களில் யாருமில்லை

**விளக்கம்: இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர். இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக் கருவிகள் ஆகும். இசைக்கருவிகள் குரல் இசைக்கு மட்டும் பயன்படுபவை, நாடகத்திற்கு மட்டும் பயன்படுபவை, இரண்டிற்கும் பயன்படுபவை எனப் பலவாகத் தோன்றி கிளைத்தன.**

91) சங்கு பற்றிய கூற்றுகளில் சரியானது எது?

1. இது ஓர் இயற்கைக் கருவி.

2. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர்.

3. சங்கின் ஒலியை சங்கநாதம் என்பர்

4. இலக்கியங்களில் இதனை படிலம் என்று குறிப்பிட்டுள்ளனர்

**A) 1, 2, 3 சரி**

B) 1, 2, 4 சரி

C) 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இது ஓர் இயற்கைக் கருவி.**

**2. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர்.**

**3. சங்கின் ஒலியை சங்கநாதம் என்பர்**

**4. இலக்கியங்களில் இதனை பணிலம் என்று குறிப்பிட்டுள்ளனர்**

92) தக்காங்க நாடித் தலைசெல்லா வண்ணத்தால்

ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து – இக்குறட்பாவில் தக்காங்கு என்ற சொல்லின் பொருள்?

**A) செய்த குற்றம்**

B) குற்றமற்ற ஆட்சி

C) தண்டித்தல்

D) அரசனின் கடமை

**விளக்கம்: தக்காங்கு என்பது ஒருவர் செய்த குற்றம் என்று பொருள். ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசின் கடமையாகும் என்பது இக்குறட்பாவின் பொருள்.**

93) பொருத்துக.

அ. தோல்கருவிகள் – 1. சாலரா, சேகண்டி

ஆ. நரம்புக்கருவிகள் – 2. முழவு, முரசு

இ. காற்றுக்கருவிகள் – 3. யாழ், வீணை

ஈ. கஞ்சக்கருவிகள் – 4. குழல், சங்கு

A) 1, 4, 3, 2

B) 4, 2, 3, 1

C) 3, 4, 2, 1

**D) 2, 3, 4, 1**

**விளக்கம்: தோல்கருவிகள் – முழவு, முரசு**

**நரம்புக்கருவிகள் – யாழ், வீணை**

**காற்றுக்கருவிகள் – குழல், சங்கு**

**கஞ்சக்கருவிகள் – சாலரா, சேகண்டி**

94) பறை பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி

2. பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்க ஆகோட்பறையை முழக்கினர்.

3. பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது கோட்பறையை முழக்கினர்

4. இக்காலத்தில் தப்பு என்று அழைக்கப்படுகிறது. இதனை முழக்கிக்கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**A) அனைத்தும் சரி**

B) 1, 4 சரி

C) 2, 3 சரி

D) 1, 3, 4 சரி

**விளக்கம்: 1. விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி**

**2. பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்க ஆகோட்பறையை முழக்கினர்.**

**3. பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது கோட்பறையை முழக்கினர்**

**4. இக்காலத்தில் தப்பு என்று அழைக்கப்படுகிறது. இதனை முழக்கிக்கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது.**

95) உடுக்கைப்பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இடைசுருங்கிய ஒரு கைப்பறை

2. இதன் உடல் செம்பால் ஆனது.

3. வாய்ப்பகுதி மாட்டுத்தோலால் போர்த்தப்பட்டிருக்கும்

4. இடது வாயின் மீதுதான் அடிப்பர்.

A) 1, 3 சரி

B) 1, 3, 4 சரி

**C) 1 மட்டும் சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இடைசுருங்கிய ஒரு கைப்பறை**

**2. இதன் உடல் பித்தளையால் ஆனது.**

**3. வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் போர்த்தப்பட்டிருக்கும்**

**4. வலது வாயின் மீதுதான் அடிப்பர்.**

96) தொகைநிலைத் தொடரில் பொருந்தாதது எது?

A) வேற்றுமைத்தொகை

B) வினைத்தொகை

C) உம்மைத்தொகை

**D) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**விளக்கம்: தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை,**

**1. வேற்றுமைத் தொகை**

**2. வினைத்தொகை**

**3. பண்புத்தொகை**

**4. உவமைத்தொகை**

**5. உம்மைத்தொகை**

**6. அன்மொழித்தொகை**

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பது பண்புத்தொகையின் வகை ஆகும். இது தொகை நிலைத் தொடரில் வரிசைப்படுத்தப்படவில்லை.**

97) யாழ் போன்ற அமைப்பையுடைய கருவி__________

**A) வீணை**

B) திமிலை

C) கொம்பு

D) குடமுழா

**விளக்கம்: யாழ் போன்ற அமைப்புடைய நரம்புக்கருவி வீணையாகும். யாழின் வடிவமே மெல்ல மெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது என்பர்.**

98) பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் – இதில் போற்றார் என்ற சொல்லின் பொருள்?

A) பகைவர்

**B) பொறுமை உடையவர்**

C) உறவினர்

D) அறிவற்றவர்

**விளக்கம்: போற்றார் என்றால் பொறுமை உடையவர் என்று பொருள். பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல் ஆகும்.**

99) கூற்றுகளை ஆராய்க.

1. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும்.

2. இந்நூலைத் தொகுத்தவர் நாதமுனி

3. கேதாரப்பதிகப்பாடலை பாடியவர் சுந்தரர்

4. பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது

A) 1, 2, 3 சரி

B) 1, 2, 4 சரி

**C) 1, 3, 4 சரி**

D) 1, 2, 3, 4 சரி

**விளக்கம்: 1. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும்.**

**2. இந்நூலைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி**

**3. கேதாரப்பதிகப்பாடலை பாடியவர் சுந்தரர்**

**4. பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது**

100) தக்காங்க நாடித் தலைசெல்லா வண்ணத்தால்

ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து – இக்குறட்பாவில் தலைசெல்லா என்ற சொல்லின் பொருள்?

A) செய்த குற்றம்

B) குற்றமில்லா ஆட்சி

C) அரசனின் தண்டனை

**D) மீண்டும் குற்றம் செய்யாதவாறு**

**விளக்கம்: தலைசெல்லா என்பது ஒருவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு மாற்றுதல் என்று பொருள். ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும் என்பது இக்குறட்பாவின் பொருள்.**

101) சுந்தரரின் தேவாரம் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?

A) 4

**B) 7**

C) 8

D) 10

**விளக்கம்: சுந்தரரின் தேவாரப் பாடல்கள் 7–ஆம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.**

**1, 2, 3 திருமுறைகள் – திருஞானசம்பந்தர்**

**4, 5, 6 திருமுறைகள் – திருநாவுக்கரசர்**

**7 – சுந்தரர்**

**8 – மாணிக்கவாசகர்**

**9 – 9 பேர் பாடிய பாடல்கள்**

**10 – திருமூலர் (திருமந்திரம்)**

102) முறை எனப்படுவது_____________?

A) தன்கிளை செறாஅமை

B) பேதையார் சொல்நோன்றல்

C) கூறியது மறாஅமை

**D) கண்ஓடாது உயிர் வௌவல்**

**விளக்கம்: முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல். நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல் ஆகும்.**

103) தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

A) இரண்டாம் வேற்றுமை – ஐ

B) மூன்றாம் வேற்றுமை – ஆல்

**C) ஐந்தாம் வேற்றுமை – அது**

D) ஏழாம் வேற்றுமை – கண்

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை – ஐ**

**மூன்றாம் வேற்றுமை – ஆல்**

**நான்காம் வேற்றுமை – கு**

**ஐந்தாம் வேற்றுமை – இன்**

**ஆறாம் வேற்றுமை – அது**

**ஏழாம் வேற்றுமை – கண்**

104) நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்

பாணன் சூடான் பாடினி அணியாள் – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) அகநானூறு

B) பரிபாடல்

C) கலித்தொகை

**D) புறநானூறு**

**விளக்கம்: மேற்சொன்ன வரிகள் இசைப்பற்றியது ஆகும். இவ்வரிகள் இடம்பெற்றுள் நூல் புறநானூறு ஆகும்.**

105) வீணையில் மொத்தம் எத்தனை நரம்புகள் உள்ளன?

A) 5

B) 14

C) 19

**D) 7**

**விளக்கம்: வீணையில் மொத்தம் 7 நரம்புகள் உள்ளன. இடக்கை விரல்களால் நரம்புகளை அழுக்கியும் தேய்த்தும் வலக்கை சுண்டுவிரலால் கம்பிகளை மீட்டியும் இசை எழுப்புவர்.**

106) பரிவாதினி என்னும் வீணை யாருடைய காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது?

A) நரசிம்மவர்மன்

**B) மகேந்திரவர்மன்**

C) ராஜராஜசோழன்

D) ஜடாவர்ம சுந்தர பாண்டியன்

**விளக்கம்: பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. வீணையில் 7 நரம்புகள் இருக்கும். நரம்புகள் மூலம் எழுப்பப்படும் இசையை அதன் குடம், தண்டு முதலிய பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன.**

107) கொன்றைக்குழல், முல்லைக் குழல், ஆம்பல்குழல் இருந்ததாக கூறும் நூல்?

A) மணிமேகலை

B) பரிபாடல்

C) கலித்தொகை

**D) சிலப்பதிகாரம்**

**விளக்கம்: கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிரகாரம் கூறுகிறது. இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்.**

108) பொருத்துக.

அ. ஆற்றதல் – 1. தன்கிளை செறாஅமை

ஆ. போற்றுதல் – 2. பாடறிந்து ஒழுகுதல்

இ. பண்பு – 3. புணர்ந்தாரைப் பிரியாமை

ஈ. அன்பு – 4. அலந்தவர்க்கு உதவுதல்

A) 4, 2, 3, 1

**B) 4, 3, 2, 1**

C) 4, 1, 2, 3

D) 4, 2, 3, 1

**விளக்கம்: ஆற்றதல் – அலந்தவர்க்கு உதவுதல்**

**போற்றுதல் – புணர்ந்தாரைப் பிரியாமை**

**பண்பு – பாடறிந்து ஒழுகுதல்.**

**அன்பு – தன்கிளை செறாஅமை**

109) இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: இசைக்கருவிகள் நான்கு வகைப்படும். அவை,**

**1. தோல்கருவி**

**2. நரம்புக்கருவி**

**3. காற்றுக்கருவி**

**4. கஞ்சக்கருவி**

**தோல்கருவி – விலங்குகளின் தோலால் மூடப்பட்டு செய்யப்படும் கருவிகள் தோல்கருவிகள்(எ.கா) . முழவு முரசு**

**நரம்புக்கருவிகள் – நரம்பு அல்லது தந்திகளை உடையவை(எ.கா) . யாழ், வீணை**

**காற்றுக்கருவிகள் – காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை (எ.கா) . குழல் சங்கு**

**கஞ்சக்கருவிகள் – ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை (எ.கா) . சாலரா சேகண்டி**

110) புல்லாங்குழலின் வேறுபெயர்?

A) சந்தனக்குழல்

B) செங்காலிகுழல்

C) கருங்காலிகுழல்

**D) வேய்ங்குழல்**

**விளக்கம்: புல்லாங்குழலின் வேறு பெயர் வேய்ங்குழல் என்பதாகும். வேய் என்றால் மூங்கில் என்று பொருள். மூங்கில் மரத்தால் செய்யப்படுவதால் இதனை வேய் குழல் என்று கூறுவர். மூங்கில் மட்டுமின்றி சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன.**

111) குடமுழா என்பது எத்தனை முகங்களை உடைய ஒரு இசைக்கருவி?

A) 4

B) 2

**C) 5**

D) 7

**விளக்கம்: குடமுழா என்பது ஐந்து முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது. இதன் ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகை இசைப்பிறக்கும்.**

112) கொம்பு என்பது ஒரு வகை?

A) தோல்கருவி

**B) காற்றுக்கருவி**

C) கஞ்சக்கருவி

D) நரம்புக்கருவி

**விளக்கம்: மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. கொம்பு என்பது ஒரு வகைக் காற்றுக்கருவியாகும்.**

113) பொற்சிலை என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு?

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**B) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

C) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

D) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**விளக்கம்: பொற்சிலை என்ற சொல்லை பொன்னால் ஆகிய சிலை என்று பொருள் கொள்ள வேண்டும். இங்கு ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உருபும், அதனுடன் ஆகிய என்ற சொல்லும் வந்துள்ளது. எனவே இதன் இலக்கணக்குறிப்பு மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.**

114) பணிலம் என்று குறிப்பிடப்படுவது?

A) சக்கரம்

**B) சங்கு**

C) வில்

D) அம்பு

**விளக்கம்: பணிலம் என்றால் அது சங்கை குறிக்கும். இலக்கியங்களில் சங்கை பணிலம் என்று குறிப்பிட்டுள்ளனர். இது ஒரு இயற்கைக் கருவி ஆகும்.**

115) காலம் கரந்த பெயரெச்சம்___________

A) பண்புத்தொகை

**B) வினைத்தொகை**

C) அன்மொழித்தொகை

D) உம்மைத்தொகை

**விளக்கம்: காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சத்தை வினைத்தொகை என்பது.**

**காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை – (நன்னூல் 304)**

116) மத்தளம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது?

A) மத்து + தாளம்

**B) மத்து + தளம்**

C) மத் + தளம்

D) ம + அத்தளம்

**விளக்கம்: மத்தளம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது மத்து + தளம் ஆகும். இங்கு மத்து என்றால் ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கெல்லாம் தளம் அடிப்படை.**

117) குடமுழா பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. ஐந்து முகங்களை கொண்ட இதன் நடு வாய் மற்றவற்றைவிடப் பெரியதாக இருக்கும்.

2. இது கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும். சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகை முழவு ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஐந்து முகங்களை கொண்ட இதன் நடு வாய் மற்றவற்றைவிடப் பெரியதாக இருக்கும்.**

**2. இது கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும். சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகை முழவு ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.**

118) பொருத்துக.

அ. அறிவு – 1. மறை பிறர் அறியாமை

ஆ. செறிவு – 2. பேதையார் சொல் நோன்றல்

இ. நிறை – 3. கண்ஓடாது உயிர் வௌவல்

ஈ. முறை – 4. கூறியது மறாஅமை

A) 2, 3, 4, 1

B) 1, 2, 3, 4

C) 2, 4, 3, 1

**D) 2, 4, 1, 3**

**விளக்கம்: அறிவு – பேதையார் சொல் நோன்றல்**

**செறிவு – கூறியது மறாஅமை**

**நிறை – மறை பிறர் அறியாமை**

**முறை – கண்ஓடாது உயிர் வௌவல்**

119) புல்லாங்குழல் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

1. இதன் வேறுபெயர் வேய்ங்குழல்

2. ஐந்து சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும்

3. இது சுமார் பதினைந்து விரல் நீளம் உடையதாக இருக்கும்.

4. மூங்கில் மட்டுமின்றி செங்காலி, கருங்காலி, சந்தனம் போன்ற மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன.

A) 1, 2

B) 2, 3

**C) 1, 3**

D) 1, 4

**விளக்கம்: 1. இதன் வேறுபெயர் வேய்ங்குழல்**

**2. ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும்**

**3. இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும்.**

**4. மூங்கில் மட்டுமின்றி செங்காலி, கருங்காலி, சந்தனம் போன்ற மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன.**

120) கொம்புகள் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இக்காலத்தில் கொம்புகள் பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்படுகின்றன.

2. இதனை வேடர்கள் வேட்டையின் போது ஊதுவர்.

3. கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும், மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர்.

4. ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின்போது இசைக்கப்படுகின்றன.

A) 1, 2, 3 சரி

B) 1, 2, 4 சரி

C) 1, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. இக்காலத்தில் கொம்புகள் பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்படுகின்றன.**

**2. இதனை வேடர்கள் வேட்டையின் போது ஊதுவர்.**

**3. கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும், மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர்.**

**4. ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின்போது இசைக்கப்படுகின்றன.**

121) மாட்டுக்கொட்டகை என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

A) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

B) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**C) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

D) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

**விளக்கம்: மாட்டுக் கொட்டகை என்ற தொடரை மாட்டுக்குக் கட்டப்பட்ட கொட்டகை என்று பொருள் கொள்ள வேண்டும். இதில் கு என்ற நான்காம் வேற்றுமை உருபும் கட்டப்பட்ட என்ற சொல்லும்(பயன்) இடம்பெற்றிருப்பதால் நான்காம் வேற்றுமைத்தொகை எனலாம்.**

122) கூற்று: குடமுழா பஞ்மகா சப்தம் என்று அழைக்கப்படுகிறது.

காரணம்: ஐந்து வாய்கொண்ட இதில் ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: 1. குடமுழா பஞ்மகா சப்தம் என்று அழைக்கப்படுகிறது.**

**2. ஐந்து வாய்கொண்ட இதில் ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும்**

123) கூற்றுகளை ஆராய்க(சுந்தரர் பற்றி)

1. தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்.

2. நம்பியாரூரர், தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

3. இவர் அருளிய தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஆறாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.

4. இவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் திருத்தொண்டர்த் தொகையை இயற்றினார்.

**A) 1, 2 சரி**

B) 3, 4 சரி

C) 1, 2, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்.**

**2. நம்பியாரூரர், தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.**

**3. இவர் அருளிய தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.**

**4. இவர் இயற்றிய திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் திருத்தொண்டர்த் புராணத்தை இயற்றினார்.**

124) தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

A) பொறை எனப்படுவது – போற்றாரைப் பொறுத்தல்

**B) செறிவு எனப்படுவது – மறைபிறர் அறியாமை**

C) அன்பு எனப்படுவது – தன்கிளை செறாஅமை

D) முறை எனப்படுவது – கண்ஓடாது உயிர் வௌவல்

**விளக்கம்: பொறை எனப்படுவது – போற்றாரைப் பொறுத்தல்**

**செறிவு எனப்படுவது – கூறியது மறாஅமை**

**அன்பு எனப்படுவது – தன்கிளை செறாஅமை**

**முறை எனப்படுவது – கண்ஓடாது உயிர் வௌவல்**

125) சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்

பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் – இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்?

**A) திருப்பாவை**

B) திருவெம்பாவை

C) திருவாசகம்

D) திருமந்திரம்

**விளக்கம்: சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்**

**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் என்ற பாடலடிகள் திருமால் பற்றியதாகும். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் திருப்பாவை.**

126) ஆடுகொடி, வளர்தமிழ் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு?

A) பண்புத்தொகை

**B) வினைத்தொகை**

C) அன்மொழித்தொகை

D) உம்மைத்தொகை

**விளக்கம்: இத்தொடர்களில் ஆடு, வளர் என்பவை வினைப்பகுதிகள். இவை முறையே கொடி, தமிழ் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து காலம் காட்டாத பெயரெச்சங்களாக உள்ளன. அதாவது காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி உள்ளன. மேலும் இவை முறையே ஆடிய கொடி, ஆடுகின்றன கொடி, ஆடும்கொடி எனவும், வளர்ந்த தமிழ், வளர்கின்றன தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி பொருள் தருகின்றன. எனவே இவை வினைத்தொகை.**

127) மாக்கண் முரசம் என்று குறிப்பிடும் நூல்?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) பரிபாடல்

**D) மதுரைக்காஞ்சி**

**விளக்கம்: மாக்கண் முரசம் என்று குறிப்பிடும் நூல் மதுரைக்காஞ்சி. முப்பத்தாறு வகையான முரசுகள் இருந்ததாக குறிப்பிடும் நூல் சிலப்பதிகாரம்.**

128) பண்புத்தொகையில் மறைந்து வரும் பண்புருகள்?

A) ஆன

B) ஆகிய

**C) A மற்றும் B**

D) ஆக

**விளக்கம்: பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.**

129) பின்வருவனவற்றுள் எது இயற்கைக் கருவி?

A) வீணை

**B) சங்கு**

C) புல்லாங்குழல்

D) திமிலை

**விளக்கம்: மேற்கண்ட நான்கு இசைக் கருவிகளில் சங்கு மட்டும் இயற்கை கருவியாகும். மீதமுள்ள அனைத்தும் இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக்கொண்ட செய்யப்பட்டவை ஆகும்.**

130) தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

A) 5

B) 7

**C) 9**

D) 10

**விளக்கம்: தொகாநிலைத் தொடர் 9 வகைப்படும்**

**1. எழுவாய்த்தொடர்**

**2. விளித்தொடர்**

**3. வினைமுற்றுத்தொடர்**

**4. பெயரெச்சத்தொடர்**

**5. வினையெச்சத்தொடர்**

**6. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்**

**7. இடைச்சொல் தொடர்**

**8. உரிச்சொல் தொடர்**

**9. அடுக்குத்தொடர்**

131) வெண்ணிலவு என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

**A) பண்புத்தொகை**

B) வினைத்தொகை

C) அன்மொழித்தொகை

D) உம்மைத்தொகை

**விளக்கம்: இத்தொடரில் உள்ள வெண்மை என்னும் பண்பு நிலவு என்னும் பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கின்றன. ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து வெண்மையான நிலவு என்னும் பொருளைத் தருகின்றன.**

132) செம்மரம் என்னும் சொல்___________த்தொகை

A) வினை

**B) பண்பு**

C) அன்மொழி

D) உம்மை

**விளக்கம்: செம்மரம் என்னும் சொல் செம்மையான மரம் என்று பொருள் தரும். இருசொற்களுக்கிடைய பண்புருபான ஆன என்பது மறைந்து வந்துள்ளதால், இது பண்புத்தொகை எனப்படும்.**

133) கண்ணா வா! என்பது_________த் தொடர்

A) எழுவாய்

**B) விளி**

C) வினைமுற்று

D) வேற்றுமை

**விளக்கம்: கண்ணா வா! என்பது விளித் தொடர். கண்ணா என்பது விளிப்பெயர் ஆகும். இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது விளித்தொடர் எனப்படும்.**

134) பனைமரம் என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு?

A) அன்மொழித்தொகை

B) பண்புத்தொகை

**C) இருபெயரொட்டுப்பண்புத்தொகை**

D) வினைத்தொகை

**விளக்கம்: இத்தொடர் பனையாகிய மரம் என விரியும். மரம் என்பது பொதுப்பெயர். பனை என்பது மரங்களுள் ஒன்றனைக் குறிக்கும் சிறப்புப்பெயர். இவ்வாறு சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்க, இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர்.**

135) பொருத்துக

அ. பெயரெச்சத்தொடர் – 1. கார்குழலி படித்தாள்

ஆ. வினையெச்சத்தொடர் – 2. புலவரே வருக

இ. வினைமுற்றுத்தொடர் – 3. பாடி முடித்தான்

ஈ. எழுவாய்த் தொடர் – 4. எழுதிய பாடல்

உ. விளித்தொடர் – 5. வென்றான் சோழன்

A) 4, 3, 1, 2, 5

B) 4, 5, 3, 1, 2

C) 3, 4, 5, 1, 2

**D) 4, 3, 5, 1, 2**

**விளக்கம்: பெயரெச்சத்தொடர் – எழுதிய பாடல்**

**வினையெச்சத்தொடர் – பாடி முடித்தான்**

**வினைமுற்றுத்தொடர் – வென்றான் சோழன்**

**எழுவாய்த் தொடர் – கார்குழலி படித்தாள்**

**விளித்தொடர் – புலவரே வருக**

136) மலர்விழி என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

A) பண்புத்தொகை

B) வினைத்தொகை

**C) உவமைத்தொகை**

D) உம்மைத்தொகை

**விளக்கம்: மலர்விழி – இத்தொடர் மலர்போன்ற விழி என்ற பொருள் தருகிறது.**

**மலர் – உவமை. விழி – உவமேயம்**

**இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இவ்வாறு உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் போல, போன்ற, நிகர, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.**

137) சாலவும் நன்று – இதற்குப் பொருத்தமான ஒன்றை தெரிவு செய்க.

A) அடுக்குத் தொடர்

**B) உரிச்சொற்றொடர்**

C) விளித்தொடர்

D) இடைச்சொற்றொடர்

**விளக்கம்: சாலவும் நன்று. இதில் சால என்னும் உரிச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால். இது உரிச்சொல் எனப்படும்.**

138) ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் உம் என்னும் உருபு வெளிப்பட வருவது?

A) உம்மைத்தொகை

B) உவமைத்தொகை

**C) எண்ணும்மை**

D) வினைத்தொகை

**விளக்கம்: ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் உம் என்னும் உருபு வெளிப்பட வருவது எண்ணும்மை எனப்படும். (எ.கா) . இரவும் பகலும், பசுவும் கன்றும்**

139) இணைச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: இணைச்சொற்களானது மூன்று வகைப்படும். அவை,**

**1. நேரிணை**

**2. எதிரிணை**

**3. செறியிணை**

140) உவம உருபுகளில் பொருந்தாது எது?

A) நிகர

B) போன்ற

C) அன்ன

**D) ஆன**

**விளக்கம்: போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைப, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன, போன்ற – உவம உருபுகள் ஆகும்.**

**ஆன, ஆகிய – பண்புருபுகள்**

141) ஆயர்கள் குழல் ஊதுவதில் வல்லவர்கள். இவர்கள் எந்நிலத்தைச் சார்ந்தவர்கள்?

A) குறிஞ்சி

**B) முல்லை**

C) மருதம்

D) நெய்தல்

**விளக்கம்: முல்லை நில மக்களாகிய ஆயர்கள் குழல் ஊதுவதில் வல்லவர்கள். இதனைச் சம்பந்தர் திருப்பதிகத்தல் அமைந்த நிகழ்ச்சி ஒன்று விளக்குகிறது. காணாமல் போன எருமை ஒன்றை தன் குழலின் இசையால் மீண்டும் வரவழைத்த செய்தியே அது.**

142) தமிழ் மக்களிடம் முப்பதாறு வகையான முரசுகள் இருந்ததாக குறிப்பிடும் நூல் எது?

A) மணிமேகலை

B) சீவகசிந்தாமணி

C) பரிபாடல்

**D) சிலப்பதிகாரம்**

**விளக்கம்: தமிழ் மக்களிடம் 36 வகையான முரசுகள் வழக்கில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆனால் படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்ற மூன்று வகைய்யான முரசுகள் பழந்தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன.**

143) தொகை, தொகாநிலைத் தொடர் என இரு வகைகளிலும் இடம்பெறுவது?

**A) வேற்றுமை**

B) உம்மை

C) உரிச்சொல்

D) அன்மொழி

**விளக்கம்: தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும். இவை இரண்டு வகையிலும் இடம்பெறுவது வேற்றுமை.**

**வேற்றுமைத்தொகை – இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது**

**வேற்றுமைத் தொடர் – இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபு மறையால் வருவது**

144) பொற்றொடி வந்தாள் – இத்தொடருக்குப் பொருத்தமானது?

A) பண்புத்தொகை

**B) அன்மொழித்தொகை**

C) வினைத்தொகை

D) உம்மைத்தொகை

**விளக்கம்: இத்தொடரில் பொற்றொடி என்பது பொன்னாலான வளையல் எனப் பொருள் தரும். இத்தொடர் வந்தாள் என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள் என்னும்**

**பொருள் தருகிறது. இதில் ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் ஆகிய என்னும் அதன் பயனும் மறைந்து வந்து, வந்தாள் என்னும் சொல்லால் பெண் என்பதையும் குறிப்பதால் இது மூன்றாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.**

145) நன்று நன்று நன்று – இதற்கு பொருத்தமானது?

A) இரட்டைக்கிளவி

**B) அடுக்குத்தொடர்**

C) உரிச்சொற்றொடர்

D) வினையெச்சத்தொடர்

**விளக்கம்: இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளது. ஒரே சொல் இரண்டிற்கும் மேற்பட்ட முறை அடுக்கி வந்துள்ளது. பிரித்தால் பொருள் தருகிறது. எனவே இதன் இலக்கணக்குறிப்பு அடுக்குத்தொடர் ஆகும்.**

146) மத்து + தளம் – மத்தளம் என்று ஆகியது என்று கூறியவர்?

A) இளங்கோவடிகள்

**B) அடியார்க்கு நல்லார்**

C) திருத்தக்க தேவர்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: மத்து என்பது ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கு எல்லாம் தளம் அடிப்படை ஆகும். மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் அடியார்க்கு நல்லார்.**

147) பசியால் வாடும்______________உணவளித்தல் நமது கடமை

A) பிரிந்தவர்க்கு

**B) அலந்தவர்க்கு**

C) சிறந்தவர்க்கு

D) உயர்ந்தவர்க்கு

**விளக்கம்: பசியால் வாடும் அலந்தவர்க்கு உணவளித்தல் நமது கடமை. அலந்தவர் என்றால் வறியவர் என்று பொருள். வறியவருக்கு உணவளித்தல் நமது கடமை என்று கலித்தொகை பாடல் மூலம் அறியலாம்.**

148) ஒரு தொடரில் இருசொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அது?

A) தொழிற்பெயர்

B) ஆகுபெயர்

**C) தொகாநிலைத்தொடர்**

D) தொகைநிலைத்தொடர்

**விளக்கம்: ஒரு தொடரில் இருசொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அது தொகாநிலைத் தொடர் எனப்படும். இது ஒன்பது வகைப்படும்.**

149) சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை___________என்கிறோம்?

A) எண்ணும்மை

B) உவமைத்தொகை

**C) உம்மைத்தொகை**

D) முற்றும்மை

**விளக்கம்: சொற்களுக்கு இடையிலும், இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்கிறோம். (எ.கா) இரவுபகல், தாய்தந்தை. இச்சொற்கள் இரவும்பகலும், தாயும் தந்தையும் எனப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.**

150) கூற்று: மத்தளம் முதற்கருவி என்று அழைக்கப்படுகிறது.

காரணம்: மத்தளம் இரண்டு கைகளாலும் இசைக்கப்படுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி.

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: மத்தளத்தின் நடுப்பகுதி பெருத்தும் கடைப்பகுதி சிறுத்தும் காணப்படும். மரத்தால் செய்யப்பட்டிருக்கும் இதன் வாய்ப்பகுதி வளையங்களில் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இக்கருவி இரண்டு கைகளாலும் இசைக்கப்படுகிறது. ஆகவே இதனை முதற்கருவி என்பர்.**

151) தொடி என்ற சொல்லின் பொருள்?

A) தொடை

B) தொடுத்தல்

C) யாப்பின் உறுப்பு

**D) வளையல்**

**விளக்கம்: தொடி என்றால் வளையல் என்று பொருள். பொற்றொடி என்றால் பொன்னால் ஆன வளையல் என்று பொருள்.**

152) மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைதாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ் என்ற வரிகள் இடம்பெற்ற நூல்?

A) திருவாசகம்

B) பரிபாடல்

C) தேவாரம்

**D) நாச்சியார் திருமொழி**

**விளக்கம்: மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**

**முத்துடைதாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ் என்ற வரிகள் இடம்பெற்ற நூல் நாச்சியார் திருமொழி ஆகும். இவ்வரிகள் திருமால் பற்றிய நூல் ஆகும்.**

153) அன்மொழித்தொகை எத்தனை வகைப்படும்?

A) 4

B) 6

C) 7

**D) 5**

**விளக்கம்: அன்மொழித் தொகை 5 வகைப்படும். வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித் தொகை எனப்படும்.**

154) அன்மொழித் தொகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது?

A) அன் + மொழி + தொகை

B) அன்மொழி + தொகை

**C) அல் + மொழி + தொகை**

D) அ + மொழிதொகை

**விளக்கம்: அன்மொழித் தொகை என்ற சொல்லை பிரித்து எழுதக்கிடைப்பது அல் + மொழி + தொகை எனக்கிடைக்கும்.**

155) எந்த கோயில் கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்கள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் என்ற ஒருவரும் இருந்தார் என்று கூறுகிறது.

**A) தஞ்சை பெரியகோவில்**

B) காஞ்சி கைலாசநாதர் கோவில்

C) இராமநாதசுவாமி கோயில்

D) மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

**விளக்கம்: தஞ்சை பெரியகோயில் கல்வெட்டில் கோயிலுக்கும் நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவரும் இருந்தார் என்பர்.**

156) எத்தனை வகையான முரசுகள் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்தன?

A) 4

B) 2

**C) 3**

D) 5

**விளக்கம்: பழந்தமிழ் நாட்டில் மூன்று வ்யான முரசுகள் புழக்கத்தில் இருந்தன. அவை,**

**1. படைமுரசு**

**2. கொடை முரசு**

**3. மணமுரசு**

157) கருங்குவளை என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

**A) பண்புத்தொகை**

B) வினைத்தொகை

C) அன்மொழித்தொகை

D) உம்மைத்தொகை

**விளக்கம்: இத்தொடரில் உள்ள கருமை என்னும் பண்பு குவளை என்னும் பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கின்றன. ஆன, ஆகிய என்னும் பண்புருபுகள் மறைந்து கருமையாகிய குவளை என்னும் பொருள்களைத் தருகின்றன.**

158) பொருத்துக.

அ. நேரிணை – 1. பச்சைப்பசேல், வெள்ளைவெளேர்

ஆ. எதிரிணை – 2. இரவுபகல், உயர்வுதாழ்வு

இ. செறியிணை – 3. சீரும் சிறப்பும், பேரும் புகழும்

A) 2, 1, 3

B) 3, 1, 2

**C) 3, 2, 1**

D) 1, 2, 3

**விளக்கம்: நேரிணை – சீரும் சிறப்பும், பேரும் புகழும**

**எதிரிணை – இரவுபகல், உயர்வுதாழ்வு**

**செறியிணை – பச்சைப்பசேல், வெள்ளைவெளேர்**

159) கூம்பொடு மீப்பாய் களையாது என்னும் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) அகநானூறு

B) கலித்தொகை

C) பட்டினப்பாலை

**D) புறநானூறு**

**விளக்கம்: முற்காலத்தில் பாய்மரக்கப்பலில் பயன்பட்டதும்கூடப் பாய்தான். இதனைப் புறநானூறு கூம்பொடு மீப்பாய் களையாது என்னும் அடியால் குறிப்பிடுகிறது.**

160) அறிவு எனப்படுவது_____________சொல் நோன்றல்?

A) புணர்ந்தார்

B) அலந்தவர்

**C) பேதையார்**

D) அறிவுடையோர்

**விளக்கம்: அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல். இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல் கலித்தொகை. இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனார்.**

161) தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர்?

A) திருஞானசம்பந்தர்

B) திருநாவுக்கரகர்

**C) சுந்தரர்**

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்டவர் சுந்தரர். இறைவனால் தோழர் என்று அழைக்கப்பட்டதால் இவர் தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றார். இவரின் மற்றொரு சிறப்புப்பெயர் நம்பியாரூரர்.**

162) பொருத்துக.

அ. நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள் – 1. திருப்பாவை

ஆ. தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் – 2. திருக்குறள்

இ. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் – 3. புறநானூறு

ஈ. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் – 4. சம்பந்தர் தேவாரம்

A) 2, 3, 4, 1

B) 1, 4, 2, 3

C) 3, 4, 1, 2

**D) 3, 4, 2, 1**

**விளக்கம்: 1. நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப**
**பாணன் சூடான் பாடினி அணியாள் – புறநானூறு**

**2. தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் – சம்பந்தர் தேவாரம்**

**3. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர் – திருக்குறள்**

**4. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய் – திருப்பாவை**

# 8th Tamil Unit 6 Questions

1) தகடூர் யாத்திரை என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) அதியமான் நெடுமானஞ்சி

B) ஔவையார்

C) பிசிராந்தையார்

**D) ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை**

**விளக்கம்: தகடூர் யாத்திரை என்ற நூலின் ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.**

2) தகடூர் என்பது தற்பேதைய__________மாவட்டம்?

A) சேலம்

B) கிருஷ்ணகிரி

**C) தர்மபுரி**

D) நாமக்கல்

**விளக்கம்: தகடூர் என்பது தற்போதைய தருமபுரி மாவட்டத்தைக் குறிக்கும். இப்பகுதியை ஆட்சி செய்தவர் கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் ஆவார். ஔவைக்கு அரிய நெல்லிக்கனியை வழங்கியதால் இவர் கடையெழு வள்ளல்களில் ஒருவர் ஆனார்.**

3) பெருநீரால் வாரி சிறக்க! இரு நிலத்து – என்ற வரியில் வாரி என்ற சொல்லின் பொருள்?

A) வழங்குதல்

**B) வருவாய்**

C) கொட்டுதல்

D) மழைநீர்

**விளக்கம்: வாரி என்றால் வருவாய் என்று பொருள். சேர மன்னரின் அகன்ற பெரிய நாடு பெறுகிற மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குக என்பதே இப்பாடல் வரிகள் உணர்த்தும் செய்தி.**

4) அக்களத்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) அ + களத்து**

B) அக் + களத்து

C) அக்க + அளத்து

D) அம் + களத்து

**விளக்கம்: அக்களத்து என்ற சொல்லைப்பிரித்து எழுதக் கிடைப்பது அ + களத்து ஆகும்.**

5) தோட்டத்தில் தம்பி ஊன்றிய_____________எல்லாம் முளைத்தன?

A) சத்துகள்

B) பித்துகள்

C) முத்துகள்

**D) வித்துகள்**

**விளக்கம்: தோட்டத்தில் தம்பி ஊன்றிய வித்துக்கள் எல்லாம் முளைத்தன. வித்துக்கள் என்றால் விதைகள் என்று பொருள்.**

6) என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு_______________பெருகிற்று.

A) காரி

B) ஓரி

**C) வாரி**

D) பாரி

**விளக்கம்: என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு வாரி பெருகிற்று. வாரி என்றால் வருவாய் என்று பொருள். வருவாய் என்பது வாரி என்று தகடூர் யாத்திரை என்னும் நூல் வாயிலாக அறியலாம்.**

7) இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார என்ற வரியில் வித்து என்ற சொல்லின் பொருள்?

A) விற்றல்

B) விளைவித்தல்

C) பயிர் முளைத்தல்

**D) விதை**

**விளக்கம்: வித்து என்றால் விதை என்று பொருள். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் தகடூர் யாத்திரை. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.**

8) கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது?

A) கதிரென

B) கதியீன

**C) கதிரீன**

D) கதிரின்ன

**விளக்கம்: கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் கதிரீன. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து ர். வருமொழியின் முதல் எழுத்து ஈ. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி, ர் + ஈ = ரீ எனச் சேர்ந்து கதிரீன என கிடைக்கும்.**

9) முட்டாது வந்து மழை பெய்க! பெய்தபின்_________ என்ற வரியில் முட்டாது என்ற சொல்லின் பொருள்?

A) குறைவின்றி

**B) தட்டுப்பாடின்றி**

C) வாட்டம் இன்றி

D) மோதாமல்

**விளக்கம்: முட்டாது என்ற சொல்லின் பொருள் தட்டுப்பாடின்றி என்பதாகும். முளைத்த விதை செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிய வேண்டும் என்று இவ்வரி கூறுகிறது.**

10) மானத்தை நம்பி நாங்க

மக்களைத் தான் பெற்றெடுத்தோம்

மானம் செய்த பாவமுங்க

மக்கள் பசி தீரலையே – இவ்வரிகளில் மானம் என்று குறிப்பிடப்படுவது?

A) கௌரவம்

**B) வானம்**

C) மழைநீர்

D) உணவுப் பயிர்

**விளக்கம்: இப்பாடலில் மானம் என்று குறிப்பிடப்படுவது வானம். மழைச்சோற்று வழிபாடு என்னும் கட்டுரையிலிருந்து இப்பாடல் தரப்பட்டுள்ளது. இப்பாடலின் பதிப்பாசியர் அ. கௌரன்.**

11) பெற்றெடுத்தோம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) பெறு + எடுத்தோம்

B) பேறு + எடுத்தோம்

C) பெற்ற + எடுத்தோம்

**D) பெற்று + எடுத்தோம்**

**விளக்கம்: பெற்றெடுத்தோம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது பெற்று + எடுத்தோம்.**

12) முடியுடைய மூவேந்தர்களில் யார் பழமையானவர்கள் என்று கூறுவர்?

**A) சேரர்**

B) சோழர்

C) பாண்டியர்

D) பல்லவர்

**விளக்கம்: முடியுடைய மூவேந்தர்களில் பழமையானவர்கள் சேரர்களே என்று கூறுபவர்களும் உண்டு. தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாக கூறும் நூல்கள்: தொல்காப்பியம், சங்கஇலக்கியம்.**

**வண்புகழ் மூவர் – தொல்காப்பியம்.**

13) கூற்று: சேரர், சோழர், பாண்டியர்கள் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டவர்கள்

காரணம்: வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: சேரர், சோழர், பாண்டியர்கள் பன்னெடுங் காலத்திற்கு முற்பட்டவர்கள். காரணம் வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.**

14) தகடூர் யாத்திரை என்னும் நூலின் சில பாடல்கள் எந்த நூலின் வாயிலாக அறிய முடிகிறது?

A) தனிப்பாடல் திரட்டு

**B) புறப்பாடல் திரட்டு**

C) அகப்பொருள் விளக்கம்

D) புறநானூறு

**விளக்கம்: தகடூர் யாத்திரை என்னும் நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. தகடூர் என்பது தற்போதைய தர்மபுரி ஆகும்.**

15) கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது?

A) கால்லிறங்கி

**B) காலிறங்கி**

C) கால்இறங்கி

D) கால்றங்கி

**விளக்கம்: கால் + இறங்கி என்பதனை சேர்த்தெழுத கிடைப்பது காலிறங்கி. நிலைமொழியின் இறுதி எழுத்து ல். வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்து. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ல் + இ = லி எனச் சேர்ந்து காலிறங்கி எனக் கிடைக்கும்.**

16) போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருந் தானையர் மலைந்து பூவும் – இதில் குறிப்பிடப்படுபவர்?

**A) சேரர்**

B) சோழர்

C) பாண்டியர்

D) பல்லவர்

**விளக்கம்: மேற்கண்ட வரிகளில் குறிப்பிடப்படுபவர் சேரர்கள். இவர்களே முடியுடைய மூவேந்தர்களில் பழமையானவர்கள் என்று கூறுபவர்களும் உண்டு.**

17) புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை,**

**1. இயல்பு புணர்ச்சி**

**2. விகாரப் புணர்ச்சி**

18) பெருநீரால் வாரி சிறக்க! இரு நிலத்து என்ற வரியில் பெருநீரால் என்ற சொல்லின் பொருள் என்ன?

**A) மழைநீர்**

B) கடல்நீர்

C) கிணற்று நீர்

D) ஆற்று நீர்

**விளக்கம்: பெருநீர் என்றால் இங்கு மழைநீரைக் குறிக்கிறது. சேர மன்னரின் அகன்ற பெரிய நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குக என்பதே இப்பாடல் வரிகள் உணர்த்தும் செய்தி.**

19) பொருத்துக

அ. சிலை + அழகு – 1. மெய்யீற்றுப் புணர்ச்சி

ஆ. மண் + அழகு – 2. உயிரீற்று புணர்ச்சி

இ. பொன் + உண்டு – 3. மெய்முதல் புணர்ச்சி

ஈ. பொன் + சிலை – 4. உயிர்முதல் புணர்ச்சி

A) 1, 2, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 2, 3, 1, 4

D) 2, 1, 3, 4

**விளக்கம்: சிலை + அழகு – உயிரீற்று புணர்ச்சி**

**மண் + அழகு – மெய்யீற்றுப் புணர்ச்சி**

**பொன் + உண்டு – உயிர்முதல் புணர்ச்சி**

**பொன் + சிலை – மெய்முதல் புணர்ச்சி**

20) கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் எங்கு பிறந்தார்?

**A) திருப்பூர்**

B) திருச்சி

C) கன்னியாகுமரி

D) திண்டுக்கல்

**விளக்கம்: கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடியில் பிறந்தவர். சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர், 150–க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.**

21) தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறும் நூல்?

A) தொல்காப்பியம், அகத்தியம்

B) தொல்காப்பியம், சிலப்பதிகாரம்



winmeen.com

**C) தொல்காப்பியம், சங்க இலக்கியம்**

D) தொல்காப்பியம், பத்துப்பாட்டு

**விளக்கம்: தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன.**

22) மழைச்சோற்றுடன் தொடர்புடையது எது?

A) நெல்சோறு

B) சோளச்சோறு

C) கம்பங்கூழ்

**D) உப்பில்லாச் சோறு**

**விளக்கம்: மழைபெய்யாமல் ஊரில் பஞ்சம் ஏற்படும் காலங்களில், சிற்றூர் மக்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று உப்பில்லாச் சோற்றை ஒரு பானையில் வாங்குவர். ஊர்ப் பொது இடத்தில் வைத்து அச்சோற்றை அனைவரும் பகிர்ந்து உண்பர். கொடிய பஞ்சத்தைக் காட்டும் அடையாளமாக நிகழும் இதனைக் கண்டு மனமிரங்கி மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை. இந்நிகழ்வை மழைச்சோற்று நோன்பு என்பர்.**

23) இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார என்ற வரியில் எஞ்சாமை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) முளைக்காமை

B) மீதியில்லாமல்

**C) குறைவின்றி**

D) தட்டுப்பாடின்றி

**விளக்கம்: எஞ்சாமை என்ற சொல்லின் பொருள் குறைவின்றி என்பதாகும். அகன்ற நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளைவிடுக என்பதே இப்பாடல் வரியின் பொருளாகும்.**

24) கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் கீழ்க்கண்ட எவ்விருதைப் பெற்றார்?

**A) சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனை விருது**

B) சிறந்த புதினத்திற்கான இலக்கியச் சிந்தனை விருது

C) சிறந்த நூலுக்கான சாகித்தய அகாடமி விருது

D) தமிழாசிரியர் விருது

**விளக்கம்: கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடியில் பிறந்தவர். இவர் சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர். 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர்.**

25) ஒட்டாது வந்து கிளை பயில்க! அக்கிளை_________ என்ற வரியில் ஒட்டாது என்ற சொல்லின் பொருள் என்ன?

A) குறைவின்றி

B) தட்டுப்பாடின்றி

**C) வாட்டம் இன்றி**

D) மோதாமல்

**விளக்கம்: ஒட்டாது என்ற சொல்லின் பொருள் வாட்டம் இன்றி என்பதாகும். தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளர்க என்பது இவ்வரியின் பொருளாகும்.**

26) கருரைத் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டவர் யார்?

A) மார்க்கோபோலோ

B) யுவான் சுவாங்

**C) தாலமி**

D) பாகியான்

**விளக்கம்: கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய கரூர் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகத் திகழ்கிறது என்று தாலமி குறிப்பிட்டுள்ளார்.**

27) இந்தியாவிலேயே எம்மாவட்டத்தில் ஜவ்வரிசி அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது?

A) கரூர்

**B) சேலம்**

C) திண்டுக்கல்

D) திருச்சி

**விளக்கம்: மாங்கனி நகரம் என்று அழைக்கப்படும் சேலத்தில் தான் இந்தியாவிலேயே அதிகமாக ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்படுகிறது.**

28) நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) ஆகுபெயர்

B) அன்மொழித்தொகை

**C) புணர்ச்சி**

D) வேற்றுமைத்தொகை

**விளக்கம்: நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைவது புணர்ச்சி எனப்படும். இது இரண்டு வகைப்படும். அவை,**

**1 இயல்பு புணர்ச்சி**

**2. விகாரப் புணர்ச்சி**

29) தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் எது?

A) கோவை

B) கரூர்

C) ஈரோடு

**D) சேலம்**

**விளக்கம்: மாங்கனி நகரம் என்று அழைக்கப்படும் சேலம் மாவட்டத்தில் தான் தமிழ்நாட்டில் நெசவு அதிகமாக நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன.**

30) கொங்கு நாட்டு மழைச்சோற்று வழிபாடு என்னும் கட்டுரை எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது?

A) பழந்தமிழர் மழை வழிபாட்டு மரபுகள்

**B) பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்**

C) பழந்தமிழர் சோற்று வழிபாட்டு மரபுகள்

D) பழந்தமிழர் விவசாய வழிபாட்டு மரபுகள்

**விளக்கம்: கொங்குநாட்டு மழைச்சோற்று வழிபாடு என்பது பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள ஒரு கட்டுரை ஆகும். இதில் மழை வேண்டி வழிபாடு செய்யும் விவசாயிகள் பற்றி கூறப்பட்டுள்ளது.**

31) இட்ட வித்து எஞ்சாமை நாறுக! நாறார என்ற வரியில் நாறுக என்ற சொல்லின் பொருள்?

A) மணம்வீச

**B) முளைவிடுக**

C) மழை பொழிக

D) தட்டுப்பாடின்றி

**விளக்கம்: நாறுக என்ற சொல்லின் பொருள் முளைவிடுக என்பதாகும். அகன்ற நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளைவிடுக என்பதே இப்பாடல் வரியின் பொருளாகும். இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் தகடூர் யாத்திரை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. இந்நூலின் ஆசிரியர் பெயரும் அறியப்படவில்லை.**

32) ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுவது எது?

A) கொடைக்கானல்

B) கோத்தகிரி

C) குற்றாலம்

**D) ஏற்காடு**

**விளக்கம்: ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுவது ஏற்காடு. இது சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.**

33) சேலம் மாவட்டம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. மாங்கனி நகரம் என்னும் சிறப்புப்பெயர் பெற்றது

2. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில் தான் அதிகமாக ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்படுகிறது

3. இந்தியாவிலேயே கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம்

4. முலாம் பூசும் தொழிலும் சிறப்பாக நடைபெறுகிறது.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. மாங்கனி நகரம் என்னும் சிறப்புப்பெயர் பெற்றது**

**2. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில் தான் அதிகமாக ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்படுகிறது**

**3. தமிழகத்திலேயே கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம்**

**4. முலாம் பூசும் தொழிலும் சிறப்பாக நடைபெறுகிறது.**

34) தகடூர் யாத்திரை என்ற நூல் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

2. தகடூர் என்றால் தர்மபுரி என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிறது

3. இந்நூல் முழுமையாக கிடைத்துள்ளது

4. இந்நூலின் சில பாடல்கள் அகத்திரட்டு என்னும் தொகுப்பு நூலிலும் கிடைக்கின்றன.

**A) 1, 2 சரி**

B) 3, 4 சரி

C) 1, 3 சரி

D) 2, 4 சரி

**விளக்கம்: 1. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை**

**2. தகடூர் என்றால் தர்மபுரி என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிறது**

**3. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை**

**4. இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலிலும் கிடைக்கின்றன.**

35) நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது______________புணர்ச்சி?

**A) இயல்பு புணர்ச்சி**

B) விகாரப் புணர்ச்சி

C) A மற்றும் B

D) உடம்படுமெய் புணர்ச்சி

**விளக்கம்: நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும். (எ.கா) தாய் + மொழி = தாய்மொழி**

36) கூற்று: முடியுடைய வேந்தர்களில் பழமையானவர்கள் சோழர்கள்

காரணம்: சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடரே சான்றாகும்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: முடியுடைய வேந்தர்களில் பழமையானவர்கள் சேரர்கள். இதற்கு சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடரே சான்றாகும்.**

37) குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் நகரம் எது?

A) விருதுநகர்

B) சேலம்

**C) சிவகாசி**

D) சென்னை

**விளக்கம்: குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் நகரம் சிவகாசி ஆகும்.**

38) சேர நாட்டின் முக்கியத் துறைமுகங்களில் பொருந்தாதது எது?

A) தொண்டி

B) முசிறி

C) காந்தளூர்

**D) மாமல்லபுரம்**

**விளக்கம்: சேரநாட்டின் முக்கியத் துறைமுகப்பட்டினங்கள் தொண்டி, முசிறி, காந்தளூர். முடியுடைய மூவேந்தர்களில் சேரர்களே பழமையானவர்கள்.**

39) சேரர்கள் பற்றியதில் தவறானது எது?

A) நாடு – குடநாடு

**B) தலைநகர் – பூம்புகார்**

C) கொடி – வில்

D) பூ – பனம்பூ

**விளக்கம்: நாடு – குடநாடு**

**தலைநகர் – வஞ்சி**

**கொடி – வில்**

**பூ – பனம்பூ**

40) ………………..அக்களத்துப்

போரெல்லாங் காவாது வைகுக! போரின்……………… இதில் போர் என்று எந்த பயிரைக் குறிப்பிடுகிறோம்?

A) கரும்பு

B) கோதுமை

**C) நெல்**

D) சோளம்

**விளக்கம்: இங்கு போர் என்று குறிப்பிடப்படுவது நெல் ஆகும். நெல் குவித்து வைத்திருப்பதை நெற்போர் என்று குறிப்பிடுவர்.**

41) சேரநாட்டின் தலைநகர் வஞ்சி. இது எந்த ஆற்றங்கரையில் அமைந்துள்ளது?

A) தன்பெருனை

**B) பேரியாறு**

C) நொய்யல்

D) சிற்றாறு

**விளக்கம்: முடியுடை மூவேந்தர்களில் பழமையானவர்களான சேரர்களின் தலைநகரம் வஞ்சி ஆகும்.இந்நகர் மேற்கு மலைத்தொடரில் அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது.**

42) கரூர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. கொங்கு நாட்டின் ஒரு பகுதி

2. வஞ்சி மாநகரம் என்று அழைக்கப்பட்டது

3. அரேபிய நாட்டு அறிஞர் இந்நகரை தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

A) 1, 3 சரி

B) 2, 3 சரி

**C) 1, 2 சரி**

D) 1 மட்டும் சரி

**விளக்கம்: 1. கொங்கு நாட்டின் ஒரு பகுதி**

**2. வஞ்சி மாநகரம் என்று அழைக்கப்பட்டது**

**3. கிரேக்க நாட்டு அறிஞர் இந்நகரை தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.**

43) வண்புகழ் மூவன் தண்பொழில் வரைப்பு என்று குறிப்பிடும் நூல் எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

**C) தொல்காப்பியம்**

D) அகநானூறு

**விளக்கம்: வண்புகழ் மூவர் தண்பொழில் வனப்பு என்று குறிப்பிடும் நூல் தொல்காப்பியம். தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாக இவ்வரிகள் கூறுகின்றன.**

44) கூற்று: சேலம், கோவை கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டன.

காரணம்: சேலம், கோவை ஆகிய பகுதிகளை சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்தனர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: பண்டைய சேரநாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்த பகுதியாக விளங்கியது. சேலம், கோவை கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டன. இப்பகுதிகளை சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்தனர்.**

45) ………………போரின்

உருகெழும் ஓதை வெரீஇப் பெடையோடு……இவ்வரியில் குறிப்பிடப்படும் ஓதை என்ற சொல்லின் பொருள்?

A) நீர் பெருக்கம்

B) அஞ்சி

**C) ஓசை**

D) வருவாய்

**விளக்கம்: இப்பாடலடிகளில் ஓதை என்று குறிப்பிடப்படுவது ஓசை ஆகும். நெல் போரிரை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சும் என்பதே இவ்வரியின் பொருளாகும்.**

46) கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர்?

**A) காளமேகப் புலவர்**

B) கார்மேகப் புலவர்

C) ஒட்டக்கூத்தர்

D) சின்னமலை

**விளக்கம்: கார்மேக கவிஞர் காளமேகப் புலவர் இயற்றிய கொங்கு மண்டலச் சதகம் என்னும் நூலில் கொங்கு மண்டலத்தின் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது.**

47) கொங்கு மண்டலத்தின் எல்லைகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

**A) வடக்கு – திருத்தணி**

B) தெற்கே – பழனிமலை

C) மேற்கே – வெள்ளி மலை

D) கிழக்கே – மதிற்கரை

**விளக்கம்: வடக்கு – பெரும்பாலை**

**தெற்கே – பழனிமலை**

**மேற்கே – வெள்ளி மலை**

**கிழக்கே – மதிற்கரை**

48) ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது?

**A) மழை**

B) கல்வி

C) கனிமவளம்

D) போக்குவரத்து

**விளக்கம்: ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழை பொய்த்துவிட்டால் நீர்நிலைகளும் வற்றிவிடும். நாட்டில் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடும். அத்தகைய காலங்களில் மழை வேண்டி மக்கள் வழிபாடும் செய்வர்.**

49) கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் எழுதாத நூல் எது?

A) கன்னிவாடி

B) குணச்சித்திரங்கள்

C) உப்புக்கடலைக் குடிக்கும் பூனை

**D) சீரங்கராயன்**

**விளக்கம்: கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாடியில் பிறந்தவர். இவர் சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர். 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர். இவரின் நூல்கள்**

**1. கன்னிவாடி**

**2. குணச்சித்திரங்கள்**

**3. உப்புக்கடலைக் குடிக்கும் பூனை.**

50) முத்து நகரம் எது?

**A) தூத்துக்குடி**

B) திருநெல்வேலி

C) சென்னை

D) கடலூர்

**விளக்கம்: முத்து நகரம் என்று அழைக்கப்படும் நகரம் தூத்துக்குடி. பழங்காலத்தில் முத்துக் குளித்தல் இங்கு சிறப்பாக நடைபெற்றதால் இந்நகரம் இப்பெயர் பெற்றது.**

51) பொருத்துக

அ. வைகுக – 1. புதுவருவாய்

ஆ. ஓதை – 2. அஞ்சி

இ. வெரீஇ – 3. ஓசை

ஈ. யாணர் – 4. தங்குக

A) 2, 3, 4, 1

B) 4, 1, 2, 3

C) 4, 2, 3, 1

**D) 4, 3, 2, 1**

**விளக்கம்: வைகுக – தங்குக.**

**ஓதை – ஓசை**

**வெரீஇ – அஞ்சி**

**யாணர் – புதுவருவாய்**

52) பேருந்து கட்டுமானத் தொழிலின் சிகரமாக விளங்கும் மாவட்டம் எது?

A) சென்னை

B) கோவை

C) விருதுநகர்

**D) கரூர்**

**விளக்கம்: பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது. தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.**

53) பண்டைய சேர நாடு என்பது கீழ்க்கண்ட எந்த பகுதியை உள்ளடக்கியது அல்ல?

A) சேலம்

B) கோவை

**C) கரூர்**

D) கேரளா

**விளக்கம்: பண்டைய சேரநாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்த பகுதியாக விளங்கியது. சேலம், கோவை கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டன. இப்பகுதிகளை சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்தனர்.**

54) இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின். அது _____________புணர்ச்சி எனப்படும்?

A) இயல்பு புணர்ச்சி

**B) விகாரப் புணர்ச்சி**

C) A மற்றும் B

D) உடம்படுமெய் புணர்ச்சி

**விளக்கம்: இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின். அது விகாரப் புணர்ச்சி எனப்படும். (எ.கா) உடல் + ஓம்பல். (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று) .**

55) பொருத்துக.

அ. தூத்துக்குடி – 1. தீப நகரம்

ஆ. சிவகாசி – 2. தூங்காநரகம்

இ. மதுரை – 3. குட்டி ஜப்பான்

ஈ. திருவண்ணாமலை – 4. முத்து நகரம்

A) 1, 2, 3, 4

B) 2, 3, 4, 1

C) 3, 4, 2, 1

**D) 4, 3, 2, 1**

**விளக்கம்: தூத்துக்குடி – முத்து நகரம்**

**சிவகாசி – குட்டி ஜப்பான்**

**மதுரை – தூங்கா நகரம்**

**திருவண்ணாமலை – தீப நகரம்.**

56) கொங்கு மண்டலத்திற்கு பொருந்தாத பகுதி எது?

A) நீலகிரி

B) கோயமுத்தூர்

C) திருப்பூர்

**D) திருச்சி**

**விளக்கம்: கொங்கு மண்டலம் என்பது இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக கொங்கு மண்டலம் விளங்கியது.**

57) ஆன் பொருநை என்று அழைக்கப்படும் ஆறு எது?

A) வைகை

B) நொய்யல்

**C) அமராவதி**

D) சிற்றாறு

**விளக்கம்: ஆன் பொருநை என்று அழைக்கப்படும் ஆறு அமராவதி. இந்நதி கொங்கு மண்டலத்தை வளம் செழிக்கச் செய்த ஒரு நதியாகும்.**

58) கூற்றுகளை ஆராய்க

1. ஓர் எழுத்து தோன்றுவது – திரிதல் புணர்ச்சி

2. ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது – தோன்றல் புணர்ச்சி

3. ஓர் எழுத்து மறைவது – கெடுதல் புணர்ச்சி

A) 1, 2 சரி

**B) 3 மட்டும் சரி**

C) 1, 3 சரி

D) 2, 3 சரி

**விளக்கம்: 1. ஓர் எழுத்து தோன்றுவது – தோன்றல் புணர்ச்சி**

winmeen.com

**2. ஓர் எழுத்து வேறு எழுத்தாக மாறுவது – திரிதல் புணர்ச்சி**

**3. ஓர் எழுத்து மறைவது – கெடுதல் புணர்ச்சி**

59) பொருத்துக.

அ. வாரி – 1. வாட்டம் இன்றி

ஆ. எஞ்சாமை – 2. வருவாய்

இ. முட்டாது – 3. தட்டுப்பாடின்றி

ஈ. ஒட்டாது – 4. குறைவின்றி

A) 2, 3, 4, 1

**B) 2, 4, 3, 1**

C) 2, 3, 4, 1

D) 2, 1, 3, 4

**விளக்கம்: வாரி – வருவாய்**

**எஞ்சாமை – குறைவின்றி**

**முட்டாது – தட்டுப்பாடின்றி**

**ஒட்டாது – வாட்டம் இன்றி.**

60) வஞ்சி மாநகரம் என்று அழைக்கப்படும் ஊர் எது?

A) நாமக்கல்

**B) கரூர்**

C) திருச்சி

D) மதுரை

**விளக்கம்: கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய கரூர் நகரமே வஞ்சி மாநகரம் என்று அழைக்கப்படுகிறது.**

61) விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை,**

1. **தோன்றல்**
2. **திரிதல்**
3. **கெடுதல்**

62) கொங்கு மண்டலத்தை வளப்படுத்தாத ஆறு எது?

A) காவிரி

B) பவானி

C) நொய்யல்

**D) வைகை**

**விளக்கம்: கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை என்று அழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் வளம் கொழிக்கச் செய்தன.**

63) நாமக்கல் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன.

2. முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் இந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றன.

3. சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிகமாக இயங்கும் மாவட்டமாக விளங்குகிறது.

A) 1 மட்டும் சரி

**B) 1, 3 சரி**

C) 2 மட்டும் சரி

D) 2, 3 சரி

**விளக்கம்: 1. பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன.**

**2. முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றன.**

**3. சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிகமாக இயங்கும் மாவட்டமாக விளங்குகிறது.**

64) …………………போரின்

உருகெழும் ஓதை வெரீஇப் பெடையோடு…இவ்வரியில் குறிப்பிடப்படும் வெரீஇப் என்ற சொல்லின் பொருள்?

A) நீர் பெருக்கம்

**B) அஞ்சி**

C) ஓசை

D) வருவாய்

**விளக்கம்: இப்பாடலடிகளில் வெரீஇ என்றால் அஞ்சி என்று பொருள். நெல் போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சும் என்பதே இவ்வரியின் பொருளாகும்.**

65) பொருத்துக.

அ. தமிழ் + தாய் – 1. திரிதல்

ஆ. வில் + கொடி – 2. கெடுதல்

இ. மணம் + மகிழ்ச்சி – 3. தோன்றல்

A) 3, 2, 1

**B) 3, 1, 2**

C) 1, 3, 2

D) 2, 3, 1

**விளக்கம்: தமிழ் + தாய் – தோன்றல்**

**வில் + கொடி – திரிதல்**

**மணம் + மகிழ்ச்சி – கெடுதல்**

66) இந்தியாவின் முதல் ஆயத்த ஆடை பூங்காவை பெற்ற மாவட்டம் எது?

A) கரூர்

B) கோவை

**C) திருப்பூர்**

D) ஈரோடு

**விளக்கம்: இந்தியாவின் முதல் ஆயத்த ஆடை பூங்கா (நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா) அமைக்கப்பட்டுள்ள மாவட்டம் திருப்பூர். இது பின்னலாடை நகரம் என்று அழைக்கப்படுகிறது.**

67) மஞ்சள் சந்தையுடன் தொடர்புடைய மாவட்டம் எது?

A) கோவை

**B) ஈரோடு**

C) சேலம்

D) தருமபுரி

**விளக்கம்: தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில்தான் நடைபெறுகிறது. துணி நூற்பாலைகள், எண்ணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், பெருமளவில் உள்ளன. நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன.**

68) பொற்சிலை என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக?

**A) பொன் + சிலை**

B) பொற் + சிலை

C) பொ + சிலை

D) பொன்னு + சிலை

**விளக்கம்: பொற்சிலை என்னும் சொல்லை பிரித்து எழுதக்கிடைப்பது பொன் + சிலை. இது திரிதல் புணர்ச்சி ஆகும்.**

69) கூற்று: தமிழ்நாட்டின் ஹாலாந்து – திண்டுக்கல்

காரணம்: அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்

A) கூற்று தவறு, காரணம் சரி

**B) கூற்று சரி, காரணம் தவறு**

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: தமிழ்நாட்டின் ஹாலாந்து என்று அழைக்கப்படும் மாவட்டம் திண்டுக்கல். காரணம் இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.**

70) வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு – இதில் குறிப்பிடப்படும் மூவரில் பொருந்தாதவர்?

A) பாண்டியர்

**B) பல்லவர்**

C) சேரர்

D) சோழர்

**விளக்கம்: வண்புகழ் மூவர் தண்பொழில் வனப்பு என்று குறிப்பிடும் நூல் தொல்காப்பியம். இதில் மூவர் என்று குறுப்பிடப்படுபவர்கள் சேரர், சோழர், பாண்டியர்கள். தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாக இவ்வரிகள் கூறுகின்றன. இதே போல் தமிழகம் சேர, சோழ, பாண்டியருக்கு உரியதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.**

71) பாலாடை இச்சொல்லுக்குரிய புணர்ச்சி?

**A) இயல்பு**

B) தோன்றல்

C) திரதல்

D) கெடுதல்

**விளக்கம்: பால் + ஆடை = பாலாடை. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்தாகிய ல் என்னும் மெய் எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தாகிய ஆ என்னும் உயிர் எழுத்தும் இணைந்து லா என்னும் உயிர்மெய் எழுத்து தோன்றுகிறது. இங்கு தோன்றல், திரிதல், கெடுதல் போன்றவை நிகழவில்லை. எனவே இது இயல்பு புணர்ச்சி எனப்படும்.**

72) கீழக்கண்டவற்றில் எது நாமக்கல் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இல்லை?

A) பச்சைமலை

**B) கஞ்சமலை**

C) கொல்லிமலை

D) சேர்வராயன் மலை

**விளக்கம்: பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை நாமக்கல் மாவட்டத்தில் உள்ளன. கஞ்சமலை என்பது சேலம் மாவட்டத்தில் உள்ளது.**

73) தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) ஈரோடு

B) கோவை

**C) திருப்பூர்**

D) மதுரை

**விளக்கம்: தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது. காங்கயம் என்ற இடம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது.**

74) பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலின் பதிப்பாசிரியர் யார்?

**A) அ. கௌரன்**

B) பெ. தூரன்

C) கலாப்பிரியா

D) கதிரைவேலனார்

**விளக்கம்: கொங்குநாட்டு மழைச்சோற்று வழிபாடு என்பது பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள ஒரு கட்டுரை ஆகும். இந்நூலின் பதிப்பாசிரியர் அ.கௌரன்.**

75) சுங்குடிச்சேலைக்கு பெயர் பெற்ற இடம்?

A) திண்டுக்கல்

B) பத்தமடை

C) சென்னிமலை

**D) சின்னாளப்பட்டி**

**விளக்கம்: சின்னாளப்பட்டி சுங்குடிச் சேலைக்குப் பெயர்பெற்றது. இது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளது.**

**திண்டுக்கல் – பூட்டு**

**பத்தமடை – பாய்**

**சென்னிமலை – போர்வை.**

76) மனம் + மகிழ்ச்சி என்ற சொல்லைச் சேர்த்தெழுதுக

**A) மனமகிழ்ச்சி**

B) மனம்மகிழ்ச்சி

C) மமகிழ்ச்சி

D) மனமிகிழ்ச்சி

**விளக்கம்: மனம் + மகிழ்ச்சி என்ற சொல்லை சேர்த்தெழுதக் கிடைப்பது மனமகிழ்ச்சி.**

77) கனத்த மழை என்னும் சொல்லின் பொருள்?

**A) பெருமழை**

B) சிறு மழை

C) எடைமிகுந்த மழை

D) எடைகுறைந்த மழை

**விளக்கம்: கனத்த மழை என்றால் பெருமழை என்று பொருள். ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழை பொய்த்துவிட்டால் நீர்நிலைகளும் வற்றிவிடும். நாட்டில் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடும். அத்தகைய காலங்களில் மழை வேண்டி மக்கள் வழிபாடு செய்வர்.**

78) திருப்பூர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பின்னலாடை நகரம்

2. விவசாயத்தின் மூலம் தமிழ்நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது.

3. தமிழகத்தின் முதல் ஆயத்த ஆடை பூங்கா (நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா) இம்மாவட்டத்தில் தான் அமைக்கப்பட்டது.

4. தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

A) 1, 2 சரி

B) 1, 2, 4 சரி

C) 1, 2, 3, 4 சரி

**D) 1, 4 சரி**

**விளக்கம்: 1. பின்னலாடை நகரம்**

**2. பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் மூலம் தமிழ்நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது.**

**3. இந்தியாவின் முதல் ஆயத்த ஆடை பூங்கா (நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா) இம்மாவட்டத்தில் தான் அமைக்கப்பட்டது.**

**4. தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.**

79) வாசலெல்லாம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) வாசல் + எல்லாம்**

B) வாசல் + எலாம்

C) வாசம் + எல்லாம்

D) வாசு + எல்லம்

**விளக்கம்: வாசலெல்லாம் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது வாசல் + எல்லாம்.**

80) திண்டுக்கல் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. மஞ்சள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

2. அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்.

3. காங்கயம் காளைகள் இம்மாவட்டத்தில் தான் உள்ளது.

4. தமிழ்நாட்டின் ஹாலாந்து என்று அழைக்கப்படுகிறது.

A) 1, 3 சரி

B) 2, 3 சரி

C) 1, 4 சரி

**D) 2, 4 சரி**

**விளக்கம்: 1. மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.**

**2. அரிசி, தோல், பூட்டுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்.**

**3. சின்னாளப்பட்டி இம்மாவட்டத்தில் தான் உள்ளது.**

**4. தமிழ்நாட்டின் ஹாலாந்து என்று அழைக்கப்படுகிறது.**

81) ………………போரின்

உருகெழும் ஓதை வெரீஇப் பெடையோடு……இவ்வரியில் குறிப்பிடப்படும் பெடை என்ற சொல்லின் பொருள்?

A) படை

**B) பெண் நாரை**

C) பெறுதல்

D) அஞ்சி

**விளக்கம்: இப்பாடலடிகளில் பெடை என்று குறிப்பிடப்படுவது பெண்நாரை ஆகும். நெல் போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சித் தம் பெண் பறவைகளோடு பிரிந்து செல்லும் என்பதே இவ்வரியின் பொருளாகும்.**

82) கரூர்–க்கு பொருத்தமில்லாத ஒன்றை தெரிவு செய்க.

A) பேருந்து கட்டுமானத் தொழிலின் சிகரமாக விளங்குகிறது

B) கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.

**C) விசைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டம்**

D) தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாக குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டம்

**விளக்கம்: கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதி,**

**1. கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர்பெற்ற மாவட்டம்**

**2. தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாக குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டம்**

**3. பேருந்து கட்டுமானத் தொழிலின் சிகரமாக விளங்குகிறது**

**4. கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.**

83) ஒரு நாட்டு மக்களின் நாகரீக நல்வாழ்விற்கு அடிப்படையானவைகளில் பொருந்தாதது எது?

A) உழவு

B) கைத்தொழில்

C) வணிகம்

**D) இயந்திர உற்பத்தி**

**விளக்கம்: உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரீக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகும் என்பர்.**

84) யாணர்த் தகாஅவன் அகன்றலை நாடே! என்ற வரியில் குறிப்பிடப்படும் நாடு எந்த நாடு?

A) சோழ நாடு

**B) சேர நாடு**

C) பாண்டிய நாடு

D) தொண்டைநாடு

**விளக்கம்: இவ்வரியில் குறிப்பிடப்படும் நாடு சேர நாடு ஆகும். தகடூர் யாத்திரை என்னும் நூலில் சேர நாட்டின் நில வளம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.**

85) கோயம்புத்தூர் என்னும் பெயர் எந்த பெயரில் இருந்து மருவி வந்துள்ளது?

A) கோயன்புத்தூர்

**B) கோவன்புத்தூர்**

C) கோவை

D) கோவையன் புத்தூர்

**விளக்கம்: கோவன்புத்தூர் என்னும் பெயரை கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது.**

86) கூற்று: கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது

காரணம்: அந்நாட்டின் நாட்டின் இயற்கை அமைப்பு

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்திருந்தது.**

87) கிழக்குத்தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடம்?

A) கோயம்புத்தூர்

**B) நீலகிரி**

C) ஊட்டி

D) கன்னியாகுமரி

**விளக்கம்: கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே நீலகிரி ஆகும். இம்மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாலானது. காடுகள் நிறைந்த இம்மாவட்டத்தில் தோட்டப்பயிர்களான காப்பி, தேயிலை, தைலமரம் (யூகலிப்டஸ்) வளர்க்கப்படுகிறது.**

88) கூற்று: கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டவர் சேரன் செங்குட்டுவன்

காரணம்: கடற்போர் வெற்றியால் செங்குட்டுவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும்D சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான்.**

89) யாணர்த் தகாஅவன் அகன்றலை நாடே! என்ற வரியில் குறிப்பிடப்படும் யாணர் என்ற சொல்லின் பொருள்?

A) பெண் நாரை

B) விவசாயி

C) பனையோலைப் பெட்டி

**D) புதுவருவாய்**

**விளக்கம்: யாணர் என்றால் புதுவருவாய் என்று பொருள். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் தகடூர் யாத்திரை. இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.**

90) மண் + அழகு என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக்கிடைப்பது?

A) மண்அழகு

**B) மண்ணழகு**

C) மண்ண்ழகு

D) இவற்றில் எதுவுமில்லை

**விளக்கம்: மண் + அழகு என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது மண்ணழகு. இது இயல்புப் புணர்ச்சியாகும்.**

91) ஈரோடு மாவட்டம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பரப்பளவில் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம்.

2. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை இம்மாவட்டத்தில்தான் நடைபெறுகின்றது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பரப்பளவில் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம்.**

**2. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை இம்மாவட்டத்தில்தான் நடைபெறுகின்றது.**

92) சேர மன்னர்களின் சிறந்த துறைமுகமாக விளங்கியது?

A) வஞ்சி

B) பூம்புகார்

**C) முசிறி**

D) மாமல்லபுரம்

**விளக்கம்: முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.**

93) பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட இச்செய்தியை கூறும் நூல்?

A) அகநானூறு

**B) புறநானூறு**

C) கலித்தொகை

D) பரிபாடல்

**விளக்கம்: மீனோடு நெற்குவைஇ**

**மிசையம்பியின் மனைமறுக்குந்து**

………………..

**கலந்தந்த பொற்பரிசும்**

**கழித்தோணியால் கரைசேர்க்குந்து என்ற புறநானூறு வரிகள் மூலம் பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட இச்செய்தியை அறியலாம்.**

94) கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களை அடக்கியவர் யார்?

**A சேரர்**

B) பாண்டியர்

C) சோழர்

D) பல்லவர்

**விளக்கம்: கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்கள் அடக்கினர். செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான்.**

## 8th Tamil Unit 7 Questions

1) நான் இதுவரை போரைக் கண்டதில்லை. ஆனால் அதியமான் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவன் என்று கூறியவர்?

A) ஔவையார்

**B) தொண்டைமான்**

C) இராசராசன்

D) விக்கிரமசோழன்

**விளக்கம்: நான் இதுவரை போரைக் கண்டதில்லை. ஆனால் அதியமான் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவன் என்று அதியமானிடமிருந்து தூது வந்த ஔவையிடம் தொண்டைமான் கூறினார்.**

2) செயங்கொண்டார் எந்த ஊரினைச் சார்ந்தவர்?

A) **தீபங்குடி**

B) திருப்பத்தூர்

C) மருதூர்

D) எட்டையபுரம்

**விளக்கம்: செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர். இவர் கலிங்கத்துப்பரணி என்னும் நூலை எழுதியுள்ளார். பரணி என்பது 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும்.**

3) எதுகொல் இது மாயை ஒன்றுகொல்

எரிகொல் மறலிகொள் ஊழி யின்கடை – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் மறலி என்ற சொல்லின் பொருள்?

A) வீரர்

**B) காலன்**

C) கலிங்கர்

D) சோழர்

**விளக்கம்:** மறலி என்றால் காலன் என்று பொருள். சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர். இது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர். தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணினர்.

4) சிங்கம் வாழுமிடத்திற்கு பொருத்தமானது எது?

A) மாயை

B) ஊழி

**C) முழை**

D) அலை

**விளக்கம்: சிங்கம் முழையில் வாழும். முழை என்றால் மலைக்குகை என்று பொருள். பிலம் என்ற சொல்லின் பொருளும் மலைக்குகை.**

5) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு எது?

A) வீரம்

**B) அச்சம்**

C) நாணம்

D) மகிழ்ச்சி

**விளக்கம்: கலிங்க வீரர்களிடையே அச்சம் என்னும் உணர்வு தோன்றி போர்க்களத்தில் இருந்து புறமுதுகு காட்டி ஓடினர் என்று செயங்கொண்டார் தம் நூலான கலிங்கத்துப் பரணியில் குறிப்பிட்டுள்ளார்.**

6) வெங்கரி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

winmeen.com

A) வெம் + கரி

**B) வெம்மை + கரி**

C) வெண் + கரி

D) வெங் + கரி

**விளக்கம்: வெங்கரி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது வெம்மை + கரி. பண்புப் பெயர் புணர்ச்சி விதிப்படி, வெம்மை + கரி என்னும் சொல்லை வெங்கரி என சேர்த்து எழுதலாம்.**

7) என்றிருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) என் + இருள்

B) எட்டு + இருள்

C) என்ற + இருள்

**D) என்று + இருள்**

**விளக்கம்:என்றிருள் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது என்று + இருள் ஆகும்.**

8) போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) போன்றன

B) போலன்றன

**C) போலுடன்றன**

D) போல்உடன்றன

**விளக்கம்:போல் + உடன்றன என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைப்பது போலுடன்றன. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து ல். வருமொழியின் முதல் எழுத்து உ. உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ல் + உ = லு எனப் புணர்ந்து போலுடன்றன என கிடைக்கும்.**

9) சீவனில் லாமல்

மொத்தமாய்த் தேசத்தை

முற்றுகையிட்ட

மூட மூட

நிர் மூட உறக்கத்தை________இவ்வரியில் சீவன் என்று குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் என்ன?

A) உண்மை

B) உலகம்

C) சிவபெருமான்

**D) உயிர்**

**விளக்கம்: இவ்வரிகளில் சீவன் என்று குறிப்பிடப்படுவது உயிர் ஆகும். நம் நாடு ஆங்கிலேயருக்கு கீழ் 300 ஆண்டுகள் அடிமைப்பட்டு கிடந்ததை மீரா தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

10) இதந்தரும் இந்தச்

சுதந்திர நாளைச்

சொந்தம் கொண்டாடத்

தந்த பூமியைத்

தமிழால் வணங்குவோம் என்று பாடியவர் யார்?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) மு.வ

**D) மீரா**

**விளக்கம்: இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த நம் தாய்நாட்டை தமிழால் வணங்குவோம் என்று பாடியவர் மீரா.**

11) வானில் முழுநிலவு அழகாகத்___________அளித்தது?

A) தயவு

**B) தரிசனம்**

C) துணிவு

D) தயக்கம்

**விளக்கம்: வானில் முழுநிலவு அழகாகத் தரிசனம் அளித்தது. தரிசனம் என்றால் காட்சி என்று பொருள்.**

12) இந்த____________முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.

**A) வையம்**

B) வானம்

C) ஆழி

D) கானகம்

**விளக்கம்: இந்த வையம் முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு. வையம் என்றால் உலகம் என்று பொருள்.**

13) 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) சீவ + நில்லாமல்

B) சீவன் + நில்லாமல்

**C) சீவன் + இல்லாமல்**

D) சீவ + இல்லாமல்

**விளக்கம்: சீவனில்லாமல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது சீவன் + இல்லாமல் என்பதாகும்.**

14) எதுகொல் இது மாயை ஒன்றுகொல்

எரிகொல் மறலிகொள் ஊழி யின்கடை – இவ்வரிகளில் குறிப்பிடப்படும் ஊழியின் கடை என்ற சொல்லின் பொருள்?

A) நல்லகாலம்

**B) இறுதிகாலம்**

C) போர் காலம்

D) உழைக்கத் தகுந்த காலம்

**விளக்கம்: ஊழியின் கடை என்றால் இறுதிகாலம் என்று பொருள். சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர். இது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்கவந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனே என அஞ்சினர். தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணினர்.**

15) 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) விலம் + கொடித்து

B) விலம் + ஒடித்து

C) விலன் + ஒடித்து

**D) விலங்கு + ஒடித்து**

**விளக்கம்: விலங்கொடித்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது விலங்கு + ஒடித்து ஆகும்.**

16) எம்.ஜி.ஆர் எப்போது பிறந்தார்?

**A) 1917 ஜனவரி 17**

B) 1910 ஜனவரி 17

C) 1918 ஜனவரி 17

D) 1915 ஜனவரி 17

**விளக்கம்: எம்.ஜி.ஆர் 1917 ஜனவரி 17–ஆம் இலங்கையிலுள்ள கண்டியில் பிறந்தார். இவரின் பெற்றோர் கேரளாவைச் சேர்ந்தவர்கள்.**

17) காளியாய்ச் சீறிக்

கைவிலங் கொடித்து

பகையைத் துடைத்து

சத்திய நெஞ்சின்

சபதம் முடித்து

கூந்தல் முடித்துக்

குங்குமப் பொட்டு வைத்து

ஆனந்த தரிசனம்

அளித்து நின்றது – இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) ஆங்கிலேயர்கள்

B) மீரா

C) இந்தியா

**D) பாரத அன்னை**

**விளக்கம்: அடிமையாய் தவித்துக் கொண்டிருந்து இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்த நாள் இன்று என்று பாரத அன்னையை தன் பாடலில் கூறியுள்ளார் மீரா.**

18) வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி – இவ்வரிகளில் கரி என்ற சொல்லின் பொருள்?

**A) யானை**

B) குதிரை

C) கருமை நிறம்

D) ஊண்

**விளக்கம்: கரி என்றால் யானையைக் குறிக்கும். வேழம் என்றாலும் யானை ஆகும்.**

**களிறு – ஆண் யானை**

**பிடி – பெண் யானை**

19) காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) காட்டைஎரித்து

**B) காட்டையெரித்து**

C) காடுஎரித்து

D) காடுயெரித்து

**விளக்கம்: காட்டை + எரித்து என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் – காட்டையெரித்து. இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து டை. வருமொழியின் முதல் எழுத்து எ. டை என்னும் எழுத்தை பிரித்தால் டை = ட் + ஐ.**

**காட் + ட் + எரித்து (உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும்)**

**கட்டையெரித்து (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)**

20) இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

**A) இதந்தரும்**

B) இதம்தரும்

C) இதத்தரும்

D) இதைத்தரும்

**விளக்கம்: இதம் + தரும் என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் இதந்தரும்..**

21) இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்

இருவர் ஒருவழி போகல் இன்றியே – இவ்வரிகளில் தூறு என்ற சொல்லின் பொருள்?

A) மழைச்சாரல்

B) யானைக் கூட்டம்

**C) புதர்**

D) காலன்

**விளக்கம்: தூறு என்றால் புதர் என்று பொருள். கலிங்கர்களுக்கு எதிரான போரில் சோழர்களின் படையைப் பார்த்து அஞ்சி கலிங்கர்கள் எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.**

22) முன்னூறு வருடமாய் முற்றுகையிட்ட அந்நிய இருட்டின் அரக்கக் கூத்து முடிந்தது – இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) மன்னர்கள்

B) இந்திய மக்கள்

**C) ஆங்கிலேயர்கள்**

D) இந்திய அரசு

**விளக்கம்: முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்று ஆங்கிலேயர்களின் ஆட்சி பற்றி மீரா குறிப்பிடுகிறார்.**

23) பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை சத்துணவுத்திட்டமாக மாற்றியவர்?

A) காமராசர்

B) அண்ணாதுரை

**C) எம்.ஜி ராமச்சந்திரன்**

D) கலைஞர் மு. கருணாநிதி

**விளக்கம்: பள்ளிக்குழந்தைகளுக்குக் காய்கறிகள், பருப்பு முதலியவற்றுடன் கூடிய உணவு வழங்கப்படும். இந்தத் திட்டத்தை சத்துணவுத் திட்டம் என அழைக்கப்படும் என்ற அறிவித்தார் எம்.ஜி. ராமச்சந்திரன். காமராசர் தான் மதிய உணவுத்திட்டத்தை தொடங்கினார்.**

**மதிய உணவுத்திட்டம் – காமராசர்**

**சத்துணவுத்திட்டம் – எம்.ஜி.ஆர்.**

24) கூற்று: மக்கள் திலகம், புரட்சி நடிகர் என்று மக்களால் அழைக்கப்பட்டவர் – எம்.ஜி. ஆர்

காரணம்: பள்ளிகளில் பசியுடன் படிக்கும் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்தார் எம்.ஜி. ராமச்சந்திரன்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காணரம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.

**விளக்கம்: மக்கள் திலகம், புரட்சி நடிகர் என்று மக்களால் அழைக்கப்பட்டவர் – எம்.ஜி. ஆர். காரணம் தாம் ஏற்று நடித்த கதைமாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்.**

25) மூச்சுக் காற்றை

மோகித்து நுழைத்து

புரட்சிப்

புல்லாங் குழலில்

பூபாளம் இசைத்தது

எந்த நாளோ

அந்த நாள் இது – இதில் மோகித்து என்ற சொல்லின் பொருள்.

A) சுவாசித்து

B) உயிர்பெற்று

C) சூளுரைத்து

**D) விரும்பி**

**விளக்கம்: மோகித்து என்னும் சொல்லின் பொருள் விரும்பி. இப்பாடல் வரிகள் சுதந்திரம் பற்றிய மீராவின் வரிகள் ஆகும்.**

26) எம்.ஜி. ராமச்சந்திரனுக்குப் பொருந்தாதது எது?

A) நடிகர்

B) தயாரிப்பாளர்

C) இயக்குநர்

**D) கதையாசிரியர்**

**விளக்கம்: எம்.ஜி.ஆர் என்று எல்லோராலும் அறியப்படும் எம்.ஜி. ராமச்சந்திரன் திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.**

27) எம்.ஜி.ஆரின் பெற்றோர் யார்?

A) கோபாலன்–சந்தியா

**B) கோபாலன்–சத்தியபாமா**

C) இராசாராம்–சந்தியா

D) இராசாராம்–சந்தியபாமா

**விளக்கம்: எம்.ஜி.ஆர்–ன் பெற்றோர் கோபாலன்–சத்தியபாமா ஆவார்கள். இவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இலங்கையில் குடிபெயர்ந்தனர்.**

28) எம்.ஜி.ஆர்___________என்னும் ஊரில் கல்வி பயின்றார்?

A) கண்டி

**B) கும்பகோணம்**

C) சென்னை

D) மதுரை

**விளக்கம்: எம்.ஜி.ஆர்–ன் பெற்றோர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இலங்கையில் குடிபெயர்ந்த வாழ்ந்து வந்தார்கள். பின் தமிழகத்தின் கும்பகோணத்தில் குடியேனார்கள். கும்பகோணத்திலுள்ள ஆனையடிப் பள்ளியில் பயின்றார்.**

29) அரக்கக் கூத்து

முடிந்தது என்று

முழங்கி நின்றது

எந்த நாளோ

அந்த நாள் இது. இவ்வரிகளில் அந்த நாள் என்று குறிப்பிடப்படுவது?

A) 1950 ஜனவரி 26

B) 1942 ஆகஸ்ட் 08

C) 1930 ஜனவரி 26

**D) 1947 ஆகஸ்ட் 15**

**விளக்கம்: மேற்கண்ட பாடலில் அந்த நாள் என்று மீரா குறிப்பிடுவது ஆகஸ்ட் 15, 1947 ஆகும். இவ்வரிகள் சுதந்திரம் பற்றிய மீராவின் பாடலாகும்.**

30) எம்.ஜி.ஆர்–க்கு எப்போது இந்திய மாமணி பட்டம் வழங்கப்பட்டது?

A) 1987

**B) 1988**

C) 1989

D) 1990

**விளக்கம்: இந்திய அரசு, மிக உயரிய பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988–ஆம் எம்.ஜி.ஆர்–க்கு வழங்கிப் பெருமைப்படுத்தியது. அம்பேத்கருக்கு 1990–ல் பாரத ரத்னா வழங்கப்பட்டது.**

31) வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி

மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம் – இவ்வரிகளில் பிலம் என்ற சொல்லின் பொருள்?

A) புதர்

B) நெருங்குதல்

C) யானை

**D) மலைக்குகை**

**விளக்கம்: பிலம் என்றால் என்றால் மலைக்குகையைக் குறிக்கும். கலிங்க நாட்டிற்கு எதிரான போரில் சோழர்களின் படையைக் கண்டு கலிங்கர்கள் எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.**

32) எம்.ஜி.ஆர்–க்கு எந்த பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது?

A) அண்ணா பல்கலைக்கழகம்

B) அண்ணாமலை பல்லைக்கழகம்

C) இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம், சென்னை

**D) சென்னைப் பல்கலைக்கழகம்**

**விளக்கம்: சென்னைப் பல்கலைக் கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் வழங்கியது.**

33) எம்.ஜி.ஆர் படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் என்ன?

A) நடிப்பு ஆர்வம்

B) பள்ளி இல்லாமை

**C) குடும்ப வறுமை**

D) படிப்பில் ஆர்வமில்லை

**விளக்கம்: எம்.ஜி.ஆர் படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் குடும்ப வறுமை. இதன் காரணமாகவே அவர் முதலமைச்சர் ஆனதும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அரும்பாடுபட்டார். உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித் திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும்திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை வழங்கினார்.**

34) சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

ஆதல் நின்னகத்து அடக்கிச்

சாதல் நீங்க எமக்கீந் தனையே – என்று பாடியவர் யார்?

A) அதியமான்

**B) ஔவையார்**

C) தொண்டைமான்

D) கபிலர்

**விளக்கம்: கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நீண்ட நாள் நோயின்றி வாழ வைக்கும் அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது ஔவைக்கு வழங்கினார். அதனை பெற்ற ஔவையார் மனம் மகிழ்ந்து மேற்கண்ட வரிகளை பாடினார்.**

35) கலிங்கத்துப் பரணி பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இது 96 வகை சிற்றிலங்கியங்களில் ஒன்றாகும்.

2. தமிழில் தோன்றிய முதல் பரணி இதுவே.

3. கலித்தாழிசையால் இயற்றப்பட்டது

4. 499 தாழிசைகள் கொண்டது.

A) 1, 3 சரி

**B) 1, 2, 3 சரி**

C) 1, 3, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இது 96 வகை சிற்றிலங்கியங்களில் ஒன்றாகும்.**

**2. தமிழில் தோன்றிய முதல் பரணி இதுவே.**

**3. கலித்தாழிசையால் இயற்றப்பட்டது**

**4. 599 தாழிசைகள் கொண்டது.**

36) மீரா நடத்திய இதழ்?

A) குடியரசு

B) இந்தியா

**C) அன்னம் விடு தூது**

D) முல்லை

**விளக்கம்: மீரா நடத்திய இதழ் – அன்னம் விடு தூது.**

**குடியரசு – பெரியார்**

**இந்தியா – பாரதியார்**

**முல்லை – கண்ணதாசன்**

37) கூற்றுகளை ஆராய்க.

1. ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும்.

2. எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும்.

3. வல்லின மெய்எழுத்துக்களை சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது தான்.

4. செய்திகளில் கருத்துபிழையோ, பெர்ருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கு வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.

A) 1, 2, 4 சரி

**B) 1, 4 சரி**

C) 1, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும்.**

**2. எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகாது**

**3. வல்லின மெய்எழுத்துக்களை சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமன்று**

**4. செய்திகளில் கருத்துபிழையோ, பெர்ருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கு வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.**

38) அருவர் வருவர் எனா இறைஞ்சினர்

அபயம் அபயம் எனநடுங்கியே – இதில் அருவர் என்று குறிப்பிடப்படுபவர்?

A) சோழர்கள்

B) கலிங்கர்கள்

**C) தமிழர்கள்**

D) சேரர்கள்

**விளக்கம்: அருவர் என்றால் தமிழர்கள் என்று பொருள். கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர். தஞ்சம் வேண்டி வணங்கினர்.**

39) சுதந்திரம் பற்றிய மீராவின் பாடல் அவரது எந்த நூலில் இருந்து தரப்பட்டது?

A) அன்னம் விடு தூது

B) குக்கூ

C) மூன்றும் ஆறும்

**D) கோடையும் வசந்தமும்**

**விளக்கம்: இந்திய சுதந்திரம் பற்றிய மீராவின் பாடல் அவரின் நூல்களில் ஒன்றான கோடையும் வசந்தமும் என்னும் நூலிலிருந்து தரப்பட்டுள்ளது.**

40) கூற்று: பொன்மனச் செம்மல் என்று அழைக்கப்படுபவர் எம்.ஜி.ஆர்

காரணம்: பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கினார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காணரம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: பொன்மனச் செம்மல் என்று அழைக்கப்படுபவர் எம்.ஜி.ஆர். காரணம் பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கினார். தன்னிடம் பணம் இல்லாவிட்டாலும் இந்தியப் படைவீரர் நலச்சங்கத்திற்கு கடனாகப் பணத்தை பெற்று கொடை வழங்கினார்.**

41) தமிழின்மீது நீ கொண்டுள்ள பற்று என் உள்ளத்தை உருகச் செய்கிறது. உன்னைப் புகழ முடியாமல் என் தமிழே தடுமாறுகிறது. இதில் குறிப்பிடப்படுபவர்?

A) முருகன்

B) கபிலர்

**C) ஔவையார்**

D) அதியமான்

**விளக்கம்: அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது ஔவைக்கு வழங்கினார் அதிமான். அதனை உண்டு மகிழ்ந்த ஔவையார் தமிழின்மீது நீ; கொண்டுள்ள பற்று என் உள்ளத்தை உருகச் செய்கிறது. உன்னைப் புகழ முடியாமல் என் தமிழே தடுமாறுகிறது என்று கூறினார்.**

42) வல்லினம் மிகும் இடங்கள் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்

2. எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்

3. இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

4. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகும்

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

**D) 4 மட்டும் தவறு**

**விளக்கம்: 1. அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்**

**2. எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்**

**3. இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.**

**4. எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.**

43) இந்திய அரசு மிகச்சிறந்த நடிகர் என்ற வகையில் எம்.ஜி.ஆர்–க்கு வழங்கிய விருது?

A) பாரதரத்னா

B) தாதாசாகிப் பால்கே

**C) பாரத்**

D) பத்ம ஸ்ரீ

**விளக்கம்: திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார் எம்.ஜி.ஆர். இவருக்கு இந்திய அரசு மிகச்சிறந்த நடிகருக்கு வழங்கப்படும் பாரத் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.**

44) முழைகள் நுழைவர்கள் போரில் இன்றுநம்

முதுகு செயும்உப காரம் என்பரே – இதில் முழைகள் என்று குறிப்பிடப்படுவது?

A) புதர்கள்

B) வழிகள்

**C) மலைக்குகை**

D) வணங்குதல்

**விளக்கம்: முழைகள் என்றால் மலைக்குகை என்று பொருள். சோழ மன்னின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின. அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர். ஏனையோர் புறமுதுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.**

45) மீராவின் நூல்களில் பொருந்தாதது?

A) ஊசிகள்

B) குக்கூ

C) வா இந்தப் பக்கம்

D) **அன்னம் விடு தூது**

**விளக்கம்: அன்னம் விடு தூது என்பது அவர் நடத்திய இதழ். மீராவின் நூல்கள்.**

**1. ஊசிகள்**

**2. குக்கூ**

**3. மூன்றும் ஆறும்**

**4. வா இந்தப்பக்கம்**

**5. கோடையும் வசந்தமும்**

46) எந்த வேற்றுமை உருபு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்?

A) இரண்டாம் வேற்றுமை உருபு

B) நான்காம் வேற்றுமை உருபு

C) மூன்றாம் வேற்றுமை உருபு

**D) A மற்றும் B**

**விளக்கம்: இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்**

**நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.**

47) மலர்ப்பாதம் என்ற சொல்லின் இலக்கண குறிப்பு?

A) எண்ணும்மை

**B) உவமைத்தொகை**

C) உம்மைத்தொகை

D) பெயரெச்சம்

**விளக்கம்: மலர்ப்பாதம் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு – உவமைத்தொகை. இதனை மலர்போன்ற பாதம் என்று பொருள் கொள்ள வேண்டும். இரு சொற்களுக்கு இடையில் போன்ற என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே இதன் இலக்கணக் குறிப்பு உவமைத்தொகை.**

48) என்னைப் போன்ற ஓர் அரசன் இல்லையானால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவிற்சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் அந்த இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது –இக்கூற்றை யார் யாரிடம் கூறினார்.

A) ஔவையார், அதியமான்

**B) அதியமான், ஔவையார்**

C) ஔவையார், கபிலர்

D) அதியமான், தொண்டைமான்

**விளக்கம்: அரிய நெல்லிக்கனியை ஔவையிடம் வழங்கிய அதியமான், ஔவையிடம், என்னைப் போன்ற ஓர் அரசன் இல்லையானால் வேறு ஒருவர் அரசராகிவிடுவார். ஆனால் உங்களைப் போன்ற அறிவிற்சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால் அந்த இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது என்று கூறினார்.**

49) எம்.ஜி.ஆர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவரின் பெற்றோர்கள் கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள்

2. பெற்றோர் குடும்பத்துடன் இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர்.

3. எம்.ஜி.ஆர் இலங்கையிலுள்ள கண்டியில் 1917 ஜனவரி திங்கள் 17–ஆம் நாள் ஐந்தாவது மகனாகப் பிறந்தார்

4. இவரின் பெற்றோர்: கோபாலன்–சத்தியபாமா

A) 1, 2, 3 சரி

B) 1, 2, 4 சரி

C) 1, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. இவரின் பெற்றோர்கள் கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள்**

**2. பெற்றோர் குடும்பத்துடன் இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர்.**

**3. எம்.ஜி.ஆர் இலங்கையிலுள்ள கண்டியில் 1917 ஜனவரி திங்கள் 17–ஆம் நாள் ஐந்தாவது மகனாகப் பிறந்தார்**

**4. இவரின் பெற்றோர்: கோபாலன்–சத்தியபாமா**

50) எம்.ஜி.ஆரின் தாயார், குழந்தைகளுடன் தமிழ்நாட்டிற்கு வந்து எங்கு குடியேறினார்?

A) மயிலாடுதுறை

B) சென்னை

C) சிதம்பரம்

**D) கும்பகோணம்**

**விளக்கம்: கோபாலன்–சத்தியபாமா இணையாருக்கும் ஐந்தாம் மகனாக எம்.ஜி.ஆர் பிறந்தார். இவர் குழந்தையாக இருக்கும் போதே தந்தையை இழந்தார். எம்.ஜி.ஆரின் தாயார் குழந்தைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்து கும்பகோணத்தில் குடியேறினார்.**

51) அதியமானிடம் போர் செய்வதாக அறிவித்த மன்னன் யார்?

A) அரிமர்த்தனர்

B) **தொண்டைமான்**

C) குலோத்துங்கன்

D) இரசேந்திரன்

**விளக்கம்: மன்னன் தொண்டைமான் அதியமானிடம் போர் செய்வதாக அறிவித்தார். இதனை ஒற்றர் மூலம் அறிந்த அதியமான் நம்மீது போர் மேகங்கள் சூழ்ந்தவிட்டன என்று ஔவையிடம் கூறினார்.**

52) அதியமான் போர் கண்டு அஞ்சக்காரணம்?

A) போதிய ஆயுதங்கள் இல்லை

B) போதிய இராணுவ வீரர்கள் இல்லை

C) தொண்டைமானின் வீரம்

**D) போரில் உயிர்கள் மடிதல்**

**விளக்கம்: ஒவ்வொரு போரின் போதும் எவ்வளவு உயிரிழப்புகள்? எவ்வளவு அழிவு? தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள், மகனை இழந்த தாய்மார்கள், அண்ணனை இழந்த தம்பி தங்கைகள் என எத்தனையோ பேரின் கண்ணீர் ஒவ்வொரு போர் வெற்றிக்குப் பின்னாலும் மறைந்திருக்கிறது என்று போரில் உயிர்மடிவதை எண்ணி அதியமான் போரை தவிர்க்க முற்பட்டார்.**

53) மலைக்குகை என்று பொருள் தரும் சொல் எது?

A) பிலம்

B) தூறு

C) முழை

**D) A மற்றும் C**

**விளக்கம்: பிலம் – மலைக்குகை**

**முழை – மலைக்குகை**

**தூறு – புதர்**

54) வாய்ப்பவளம் என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு?

A) உவமைத்தொகை

B) எண்ணும்மை

C) வினையெச்சம்

**D) உருவகம்**

**விளக்கம்: வாயப்பவளம் என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு உருவகம். இங்கு வாய் பவளத்திற்கு ஒப்பாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.**

55) உகரத்தில் முடியும் வினையெச்சங்கள்_____________குற்றியலுகரமாக இருந்தால் மட்டுமே வல்லினம் மிகும்.

A) நெடில்தொடர்

B) மென்தொடர்

C) இடைத்தொடர்

**D) வன்தொடர்**

**விளக்கம்: உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா) பெற்றுக் கொண்டேன், படித்துப்பார்த்தார்.**

56) தமிழக அரசு எம்.ஜி.ஆர்–ன் நினைவைப்போற்றும் வகையில் அவருக்கு செய்துள்ள பணி?

A) பாரத ரத்னா

B) பாரத் பட்டம்

C) டாக்டர் பட்டம்

**D) எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம்**

**விளக்கம்: தமிழக அரசு அவரது நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தை சென்னையில் நிறுவியுள்ளது.**

57) கலிங்கத்துப்பரணியில் யாருடைய போர் பற்றி பேசப்பட்டுள்ளது?

A) முதல் குலோத்துங்கச் சோழன்

B) கருணாகரத் தொண்டைமான்

**C) A மற்றும் B**

D) இரண்டாம் குலோத்தங்கன்

**விளக்கம்: கலிங்கத்துப்பரணியில் முதலாம் குலோத்துங்க சோழன், அவருடைய படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது.**

58) செல்லாக்காசு என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு?

A) பெயரெச்சம்

**B) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

C) வினையெச்சம்

D) எதிர்மறை வினையெச்சம்

**விளக்கம்: செல்லாக் காசு என்ற சொல்லின் பொருள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.**

59) பொருத்துக.

அ. மறலி – 1. யானை

ஆ. கரி – 2. காலன்

இ. அருவர் – 3. புதர்

ஈ. தூறு – 4. தமிழர்

A) 2, 1, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 4, 3, 1, 2

D) 4, 1, 2, 3

**விளக்கம்: மறலி – காலன்**

**கரி – யானை**

**அருவர் – தமிழர்**

**தூறு – புதர்**

60) எந்த பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

A) சென்னை

B) மதுரை

C) கோவை

**D) A மற்றும் B**

**விளக்கம்: எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017–2018) தமிழக அரசால் சென்னையிலும் மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

61) கூற்றுகளை ஆராய்க.

1. நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்

2. இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்

3. உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும்

4. எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வரும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது

A) 1, 2 சரி

B) 2, 3 சரி

C) 1, 2, 3 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்**

**2. இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும்**

**3. உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும்**

**4. எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வரும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.**

62) ஈரத்திலும் வீரத்திலும் உனக்கு இணைசொல்ல யாருண்டு? என்ற கூற்றில் குறிப்பிடப்படுபவர்?

A) ஔவையார்

B) இரண்டாம் குலோத்துங்கன்

**C) அதியமான்**

D) தொண்டைமான்

**விளக்கம்: தொண்டைமானின் போர் அறிவிப்பின் போது, ஔவையார், ஈரத்திலும் வீரத்திலும் உனக்கு இணைசொல்ல யாருண்டு? என்று அதியமானை பார்த்து கூறிய வரிகளே இவை.**

63) கூற்றுகளை ஆராய்க.

1. செயங்கொண்டார் கலிகத்துப்பரணியை இயற்றினார்

2. இவர் தீர்த்தகிரி என்னும் ஊரைச் சேர்ந்தவர்

3. பரணிக்கோர் செயங்கொண்டார் – ஒட்டக்கூத்தர்

4. தென்தமிழ் தெய்வப்பரணி – பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

A) 1, 3, 4 சரி

B) 1, 2, 3 சரி

**C) 1 மட்டும் சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. செயங்கொண்டார் கலிகத்துப்பரணியை இயற்றினார்**

**2. இவர் தீபங்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்**

**3. பரணிக்கோர் செயங்கொண்டார் – பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

4. தென்தமிழ் தெய்வப்பரணி – ஒட்டக்கூத்தர்

64) தவறான ஒன்றை தெரிவு செய்க (வல்லினம் மிகும், மிகா இடங்கள் பற்றிய கூற்றில்)

A) தாய்தந்தை

**B) வெற்றிலைப்பாக்கு**

C) செய்துபார்த்தாள்

D) தின்று தீர்த்தான்

**விளக்கம்: மேற்கண்ட சொற்களில் தவறானது வெற்றிலைப்பாக்கு. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.**

65) பொருத்துக.

அ. உடன்றன – 1. மலைக்குகை

ஆ. வழிவர் – 2. நெருங்குதல்

இ. பிலம் – 3. சினந்து எழுந்தன

ஈ. மண்டுதல் – 4. நழுவி ஓடுவர்

A) 3, 4, 2, 1

B) 3, 1, 2, 4

C) 3, 2, 1, 4

**D) 3, 4, 1, 2**

**விளக்கம்: உடன்றன – சினந்து எழுந்தன**

**வழிவர் – நழுவி ஓடுவர்**

**பிலம் – மலைக்குகை**

**மண்டுதல் – நெருங்குதல்**

66) செயங்கொண்டார் யாருடைய அவைக்களப்புலவராகத் திகழ்ந்தார்?

**A) முதற்குலோத்துங்கச் சோழன்**

B) சடையப்ப வள்ளல்

C) இரண்டாம் குலோத்துங்கச் சோழன்

D) அரிமர்த்தன பாண்டியன்

**விளக்கம்: செயங்கொண்டார் முதற்குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவராக திகழ்ந்தார்.**

**சடையப்ப வள்ளல் – கம்பர்**

**அரிமர்த்தன பாண்டியன் – மாணிக்க வாசகர்**

**ஒட்டக்கூத்தர் – விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இராசராசன்.**

67) கூற்றுகளை ஆராய்க.

1. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்

2. உம்மைத்தொகையில் வல்லினம் மிகும்

3. உருவகத்தில் வல்லினம் மிகும்

4. வினைத்தொகையில் வல்லினம் மிகும்.

**A) 2, 4 தவறு**

B) 1, 3 தவறு

C) 1, 4 தவறு

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்**

**2. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது**

**3. உருவகத்தில் வல்லினம் மிகும்**

**4. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.**

68) கலிங்கத்துப் பரணியை தென்தமிழ்த் தெய்வ பரணி என்ற புகழ்ந்தவர்?

**A) ஒட்டக்கூத்தர்**

B) கம்பர்

C) பலபட்டடைச் சொக்கநாதர்

D) ஔவையார்

**விளக்கம்: கலிகத்துப்பரணியை தென்தமிழ்த் தெய்வப் பரணி என்று புகழ்ந்தவர் ஒட்டக்கூத்தர். ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழர்கள் காலத்திலும் வாழ்ந்தவர்.**

69) போரக்களத்தில் நீயும் பகைவரை எதிர்த்து வெல்கிறாய். அத்தகைய வீரமுடைய நீ இன்று போரைக்கண்டு தயங்கலாமா? – இதில் குறிப்பிடப்படுபவர் யார்?

**A) அதியமான்**

B) தொண்டைமான்

C) ஔவையார்

D) விக்கிரமசோழன்

**விளக்கம்: தொண்டைமானின் போர் அறிவிப்பை அறிந்த ஔவையார், அதியமானைப் பார்த்து யானை போர்க்களத்தில் பகைவரின் படையை வெருண்டோடச் செய்வதுபோல நீயும் பகைவரை எதிர்த்து வெல்கிறாய். அத்தகைய வீரமுடைய நீ இன்று போரைக் கண்டு தயங்கலாமா என்று கூறினார்.**

70) போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிக்கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம்?

A) பிள்ளைத் தமிழ்

B) தூது

**C) பரணி**

D) கலிங்கம்

**விளக்கம்: போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிக்கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் – பரணி. பரணி இலக்கியங்களில் சிறந்தது கலிங்கத்துப்பரணி.**

71) மீரா பற்றி கூற்றுகளை ஆராய்க.

1. இயற்பெயர் – மீ. இராசராசன்

2. பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றியவர்

3. நடத்திய இதழ் – அன்னம் விடு தூது

4. நூல்கள் – ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப்பக்கம், கோடையும் வசந்தமும்

A) 1, 2 தவறு

B) 3, 4 தவறு

C) 1, 2, 3 தவறு

**D) 2 மட்டும் தவறு**

**விளக்கம்: 1. இயற்பெயர் – மீ. இராசேந்திரன்**

**2. கல்லூரிப் பேராசியராகப் பணியாற்றியவர்.**

**3. நடத்திய இதழ் – அன்னம் விடு தூது**

**4. நூல்கள் – ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப்பக்கம், கோடையும் வசந்தமும்.**

72) இந்திய அரசு எந்த இரயில் நிலையத்திற்கு எம்.ஜி.ஆர் பெயர் சூட்டியுள்ளது?

A) கோவை

B) திருநெல்வேலி

C) கும்பகோணம்

**D) சென்னை**

**விளக்கம்: இந்திய அரசு, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்து அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.**

73) செயங்கொண்டார் யாருடைய அவைக்களப்புலவராகத் திகழ்ந்தார்?

**A) முதற்குலோத்துங்கச் சோழன்**

B) சடையப்ப வள்ளல்

C) இரண்டாம் குலோத்துங்கச் சோழன்

D) அரிமர்த்தன பாண்டியன்

**விளக்கம்: செயங்கொண்டார் முதற்குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவராக திகழ்ந்தார்.**

**சடையப்ப வள்ளல் – கம்பர்**

**அரிமர்த்தன பாண்டியன் – மாணிக்க வாசகர்**

**ஒட்டக்கூத்தர் – விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இராசராசன்.**

74) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை எம்.ஜி.ஆர் எங்கு நடத்தினார்?

A) கோவை

B) சென்னை

C) திருச்சி

**D) மதுரை**

**விளக்கம்: எம்.ஜி.ஆர் மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.**

75) அதியமானுக்காக ஔவையார் யாரிடம் தூது சென்றார்?

A) விக்கிரமசோழன்

B) இரண்டாம் குலோத்துங்கன்

C) இரண்டாம் இராசராசன்

**D) தொண்டைமான்**

**விளக்கம்: அதியமானுக்காக தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றார். அதியமான் தகடூர் என்னும் பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர் ஆவார். அரிய நெல்லிக்கனியை ஔவையிடம் வழங்கியதால் கடையெழு வள்ளல்களில் ஒருவராக போற்றப்படுகிறார்.**

76) செயங்கொண்டாரை பரணிக்கோர் செயங்கொண்டார் என்று புகழ்ந்தவர்?

A) ஒட்டக்கூத்தர்

B) கம்பர்

**C) பலபட்டடைச் சொக்கநாதர்**

D) ஔவையார்

**விளக்கம்: செயங்கொண்டாரை பரணிக்கோர் செயங்கொண்டார் என்று புகழ்ந்தவர் – பலபட்டடைச் சொக்கநாதர். செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி என்னும் நூலை எழுதினார். இவர் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.**

77) வட்டம் + பாறை என்ற சொல்லை சேர்த்தெழுதக்கிடைக்கும் சொல்?

A) வட்டம்பாறை

B) வட்டபாறை

**C) வட்டப்பாறை**

D) வட்ப்பாறை

**விளக்கம்: வட்டம் + பாறை என்ற சொல்லை சேர்த்தெழுதக் கிடைப்பது வட்டப்பாறை.**

78) கூற்றுகளை ஆராய்க.

1. அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்

2. திசைப்பெயர்களையடுத்து வல்லினம் மிகாது

3. மகரமெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்

4. எழுவாய் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

A) 1 மட்டும் தவறு

**B) 2 மட்டும் தவறு**

C) 3 மட்டும் தவறு

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்**

**2. திசைப்பெயர்களையடுத்து வல்லினம் மிகும்**

**3. மகரமெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்**

**4. எழுவாய் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.**

79) தமிழில் தோன்றிய முதல் பரணி?

**A) கலிங்கத்துப் பரணி**

B) இரணியன் வதைப் பரணி

C) பாச வதைப்பரணி

D) மோகவதைப் பரணி

**விளக்கம்: செயங்கொண்டாரால் இயற்றப்பட்ட கலிங்கத்துப் பரணியே தமிழில் தோன்றிய முதல் பரணி வகை ஆகும். பரணி என்பது 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும்.**

80) சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

A) 100

B) 99

C) 97

**D) 96**

**விளக்கம்: சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். அவற்றுள் சில. பரணி, தூது, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்றவை.**

81) கூற்றுகளை ஆராய்க.(எம்.ஜி.ஆர்–ன் தமிழ்ப்பணிகள்)

1. தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார்

2. மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.

3. தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகம் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தோற்றுவித்தார்.

4. முதியோர் மற்றும் வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்

**A) அனைத்தும் சரி**

B) 1, 2, 3 சரி

C) 2, 3, 4 சரி

D) 1, 3, 4 சரி

**விளக்கம்: 1. தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார்.**

**2. மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.**

**3. தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகம் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தோற்றுவித்தார்.**

**4. முதியோர் மற்றும் வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்.**

82) உன் பெயரில் தான் அஞ்சி என்னும் சொல் இருக்கிறதேயன்றி! நீ அஞ்சி ஒருநாளும் கண்டதில்லையே – இவ்வரியில் குறிப்பிடப்படுபவர் யார்?

A) தொண்டைமான்

B) ஔவையார்

**C) அதியமான்**

D) ராஜராஜசோழன்

**விளக்கம்: அதியமான் நெடுமான் அஞ்சியே உன் பெயரில்தான் அஞ்சி என்னும் சொல் இருக்கிறதேயன்றி! நீ அஞ்சி நான் ஒருநாளும் கண்டதில்லையே. போர் உனக்குப் புதிதா என்ன? என்று ஔவையார் அதியமானிடம் கூறினார்.**

## 8th Tamil Unit 8 Questions

1) கூற்றுகளை ஆராய்க.

1. இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.

2. குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். எ.கா. ந, நம், நா, நாம்.**

**இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. கட, கடல், கடா, கடாம்.**

2) திருமந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

A) 1000

B) 2000

**C) 3000**

D) 4000

**விளக்கம்: திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக்கொண்டது. திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.**

3) கள்ளக் கருத்துக்களை கட்டேர்டு அறுத்தவர்க்கு

உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பாராபரமே – இப்பாடலடி இடம்பெற்ற நூல்?

A) திருமந்திரம்

B) எக்காளக் கண்ணி

**C) குணங்குடியார் பாடற்கோவை**

D) தாயுமானவர் பாடல்கள்

**விளக்கம்: கள்ளக் கருத்துக்களை கட்டேர்டு அறுத்தவர்க்கு**

**உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பாராபரமே – குணங்குடியார் பாடற்கோவை.**

**பொதுவாக பராபரம் என்ற சொல்லை பாடலடியில் அமைத்து பாடுபவர் தாயுமானவர். இவர் பாடல் மீது கொண்ட பற்றின் காரணமாக குணங்குடி மஸ்தான் சாகிபு பாராபரம் என்ற சொல்லை தமது பாடலிலும் இடம்பெறச் செய்தார்.**

4) சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றவர் யார்?

A) வீரமாமுனிவர்

B) தாயுமானவர்

**C) குணங்குடி மஸ்தான் சாகிபு**

D) ஆறுமுகநாவலர்

**விளக்கம்: குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராக வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.**

5) மனிதர்கள் தம்________தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்?

A) ஐந்திணைகளை

B) அறுசுவைகளை

C) நாற்றிசைகளை

**D) ஐம்பொறிகளை**

**விளக்கம்: மனிதர்கள் தம் ஐம்பொறிகளை தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.**

**ஐந்திணைகள் – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை**

**அறுசுவை – இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு**

**நாற்றிசைகள் – கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு**

**ஐம்பொறிகள் – மெய், வாய், மூக்கு, கண், காது**

6) மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர் எதை கூறுகிறார்?

**A) சுயராஜ்ஜியம்**

B) கல்வி

C) பெண்களின் நிலை

D) சமத்துவம்

**விளக்கம்: சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக் கூடாது. மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும் – அயோத்திதாசர்.**

7) தமிழ் மூவாயிரம் என்று அழைக்கப்படும் நூல்?

A) திருக்குறள்

**B) திருமந்திரம்**

C) பத்துப்பாட்டு

D) தொல்காப்பியம்

**விளக்கம்: தமிழ்மூவாயிரம் என்று அழைக்கப்படும் நூல் திருமந்திரம். 3000 பாடல்களைக் கொண்டது. இது திருமுறைகளின் வரிசையில் பத்தாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது.**

8) உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) உள்ளேயிருக்கும்

B) உள்ளிருக்கும்

C) உளிருக்கும்

D) உளருக்கும்

**விளக்கம்: உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் உள்ளிருக்கும் என்பதாகும்.**

**நிலைமொழியின் இறுதி எழுத்து ள் (மெய் எழுத்து)**

**வருமொழயின் முதல் எழுத்து இ (உயிரெழுத்து).**

**உ + ள் + இ + ருக்கும்=உள்ளிருக்கும் (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே) எனும் விதிப்படி நிலைமொழியின் இறுதி மெய் எழுத்தும் (உடல்), வருமொழியில் முதல் உயிர் எழுத்தும் (உயிர்) புணர்ந்தது.**

9) குணங்குடி மஸ்தான் சாகிபு–விற்கு பொருந்தாதது எது?

A) எக்களாக் கண்ணி

B) மனோன்மணிக் கண்ணி

C) நந்தீசுவரக் கண்ணி

**D) பராபரக்கண்ணி**

**விளக்கம்: குணங்குடி மஸ்தான் சாகிபு, தாயுமானவரின் பராபரக்கண்ணி பாடல் மீது கொண்ட பற்றின் காரணமாக இவரும் அவ்வாறு பாடல் எழுதினார். அவற்றில் சில,**

**1. எக்களாக்கண்ணி**

**2. மனோன்மணிக் கண்ணி**

**3. நந்தீசுவரக் கண்ணி**

**பராபரக்கண்ணி என்பது தாயுமானவரின் பாடல்கள் ஆகும்.**

10) பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்

ஊராண்மை மற்றுஅதன் எஃகு – இக்குறட்பாவில் பேராண்மை என்ற சொல்லின் பொருள்?

A) பெருவீரம்

B) ஆண்மை

**C) பகைவரை எதிர்த்து நிற்கும் வீரம்**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பேராண்மை என்ற சொல்லின் பொருள் பகைவரை எதிர்த்து நிற்கும் வீரம் ஆகும். பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கு துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர் என்பது இக்குறட்பாவின் விளக்கம் ஆகும்.**

11) சங்க இலக்கியங்கள் பலவும் எந்த பாவகையால் அமைந்துள்ளது?

A) வெண்பா

**B) ஆசிரியப்பா**

C) கலிப்பா

D) வஞ்சிப்பா

**விளக்கம்: பா நான்கு வகைப்படும். அவை,**

**1. வெண்பா**

**2. ஆசிரியப்பா**

**3. கலிப்பா**

**4. வஞ்சிப்பா**

**ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.**

12) ஞானியர் சிறந்த கருத்துக்களை மக்களிடம்__________

**A) பகர்ந்தனர்**

B) நுகர்ந்தனர்

C) சிறந்தனர்

D) துறந்தனர்

**விளக்கம்: ஞானியர் சிறந்த கருத்துக்களை மக்களிடம் பகர்ந்தனர். பகர்தல் என்றால் கூறுதல் என்று பொருள். பகராய் என்றால் தருவாய் என்று பொருள்.**

13) திருமூலர் கீழ்க்கண்ட எதற்கு பொருத்தமானவர்?

A) 63 நாயன்மார்களில் ஒருவர்

B) பதினெண் சித்தர்களில் ஒருவர்

C) தொகையடியார்களில் ஒருவர்

**D) A மற்றும் B**

**விளக்கம்: திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், 18 சித்தர்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார். இவர் இயற்றிய நூல் திருமந்திரம்.**

14) மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி கருத்து கூறியவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) இராமலிங்கனார்

C) தந்தை பெரியார்

D) புதுமைப்பித்தன்

**விளக்கம்: வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. அதற்கு காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன் மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது என்கிறார் அயோத்திதாசர்.**

15) காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத

ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே – என்று பாடியவர் யார்?

A) திருமூலர்

B) தாயுமானவர்

**C) குணங்குடி மஸ்தான் சாகிபு**

D) ஆறுமுக நாவலர்

**விளக்கம்: காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத**

**ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே – குணங்குடி மஸ்தான் சாகிபு.**

**இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் குணங்குடியார் பாடற்கோவை ஆகும்.**

**உன் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல், பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன் என்பது மேற்கண்ட பாடலடியின் பொருளாகும்.**

16) காத்தவராயன் என்ற இயற்பெயரைக் கொண்டவர் யார்?

A) தந்தை பெரியார்

B) பரிதிமாற்கலைஞர்

C) அய்யன் காளி

**D) அயோத்திதாசர்**

**விளக்கம்: அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் சென்னையில் பிறந்தார். இவரது இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும்.**

17) குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றிய கூற்றுகளில் தவறானது எது?.

1. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெர் – சுல்தான் அப்துல்காதர்

2. இளம் வயதிலேயே சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.

3. இவர் திருமூலர் இயற்றிய பராபரக்கண்ணி போலவே எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

4. குணங்குடியார் படற்கோவை என்பது இவர் இயற்றிய மற்றொரு நூல் ஆகும்.

A) 1 மட்டும்

B) 2 மட்டும்

**C) 3 மட்டும்**

D) 4 மட்டும்

**விளக்கம்: 1. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெர் – சுல்தான் அப்துல்காதர்**

**2. இளம் வயதிலேயே சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.**

**3. இவர் தாயுமானவர் இயற்றிய பராபரக்கண்ணி போலவே எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.**

**4. குணங்குடியார் படற்கோவை என்பது இவர் இயற்றிய மற்றொரு நூல் ஆகும்.**

18) என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர் என்று தந்தை பெரியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) அம்பேத்கர்

C) இராஜராம் மோகன்ராய்

D) அய்யன் காளி

**விளக்கம்: என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள் – தந்தை பெரியார்.**

19) கள்ளக் கருத்துக்களை கட்டோடு அறுத்தவர்க்கு

உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே – என்ற பாடலடிகளில் இடம்பெற்ற அறுத்தவருக்கு என்ற சொல்லின் எதிர்ச்சொல்?

**A) பெற்றவருக்கு**

B) நீக்கியவருக்கு

C) துண்டாக்குதல்

D) இன்பப்பெருக்கு

**விளக்கம்: மேற்கண்ட பாடலடிகள் குணங்குடியார் கோவை என்னும் நூலிலிருந்து தரப்பட்டுள்ளது. அறுத்தவருக்கு என்ற சொல்லின் பொருள் நீக்கியவர்க்கு என்பதாகும். இதன் எதிர் சொல் பெற்றவருக்கு என்பதாகும்.**

20) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு – இக்குறட்பாவில் பயில்தொறும் என்ற சொல்லின் பொருள்?

A) படிக்க படிக்க

**B) பழகப் பழக**

C) நல்ல நூல்கள்

D) பண்புடையவர்

**விளக்கம்: பயில்தொறும் என்ற சொல்லின் பொருள் பழகப் பழக என்பதாகும். நல்ல நூல்களை படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோல் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

21) அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை எங்குள்ளது?

**A) தாம்பரம்**

B) செங்கல்பட்டு

C) கிண்டி

D) அண்ணாநகர்

**விளக்கம்: சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

22) கீழ்க்கண்டவற்றில் எது நிரையசை அல்ல?

A) நட

B) கடல்



winmeen.com

C) கடா

**D) நாம்**

**விளக்கம்: இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. கட, கடல், கடா, கடாம்.**

**நாம் என்பது நிரையசை அல்ல.**

**குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். எ.கா. ந, நம், நா, நாம்.**

23) தென்னிந்திய சமூக சீர்த்திருத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) தந்தை பெரியார்

B) இராமலிங்க சுவாமிகள்

C) வைகுண்ட சுவாமிகள்

**D) அயோத்திதாசப் பண்டிதர்**

**விளக்கம்: சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆவார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாச பண்டிதர் ஆவார். இவரே தென்னிந்திய சமூக சீர்திருத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.**

24) பொருத்துக.

அ. நம்பர் – 1. கூசாமல்

ஆ. நாணாமே – 2. அடியார்

இ. ஈயில் – 3. உள்ளம்

ஈ. சித்தம் – 4. வழங்கினால்

A) 1, 4, 2, 3

B) 1, 4, 3, 2

C) 2, 4, 3, 1

**D) 2, 1, 4, 3**

**விளக்கம்: நம்பர் – அடியார்**

**நாணாமே – கூசாமல்**

**ஈயில் – வழங்கினால்**

**சித்தம் – உள்ளம்**

25) அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும்_______க் கண்டு அஞ்சமாட்டார்கள்

A) புலனை

B) அறனை

**C) நமனை**

D) பலனை

**விளக்கம்: அறிநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் நமனைக் கண்டு அஞ்சமாட்டார்கள். நமன் என்றால் எமன் என்று பொருள்.**

**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே – திருமந்திரம்**

26) நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது கூறியவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) இராமலிங்கனார்

C) தந்தை பெரியார்

D) புதுமைப்பித்தன்

**விளக்கம்: மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி கருத்து கூறிய அயோத்திதாசர், வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. அதற்கு காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன் மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது என்கிறார்.**

27) யாப்பின் உறுப்புகளில் பொருந்தாதது எது?

A) எழுத்து

**B) சொல்**

C) அடி

D) தளை

**விளக்கம்: யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்குரிய உறுப்புகள் 6 ஆகும். அவை,**

**1. எழுத்து**

**2. அசை**

**3. சீர்**

**4. தளை**

**5. அடி**

**6. தொடை.**

28) நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) நம்பரங்கு

B) நம்மார்க்கு

**C) நம்பர்க்கங்கு**

D) நம்பங்கு

**விளக்கம்: நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் நம்பர்க்கங்கு என்பதாகும்.**

**இங்கு நிலைமொழியின் இறுதி எழுத்து கு. வருமொழியின் முதல் எழுத்து அ.**

**நம்பர்க்க் + அங்கு (உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும்).**

**நம்பர்க் + க் + அ + ங்கு=நம்பர்க்கங்கு (உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே).**

29) திருமூலர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. 63 நாயன்மார்களில் ஒருவர்

2. 18 சித்தர்களில் ஒருவர்

3. இயற்றிய நூல் திருமந்திரம்

4. திருமந்திரம் 2000 பாடல்களைக் கொண்டது

A) 1, 2 சரி

B) 2, 3 சரி

**C) 1, 2, 3 சரி**

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. 63 நாயன்மார்களில் ஒருவர்**

**2. 18 சித்தர்களில் ஒருவர்**

**3. இயற்றிய நூல் திருமந்திரம்**

**4. திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது.**

30) நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தல் பொருட்டு – இக்குறட்பாவில் நட்டல் என்ற சொல்லின் பொருள்?

A) சிரித்தல்

B) நழுவுதல்

**C) நட்பு கொள்ளுதல்**

D) மகிழ்தல்

**விளக்கம்: நட்டல் என்ற சொல்லின் பொருள் நட்புகொள்ளுதல் என்பதாகும். நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வறத்கு மட்டுமன்று, நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.**

31) நன்றே நினைமின் நமனில்லை நாணாமே – இதில் நமன் என்ற சொல்லின் பொருள்?

**A) எமன்**

B) நோய்

C) அடியார்

D) மருந்து

**விளக்கம்: நமன் என்றால் எமன் என்று பொருள். மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துக்களை நன்றான மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை.**

32) விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டுமன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது யாருடைய கருத்து?

A) காந்தியடிகள்

B) அம்பேத்கர்

C) தந்தை பெரியார்

D) **அயோத்திதாச பண்டிதர்**

**விளக்கம்: விடுதலை என்பது வெறும் ஆட்சிமாற்றம் மட்டுமன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து ஆகும்.**

33) என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர் என்று தந்தை பெரியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

**A) தங்கவயல் அப்பாத்துரையார்**

B) அம்பேத்கர்

C) இராஜராம் மோகன்ராய்

D) அய்யன் காளி

**விளக்கம்: என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள் – தந்தை பெரியார்.**

34) கீழ்க்கண்டவற்றில் எது நேரசை அல்ல?

A) ந

B) நம்

C) நா

**D) கட**

**விளக்கம்: குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். எ.கா. ந, நம், நா, நாம்.**

**கட என்பது நிரையசை.**

**இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. கட, கடல், கடா, கடாம்.**

35) சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து – இதில் சித்தம் என்ற சொல்லின் பொருள்?

A) சித்தர்

B) திருமூலர்

C) இறைவன்

**D) உள்ளம்**

**விளக்கம்: சித்தம் என்ற சொல்லின் பொருள் உள்ளம். உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று நினைத்து ஈடேறுங்கள்.**

36) கூற்று: 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் தொடங்கப்பட்டது.

காரணம்: ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்க.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.**

37) கூற்றுகளை ஆராய்க.

1. சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆவார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இராமலிங்க அடிகள் ஆவார்.

2. தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் – வைகுண்ட சுவாமிகள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆவார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாச பண்டிதர் ஆவார்.**

**2. தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் – அயோத்திதாச பண்டிதர்.**

38) கல்வியோடு கைத்தொழில் போன்ற இதரத் தொழில்களும் கற்பிக்க வேண்டும் என்று கூறியவர் யார்?

A) தந்தை பெரியார்

B) பரிதிமாற்கலைஞர்

C) காமராசர்

D) **அயோத்திதாசப் பண்டிதர்**

**விளக்கம்: கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்தல் போன்றவற்றையும் கற்கவேண்டும் என்று வலியுறுத்தியவர் அயோத்திதாசப் பண்டிதர் ஆவார். இவர் சங்ககால பெண்களைப் போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் கூறினார்.**

39) எத்தனை அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய் ஆகும்?

A) 14

B) 8

C) 20

**D) 16**

**விளக்கம்: அணா, சல்லி, துட்டு என்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயப் பெயர்கள் ஆகும். பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய் ஆகும். அதனால்தான் இன்றும் பேச்சுவழக்கில் அரை ரூபாயை எட்டணா என்றும் கால் ரூபாயை நாலணா என்றும் கூறுகின்றனர்.**

40) நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தல் பொருட்டு – இக்குறட்பாவில் இடித்தல் என்ற சொல்லின் பொருள்?

A) அழித்தல்

B) நழுவுதல்

**C) கடிந்துரைத்தல்**

D) துன்பமடைதல்

**விளக்கம்: இடித்தல் என்ற சொல்லின் பொருள் கடிந்துரைத்தல் என்பதாகும். நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டுமன்று, நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.**

41) படமாடக் கோயில் பகவற்குஒன்ற ஈயில்

நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா – இதில் பகவர் என்று குறிப்பிடப்படுபவர்?

A) அடியார்

**B) இறைவன்**

C) சித்தர்கள்

D) கோயில்

**விளக்கம்: இங்கு பகவற்கு என்ற சொல்லின் பொருள் இறைவன் ஆகும். படங்களை அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் என்று பொருள்.**

42) அடக்கத் தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்

படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே – என்ற பாடலடிகளில் இடம்பெற்ற பகராய் என்ற சொல்லின் பொருள்?

A) நீக்குவாய்

**B) தருவாய்**

C) பெறுவாய்

D) பார்ப்பாய்

**விளக்கம்: பகராய் என்ற சொல்லின் பொருள் தருவாய் என்பதாகும். மேற்கண்ட பாடலடிகள் இடம்பெற்ற நூல் குணங்குடியார் பாடற்கோவை ஆகும்.**

43) அயோத்திதாசர் எப்போது பிறந்தார்?

A) 1845 ஏப்ரல் 20

B) 1855 ஏப்ரல் 20

**C) 1845 மே 20**

D) 1855 மே 20

**விளக்கம்: அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் சென்னையில் பிறந்தார். இவரே தென்னிந்தியச் சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.**

44) சிறுகதை மன்னன் என்று போற்றப்படுபவர் யார்?

A) ஜெயகாந்தன்

**B) புதுமைப்பித்தன்**

C) இரா.பி. சேதுப்பிள்ளை

D) மு.வ

**விளக்கம்: சிறுகதை மன்னன் என்று போற்றப்படுபவர் புதுமைப்பித்தன் ஆவார். இவர் மணிக்கொடி இதழில் சிறுகதை எழுபவர் ஆவார்.**

45) கீழ்க்கண்டவற்றுள் புதுமைப்பித்தன் எழுதாத நூல் எது?

A) கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்

B) சாபவிமோசனம்

C) **மறுநாள் கழிந்தது**

D) பொன்னகரம்

**விளக்கம்: புதமைப்பித்தன் எழுதிய நூல்கள்:**

**1. பொன்னகரம்**

**2. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்**

**3. சாபவிமோசனம்**

**4. ஒருநாள் கழிந்தது.**

46) கீழ்க்கண்டவற்றில் எது அயோத்திதாசர் எழுதாத நூல்?

A) புத்தரது ஆதிவேதம்

B) இந்திரர் தேச சரித்திரம்

C) விவாக விளக்கம்

**D) பாலவாகடம்**

**விளக்கம்: அயோத்திதாசர் எழுதிய நூல்கள்:**

**1. புத்தரது ஆதிவேதம்**

**2. இந்திரர் தேச சரித்திரம்**

**3. விவாக விளக்கம்**

**4. புத்தர் சரித்திரப்பா**

**பாலவாகடம் என்பது அயோத்திதாசர் பதிப்பித்த நூல் ஆகும்.**

47) அயேத்திதாசருக்கு கல்வி மற்றும் சித்த மருத்துவம் கற்றுக்கொடுத்தவர்?

A) காத்தவராயன்

**B) அயோத்திதாசப் பண்டிதர்**

C) இராமலிங்க அடிகள்

D) மேற்கண்ட யாருமில்லை

**விளக்கம்: அயோத்தித் தாசப் பண்டிதர் என்பாரிடம் காத்தவராயன் என்னும் இயற்பெயர் கொண்ட (பிற்காலத்தில் அயோத்திதாசர் பண்டிதர் என்று அழைக்கப்பட்டவர்) கல்வி மற்றும் சித்தமருத்துவத்தை பயின்றார். தம்மீது அன்பு காட்டிய அந்த ஆசிரியரது பெயரையே தமது பெயராக வைத்துக்கொண்டார்.**

48) யாப்பிலக்கத்தின்படி ஒற்று எழுத்தின் மாத்திரை எவ்வளவு?

A) 1

B) 2

**C) 1 ½**

D) ½

**விளக்கம்: யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர். அவையாவன**

**1. குறில் – உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்**

**2. நெடில் – உயிர்நெடில், உயிர்மெய் நெடில்**

**3. ஒற்று – மெய்யெழுத்து, ஆய்த எழுத்து.**

**இதில் ஒற்றெழுத்துக்களின் மாத்திரை ½ மாத்திரை ஆகும்.**

49) தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

A) பகராய் – தருவாய்

B) பராபரம் – மேலான பொருள்

C) ஆனந்த வெள்ளம் – இன்பப்பெருக்கு

**D) அறுத்தவருக்கு – பெற்றவருக்கு**

**விளக்கம்: பகராய் – தருவாய்**

**பராபரம் – மேலான பொருள்**

**ஆனந்த வெள்ளம் – இன்பப்பெருக்கு**

**அறுத்தவருக்கு – நீக்கியவருக்கு.**

50) கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல் – இக்குறட்பாவில் உறுதி என்ற திருவள்ளுவர் குறிப்பிடுவது எது?

A) செயல்

B) நிச்சயமாக

**C) நன்மை**

D) நண்பர்கள்

**விளக்கம்: உறுதி என்ற சொல்லின் பொருள் நன்மை என்பதாகும். நமக்கு வரும் துன்பத்திலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்

51) நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு எந்த நாட்டிற்கு சென்றார்?

A) வங்கதேசம்

B) நேபாளம்

**C) பர்மா**

D) பூடான்

**விளக்கம்: நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்துவந்த தமிழர்களின் உரிமைகளுக்காக பாடுபட்டார்.**

52) அயோத்திதாசருக்கு கீழ்க்கண்ட எந்த மொழி தெரியாது?

A) பாலி

B) வடமொழி

C) ஆங்கிலம்

**D) தெலுங்கு**



winmeen.com

**விளக்கம்: அயோத்திதாசர் தமிழ் மட்டுமின்று, பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிப் பெற்றிருந்தார். இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல் துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார்.**

53) மக்கள் வாழ வேண்டிய முறை பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகளில் சரியானது எது?

1. மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும்.

2. கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழ வேண்டும்.

3. பிற உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடாது.

4. மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் அளவாகப் பயன்படுத்த வேண்டும்.

**A) 1, 2, 3 சரி**

B) 2, 3 சரி

C) 1, 2, 3, 4 சரி

D) 3, 4 சரி

**விளக்கம்: மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும். கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழ வேண்டும். பிற உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடாது. மேலும் மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது.**

54) ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது__________எனப்படும்.

A) தளை

**B) சீர்**

C) அடி

D) தொடை

**விளக்கம்: ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர் எனப்படும். சீர்கள் நான்கு வகைப்படும். அவை,**

**1. ஓரசைச்சீர்**

**2. ஈரசைச்சீர்**

**3. மூவசைச்சீர்**

**4. நாலசைச்சீர்.**

55) ஒரு பைசாத் தமிழன் என்ற இதழ் பிறகு எந்த பெயர் சூட்டப்பட்டு வெளிவந்தது

A) பைசாத் தமிழன்

**B) தமிழன்**

C) தமிழகம்

D) தமிழ்நாடு

**விளக்கம்: ஓர் ஆண்டிற்குப்பிறகு ஒருபைசாத் தமிழன் என்னும் வாரஇதழ் தமிழன் என்று பெயர் மாற்றப்பட்டு வெளிவந்தது. இது 1907ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது.**

56) ஒரு பைசாத் தமிழன் இதழின் நோக்கம் என்ன?

A) இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல் துறை நூல் பற்றிய கருத்துக்களை மக்களிடம் பரப்புதல்.

B) சித்தமருத்துவ கருத்துக்களை மக்களிடம் பரப்புதல்

C) கூலித்தொழிலாளர்களாக இருக்கும் தமிழர்களின் நிலையை உயர்த்துதல்.

**D) உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிப்படுத்தல்**

**விளக்கம்: 1907ஆம் ஆண்டு சென்னையில் ஒரு பைசாத் தமிழன் என்று தொடங்கப்பட்ட இதழின் நோக்கம்: உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிப்படுத்தல்.**

57) Rational என்ற சொல்லின் தமிழாக்கம் என்ன?

A) தொண்டு

B) நேர்மை

**C) பகுத்தறிவு**

D) சீர்திருத்தம்

**விளக்கம்: தொண்டு – Charity**

**நேர்மை – Integrity**

**பகுத்தறிவு – Rational**

**சீர்திருத்தம் – Reform.**

58) மரபு கவிதை எழுதுவதற்கான இலக்கணம்?

A) எழுத்து இலக்கணம்

B) பொருளிலக்கணம்

C) அணி இலக்கணம்

D) **யாப்பு இலக்கணம்**

**விளக்கம்: குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள். மரபு கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் எனப்படும்.**

59) ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தொடர் இடம்பெற்றுள்ள நூல்?

**A) திருமந்திரம்**

B) திருவாசகம்

C) பெரியபுராணம்

D) புறநானூறு

**விளக்கம்: ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தொடர் இடம்பெற்றுள்ள நூல் திருமந்திரம் ஆகும். இது தமிழ் மூவாயிரம் என்று அழைக்கப்படுகிறது. இது 3000 பாடல்களைக் கொண்டது.**

60) கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல் – இக்குறட்பாவில் கிளைஞரை என்ற சொல்லின் பொருள்?

A) இளைஞர்

**B) நண்பர்**

C) உறவினர்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: கிளைஞரை என்ற சொல்லின் பொருள் நண்பர்கள் என்பதாகும். நமக்கு வரும் துன்பத்திலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

61) சங்ககால பெண்களைப் போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் – என்று எடுத்துரைத்தவர் யார்?

A) தந்தை பெரியார்

B) பரிதிமாற்கலைஞர்

C) காமராசர்

**D) அயோத்திதாசப் பண்டிதர்**

**விளக்கம்: சங்ககால பெண்களைப் போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்று எடுத்துரைத்தவர் அயோத்திதாசப் பண்டிதர் ஆவார்.**

62) யாப்பு இலக்கணத்தின் படி செய்யுளுக்கு உரிய உறுப்பகள் எத்தனை?

A) 2

B) 4

**C) 6**

D) 7

**விளக்கம்: யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்குரிய உறுப்புகள் 6 ஆகும். அவை,**

**1. எழுத்து**

**2. அசை**

**3. சீர்**

**4. தளை**

**5. அடி**

**6. தொடை**

63) நமனில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) நம் + இல்லை

B) நமது + இல்லை

C) நமன் + நில்லை

**D) நமன் + இல்லை**

**விளக்கம்: நமனில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது நமன் + இல்லை என்பதாகும்.**

64) புத்தர் சரித்திரப்பா என்ற நூலை எழுதியவர் யார்?

A) அம்பேத்கர்

**B) அயோத்திதாசர்**

C) தங்கவயல் அப்பாதுரை

D) அசோகர்

**விளக்கம்: புத்தர் சரித்திரப்பா என்ற நூலை எழுதியவர் அயோத்திதாச பண்டிதர் ஆவார். இவர் எழுதிய பிற நூல்கள்:**

**1. புத்தரது ஆதிவேதம்**

**2. இந்திரர் தேச சரித்திரம்**

**3. விவாக விளக்கம்**

**4. புத்தர் சரித்திரப்பா.**

65) யாப்பிலக்கணத்தின்படி எழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிப்பர்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர். அவையாவன,**

**1. குறில் – உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்**

**2. நெடில் – உயிர்நெடில், உயிர்மெய் நெடில்**

**3. ஒற்று – மெய்யெழுத்து, ஆய்த எழுத்து.**

66) சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக் கூடாது. மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும் என்பது யாருடைய கருத்து?

A) காந்தியடிகள்

B) அம்பேத்கர்

C) திலகர்

**D) அயோத்திதாச பண்டிதர்**

**விளக்கம்: சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக் கூடாது. மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும் – அயோத்திதாசர்.**

67) யாருடைய பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாக பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் திகழ்ந்தவர்கள்?

**A) தந்தை பெரியார்**

B) அம்பேத்கர்

C) இராஜராம் மோகன்ராய்

D) அய்யன் காளி

**விளக்கம்: என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்த்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள் – தந்தை பெரியார்.**

68) சிறுகதைகளில் புதிய உத்திகளைக் கையாண்டவர் என திறனாய்வாளர்களால் பாராட்டப்படுபவர் யார்?

A) வரதன்

**B) சொ. விருத்தாசலம்**

C) எத்திராசலு

D) அரங்கசாமி

**விளக்கம்: சிறுகதைகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டவர் என்று திறனாய்வாளர்களால் போற்றப்படுபவர் – புதுமைப்பித்தன். இவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவரின் இயற்பெயரே சொ. விருத்தாசலம் என்பதாகும்.**

69) அசை எத்தனை வகைப்படும் என்று யாப்பிலக்கணம் கூறுகிறது?

**A) 2**

B) 3

C) 4

D) 8

**விளக்கம்: எழுத்துக்கள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை. அது இரண்டு வகைப்படும். அவை,**

**1. நேரசை**

**2. நிரையசை**

70) கேட்டினும் உண்டுஒர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல் – இக்குறட்பாவில் நண்பரை அளக்கும் அளவுகோள் எது என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

**A) நமக்கு வரும் துன்பம்**

B) நண்பருக்கு வரும் துன்பம்

C) நண்பரிடம் உள்ள பொருள்

D) நம்மிடம் உள்ள பொருள்

**விளக்கம்: இக்குறட்பாவில் நண்பரை அளக்கும் அளவுகோள் எது என திருவள்ளுவர் குறிப்பிடுவது நமக்கு வரும் துன்பம். நமக்கு வரும் துன்பத்திலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

71) நிலவு நாளும் வளர்ந்து ஒளிவீசுவது போல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்று கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவர் யார்?

A) தந்தை பெரியார்

B) பரிதிமாற்கலைஞர்

C) காமராசர்

**D) அயோத்திதாசப் பண்டிதர்**

**விளக்கம்: ஒரு மனிதன் அறிவு வளர்ச்சிப் பெற வேண்டுமானால், கல்வி அவசியம் என்ற அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழுநிலவாகி ஒளிவீசுவது போல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்று கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.**

72) கூற்றுகளை ஆராய்க.

1. குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகள் – புதுக்கவிதைகள்

2. இலக்கணக்கட்டுப்பாடின்றி எழுதப்படும் கவிதைகள் – மரபுக் கவிதைகள்

3. கருத்துக்கு முதன்மை கொடுப்பது – மரபுக் கவிதைகள்

4. புதுக்கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் ஆகும்.

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) அனைத்தும் சரி

**D) அனைத்தும் தவறு**

**விளக்கம்: 1. குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகள் – மரபுக் கவிதைகள்**

**2. இலக்கணக்கட்டுப்பாடின்றி எழுதப்படும் கவிதைகள் – புதுக்கவிதைகள்**

**3. கருத்துக்கு முதன்மை கொடுப்பது – புதுக்கவிதைகள்**

**4. மரபுக் கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் ஆகும்.**

73) Reform என்ற சொல்லின் தமிழாக்கம் என்ன?

A) தத்துவம்

B) நேர்மை

C) பகுத்தறிவு

**D) சீர்திருத்தம்**

**விளக்கம்: தத்துவம் – Philosophy**

**நேர்மை – Intefrity**

**பகுத்தறிவு – Rational**

**சீர்திருத்தம் – Reform**

74) மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

B) இராமலிங்கவள்ளலார்

C) தந்தை பெரியார்

**D) அயோத்திதாசர்**

**விளக்கம்: மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும். கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழ வேண்டும். பிற உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடாது. மேலும் மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது.**

75) நடமாடக்கோயில் நம்பரக்குஒன்று ஈயில்

படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே – இத்தொடரில் நம்பரக்கு என்ற சொல்லின் பொருள்

A) இறைவன்

**B) அடியார்**

C) சித்தர்கள்

D) நாயன்மார்கள்

**விளக்கம்: நம்பர் என்றால் அடியார் என்று பொருள். இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் திருமந்திரம். அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.**

76) அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளமதாய்க்

கரையறவே பொங்கும் கடலே பராபரமே – என்ற பாடலடியில் இடம்பெற்ற ஆனந்த வெள்ளம் என்ற சொல்லின் எதிர்ச்சொல் என்ன?

A) இன்பப் பெருக்கு

B) மேலான பொருள்

C) மகிழ்ச்சிக் கடல்

**D) துன்ப மிகுதி**

**விளக்கம்: ஆனந்த வெள்ளம் என்ற சொல்லின் பொருள் இன்பப் பெருக்கு என்பதாகும். இதன் எதிர்ச்சொல் துன்ப மிகுதி.**

77) தலைவர்கள் மாமனிதராக, அறிவாற்றல்பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும். என்று நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் பற்றி விளக்கியவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) பரிதிமாற்கலைஞர்

C) தந்தை பெரியார்

D) தங்கவயல் அப்பாதுரை

**விளக்கம்: ஒரு நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகள்:**

**மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத்தக்கனவாக இருக்கவேண்டுமென்றால், அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி அமையவேண்டும்.**

**அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல்பெற்றவராக, நன்னெறியைக் கடைபிடிப்பவராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள். கடவுளெனத் துதிப்பார்கள் என்பது அயோத்திதாசர் கருத்து.**

78) திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பு எப்போது தொடங்கப்பட்டது?

**A) 1892**

B) 1897

C) 1907

D) 1899

**விளக்கம்: அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.**

79) ஒன்றே___________என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.

**A) குலம்**

B) குளம்

C) குணம்

D) குடம்

**விளக்கம்: ஒன்றே குலம் என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.**

**ஒன்றே குலம் ஒருவனே தேவன் – திருமந்திரம்.**

**மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவரே. இக்கருத்துக்களை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை.**

80) யாருடைய படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதினார் அயோத்திதாச பண்டிதர்?

**A) திருவள்ளுவர்**

B) கம்பர்

C) இளங்கோவடிகள்

D) புத்தர்

**விளக்கம்: திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அயோத்திதாசர் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.**

81) சுல்தான் அப்துலகாதர் என்பது யாருடைய இயற்பெயர் ஆகும்?

A) வீரமாமுனிவர்

B) கால்டுவெல்

**C) குணங்குடி மஸ்தான் சாகிபு**

D) ஜி.யு. போப்

**விளக்கம்: குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதர் என்பதாகும்.**

**வீரமாமுனிவரின் இயற்பெயர் – கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி**

82) சிறுகதை மன்னனின் இயற்பெயர் என்ன?

A) ஜெயகாந்தன்

**B) சோ. விருத்தாசலம்**

C) வரதன்

D) எத்திராசலு

**விளக்கம்: சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாசலம் என்பதாகும்.**

83) அயோத்திதாசர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கருக்கு முன்னோடி

2. தென்னிந்தியச் சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை

3. 1854 மே 20–ல் சென்னையில் பிறந்தார்.

4. இயற்பெயர் கார்த்திகைநாதன் என்பதாகும்.

**A) 1, 2 சரி**

B) 1, 2, 3 சரி

C) 3, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கருக்கு முன்னோடி**

**2. தென்னிந்தியச் சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை**

**3. 1845 மே 20–ல் சென்னையில் பிறந்தார்.**

**4. இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும்.**

84) பொருத்துக.

அ. நமன் – 1. அடியார்

ஆ. ஈயில் – 2. எமன்

இ. சித்தம் – 3. ஈடேறுங்கள்

ஈ. உய்ம்மின் – 4. உள்ளம்

**A) 2, 1, 4, 3**

B) 2, 1, 3, 4

C) 1, 2, 3, 4

D) 1, 4, 3, 2

**விளக்கம்: நமன் – எமன்**

**ஈயில் – அடியார்**

**சித்தம் – உள்ளம்**

**உய்ம்மின் – ஈடேறுங்கள்**

85) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) புத்தர் சரித்திரப்பா – அயோத்திதாச பண்டிதர்

B) திருமந்திரம் – திருமூலர்

**C) பொன்னகரம் – காத்தவராயன்**

D) எக்காளக் கண்ணி – குணங்குடி மஸ்தான் சாகிபு

**விளக்கம்: புத்தர் சரித்திரப்பா, புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம் – அயோத்திதாச பண்டிதர்**

**திருமந்திரம் – திருமூலர்**

**பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், சாபவிமோசனம், ஒருநாள் கழிந்தது – புதுமைப்பித்தன்**

**எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி – குணங்குடி மஸ்தான் சாகிபு**

86) ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை_________என்பர்?

**A) மரபுக் கவிதை**

B) புதுக்கவிதை

C) A மற்றும் B

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பாவலர்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த கருத்துக்களைப் பாடல்களாகப் படைக்கின்றனர். குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர்.**

87) மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது எது?

A) வானம்

B) கடல்

**C) மழை**

D) கதிரவன்

**விளக்கம்: மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி அயோத்திதாசர் கூறியுள்ளார். வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது என்கிறார்.** அயோத்திதாச பண்டிதர்.

88) கூற்றுகளை ஆராய்க.

1. யாப்பிலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் 4.

2. யாப்பிலக்கணத்தின்படி எழுத்துக்களை மூன்றாகப் பிரிக்கலாம்

3. அசை நான்கு வகைப்படும்.

4. சீர் இரண்டு வகைப்படும்

A) 1, 2 சரி

B) 1, 3, 4 சரி

**C) 2 மட்டும் சரி**

D) அனைத்தும் தவறு

**விளக்கம்: 1. யாப்பிலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் 6.**

**2. யாப்பிலக்கணத்தின்படி எழுத்துக்களை மூன்றாகப் பிரிக்கலாம்**

**3. அசை இரண்டு வகைப்படும்.**

**4. சீர் நான்கு வகைப்படும்.**

89) அயோத்திதாசர் எப்போது ஒருபைசாத் தமிழன் என்ற வார இதழை தொடங்கினார்?

A) 1908

**B) 1907**

C) 1906

D) 1905

**விளக்கம்: 1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத் தமிழன் என்னும் வாரஇதழை காலணா விலையில் தொடங்கினார் அயோத்திதாசப் பண்டிதர்.**

90) பொருத்துக.

அ. தொண்டு – 1. Integrity

ஆ. ஞானி – 2. Charity

இ. தத்துவம் – 3. Saint

ஈ. நேர்மை – 4. Philosophy

A) 1, 2, 3, 4

B) 2, 1, 3, 4

**C) 2, 3, 4, 1**

D) 2, 4, 3, 1

**விளக்கம்: தொண்டு – Charity**

**ஞானி – Saint**

**தத்துவம் – Philosophy**

**நேர்மை – Integrity.**

91) இலக்கணக் கட்டுபாடுகளின்றிக் கருத்துக்கு மட்டும் முதன்மை கொடுத்து எழுதப்படும் கவிதைகள்______எனப்படும்?

A) மரபுக் கவிதை

**B) புதுக்கவிதை**

C) A மற்றும் B

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பாவலர்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த கருத்துக்களைப் பாடல்களாப் படைக்கின்றனர். குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர். இலக்கணக் கட்டுபாடுகளின்றிக் கருத்துக்கு மட்டும் முதன்மை கொடுத்து எழுதப்படும் கவிதைகள் புதுக்கவிதைகள் எனப்படும்.**

92) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது_________எனப்படும்?

A) அசை

B) சீர்

C) தளை

**D) அடி**

**விளக்கம்: இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது அடி எனப்படும். அடி ஐந்து வகைப்படும்.**

93) தொடை எத்தனை வகைப்படும்?

A) 5

B) 7

**C) 8**

D) 4

**விளக்கம்: செய்யுளில் ஓசை இன்பமும் பொருள் இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு இடையிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும். தொடை எட்டு வகைப்படும். முதன்மையான தொடைகள்:**

**1. மோனை**

**2. எதுகை**

**3. இயைபு**

**4. அந்தாதி**

94) காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத

ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே – என்ற பாடலடிகளில் இடம்பெற்ற பராபரம் என்ற சொல்லின் பொருள்?

A) மேலான பரம்பொருள்

B) இறைவன்

C) விலையுயர்ந்த பொருள்

**D) A மற்றும் B**

**விளக்கம்: காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத**

**ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே – குணங்குடி மஸ்தான் சாகிபு.**

**பராபரம் என்ற சொல்லின் பொருள் – மேலான பொருள், இறைவன் என்பதாகும்.**

**இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் குணங்குடியார் பாடற்கோவை ஆகும்.**

**உன் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல், பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன் என்பது மேற்கண்ட பாடலடியின் பொருளாகும்.**

95) அயோத்திதாசர் பதிப்பித்த நூல்களில் பொருந்தாதது எது?

A) போகர் எழுநூறு

B) அகத்தியர் இருநூறு

**C) சிமிட்டு இரத்திரனாவளி**

D) பாலவாகடம்

**விளக்கம்: அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள்:**

**போகர் எழுநூறு**

**அகத்தியர் இருநூறு**

**சிமிட்டு இரத்தினச் சுருக்கம்**

**பாலவாகடம்.**

96) யாப்பிலக்கணத்தில் பா எத்தனை வகைப்படும்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: பா நான்கு வகைப்படும். அவை,**

**1. வெண்பா**

**2. ஆசிரியப்பா**

**3. கலிப்பா**

**4. வஞ்சிப்பா.**

97) அறநூல்கள் பலவும் எந்த ஓசையில் இயற்றப்பட்டுள்ளது?

A) அகவல் ஓசை

**B) செப்பல் ஓசை**

C) துள்ளல் ஓசை

D) தூங்கல் ஓசை

**விளக்கம்: பா நான்கு வகைப்படும். அவை,**

**1. வெண்பா**

**2. ஆசிரியப்பா**

**3. கலிப்பா**

**4. வஞ்சிப்பா**

**வெண்பா செப்பல் ஓசை உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.**

98) சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆவார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்**

B) இராஜராம் மோகன் ராய்

C) தயானந்த சரஸ்வதி சுவாமிகள்

D) இராமலிங்க அடிகள்

**விளக்கம்: சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் ஆவார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்தித் தாச பண்டிதர் ஆவார்.**

99) துள்ளல் ஓசை உடைய பாவகை எது?

A) வெண்பா

B) ஆசிரியப்பா

**C) கலிப்பா**

D) வஞ்சிப்பா

**விளக்கம்: கலிப்பா துள்ளல் ஓசை உடையது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது.**

100) பொருத்துக.

அ. வெண்பா – 1. அகவல் ஓசை

ஆ. ஆசிரியப்பா – 2. துள்ளல் ஓசை

இ. கலிப்பா – 3. தூங்கல் ஓசை

ஈ. வஞ்சிப்பா – 4. செப்பல் ஓசை

A) 1, 2, 3, 4

B) 4, 3, 1, 2

C) 4, 3, 2, 1

**D) 4, 1, 2, 3**

**விளக்கம்: வெண்பா – செப்பல் ஓசை**

**ஆசிரியப்பா – அகவல் ஓசை**

**கலிப்பா – துள்ளல் ஓசை**

**வஞ்சிப்பா – தூங்கல் ஓசை.**

101) கூற்றுகளை ஆராய்க.

1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது – எதுகை

2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது – மோனை

3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது – இயைபு.

4. ஒரு பாடலின் இறுதிச் சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை

**A) 1, 2 சரி**

B) 3, 4 சரி

C) 1, 3 சரி

D) 2, 3, 4 சரி

**விளக்கம்: 1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது – மோனை**

**2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது – எதுகை**

**3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது – இயைபு.**

**4. ஒரு பாடலின் இறுதிச் சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை.**

102) விடும் என்பது__________சீர்.

A) நேரசை

**B) நிரையசை**

C) மூவசை

D) நாலசை

**விளக்கம்: விடும் என்பது நிரையசையாகும்..**

**இரண்டு குறில் எழுத்துக்கள் அல்லது குறில், நெடில் எழுத்துக்கள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. கட, கடல், கடா, கடாம்.**

**இங்கு இரு குறில் எழுத்துடன் மெய் எழுத்தும் சேர்ந்து வந்துள்ளது. எனவே நிரையசையாகும்.**

103) கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தலர் இனிது – என்ற குறளின் அணி எது?

A) வேற்றுமை அணி

**B) பிறிதுமொழிதல் அணி**

C) உவமை அணி

D) இரட்டுற மொழிதல் அணி

**விளக்கம்: இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி பிறிதுமொழிதல் அணி. உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது பிறிதுமொழிதல் அணி எனப்படும்.**

**காட்டுமுயலை வீழ்த்தி அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும் என்பதே இக்குறட்பாவில் பொருள் ஆகும். இது உவமை.**

**இதன் மூலம் கூறவந்த கருத்து பெரு முயற்சியே பெருமை தரும் என்பதாகும்.**

104) கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தலர் இனிது – இக்குறட்பாவில் கான என்ற சொல்லின் பொருள் என்ன?

A) மரம்

**B) காடு**

C) கண்டு

D) முயல்

**விளக்கம்: கான என்ற சொல்லின் பொருள் காடு என்பதாகும். காட்டுமுயலை வீழ்த்தி அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும் என்பதே இக்குறட்பாவில் பொருள் ஆகும்.**

105) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

A) வேற்றுமை அணி

B) பிறிதுமொழிதல் அணி

**C) உவமை அணி**

D) இரட்டுற மொழிதல் அணி

**விளக்கம்: இக்குறட்பாவில் பயின்று வரும் அணி உவமை அணியாகும். நல்ல நூல்களைப் படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோலப் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும். இங்கு போல என்னும் உவம உருபு வந்துள்ளது. எனவே இது உவமை அணியாகும்.**

106) பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்

கலம்தீமை யால்திரிந்து அற்று – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

A) வேற்றுமை அணி

B) பிறிதுமொழிதல் அணி

**C) உவமை அணி**

D) இரட்டுற மொழிதல் அணி

**விளக்கம்: இக்குறட்பாவில் பயின்று வரும் அணி உவமை அணியாகும். தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால் திரிந்துவிடும். அதுபோல நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமும் யாருக்கும் பயனின்றி அழியும். இங்கு போல என்னும் உவம உருபு வந்துள்ளது. எனவே இது உவமை அணியாகும்.**

107) ஆண்மையின் கூர்மை__________

A) வறியவருக்கு உதவுதல்

**B) பகைவருக்கு உதவுதல்**

C) நண்பனுக்கு உதவுதல்

D) உறவினருக்கு உதவுதல்

**விளக்கம்: பகைவருக்கும் துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.**

108) வறுமை வந்த காலத்தில்____________குறையாமல் வாழ வேண்டும்.

A) இன்பம்

B) தூக்கம்

**C) ஊக்கம்**

D) ஏக்கம்

**விளக்கம்: வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும்.**

109) பெருஞ்செல்வம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) பெரிய + செல்வம்

B) பெருஞ் + செல்வம்

C) பெரு + செல்வம்

**D) பெருமை + செல்வம்**

**விளக்கம்: பெருஞ்செல்வம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பெருமை + செல்வம் ஆகும்.**

110) ஊராண்மை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) ஊர் + ஆண்மை**

B) ஊராண் + மை

C) ஊ + ஆண்மை

D) ஊரு + ஆண்மை

**விளக்கம்: ஊராண்மை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ஊர் + ஆண்மை ஆகும்.**

111) திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) திரிந்ததுஅற்று

**B) திரிந்தற்று**

C) திரிந்துற்று

D) திரிவுற்று

**விளக்கம்: திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் திரிந்தற்று ஆகும்.**

**நிலைமொழியின் இறுதி எழுத்து து (த் + உ). வருமொழியின் முதல் எழுத்து அ (உயிர் எழுத்து).**

**திரிந்த் + அற்று (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்).**

**திரிந் + த் + அற்று=திரிந்தற்று (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே).**

112) பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்.

ஊராண்மை மற்றுஅதன் எஃகு – இதில் எஃகு என்ற சொல்லின் பொருள்?

A) இரும்பு

B) உலோகம்

C) வலிமை

**D) கூர்மை**

**விளக்கம்: இங்கு எஃகு என்ற சொல்லின் பொருள் கூர்மை ஆகும். பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கு துன்பம் வரும்போது உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர் என்பது இக்குறட்பாவின் விளக்கம் ஆகும்.**

113) ஆனந்தவெள்ளம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) ஆனந்த + வெள்ளம்

B) ஆனந்தன் + வெள்ளம்

**C) ஆனந்தம் + வெள்ளம்**

D) ஆனந்தர் + வெள்ளம்

**விளக்கம்: ஆனந்தவெள்ளம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஆனந்தம் + வெள்ளம் என்பதாகும்.**

114) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு – இக்குறட்பாவில் நயம் என்ற சொல்லின் பொருள்?

A) சிரித்தல்

**B) இன்பம்**

C) நட்பு

D) படித்தல்

**விளக்கம்: நயம் என்ற சொல்லின் பொருள் இன்பம் ஆகும். நல்ல நூல்களை படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோல் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

115) தொடை எட்டு வகைப்படும். கீழ்க்கண்டவற்றில் எது முதன்மையான தொடை அல்ல?

A) மோனை

B) எதுகை

**C) முரண்**

D) இயைபு

**விளக்கம்: செய்யுளில் ஓசை இன்பமும் பொருள் இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு இடையிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும். தொடை எட்டு வகைப்படும். முதன்மையான தொடைகள்:**

**1. மோனை**

**2. எதுகை**

**3. இயைபு**

**4. அந்தாதி**

116) நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தல் பொருட்டு – இக்குறட்பாவில் நகுதல் என்ற சொல்லின் பொருள்?

**A) சிரித்தல்**

B) நழுவுதல்

C) பேசுதல்

D) மகிழ்தல்

**விளக்கம்: நகுதல் என்ற சொல்லின் பொருள் சிரித்தல் என்பதாகும். நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டுமன்று, நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.**

117) யாப்பிலக்கணத்தின் உறுப்புகளில் ஒன்றாகிய தளை எத்தனை வகைப்படும்?

A) 4

B) 5

**C) 7**

D) 8

**விளக்கம்: சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். முதல் சீரின் இறுதியிலும் வரும் சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில் தளை ஏழு வகைப்படும்.**

118) அன்பும் ஆறுதலும் நிறைந்த நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்று கூறியவர் யார்?

A) புதுமைப்பித்தன்

**B) அயோத்திதாசர்**

C) இராமலிங்க அடிகள்

D) மேற்கண்ட யாருமில்லை

**விளக்கம்: ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும். ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும். இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீத்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள்.**

119) எப்போது ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும் என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A) செல்வம் மிகுந்த காலத்தில்

B) நண்பர்கள் உதவி செய்யும் காலத்தில்

**C) வறுமை வந்த காலத்தில்**

D) நண்பர் உதவாத காலத்தில்

**விளக்கம்: வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும் என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.**

**பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**

**சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

**செல்வம் மிகுந்த காலத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும் என்பதே இக்குறட்பாவின் விளக்கமாகும்.**

120) ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும் – இக்குறட்பாவில் கேண்மை என்ற சொல்லின் பொருள்?

A) சுற்றம்

**B) நட்பு**

C) உறவினர்

D) அன்பு

**விளக்கம்: கேண்மை என்ற சொல்லின் பொருள் நட்பு ஆகும். மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

121) கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல் – இக்குறட்பாவில் கேட்டினும் என்ற சொல்லின் பொருள்?

A) கேட்டாலும்

**B) துன்பம் வரினும்**

C) கேட்காமலும்

D) துன்பம் வராமலும்

**விளக்கம்: கேட்டினும் என்ற சொல்லின் பொருள் துன்பம் வரினும் என்பதாகும். நமக்கு வரும் துன்பத்தினாலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும் என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும்.**

122) நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா – இதில் நடமாடக்கோயில் என்ற சொல்லின் பொருள்?

**A) அடியார்**

B) இறைவன்

C) சித்தர்கள்

D) கோயில்

**விளக்கம்: இங்கு நடமாடக் கோயில் என்ற சொல்லின் பொருள் அடியார். படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்க்குச் சேராது.**

123) காத்தவராயன் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவரின் ஆசிரியர் பெயர் அயோத்திதாச பண்டிதர்

2. பர்மாவில் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்து வந்த தமிழர்களின் உரிமைகளுக்காக பாடுபட்டார்.

3. 1908ஆம் ஆண்டில் சென்னையில் ஒரு பைசாத்தமிழன் என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார்.

4. மனிதனின் அறிவு வளர்ச்சிப்பெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று கருதினார்.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. இவரின் ஆசிரியர் பெயர் அயோத்திதாச பண்டிதர்**

**2. பர்மாவில் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்துவந்த தமிழர்களின் உரிமைகளுக்காக பாடுபட்டார்.**

**3. 1907ஆம் ஆண்டில் சென்னையில் ஒரு பைசாத்தமிழன் என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார்.**

**4. மனிதனின் அறிவு வளர்ச்சிப்பெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று கருதினார்.**

124) கூற்று: அயோத்திதாசரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளாராக மதித்தனர்.

காரணம்: பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு புதிய சிந்தனைகளை விதைத்தவர் அயோத்திதாசர்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: அயோத்திதாசரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளாராக மதித்தனர். பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு புதிய சிந்தனைகளை விதைத்தவர் அயோத்திதாசர்.**

125) நமக்கு துன்பம் வருவதிலும் ஓர் நன்மை உண்டு என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அதற்கான காரணம் என்ன?

A) நாம் ஒழுக்கத்துடன் வாழ

B) நாம் பிறருக்கு உதவி செய்ய

**C) நண்பர் பற்றி நாம் அறிய**

D) ஆசையை துறந்து வாழ

**விளக்கம்: நமக்கு வரும் துன்பத்திலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.**

**கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**

**நீட்டி அளப்பதோர் கோல்.**

126) ஆராய்ந்து பாராமல் கொண்ட நட்பு பற்றி திருவள்ளுவர் குறிப்பிடுவது எது?

A) இடையில் முறியும்

B) துன்பத்துடன் தொடரும்

**C) சாகும் அளவுக்குத் துன்பம் தரும்**

D) விரைவில் முறியும்.

**விளக்கம்: மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும்.**

127) கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது – இக்குறட்பாவில் திருவள்ளுவர் குறிப்பிடும் செய்தி எது?

**A) பெருமுயற்சியே பெருமை தரும்**

B) தகுந்த படையுடன் சென்று போரிடல் வேண்டும்

C) தகுந்த காலத்தில் போர் தொடங்க வேண்டும்

D) தகுந்த பயிற்சி பெற்றவருடன் சென்று போரிடல் வேண்டும்

**விளக்கம்: காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். அதாவது இக்குறட்பாவில் பெரிய முயற்சியே பெருமை தரும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.**

128) பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய

சுருக்கத்து வேண்டும் உயர்வு – இக்குறட்பாவில் பெருக்கத்து வேண்டும் என்று குறிப்பிடப்படுவது எது?

A) இன்பம்

**B) செல்வம்**

C) நண்பர்கள்

D) பதவி

**விளக்கம்: இக்குறட்பாவில் பெருக்கத்து வேண்டும் என்று குறிப்பிடப்படுவது செல்வம் ஆகும். செல்வம் மிகுந்த காலத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும் என்பதே இக்குறட்பாவின் விளக்கமாகும்.**

## 8th Tamil Unit 9 Questions

1) அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு___________விருது வழங்கியது?

A) பத்ம ஸ்ரீ

**B) பாரத ரத்னா**

C) பத்மவிபூசண்

D) பத்மபூசன்

**விளக்கம்: அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு பாரத ரத்னா விருது வழங்கியது. இவருக்கு 1990ஆம் வழங்கப்பட்டது. பாரத ரத்னா, தமிழில் இந்திய மாமணி என்று அழைக்கப்படுகிறது.**

2) அம்பேத்கரின் இயற்பெயர் என்ன?

A) பீமாராவ் ராம்ஜி

B) ராம்ஜி சக்பால்

**C) பீமாராவ் சக்பால் அம்பவாதேகர்**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இருந்தவர் அண்ணல் அம்பேத்கர் ஆவார். இவருக்கு பெற்றோர் சூட்டியப் பெயர் பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்பதாகும்.**

3) அடுத்தவர் வாழ்வைக் கண்டு______________கொள்ளக்கூடாது.

A) உவகை

B) நிறை

**C) அழுக்காறு**

D) இன்பம்

**விளக்கம்: அடுத்தவர் வாழ்வைக் கண்டு பொறாமை கொள்ளக் கூடாது. அழுக்காறு என்ற சொல்லி;ன் பொருள் பொறாமை என்பதாகும்.**

**உவகை – மகிழ்ச்சி**

**நிறை – மேன்மை**

4) கன்னிப்பாவை என்னும் எந்த நூலை தழுவி எழுதப்பட்டது?

**A) திருப்பாவை**

B) திருவெம்பாவை

C) திருவாசகம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி கன்னிப்பாவை என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது.**

5) கன்னிப்பாவை என்னும் நூலை எழுதியவர் யார்?

**A) சேசுராசா**

B) ஆண்டாள்

C) மாணிக்கவாசகர்

D) எத்திராசலு

**விளக்கம்: கன்னிப்பாவை என்னும் நூலை எழுதியவர் இறையரசன் ஆவார். இவரின் இயற்பெயர் சே.சேசுராசா என்பதாகும். இவர் கல்லூரி ஒன்றில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.**

6) நாம் நீக்கவேண்டியவற்றுள் ஒன்று--------------

**A) பொச்சாப்பு**

B) துணிவு



winmeen.com

C) மானம்

D) எளிமை

**விளக்கம்: நாம் நீக்கவேண்டியவற்றுள் ஒன்று சோர்வு ஆகும். பொச்சாப்பு என்றால் சோர்வு என்று பொருள். இச்சொல்லாக்கத்தை இறையரசனின் கன்னிப்பாவை என்னும் நூலில் அறியலாம்.**

7) இன்பதுன்பம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது எது?

A) இன்பம் + துன்பு

B) இன்பம் + துன்பம்

C) இன்ப + அன்பம்

D) இன்ப + அன்பு

**விளக்கம்: இன்பதுன்பம் என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது இன்பம் + துன்பம் என்பதாகும்.**

8) குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது?

A) குணங்கள்எல்லாம்

B) குணமெல்லாம்

C) குணங்களில்லாம்

**D) குணங்களெல்லாம்**

**விளக்கம்: குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் குணங்களெல்லாம் என்பதாகும்.**

**நிலைமொழியின் இறுதி எழுத்து ள் (மெய் எழுத்து) .**

**வருமொழியின் முதல் எழுத்து எ (உயிர் எழுத்து) .**

**குணங்கள் + எ + ல்லாம் = குணங்களெல்லாம் (உடல்மேல்உயிர் வந்து ஒன்றுவது இயல்பே) .**

9) நட

நாளைமட்டுமல்ல

இன்றும்

நம்முடையதுதான் என்று நம்பிக்கையூட்டும் வகையில் பாடல் தந்தவர் யார்?

A) மீரா

B) சுரதா

C) கல்யாண்ஜி

**D) மு. மேத்தா**

**விளக்கம்: செயல்படத் தொடங்கு, நாளை மட்டுமல்ல இன்றும் நமது நாள்தான் என்று பொருள் தரும் வகையில் மேற்கண்ட வரிகளை எழுதியவர் மு.மேத்தா.**

10) உன்னுடன் நீயே___________கொள்.

A) சேர்ந்து

B) பகை

**C) கைகுலுக்கி**

D) நட்பு

**விளக்கம்: உன்னுடன் நீயே கைகுலுக்கிக் கொள் என்று மு.மேத்தா தனது பாடல் வரிகள் மூலம் கூறுகிறார்.**

**ஓடிவந்து கைகுலுக்க**

**ஒருவருமில்லையா?**

**உன்னுடன் நீயே**

**கைகுலுக்கிக் கொள் – மு.மேத்தா.**

11) திருப்பாவை என்ற நூலை எழுதியவர் யார்?

A) இறையரசன்

B) மாணிக்கவாசகர்

**C) ஆண்டாள்**

D) நம்மாழ்வார்

**விளக்கம்: மார்கழித் திங்கள் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து, பிற பெண்களையும் எழுப்பிக் கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி, இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு. இதனைப் பாவை நோன்பு என்பர். அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை ஆகும்.**

12) நட

பாதங்கள்

நடக்கத்

தயாராய் இருந்தால்

பாதைகள்

மறுப்புச் சொல்லப்

போவதில்லை என்ற பாடல் வரிகளை பாடியவர்?

A) மீரா

B) சுரதா

C) கல்யாண்ஜி

**D) மு. மேத்தா**

**விளக்கம்: உனது பாதங்கள் நடக்கத் தயாராக இருந்தால், நீ செல்லும் பாதைகள் உன்னை எதிர்க்கப்போவதில்லை என்று பொருள் தரும் வகையில் மேற்கண்ட பாடல் வரிகளை எழுதியவர் – மு.மேத்தா ஆவார்.**

13) விடுதலை இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார்?

A) இராஜகோபாலச்சாரியார்

B) சர்தார் வல்லபாய் படேல்

C) இராஜேந்திரபிரசாத்

**D) மேற்கண்ட யாருமில்லை**

**விளக்கம்: விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் அண்ணல் அம்பேத்கர் ஆவார்.**

14) அன்னை பூமி என்னும் புதினத்தை எழுதிய கோமகளின் இயற்பெயர் என்ன?

**A) இராஜலட்சுமி**

B) ஜெயலட்சுமி

C) கல்யாணி

D) அங்கையற்கண்ணி

**விளக்கம்: கோமகளின் இயற்பெயர் இராஜலட்சுமி ஆகும். இவர் சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார்.**

15) அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எப்போது ஓர் அமைப்பை நிறுவினார்?

A) 1929

**B) 1924**

C) 1923

D) 1927

**விளக்கம்: அம்பேத்கர் படிப்பை முடித்து இந்தியா திரும்பினார். இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போரட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்றும் முடிவு செய்தார். இவர் 1924ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.**

16) படுக்கையாகிறது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) படுக்கை + யாகிறது

B) படுக்கையா + ஆகிறது

C) படுக்கையா + கிறது

**D) படுக்கை + ஆகிறது**

**விளக்கம்: படுக்கையாகிறது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது படுக்கை + ஆகிறது.**

17) இரட்டை வாக்குரியை எதிர்த்த பூனா ஒப்பந்தம் கீழ்க்கண்ட எதனை ஆதரித்தது?

**A) ஒடுக்கப்பட்டோருக்கு தனித்தொகுதி**

B) ஒடுக்கப்பட்டோருக்கு அமைச்சரவையில் இடம்

C) ஒடுக்கப்பட்டோருக்கு அரசியலமைப்பில் பிரதிநிதித்துவம்

D) ஒடுக்கப்பட்டோருக்கு தனிக்கட்சி

**விளக்கம்: இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தியடிகள் உண்ணவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபதாம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இதுவே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.**

18) திருவெம்பாவை என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

**B) மாணிக்கவாசகர்**

C) நம்மாழ்வார்

D) சுந்தரர்

**விளக்கம்: சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை, இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர் ஆவார்.**

19) தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்?

A) தூக்கிகொண்டு

B) தூக்குக்கொண்டு

**C) தூக்கிக்கொண்டு**

D) தூக்குகொண்டு

**விளக்கம்: தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் தூக்கிக்கொண்டு என்று கிடைக்கும்.**

20) இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை என போற்றப்படுபவரின் பெற்றோர் யார்?

A) பீமாராவ்–பீமாபாய்

**B) ராம்ஜி சக்பால்–பீமாபாய்**

C) பீமாராவ் அம்பேத்கர்– பீமாபாய்

D) பீமாராவ் ராம்ஜி–பீமாபாய்

**விளக்கம்: விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் அம்பேத்கர் ஆவார். இவரின் பெற்றோர் பெயர் ராம்ஜி சக்பால்–பீமாபாய்.**

21) நெய்யாய் திரியாய்

நீயே மாறினால்

தோல்வியும் உனக்கொரு

தூண்டுகோலாகும் – என்ற வரிகளை எழுதியவர் யார்?

A) மீரா

B) சுரதா

C) கல்யாண்ஜி

**D) மு. மேத்தா**

**விளக்கம்: நெய்யாய் திரியாய்**

**நீயே மாறினால்**

**தோல்வியும் உனக்கொரு**

**தூண்டுகோலாகும் – மு.மேத்தா.**

22) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் எப்போது பிறந்தார்?

A) 1881 ஏப்ரல் 14

B) 1882 ஏப்ரல் 14

C) 1892 ஏப்ரல் 14

**D) 1891 ஏப்ரல் 14**

**விளக்கம்: அம்பேத்கர் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் பிறந்தார். இவரே விடுதலைபெற்ற இந்தியாவில் முதல் சட்ட அமைச்சர் ஆவார் .**

23) அ. வெண்ணிலா கீழ்க்கண்ட எந்த நூலை தொகுத்தார்?

A) அன்னை பூமி

**B) மீதமிருக்கும் சொற்கள்**

C) உயிர் அமுதாய்

D) நிலாக்கால நட்சத்திரங்கள்

**விளக்கம்: அ. வெண்ணிலா, மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலைத் தொகுத்தார். இந்நூலிலிருந்து பால் மனம் என்னும் கதை தரப்பட்டது.**

24) நிறை அழுக்காறு எளிமை நினைவுதுணிவு இன்பதுன்பம் – இவ்வரிகளில் அழுக்காறு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) அன்பு

B) தூய்மையின்மை

**C) பொறாமை**

D) பொறுமை

**விளக்கம்: அழுக்காறு என்றால் பொறாமை என்று பொருள். பொறை என்றால் பொறுமை என்று பொருள்.**

25) எங்கு இலட்சக்கணக்கான மக்களோடு அம்பேத்கர் புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்?

A) அம்பவாடே

B) மும்பை

**C) நாக்பூர்**

D) பவபுரி

**விளக்கம்: அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார். 1956ஆம்**

**ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.**

26) பொறைமதம் கடைப்பிடிகள்

பொச்சாப்பு மானம்அறம் – இதில் பொறை என்ற சொல்லின் பொருள்?

A) மேன்மை

B) பொறாமை

**C) பொறுமை**

D) பகை

**விளக்கம்: பொறை என்றால் பொறுமை என்று பொருள்.**

**நிறை – மேன்மை**

**அழுக்காறு – பொறாமை**

**இகல் – பகை.**

27) எப்போது அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது?

**A) 1990**

B) 1988

C) 1956

D) 1957

**விளக்கம்: இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு அம்பேத்கருக்கு வழங்கப்பட்டது. அவர் 1956 டிசம்பர் 6 ஆம் நாள் காலமானார்.**

28) யாருடைய அரண்மனையில் சிறிது காலம் உயர் அலுவலராக அம்பேத்கர் பணியாற்றினார்?

**A) பரோடா மன்னர்**

B) சதாரா மன்னர்

C) பூனே மன்னர்

D) மைசூர் மன்னர்

**விளக்கம்: 1907ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்த அம்பேத்கர், பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழகத்தில் படித்து 1912ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். சிறிதுகாலம் பரோடா மன்னரின் அரண்மனையில் உயர் அலுவலராகவும் பணியாற்றினார்.**

29) ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் புதுக்கவிதை நூலை எழுதியவர் யார்?

A) மீரா

B) சுரதா

C) கல்யாண்ஜி

**D) மு. மேத்தா**

**விளக்கம்: ஆகாயத்துக்கு அடுத்தவீடு என்னும் புதுக்கவிதை நூலை எழுதியவர் மு.மேத்தா. இந்நூலுக்கு சாகித்தய அகாதெமி விருது வழங்கப்பட்டது.**

30) சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல்?

A) திருப்பாவை

**B) திருவெம்பாவை**

C) திருவாசகம்

D) தேவாரம்

winmeen.com

**விளக்கம்: சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை, இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர் ஆவார்.**

31) பொறைமதம் கடைப்பிடிகள்

பொச்சாப்பு மானம்அறம் – இவ்வரியில் மதம் என்று குறிப்பிடப்படுவது?

A) இந்து மதம்

B) விருப்பம்

**C) கொள்கை**

D) சமயம்

**விளக்கம்: இறையரசன் எழுதிய இவ்வரிகளில் மதம் என்றால் கொள்கை என்று பொருள்.**

**மையல் – விருப்பம்**

32) நட

நாளைமட்டுமல்ல

இன்றும்

நம்முடையதுதான்

நட – என்று பாடியவர் யார்?

A) வாணிதாசன்

B) மீரா

**C) மு.மேத்தா**

D) பாரதிதாசன்

**விளக்கம்: மேற்கண்ட பாடல் வரிகளை எழுதியவர் மு.மேத்தா ஆவார். இவர் புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராவார். இவர் திரையிசைப்பாடல்களை எழுதியுள்ளார். கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.**

33) அம்பேத்கர் உயர் கல்வி கற்க எந்த நாட்டிற்கு சென்றார்?

**A) அமெரிக்கா**

B) ரஷ்யா

C) பிரான்ஸ்

D) சீனா

**விளக்கம்: 1912ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்ற அம்பேத்கர், உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார்.**

34) எந்த பல்கலைக்கழத்தில் சேர்ந்து அம்பேத்கர் பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்?

A) கேம்பிரிட்ஜ் பல்லைக்கழகம்

**B) கொலம்பியா பல்கலைக்கழகம்**

C) ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

D) நியூயார்க் பல்கலைக்கழகம்

**விளக்கம்: உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்ற அம்பேத்கர், கொலம்பியா பல்லைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.**

35) எந்த ஆண்டு அம்பேத்கர் பண்டையகால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்?

A) 1907

B) 1912

**C) 1915**

D) 1918

**விளக்கம்: கொலம்பியா பல்லைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். இவர் 1915ல் பண்டையகால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.**

36) யாருடைய உதவியினால் அம்பேத்கர் இளங்கலைப் பட்டம் பெற்றார்?

**A) பரோடா மன்னர்**

B) சதாரா மன்னர்

C) பூனே மன்னர்

D) மைசூர் மன்னர்

**விளக்கம்: 1907ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்த அம்பேத்கர், பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழத்தில் படித்து 1912ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.**

37) கோமகளின் எந்த புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது?

A) உயிர் அமுதாய்

B) மீதமிருக்கும் சொற்கள்

C) நிலாக்கால நட்சத்திரங்கள்

**D) அன்னை பூமி**

**விளக்கம்: இராஜலட்சுமி என்னும் இயற்பெயர் கொண்டவர் கோமகள் ஆவார். இவரின் அன்னை பூமி என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது.**

38) நீ

விழித்தெழும் திசையே

பூமிக்குக் கிழக்கு

உன்

விரல்களில் ஒளிரும்

சூரியவிளக்கு – என்று பாடியவர் யார்?

**A) மு.மேத்தா**

B) மீரா

C) சுரதா

D) கல்யாண்ஜி

**விளக்கம்: மேற்கண்ட பாடல்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் மு.மேத்தா கவிதைகள் ஆகும். இந்நூலை எழுதியவர் மு. மேத்தா ஆவார். இவர் வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.**

39) திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக பாடப்பட்ட நூல் எது?

**A) திருப்பாவை**

B) திருவெம்பாவை

C) நலாராயிரத்திவ்வியப்பிரபந்தம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: மார்கழித் திங்கள் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து, பிற பெண்களையும் எழுப்பிக் கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி, இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு. இதனைப் பாவை நோன்பு என்பர். அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை ஆகும்.**

40) பொறைமதம் கடைப்பிடிகள்

பொச்சாப்பு மானம்அறம் – இவ்வரிகளில் பொச்சாப்பு என்ற சொல்லின் எதிர்ச்சொல் என்ன?

A) பொறுமை

B) பொறுமையின்மை

C) சோர்வு

**D) சுறுசுறுப்பு**

**விளக்கம்: மேற்கண்ட வரிகள் இறையரசன் எழுதிய கன்னிப்பாவை என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. இதில் பொச்சாப்பு என்றால் சோர்வு என்று பொருள் தரும் வகையில் பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சொல்லின் எதிர்ச்சொல் சுறுசுறுப்பு.**

41) புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?

**A) அம்பேத்கர்**

B) அசோகர்

C) யுவான் சுவாங்

D) வர்த்தமானர்

**விளக்கம்: அம்பேத்கர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957ஆம் ஆண்டு வெளியானது.**

42) விழித்தெழும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) விழி + எழும்

**B) விழித்து + எழும்**

C) விழி + தெழும்

D) விழித் + தெழும்

**விளக்கம்: விழித்தெழும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது விழித்து + எழும்.**

43) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் எங்கு பிறந்தார்?

A) நாக்பூர்

B) புனே

C) வார்தா

**D) அம்பவாதே**

**விளக்கம்: இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் அம்பேத்கர் ஆவார். இவர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்னும் ஊரில் பிறந்தார்.**

44) கூற்று: அம்பேத்கர் 1924ல் ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.

காரணம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: 1924ஆம் ஆண்டு அம்பேத்கர் ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காகப் போராடினார்.**

45) கூற்றுகளை ஆராய்க.

1. 1937ல் அம்பேத்கர் சுதந்திரா கட்சியைத் தொடங்கினார்

2. தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 1935ல் அம்பேத்கர் சுதந்திரா கட்சியைத் தொடங்கினார்.**

**2. தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.**

46) மு.மேத்தாவின் எந்த நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது?

A) கண்ணீர்ப்பூக்கள்

B) ஊர்வலம்

C) சோழநிலா

**D) ஆகாயத்துக்கு அடுத்தவீடு**

**விளக்கம்: ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் புதுக்கவிதை நூலை எழுதியவர் மு.மேத்தா. இந்நூலுக்கு சாகித்தய அகாதெமி விருது வழங்கப்பட்டது.**

47) என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன் என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள்

**B) அம்பேத்கர்**

C) பாரதியார்

D) வ.உ.சி

**விளக்கம்: அம்பேத்கர் 1930ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்", அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.**

48) எப்போது அம்பேத்கர் தன்னை பௌத்த சமயத்தில் இணைத்துக்கொண்டார்?

**A) 1956 அக்டோபர் 14**

B) 1956 டிசம்பர் 6

C) 1956 நவம்பர் 14

D) 1956 ஏப்ரல் 14

**விளக்கம்: அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார். 1956ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.**

49) அம்பேத்கர் அமெரிக்கா சென்று உயர்கல்வி கற்க உதவிய மன்னர் யார்?

**A) மன்னர் சாயாஜிராவ்**

B) மன்னர் சரபோஜி

C) மன்னர் அன்வாருதீன்

D) மேற்கண்ட யாருமில்லை

**விளக்கம்: பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார் அம்பேத்கர். கொலம்பியா பல்லைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.**

50) இரட்டை வாக்குரிமையை பெற்றவர் யார்? ஏற்க மறுத்தவர் யார்?

A) காந்தியடிகள், அம்பேத்கர்

**B) அம்பேத்கர், காந்தியடிகள்**

C) சுபாஷ் சந்திரபோஸ், காந்தியடிகள்

D) இரட்டைமலை சீனிவாசன், அம்பேத்கர்

**விளக்கம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு என்ற இரட்டை வாக்குரிமை முறை வழங்கப்பட்டது. ஆனால் இதை எதிர்த்து காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தார்.**

51) கவலைகள்___________அல்ல என்று மு.மேத்தா கூறுகிறார்.

A) சுமைகள்

B) சுவைகள்

C) துன்பங்கள்

**D) கைக்குழந்தைகள்**

**விளக்கம்: கவலைகளைத்**

**தூக்கிக்கொண்டு**

**திரியாதே....**

**அவை**

**கைக்குழந்தைகளல்ல – மு.மேத்தா**

52) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ் அன்னை விருதினைப் பெற்றவர்?

**A) கோமகள்**

B) ஜெயலட்சுமி

C) மு.மேத்தா

D) மேற்கண்ட யாருமில்லை.

**விளக்கம்: இராஜலட்சுமி என்னும் இயற்பெயர் கொண்டவர் கோமகள் ஆவார். இவரின் அன்னை பூமி என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினை பெற்றுள்ளது. இவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதை பெற்றுள்ளார்.**

53) எப்போது அம்பேத்கர் பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்?

A) 1915

B) 1912

C) 1907

**D) 1920**

**விளக்கம்: 1915 – பண்டையக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்**

**1912 – மும்பைப் பல்லைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம்**

**1907 – பள்ளிப்படிப்பை முடித்தார்**

**1920 – பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்**

54) அம்பேத்கர் எந்த ஆண்டு பாரிஸ்டர் பட்டம் பெற்றார்?

A) 1917

B) 1912

C) 1921



www.winmeen.com

D) 1923

**விளக்கம்: அயராத உழைப்பின் பயனாக 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சினை என்னும் ஆராயச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் சட்டப்படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.**

55) இந்தியாவில் இரட்டை வாக்குரிமை முறை ஆங்கிலேயர்களால் வழங்கப்பட எந்த வட்டமேசை மாநாடு காரணம்?

A) முதலாம்

**B) இரண்டாம்**

C) மூன்றாம்

D) மேற்கண்ட அனைத்தும்

**விளக்கம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு என்ற இரட்டை வாக்குரிமை முறை வழங்கப்பட்டது.**

56) வெறுப்புஉவப்பு ஊக்கம் மையல்

வென்றிஇகல் இளமை மூப்பு – இவ்வரிகளில் மையல் என்ற சொல்லின் பொருள்?

A) சோர்வு

**B) விருப்பம்**

C) பகை

D) பொறாமை

**விளக்கம்: மையல் என்ற சொல்லின் பொருள் விருப்பம் என்பதாகும்.**

**பொச்சாப்பு – சோர்வு**

**இகல் – பகை**

**அழுக்காறு – பொறாமை.**

57) அம்பேத்கர் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவர் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்

2. அரசியல் சாசனத்தின் தந்தை

3. 1891 ஏப்ரல் 14ல் பிறந்தார்.

4. இவருடைய தந்தை கல்லூரி பேராசிரியர்

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

**D) 4 மட்டும் தவறு**

**விளக்கம்: 1. இவர் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்**

**2. அரசியல் சாசனத்தின் தந்தை**

**3. 1891 ஏப்ரல் 14ல் பிறந்தார்.**

**4. இவருடைய தந்தை கல்லூரி இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.**

58) கீழ்க்கண்ட எந்த ஆய்விற்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கியது?

A) பண்டையகால இந்தியாவில் வணிகம்

B) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

**C) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்**

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கியது. பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார் அம்பேத்கர். அவர் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.**

59) 1904ஆம் ஆண்டு அம்பேத்கருடைய குடும்பம் எங்கு குடிபெயர்ந்ததால் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார்?

A) சதாரா

B) நாக்பூர்

**C) மும்பை**

D) பூனே

**விளக்கம்: 1904ஆம் ஆண்டு அம்பேத்கருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்ததால் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும் கல்வியை விடாமல் தொடர்ந்தார்.**

60) எந்த ஆண்டு அம்பேத்கர் தமது இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார்?

A) 1904

B) 1907

**C) 1912**

D) 1915

**விளக்கம்: குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும் கல்வியை விடாமல் தொடர்ந்தார் அம்பேத்கர். இவர் 1912ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.**

61) பொருந்தாத நூல் ஒன்றை தெரிவு செய்க.

A) கண்ணீர்ப்பூக்கள்

B) ஊர்வலம்

C) சோழநிலா

**D) ஆகாயத்துக்கு அடுத்த வீடு**

**விளக்கம்: மேற்கண்ட நூல்கள் அனைத்தும் மு.மேத்தா எழுதிய நூல் ஆகும். இதில் ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் நூல் மற்ற மூன்று நூல்களிலிருந்து வேறுபடுகிறது. இந்நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.**

62) கீழ்க்கண்ட எது அம்பேத்கரின் ஆய்வுக் கட்டுரையாகும்?

A) பண்டையகால இந்தியாவில் வணிகம்

**B) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

C) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியாவில் சாதிகளில் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை அம்பேத்கர் படைத்தளித்தார். அதைச் சிறுப்புத்தகமாகவும் வெளியிட்டார். அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே.**

63) அம்பேத்கர் இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கீழ்க்கண்ட எதனை வலியுறுத்தினார்?

A) சுயராஜ்ய கோரிக்கை

**B) ஒடுக்கப்பட்டோருக்கு தனி வாக்குரிமை**

C) இந்தியாவிற்கு தனி அரசியலமைப்பு

D) இந்திய பிரிவினை கூடாது.

**விளக்கம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார்.**

64) மறவிஓர்ப்பு இன்னபிற

மன்னும் உயிர்க் குணங்கள்எல்லாம் – இவ்வரியில் இடம்பெற்றுள்ள மன்னும் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) கொடுக்கும்

B) ஆராய்ந்து தெளிதல்

C) விருப்பம்

**D) நிலைபெற்ற**

**விளக்கம்: கன்னிப்பாவை என்ற பாடலில் இடம்பெற்ற இவ்வரிகளை எழுதியவர் இறையரசன் ஆவார். மன்னும் என்ற சொல்லின் பொருள் நிலைபெற்ற என்பதாகும்.**

65) விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது?

A) விழியெழும்

**B) விழித்தெழும்**

C) விழித்தழும்

D) விழித்துஎழும்

**விளக்கம்: விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் விழித்தெழும் என்பதாகும்.**

**விழித்த் + எழும் (உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும்) .**

**விழித் + த் + எ + ழும் = விழித்தெழும் (உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே) .**

66) அம்பேத்கர் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) அம்பேத்கர் மும்பையில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.

B) இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புக்கு ஆளானவர்.

C) மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார்.

**D) ராம்ஜி சக்பால் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.**

**விளக்கம்: 1. அம்பேத்கர் மும்பையில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.**

**2. இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புக்கு ஆளானவர்.**

**3. மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார்.**

**4. பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.**

67) அம்பேத்கர் நூலகம் திறக்கும்போது முதல் ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார். இத்தகைய அயராத உழைப்பை அவர் எங்கு மேற்கொண்டார்?

A) அமெரிக்கா

**B) இலண்டன்**

C) சீனா

D) ரஷ்யா

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு பொளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார் அம்பேத்கர். அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார். நூலகம் திறக்கும்போது முதல் ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்.**

68) கீழ்க்கண்டவற்றில் தவறாகப் பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) 1915 – பண்டையக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.

B) 1912 – மும்பைப் பல்லைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம்.

**C) 1908 – பள்ளிப்படிப்பை முடித்தார்.**

D) 1920 – பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்.

**விளக்கம்: 1915 – பண்டையக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்**

**1912 – மும்பைப் பல்லைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம்**

**1907 – பள்ளிப்படிப்பை முடித்தார்**

**1920 – பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்.**

69) கோமகள் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவரின் இயற்பெயர் இராஜலட்சுமி

2. இவர் சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார்.

3. இவரது தமிழன்னை என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது.

4. மீதமிருக்கும் சொற்கள் என்னும் நூலைத் தொகுத்துள்ளார்.

A) 1, 4 சரி

B) 1, 3 சரி

C) 2, 3 சரி

**D) 1, 2 சரி**

**விளக்கம்: 1. இவரின் இயற்பெயர் இராஜலட்சுமி**

**2. இவர் சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார்.**

**3. இவரது அன்னை பூமி என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது.**

**4. மீதமிருக்கும் சொற்கள் என்னும் நூலைத் தொகுத்தவர் அ. வெண்ணிலா.**

70) அம்பேத்கர் எந்த சமயக் கொள்கையின் மீது ஈடுபாடு கொண்டார்?

A) சமணம்

**B) பௌத்தம்**

C) கிறித்துவம்

D) ஜொரஸ்டிரம்

**விளக்கம்: அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.**

71) கீழ்க்கண்டவர்களில் பொருந்தாதவர் யார்?

A) கோபால்சாமி

B) அல்லாடி கிருஷ்ணமூர்த்தி

C) கே.எம். முன்ஷி

**D) இராஜேந்திர பிரசாத்**

**விளக்கம்: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது.**

**1. கோபால்சாமி**

**2. அல்லாடி கிருஷ்ணமூர்த்தி**

**3. கே.எம். முன்ஷி**

**4. சையது முகமது சாதுல்லா**

**5. மாதவராவ்**

**6. டி.பி. கைத்தான்**

**7. அம்பேத்கர்**

**இராஜேந்திர பிரசாத் என்பவர் அரசியல் நிர்ணய சபையின் தலைவர் ஆவார்.**

**அம்பேத்கர் வரைவுக் குழுவின் தலைவர் ஆவார்.**

72) எந்த ஆண்டு அம்பேத்கர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்ற புத்தகம் வெளியானது?

A) 1956

B) 1950

**C) 1957**

D) 1955

**விளக்கம்: அம்பேத்கர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957ஆம் ஆண்டு வெளியானது.**

73) கீழ்க்கண்ட எதன் ஆராய்ச்சிக்காக அம்பேத்கர் முதுகலைப் பட்டம் பெற்றார்?

**A) பண்டையகால இந்தியாவில் வணிகம்**

B) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

C) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: 1915ல் பண்டைய கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப்பட்டம் பெற்றார் அம்பேத்கர். இவர் அமெரிக்கா சென்று உயர்கல்வி கற்க உதவியவர் பரோடா மன்னர் சாயாஜிராவ் ஆவார்.**

74) அம்பேத்கர் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) மிகச்சிறந்த பொருளியல் அறிஞர்

B) அரசியல் தத்துவமேதை

C) பகுத்தறிவு சிந்தனையாளர்

**D) பெண்விடுதலை சிந்தனையாளர்**

**விளக்கம்: அம்பேத்கர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் விளங்கினார்.**

75) அம்பேத்கருக்கும் காந்தியடிகளுக்கும் இடையே கையெழுத்தான பூனா ஒப்பந்தம் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?

A) சுயராஜ்யம்

**B) இரட்டை வாக்குரிமை**

C) அரசியலமைப்புச் சாசனம்

D) இரட்டை ஆட்சி

**விளக்கம்: இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தியடிகள் உண்ணவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபதாம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பதந்தம் செய்து கொண்டனர். இதுவே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.**

76) அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் எது?

A) பண்டையகால இந்தியாவில் வணிகம்

**B) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

C) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

winmeen.com

**விளக்கம்: இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தளித்தார். அதைச் சிறுபுத்தகமாகவும் வெளியிட்டார். அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே.**

77) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, எந்த பல்கலைக்கழகம் அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கியது?

**A) கொலம்பியா பல்லைக்கழம்**

B) ஆக்ஸ்போர்டு பல்லைக்கழகம்

C) இலண்டன் பல்லைக்கழகம்

D) கேம்பிரிட்ஜ் பல்லைக்கழகம்

**விளக்கம்: இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கியது. பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார் அம்பேத்கர். அவர் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.**

78) கூற்று: அம்பேத்கர் சுதந்திர தொழிலாளர் கட்சியைத் தொடங்கினார்

காரணம்: ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை ஆங்கில அரசிடமிருந்து பெற

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: 1935ஆம் ஆண்டு மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார். சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.**

79) மறவிஓர்ப்பு இன்னபிற

மன்னும் உயிர்க் குணங்கள்எல்லாம் – இவ்வரியில் இடம்பெற்றுள்ள ஓர்ப்பு என்ற சொல்லின் பொருள் என்ன?

A) கொடுக்கும்

**B) ஆராய்ந்து தெளிதல்**

C) விருப்பம்

D) நிலைபெற்ற

**விளக்கம்: கன்னிப்பாவை என்ற பாடலில் இடம்பெற்ற இவ்வரிகளை எழுதியவர் இறையரசன் ஆவார். ஓர்ப்பு என்ற சொல்லின் பொருள் ஆராய்ந்து தெளிதல் என்பதாகும்.**

**மையல் – விருப்பம்**

**மன்னும் – நிலைபெற்ற**

80) அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நிறுவிய அமைப்பு எது?

A) சமாஜ் சமாத சங்கம்

**B) ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை**

C) ஒடுக்கப்பட்டோர் நல சங்கம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: அம்பேத்கர் படிப்பை முடித்து இந்தியா திரும்பினார். இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போரட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்றும் முடிவு செய்தார். இவர் 1924ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.**

81) கோமகள் எழுதாத நூல் எது?

A) உயிர் அமுதாய்

B) நிலாக்கால நட்சத்திரங்கள்

**C) அறிவின் சிதறல்**

D) அன்னை பூமி

**விளக்கம்: இராஜலட்சுமி என்னும் இயற்பெயர் கொண்ட கோமகள் எழுதிய நூல்கள்:**

**1. அன்னை பூமி**

**2. உயிர் அமுதாய்**

**3. நிலாக்கால நட்சத்திரங்கள்**

**4. அன்பின் சிதறல்.**

82) அம்பேத்கர் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டிற்கு எப்போது சென்றார்?

A) 1929

**B) 1930**

C) 1935

D) 1928

**விளக்கம்: அம்பேத்கர் 1930ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்", அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.**

83) வெறுப்புஉவப்பு ஊக்கம் மையல்

வென்றிஇகல் இளமை மூப்பு – இவ்வரிகளில் இகல் என்ற சொல்லின் எதிர்ச்சொல் என்ன?

A) இகழ்ச்சி

B) புகழ்ச்சி

C) பகை

**D) நட்பு**

**விளக்கம்: இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் கன்னிப்பாவை ஆகும். இதன் ஆசிரியர் இறையரசன். இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள இகல் என்ற சொல்லின் பொருள் பகை என்பதாகும். இதன் எதிர்ச்சொல் நட்பு.**

84) வெற்ற

உன்னைச்சுற்றி

வெளிச்சவிதை

விதைக்கும் – என்று பாடியவர் யார்?

A) பாரதியார்

B) வாணிதாசன்

C) மீரா

**D) மு.மேத்தா**

**விளக்கம்: உலகத்திற்கு ஒளியேற்ற எண்ணெயாய், திரியாய் உன்னையே நீ மாற்றினால் தோல்வியும் உன் உயர்விற்குத் தூண்டுகோலாகும். வெற்றி உன் அங்கமாகி, வாழ்வில் ஒளியேற்றும் என்பது மேற்கண்ட பாடலின் பொருளாகும். இதனை பாடியவர் மு.மேத்தா ஆவார்**

85) அம்பேத்கருக்கு பொருந்தாதது எது?

A) எழுத்தாளர்

B) பேச்சாளர்

C) சமூகச் சீர்திருத்தவாதி

**D) வரலாற்றறிஞர்**

**விளக்கம்: அம்பேத்கர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் விளங்கினார். சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் மக்களால் போற்றப்பட்டார். வரலாற்றிஞர் என்பத அம்பேத்கருக்கு பொருந்தாது ஆகும்.**

86) ஓடிவந்து கைகுலுக்க

ஒருவருமில்லையா?

உன்னுடன் நீயே

கைகுலுக்கிக் கொள் – என்று கூறியவர் யார்

A) கண்ணதாசன்

B) வாணிதாசன்

**C) மு.மேத்தா**

D) மீரா

**விளக்கம்: மேற்கண்ட பாடல் வரிகளை எழுதியவர் மு.மேத்தா. இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் மு.மேத்தா கவிதைகள் ஆகும்.**

87) ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று எந்த வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் கூறினார்?

A) முதலாம்

**B) இரண்டாம்**

C) மூன்றாம்

D) மேற்கண்ட அனைத்தும்

**விளக்கம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார்.**

88) இரட்டை வாக்குரிமை என்பது கீழ்க்கண்ட எதைக் குறிக்கிறது?

**A) ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு**

B) ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு

C) ஒரு தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, முஸ்லீம் லீக் கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு

D) ஒரு தொகுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, ஆங்கில அரசு பிரதிநிதி வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு

**விளக்கம்: ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்தெடுக்க ஒரு வாக்கு, ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கு என்ற இரட்டை வாக்குரிமை முறை வழங்கப்பட்டது.**

89) தூங்கி விழுந்தால்

பூமி உனக்குப்

படுக்கையாகிறது

விழித்து நடந்தால்

அதுவே உனக்குப்

பாதையாகிறது – என்ற பாடல் வரிகளை எழுதியவரின் சாகித்தய அகாடதெமி பரிசு பெற்ற நூல் எது?

A) மு.மேத்தா கவிதைகள்

B) மகுடநிலா

**C) ஆகாயத்துக்கு அடுத்தவீடு**

D) பிசிராந்தையார்

**விளக்கம்: மேற்கண்ட பாடல்வரிகளை எழுதியவர் மு.மேத்தா ஆவார். இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் மு.மேத்தா கவிதைகள். இவரின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகாயத்துக்கு அடுத்த வீடு.**

90) போவதில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

**A) போவது + இல்லை**

B) போ + இல்லை

C) போவது + தில்லை

D) போவது + தில்லை

**விளக்கம்: போவதில்லை என்னும் செல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது போவது + இல்லை.**

91) மு.மேத்தா பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்

2. மரபுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராக இவரைப் போற்றுவர்.

3. பள்ளித் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்

4. திரையிசைப்பாடல்களை எழுதியுள்ளார் .

A) 1, 4 தவறு

**B) 2, 3 தவறு**

C) 1, 2, 4 தவறு

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்**

**2. புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராக இவரைப் போற்றுவர்.**

**3. கல்லூரிப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்**

**4. திரையிசைப்பாடல்களை எழுதியுள்ளார்.**

92) தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி எது?

A) உவமை அணி

B) இல்பொருள் உவமை அணி

C) பிறிது மொழிதல் அணி

**D) வேற்றுமை அணி**

**விளக்கம்: இத்திருக்குறளில் முதலில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும்தன்மை உடையவை என்று கூறப்படுகிறது. பின்னர், நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும். உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. எனவே இது வேற்றுமை அணி ஆகும்.**

93) பொருத்துக.

அ. அரசியலமைப்பு – 1. Agreement

ஆ. ஒப்பந்தம் – 2. Constitution

இ. பல்கலைக்கழகம் – 3. Round Table Conference

ஈ. வட்டமேசை மாநாடு – 4. University

A) 1, 2, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 2, 1, 3, 4

D) 1, 2, 4, 3

**விளக்கம்: அரசியலமைப்பு** – Constitution

**ஒப்பந்தம்** – Agreement

**பல்கலைக்கழகம்** – University

**வட்டமேசை மாநாடு** – Round Table Conference

94) அம்பேத்கரின் ஆசிரியர் பெயர் என்ன?

A) பீமாராவ் அம்பேத்கர்

B) சக்பால் அம்பேத்கர்

**C) மகாதேவ் அம்பேத்கர்**

D) ராம்ஜி அம்பேத்கர்

**விளக்கம்: மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக் கொண்டார்.**

95) கூற்று: அம்பேத்கர் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார்.

காரணம்: இவர் ஏழ்மையான குடும்பத்தில் 14–வது பிள்ளையாகப் பிறந்தார்

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார். இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார்.**

96) எந்த ஆண்டு அம்பேத்கரின் குடும்பம் மும்பைக்கு குடிபெயர்ந்தது?

A) 1902

B) 1903

**C) 1904**

D) 1912

**விளக்கம்: 1904ஆம் ஆண்டு அம்பேத்கரின் குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார்.**

97) பூனா ஒப்பந்தம் யார் யாருக்கிடையே கையெழுத்தானது?

**A) அம்பேத்கர் மற்றும் காந்தியடிகள்**

B) அம்பேத்கர் மற்றும் ஆங்கிலேயர்

C) காந்தியடிகள் மற்றும் ஆங்கிலேயர்

D) அம்பேத்கர், காந்தியடிகள் மற்றும் ஆங்கிலேயர்

**விளக்கம்: இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தியடிகள் உண்ணவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபதாம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதுவே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.**

98) 1930ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் அம்பேத்கர் கீழ்க்கண்ட எதனைக் கூறினார்?

A) இந்திய அரசுச் சட்டம் பற்றி விவாதித்தல்

**B) சுயராஜ்ய கோரிக்கை**

C) சைமன் குழு அறிக்கை

D) பூனே ஒப்பந்தம்

**விளக்கம்: அம்பேத்கர் 1930ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்", அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.**

99) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது. இதில் மொத்தம் எத்தனை பேர் இடம்பெற்றனர்?

A) 6

**B) 7**

C) 8

D) 10

**விளக்கம்: 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது.**

100) கவலைகளைத் தூக்கிக்கொண்டு திரியாதே அவை கைக்குழந்தைகளல்ல என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

**A) மு.மேத்தா கவிதைகள்**

B) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

C) சோழநிலா

D) கண்ணீர்ப்பூக்கள்

**விளக்கம்: மேற்கண்ட பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் மு.மேத்தா கவிதைகள் ஆகும். மு. மேத்தாவின் மற்ற நூல்கள்:**

**1. கண்ணீர்ப் பூக்கள்**

**2. ஊர்வலம்**

**3. சோழநிலா**

**4. மகுடநிலா**

**5. ஆகாயத்துக்கு அடுத்த வீடு**

101) நிறைஅழுக்காறு எளிமை.

நினைவுதுணிவு இன்பதுன்பம் – என்ற வரியில் நிறை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) நிறைவு

**B) மேன்மை**

C) கொள்கை

D) நிலைபெற்ற

**விளக்கம்: மேற்கண்ட வரிகள் இறையரசன் எழுதிய கன்னிப் பாவை என்னும் நூலிலிருந்து தரப்பட்டுள்ளது. இதில் நிறை என்ற சொல்லின் பொருள் மேன்மை என்பதாகும்.**

102) கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான கூற்றை தேர்வு செய்க.

A) முதுகலைப்பட்டம் – பண்டையகால இந்திய வணிகம்

B) ஆய்வுக்கட்டுரை – இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

C) முனைவர் பட்டம் – இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

**D) பாரிஸ்டர் பட்டம் – பொருளாதாரம்**

**விளக்கம்: முதுகலைப்பட்டம் – பண்டையகால இந்திய வணிகம்**

**ஆய்வுக்கட்டுரை – இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

**முனைவர் பட்டம் – இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்**

**பாரிஸ்டர் பட்டம் – சட்டம்**

103) எந்த ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது?

A) 1930

B) 1931

**C) 1935**

D) 1937

**விளக்கம்: 1935ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.**

104) அம்பேத்கர் எந்த கட்சியைத் தொடங்கினார்?

A) சுதந்திரா கட்சி

B) பாவார்டு பிளாக் கட்சி

**C) சுதந்திரத் தொழிலாளர் கட்சி**

D) சமத்துவ சுதந்திக் கட்சி

**விளக்கம்: 1935ஆம் ஆண்டு மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார். சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.**

105) கூற்றுகளை ஆராய்க.

1. 1904 – குடும்பம் மும்பைக்கு குடிபெயர்ந்தது.

2. 1912 – இளங்கலைப்பட்டம்

3. 1921 – முதுநிலை அறிவியல் பட்டம்

4. 1924 – முனைவர் பட்டம்

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

**D) 4 மட்டும் தவறு**

**விளக்கம்: 1. 1904 – குடும்பம் மும்பைக்கு குடிபெயர்ந்தது.**

**2. 1912 – இளங்கலைப்பட்டம்**

**3. 1921 – முதுநிலை அறிவியல் பட்டம்**

**4. 1923 – முனைவர் பட்டம்.**

106) அம்பேத்கர் எந்த ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார்?

A) 1904

B) 1912

**C) 1907**

D) 1915

**விளக்கம்: குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும் கல்வியை விடாமல் தொடர்ந்தார் அம்பேத்கர். இவர் 1907ஆம் ஆண்டு பள்ளிப்படிப்பை முடித்தார்.**

107) எங்கு நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் அம்பேத்கர் கலந்துகொண்டார்?

A) மலேசியா

**B) இலங்கை**

C) சீனா

D) ஜப்பான்

**விளக்கம்: அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.**

108) நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். இதில் பொருந்தாதது எது?

A) அறிவு

**B) சமத்துவம்**

C) சுயமரியாதை

D) நன்னடத்தை

**விளக்கம்: நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு. இரண்டாவது தெய்வம் சுயமரியாதை. மூன்றாவது தெய்வம் நன்னடத்தை என அம்பேத்கர் கூறுகிறார்.**

109) முதலாவது வட்டமேசை மாநாடு கீழ்க்கண்ட எந்த காரணத்திற்காக நடைபெற்றது?

**A) இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவது பற்றி முடிவு செய்ய**

B) இந்தியாவிற்கு அரசியல் சாசனம் எழுத குழு அமைப்பது பற்றி முடிவு செய்ய

C) ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்குவது பற்றி விவாதிக்க

D) 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் பற்றி விவாதிக்க

**விளக்கம்: இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது.**

110) அம்பேத்கர் எப்போது ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை தொடங்கினார்?

A) 1924

**B) 1927**

C) 1930

D) 1932

**விளக்கம்: விளக்கம்: அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். இவர் ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927ஆம் ஆண்டு தொடங்கினார்.**

111) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க (எதிர்ச்சொல் பற்றி)

**A) மையல் – விருப்பம்**

B) பொச்சாப்பு – சுறுசுறுப்பு

C) இகல் – நட்பு

D) நிறை – மேன்மையற்ற

**விளக்கம்: இங்கு தவறாக பொருந்தியுள்ளது மையல் என்ற சொல்லாகும். இதன் பொருள் விருப்பம். மற்ற சொல்லிற்கு எதிர்ச்சொல் தரப்பட்டுள்ளது. ஆனால் மையல் என்ற சொல்லிற்கு மட்டும் பொருள் தரப்பட்டுள்ளது. இதன் எதிர்ச்சொல் விருப்பமற்ற என்பதாகும்.**

**மையல் – விருப்பம்**

**பொச்சாப்பு – சுறுசுறுப்பு**

**இகல் – நட்பு**

**நிறை – மேன்மையற்ற.**

112) அம்பேத்கருக்கு கீழ்க்காணும் எதற்கு முனைவர் பட்டம் வழங்கபடவில்லை?

A) இந்தியாவின் தேசியப்பங்கு வீதம்

B) ரூபாய் பற்றிய பிரச்சினை

**C) இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்.**

D) A மற்றும் B

**விளக்கம்: இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் – முனைவர் பட்டம்**

**ரூபாய் பற்றிய பிரச்சினை – முனைவர் பட்டம்**

**இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும். – ஆய்வுக்கட்டுரை.**

113) எந்த ஆண்டு அம்பேத்கர் பொருளாதார படிப்பிற்காக இலண்டன் சென்றார்?

**A) 1920**

B) 1918

C) 1921

D) 1923

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார் அம்பேத்கர். அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார். நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்.**

114) எந்த ஆண்டு அம்பேத்கர் முதுநிலை அறிவியல் பட்டம் பெற்றார்?

A) 1920

**B) 1921**

C) 1923

D) 1924

**விளக்கம்: இலண்டன் சென்ற அம்பேத்கர், அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார். நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார். இத்தகைய அயராத உழைப்பின் பயனாக 1921ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டம் பெற்றார்.**

115) அம்பேத்கர் 1923ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார். கீழ்க்காணும் எது பற்றிய ஆராய்ச்சிக்காக அவருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது?

**A) ரூபாய் பற்றிய பிரச்சினை**

B) சாதி பற்றிய பிரச்சினை

C) சட்டம் சார்ந்த ஆய்வு

D) பண்டையகால இந்திய வணிகம்

**விளக்கம்: 1923ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சினை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.**

116) இரட்டை வாக்குரிமையை எதிர்க்கும் பூனா ஒப்பந்தம் எப்போது கையெழுத்தானது?

A) 1930 செப்டம்பர் 20

**B) 1931 செப்டம்பர் 20**

C) 1932 செப்டம்பர் 20

D) 1933 செப்டம்பர் 20

**விளக்கம்: இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தியடிகள் உண்ணவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபதாம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பதந்தம் செய்து கொண்டனர். இதுவே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.**

117) கூற்றுகளை ஆராய்க

1. 1924ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

2. ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காகப் பேராடியது

3. 1930ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார்.

4. முதல் வட்டமேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன் சுயராஜ்ய கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.

A) 1, 3 தவறு

B) 2, 4 தவறு

C) 2, 3, 4 தவறு

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. 1924ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பு நிறுவப்பட்டது.**

**2. ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காகப் பேராடியது**

**3. 1930ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார்.**

**4. முதல் வட்டமேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன் சுயராஜ்ய கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.**

118) இரண்டாம் வட்டமேசை மாநாட்டிற்கு பொருந்தாது எது?

A) ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என அம்பேத்கர் கோரிக்கை வைத்தார்.

**B) ஒடுக்கப்பட்டோருக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் என காந்தியடிகள் கூறினார்**

C) ஆங்கில அரசு இரட்டை வாக்குரிமை வழங்கியது.

D) இரண்டாம் வட்டமேசை மாநாடு தொடர்பாக அம்பேத்கர் மற்றும் காந்தியடிகள் இடையே பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.

**விளக்கம்: 1. ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என அம்பேத்கர் கோரிக்கை வைத்தார்.**

**2. ஒடுக்கப்பட்டோருக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் வேண்டும் என அம்பேத்கர் கோரிக்கை வைத்தார்**

**3. ஆங்கில அரசு இரட்டை வாக்குரிமை வழங்கியது.**

**4. இரண்டாம் வட்டமேசை மாநாடு தொடர்பாக அம்பேத்கர் மற்றும் காந்தியடிகள் இடையே பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது.**

119) பொருத்துக

அ. குறிக்கோள் – 1. Agreement

ஆ. நம்பிக்கை – 2. Doctorate

இ. முனைவர் பட்டம் – 3. Confidence

ஈ. ஒப்பந்தம் – 4. Objective

**A) 4, 3, 2, 1**

B) 1, 2, 3, 4

C) 4, 2, 3, 1

D) 4, 1, 2, 3

**விளக்கம்: குறிக்கோள் – Objective**

**நம்பிக்கை – Confidence**

**முனைவர் பட்டம் – Doctorate**

**ஒப்பந்தம் – Agreement**

120) இரட்டை வாக்குரிமை என்பதன் ஆங்கில மொழியாக்கம் என்ன?

A) Doubel Vote

**B) Double Voting**

C) Dual Vote

D) Dual Voting

**விளக்கம்: இரட்டை வாக்குரிமை என்பதன் ஆங்கில மொழியாக்கம் – Double Voting**

121) அம்பேத்கர் எங்கு தனது பள்ளிப் படிப்பை தொடங்கினார்?

A) அம்பவாதே

B) இரத்தினகிரி

**C) சதாரா**

D) பூனே

**விளக்கம்: விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பின்னர் பொறுப்பேற்ற அம்பேத்கர் தனது பள்ளிப் படிப்பை சதாராவில் தொடங்கினார்.**

122) வட்ட மேசை மாநாடு என்பதன் ஆங்கில மொழியாக்கம் என்ன?

**A) Round Table Conference**

B) Round Table Meeting

C) Round Table Discussion

D) Round Table Meet

**விளக்கம்: வட்ட மேசை மாநாடு என்பதன் ஆங்கில மொழியாக்கம் – Round Table Conference என்பதாகும். வட்ட மேசை மாநாடு இலண்டனில் நடைபெற்றது.**

**முதல் வட்ட மேசை மாநாடு – 1930**

**இரண்டாம் வட்ட மேசை மாநாடு – 1931**

**மூன்றாம் வட்ட மேசை மாநாடு – 1932**

123) முதல் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கருடன் கலந்து கொண்ட தமிழகத்தைச் சேர்ந்தவர் யார்?

A) இராஜாஜி

**B) இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன்**

C) சத்தியமூர்த்தி

D) தந்தை பெரியார்

**விளக்கம்: இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.**

124) கூற்றுகளை ஆராய்க.

1. அம்பேத்கர் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்தவில்லை.

2. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்று முடிவுசெய்த அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. அம்பேத்கர் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.**

**2. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்று முடிவுசெய்த அம்பேத்கர் ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.**

125) இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டவர் யார்?

A) இராஜேந்திரப் பிரசாத்

**B) அம்பேத்கர்**

C) ஜவஹர்லால் நேரு

D) இராதாகிருஷ்ணன்

**விளக்கம்: விடுதலை இந்தியாவில் ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். .**

126) எப்போது அரசியல் நிர்ணய மன்றம் அரசியலமைப்புச் சட்டத்தை எழுத தீர்மானம் நிறைவேற்றியது?

A) 1947 ஆகஸ்டு 15

B) 1947 ஆகஸ்டு 27

**C) 1947 ஆகஸ்டு 29**

D) 1947 ஆகஸ்டு 14

**விளக்கம்: 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது.**

127) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) நிறை – மேன்மை

**B) அழுக்காறு – தூய்மையின்மை**

C) பொறை – பொறுமை

D) மதம் – கொள்கை

**விளக்கம்: நிறை – மேன்மை**

**அழுக்காறு – பொறாமை**

**பொறை – பொறுமை**

**மதம் – கொள்கை.**

128) கீழ்க்கண்ட யார் அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழுவில் இடம்பெறவில்லை?

A) கோபால்சாமி

B) அல்லாடி கிருஷ்ணமூர்த்தி

C) கே.எம். முன்ஷி

**D) இராஜேந்திர பிரசாத்**

**விளக்கம்: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது. அவர்கள்.**

**1. கோபால்சாமி**

**2. அல்லாடி கிருஷ்ணமூர்த்தி**

**3. கே.எம். முன்ஷி**

**4. சையது முகமது சாதுல்லா**

**5. மாதவராவ்**

**6. டி.பி. கைத்தான்**

**7. அம்பேத்கர்.**

**இதில் ரஜேந்திரபிரசாத் இடம்பெறவில்லை. அவர் அரசியல் நிர்ணய சபையின் தலைவராகப் பொறுப்பேற்றார்.**

129) அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு எப்போது தனது அறிக்கையை சமர்ப்பித்தது?

**A) 1948 பிப்ரவரி 21**

B) 1948 ஜனவரி 22

C) 1948 ஜனவரி 23

D) 1947 டிசம்பர் 26

**விளக்கம்: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1948 பிப்ரவரி 21ல் சமர்பித்தது.**

130) கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?

A) மாடுகள் தமது தலையை ஆட்டின

B) கன்று தனது தலையை ஆட்டியது.

C) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்

**D) மாணவன் தமது கையால் பெற்றுக் கொண்டான்.**

**விளக்கம்: தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும்.**

**தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது – ஒருமைத் தொடர்**

**தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது – பன்மைப் தொடர்**

**மேற்கண்ட தொடரில் தவறான தொடர் – மாணவன் தமது கையால் பெற்றுக் கொண்டான்.**

**மாணவன் தனது கையால் பரிசு பெற்றுக் கொண்டான் என்பதே சரி. மாணவன் என்பது ஒருமை. எனவே தனது என்று தான் வர வேண்டும். மாணவர்கள் என்று வந்தால், தமது என்று பன்மையாக குறிப்பிடலாம்.**

**தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார். இங்கு தலைவர் என்பது ஒருமை. எனவே தனது என்று தான் வரவேண்டும். ஆனால் அவ்வாறு குறிப்பிடுவது தவறு. மரியாதைப் பன்மையாக தமது என்று பயனபடுத்துவதே சரி.**

131) உவமையை மட்டும் கூறி அதன்மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது___________அணி?

A) உவமை அணி

B) இல்பொருள் உவமை அணி

**C) பிறிது மொழிதல் அணி**

D) வேற்றுமை அணி

**விளக்கம்: உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது பிறிதுமொழிதல் அணி எனப்படும்.**

132) முதலாவது வட்ட மேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் நடைபெற்றது. இதில் இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன் கீழ்க்கண்ட எதன் சார்பாக கலந்து கொண்டார்?

A) தமிழகம்

B) இந்திய அரசு

**C) ஒடுக்கப்பட்டோர்**

D) பிற்படுத்தப்பட்டோர்

**விளக்கம்: இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன் கலந்துகொண்டார்.**

133) அம்பேத்கரால் தொடங்கப்பட்ட இதழ் எது?

**A) ஒடுக்கப்பட்ட பாரதம்**

B) குடியரசு

C) சமத்துவ பாரதம்

D) விடுதலை

**விளக்கம்: அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். இவர் ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927ஆம் ஆண்டு தொடங்கினார்.**

134) கூற்று: அம்பேத்கர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.

காரணம்: சமத்துவ சமுதாயத்தை அமைத்தல் என்பது இதன் நோக்கமாகும்

காரணம்: இவர் ஏழ்மையான குடும்பத்தில் 14–வது பிள்ளையாகப் பிறந்தார்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: அம்பேத்கர் சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.**

135) எந்த ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார் அம்பேத்கர்?

A) 1927

B) 1924

**C) 1930**

D) 1934

**விளக்கம்: அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். இவர் 1930ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.**

136) கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்

நாவாவாயும் ஓடா நிலத்து – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி எது?

A) உவமை அணி

B) இல்பொருள் உவமை அணி

**C) பிறிது மொழிதல் அணி**

D) வேற்றுமை அணி

**விளக்கம்: இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி பிறிது மொழிதல் அணியாகும். நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது என்று உவமையை மட்டும் கூறுகிறது. இதன்மூலம் ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெறமுடியும். தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றிபெறுதல் இயலாது என்னும் கருத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம். எனவே இக்குறட்பாவில் பிறிதுமொழிதல் அணி இடம்பெற்றுள்ளது.**

137) இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது எந்த அணி?

A) உவமை அணி

B) இல்பொருள் உவமை அணி

C) பிறிது மொழிதல் அணி

**D) வேற்றுமை அணி**

**விளக்கம்: இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.**

138) அம்பேத்கர் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

**A) இவர் 1891 டிசம்பர் 6ஆம் நாள் பிறந்தார்**

B) இவரின் பெற்றோர் ராம்ஜி சக்பால்–பீமாபாய்

C) 14–வது குழந்தையாக அம்பேத்கர் பிறந்தார்

D) இவர் பிறந்த ஊர் இரத்தினகிரி மாவட்டத்திலுள்ள அம்பவாதே என்பதாகும்.

**விளக்கம்: அம்பேத்கர் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் ராம்ஜி சக்பால்–பீமாபாய் இணையாருக்குப் 14–வது குழந்தையாகப் பிறந்தார். இவரது ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவர்தே என்பதாகும். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.**

139) கீழ்க்கண்டவற்றில் எந்த நூலை மு.மேத்தா எழுதவில்லை?

A) சோழநிலா

B) மகுடநிலா

**C) நகர்வலம்**

D) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

**விளக்கம்: மு.மேத்தா எழுதிய நூல்கள்:**

**1. கண்ணீர்ப் பூக்கள்**

**2. ஊர்வலம்**

**3. சோழநிலா**

**4. மகுடநிலா**

**5. ஆகாயத்துக்கு அடுத்த வீடு**

140) ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது_________எனப்படும்.

**A) சிலேடை**

B) பிறிதுமொழிதல் அணி

C) வேற்றுமை அணி

D) உவமை அணி

**விளக்கம்: ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.**

141) பிறிதுமொழிதல் அணியில்___________மட்டும் இடம்பெறும்?

**A) உவமை**

B) உவமேயம்

C) தொடை

D) சந்தம்

**விளக்கம்: உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூறவந்த கருத்தை உணரவைப்பது பிறிதுமொழிதல் அணி எனப்படும். எனவே பிறிதுமொழிதல் அணியில் உவமை மட்டும் இருக்கும்.**

142) கூற்றுகளை ஆராய்க.

1. இந்தியாவிற்கு அரசியல் நிர்ணய சபை அமைப்பது பற்றி முடிவு செய்ய 1930ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது.

2. முதலாவது வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டை மலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது.**

**2. முதலாவது வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டை மலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.**

143) கூற்றுகளை ஆராய்க.

1. அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்க்க சமாஜ் சமாத சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்

2. அம்பேத்கர் 1930 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழைத் தொடங்கினார்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. அம்பேத்கர் சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் சமாஜ் சமாத சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்**

**2. அம்பேத்கர் 1927 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழைத் தொடங்கினார்.**

144) கீழ்க்கண்ட சொற்றொடரில் சரியானது எது?

A) தலைவர் தனது கையால் பரிசு வழங்கினார்

**B) மாணவன் தனது கையால் பரிசு பெற்றுக் கொண்டான்**

C) தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

D) தமக்கு எதுவும் நடக்காது என்று இராமன் கூறினார்

**விளக்கம்: தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும்.**

**தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது – ஒருமைத் தொடர்**

**தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது – பன்மைப் தொடர்**

**மேற்கண்ட தொடரில் சரியான தொடர் – மாணவன் தனது கையால் பரிசு பெற்றுக் கொண்டான்.**

**தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார். இங்கு தலைவர் என்பது ஒருமை. எனவே தனது என்று தான் வரவேண்டும். ஆனால் அவ்வாறு குறிப்பிடுவது தவறு. மரியாதைப் பன்மையாக தமது என்று பயன்படுத்துவதே சரி.**